இனியவை நாற்பது

(அறுசுவைக் கட்டுரைகள்)

பேராசிரியர் இரா. மோகன்

வானதி பதிப்பகம்

இனியவை நாற்பது

(அறுசுவைக் கட்டுரைகள்)

இரா. மோகன்

தகைசால் பேராசிரியர்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

வானதி பதிப்பகம்

23, தீனதயாளு தெரு,

தி.நகர், சென்னை – 17.

முதற் பதிப்பு : அக்டோபர், 2012
இரண்டாம் பதிப்பு : டிசம்பர், 2017
© பேராசிரியர் இரா.மோகன்

உரிமை ஆசிரியருக்கு

வானதி வெளியீடு

விலை : ரூ.120.00

- TITLE : **INIYAVAI NARPATHU**
- AUTHOR : Era.Mohan
- LANGUAGE : Tamil
- SUBJECT : Literature.
- EDITION : Second Edition, December, 2017
- PAGES : 164
- PUBLISHED BY : **VANATHI PATHIPPAKAM**
  23, Deenadayalu Street,
  Thyagaraya Nagar, Chennai - 600 017.
  ☎ 24342810 / 24310769
  E-Mail : vanathipathippakam@gmail.com
- PRICE : **₹ 120.00**

Laser Typeset : P.K.Ramkumar (8608997165)

Printed at : Novena Offset Printing Co., Chennai - 5 ☎ 28446891, 28446166

தோரண வாயில்

ஆஸ்திரேலிய நாட்டின் தமிழ்க் கலை மற்றும் பண்பாட்டுக் கழகத்தின் சார்பில் கொண்டாடப் பெறும் தீபாவளி சிறப்பு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வர வேண்டும் என அதன் செயலாளர் திரு. அனகன் பாபுவிடம் இருந்து தொலைபேசி வாயிலாக அன்பான அழைப்பு வந்ததுமே என் நெஞ்சில் இன்பத் தேன் வந்து பாய்ந்தது. ஆஸ்திரேலியப் பயணத்திற்குக் கூடுதல் சிறப்புச் சேர்க்கும் விதத்தில் அங்கே ஒரு நூல் வெளியிட வேண்டும் என்ற எண்ணமும் உடன் என் உள்ளத்தில் முகிழ்த்தது. அதன் அழகிய செயல் வடிவமே இப்போது உங்கள் கைகளில் தவழும் **'இனியவை நாற்பது'** என்னும் இந்நூல்.

இந்நூலில் **தன்னம்பிக்கை முனை, விழிப்புணர்வு மையம், வாழ்க்கை வெளிச்சம், ஆன்மிகச் சுடர், கவிதைத் துறைமுகம், நகைச்சுவை நந்தவனம்** என்னும் ஆறு உட்பிரிவுகளில் அமைந்த நாற்பது குறுங்கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. கொஞ்சம் தன்னம்பிக்கை, கொஞ்சம் விழிப்புணர்வு, கொஞ்சம் ஆன்மிகம், கொஞ்சம் வாழ்க்கை அனுபவம், கொஞ்சம் கவிதை, கொஞ்சம் நகைச்சுவை ஆகியவற்றின் கூட்டுக் கலவையே - களியே - இன்று உலகு எங்கிலும் வாழும் வாசகர்களால் விரும்பி வரவேற்கப் படுகின்றது; பயிலவும் படுகின்றது. 'தேர்ந்து மனிதன் வாழும் வகைக்குத் தெய்வத்தின் கட்டளை ஆறு' என்னும் கவியரசர் **கண்ணதாசனி**ன் வாக்கு ஒரு வகையில் நூலாக்கத்திற்கும் பொருந்தி வருவதே ஆகும்.

ஒரு நல்ல எழுத்து வாசகரின் நெஞ்சில் தன்னம்பிக்கையைத் தளிர்க்கச் செய்யும்; விழிப்புணர்வுக்குத் தூண்டுகோலாக அமையும்; வாழ்க்கையின் அனுபவப் பொருளை உணர்த்தும்; ஊனினை உருக்கி, உள்ளொளி பெருக்கி, உலப்பிலா ஆனந்தமாய தேனினைச்

சொரியும்; மனித மனத்துள் ஆழ்ந்திருக்கும் கவிதை உணர்வினை உயிர்ப்பிக்கும்; நகைச்சுவைத் திறத்தால் வையத்தைப் பாலித்திடும். இக் கருத்தியலின் அடிப்படையிலேயே இந்நூலில் கட்டுரைகள் நிரல்படுத்தப் பெற்றுள்ளன.

மிகக் குறுகிய காலத்தில் மிகமிகச் சிறப்பாக இந்நூலினை வெளியிட்டுள்ள 'பதிப்புத் திலகம்' **வானதி இராமநாதன்** அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றி என்றென்றும் உரியதாகும். 'இங்கிவரை யான் பெறவே என்ன தவம் செய்துவிட்டேன்?' என்ற கவியரசர் **பாரதி**யின் வைர வரிகளையே இத்தருணத்தில் அவருக்குக் காணிக்கையாக்குகிறேன்.

இந்நூலாக்கத்தின் போது கட்டுரைகளைத் தேர்வு செய்வதிலும் ஒழுங்குபடுத்துவதிலும் என் வாழ்க்கைத் துணைவியார் முனைவர் **நிர்மலா**வின் பங்களிப்பு சாலவும் பெரிது. கணினியாக்கம் செய்வதில் அன்பு இளவல் **பி.கி.இராம்குமார்** காட்டிய முனைப்பும் குறிப்பிடத்தகுந்தது.

நிறைவாக, என் நூலினை ஆஸ்திரேலியத் திருநாட்டில் வெளியிட இசைவு தந்த தமிழ்க் கலை மற்றும் பண்பாட்டுக் கழகத்தின் தலைவர் டாக்டர் **எம்.சுந்தரவடிவேல்**, செயலாளர் திரு.**அனகன் பாபு**, பொருளாளர் திரு. **முரளி கணேசன்** ஆகிய மூவர்க்கும் என் உளமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் கூறு நல்லுலகம் என் எளிய முயற்சியை வரவேற்றுப் போற்றும் என ஆழமாக நம்புகிறேன்.

மதுரை 625 019

12.10.2012

இரா. மோகன்

பொருளடக்கம்

I. தன்னம்பிக்கை முனை

1	நம்பிக்கை இருந்தால் வாழ்க்கை சிறக்கும்	7
2	'இனி ஒரு புதுவிதி செய்வோம்!'	10
3	'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்!'	14
4	வெற்றிக்கு வழி - வித்தியாசமான அணுகுமுறை	17
5	தங்க நாணயம் போன்ற தமிழ்நாட்டுப் பழமொழி	21
6	இனிப்புக்குத் தேன், அன்புக்கு மனைவி	24
7	உள்ளத்தை உருக்கும் இலக்கியக் காட்சிகளும் உண்மை நிகழ்வுகளும்!	28

II. விழிப்புணர்வு மையம்

8	விழி - எழு - உணர் - ஒளிர்!	32
9	கதை ஒன்று: பார்வைகள் மூன்று	36
10	'சாதிக்கப் பிறந்தவர்கள் நாம்!'	39
11	'பெண்ணுக்குள்ளே ஞானத்தை வைத்தான் ஈசன்!'	42
12	'மனிதர் யாவரும் பணியாளர்களே!'	45
13	விதியையே மாற்றி அமைக்கும் வைராக்கியம் பெறுவோம்!	49
14	உலகின் உயரிய கடித இலக்கியம்	53

III. வாழ்க்கை வெளிச்சங்கள்

15	பூவிலே சிறந்த பூ என்ன பூ?	60
16	திட்டமிட்ட வாழ்வு எது?	64
17	நமக்குள் நாமே...!	67
18	வாழ்வில் நிம்மதியும் அமைதியும் கொலுவீற்றிருக்க...	70
19	தற்கொலை, தற்கொலை செய்து கொள்ளட்டும்!	73
20	'வாழ்வின் ஒவ்வொரு நாளும் இறுதி நாளே!'	79
21	மரணத்தை மகிழ்வுடன் வரவேற்போம்!	83

IV. ஆன்மிகச் சுடர்

22	ஆன்மிக வாழ்வின் முதல் படி	86
23	தாழ்ச்சி சொல்வோரே வாழ்வில் உயர்ச்சி அடைவர்!	90
24	வேண்டாமை என்னும் விழுச்செல்வம்	93
25	சொர்க்கமும் நரகமும் எவை?	96
26	விடை காண முடியாத வினா	99
27	ஆண்டவன் கட்டளை ஆறு	103
28	நில்லா உலகில் நிலைத்த சுகம் பெற...	106

V. கவிதைத் துறைமுகம்

29	மனத்தில் பதிந்த கவிதைகள்	110
30	முத்திரைக் கவிதைகள்	115
31	நறுக்குக் கவிதைகள்	119
32	உள்ளத்தை உலுக்கும் ஓர் ஒரிய மொழிக் கவிதை!	122
33	சட்ட சபையா? சண்டை சபையா?	125
34	சாத்திய கதவுகளும் பூட்டிய மனமும்	127

VI. நகைச்சுவை நந்தவனம்

35	எது நல்ல நகைச்சுவை?	131
36	அன்றாட வாழ்வில் நகைச்சுவை	135
37	அறிவார்ந்த நகைச்சுவையாளர் கி.ஆ.பெ. விசுவநாதம்	138
38	மாணவர் நகைச்சுவைகள்	144
39	வகுப்பறை நகைச்சுவைகள்	150
40	நினைவில் நிற்கும் நகைச்சுவைத் துணுக்குகள்	153

1

நம்பிக்கை இருந்தால் வாழ்க்கை சிறக்கும்

" 'இல்லை' என்று ஒருபோதும் சொல்லாதே. 'என்னால் இயலாது' என்று ஒருநாளும் சொல்லாதே. ஏனெனில் நீ வரம்பில்லா வலிமை பெற்றவன்; எதையும், எல்லா வற்றையும் சாதிக்கக் கூடியவன்."

– விவேகானந்தர்*

பயில்வோரது நெஞ்ச வயல்களில் நம்பிக்கை விதைகளை ஆழமாக ஊன்றுவதிலே தமிழ் இலக்கியத்திற்கு நிகர் தமிழ் இலக்கியமே ஆகும். சங்கச் சான்றோர் தொடங்கி இருபதாம் நூற்றாண்டுக் கவிதை உலகின் தலைமகன் - தவமகன் - பாரதி வரை நீண்ட நெடிய தமிழ் இலக்கியப் பரப்பில் தொட்ட இடமெல்லாம் கண்ணில் தட்டுப்படுவன நம்பிக்கை மொழிகளே. "பெரிதே உலகம் பேணுநர் பலரே" என்பது பெருமிதம் ததும்பி நிற்கும் சங்கச் சான்றோர் **பெருஞ்சித்திரனாரின்** கூற்று. "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும், தெய்வத்துள் வைக்கப் படும்" என்பது வான்புகழ் **வள்ளுவர்** வகுத்துரைக்கும் மறைமொழி. "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும், எண்ணில் நல்ல கதிக்கு யாதும் ஓர் குறைவிலை" என்பது **திருஞான சம்பந்தரின்** தெய்வத் தமிழ். "இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை" என்பது **அப்பர் சுவாமிகளின்** அருந்தமிழ் முழக்கம். "நம்பினோர் கெடுவதில்லை நான்குமறைத் தீர்ப்பு, அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாம்" என அழுத்தம் திருத்தமாக உரைப்பார் கவியரசர் **பாரதியார்**. "வெறுங்கை என்பது மூடத்தனம், விரல்கள் பத்தும் மூலதனம்" என்பது பாரதிதாசன் பரம்பரையைச் சார்ந்த கவிஞர் **தாராபாரதியின்** அமுத மொழி. "உண்டு உண்டு என்று நம்பிக் காலை எடு - இங்கு உன்னை விட்டால் பூமி எது கவலை விடு" என இளைய தலைமுறைக்கு எழுச்சி உரை வழங்குவார் 'திரையிசைக் கம்பர்' **கண்ணதாசன்**.

---

* விவேகானந்தரின் அறிவுரைகள், ப.2

"நாளை உலகம் நல்லோரின் கையில், நாமும் அதிலே உயர்வோம் உண்மையில்" என வளரும் தலைமுறைக்கான தாலாட்டுப் பாடலில் நம்பிக்கை என்னும் ஊட்டச் சத்தைக் கலந்து பாடுவார் **ப(ா)ட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்**. "இயலும் என்பவர்க்கு எதுவும் அரிதல, எழுந்து நிற்பவர்க்(கு) இமயம் தடையல" என்பது 'ஆய்வறிவுக் கவிஞர்' **குலோத்துங்கன்** மனித குலத்திற்கு முன் வைக்கும் ஊக்க மொழி. இங்ஙனம் தமிழ் இலக்கியம் அன்று முதல் இன்று வரை நம்பிக்கை குறித்து நறுக்குத் தறித்தாற் போல் கூறியிருக்கும் மணிமொழிகள் பலவாகும்.

மனித வாழ்க்கையில் நம்பிக்கை பெறும் இன்றியமையாத இடத்தைப் புலப்படுத்தும் சுவையான வட இந்திய நாடோடிக் கதை:

நான்கு பாட்டிகள் ஒருநாள் தங்களில் யார் பெரியவர் என்று சண்டை போட்டுக் கொண்டிருந்தனர். ஒன்றும் முடிவாகாமல் போகவே நால்வரும் திருமணமாகப் போகும் ஒரு மணமகளிடம் வந்தனர். தங்கள் பிரச்சனையைத் தீர்த்து வைக்குமாறு அவளைக் கேட்டுக் கொண்டனர்.

இளம்மணமகள் சம்மதித்து, ஒவ்வொருவராகத் தங்கள் பிரச்சனையைக் கூறுமாறு கேட்டாள்.

முதல் மூதாட்டி மிகுந்த கர்வத்தோடு வந்து, "நான்தான் **பசி** எனும் தாய்; நானே எல்லோரையும் விடப் பெரியவள்" என்றாள்.

மணப்பெண் தலையை ஆட்டி மறுத்து விட்டு, "பசி எப்படிப் பெரிய விஷயமாக முடியும்? எதையாவது சாப்பிட்டால் பசி அடங்கி விட்டுப்போகிறது. காய்ந்து நமத்துப்போன ரொட்டி கூடப் பசியைப் போக்கிவிடுமே" என்று கூறினாள். கிழவி தலை குனிந்தாள்.

அடுத்து வந்த மூதாட்டி, "நான் தான் **தாகம்**. நானே நால்வரில் சிறந்தவள்" என்றாள்.

"இல்லை. கால்வாய் தண்ணீரைக் குடித்தால் கூடத் தாகம் அடங்கிவிடும். நீ ஒன்றும் பெரிய இவளல்ல" என்றாள் மணப்பெண்.

அடுத்து வந்த மூதாட்டி, "நான் தான் **தூக்கம்**. நானே நால்வரினும் ஆகப் பெரியவள்" என்றாள்.

மணப்பெண், "உடைந்த பாறை மீதும், கட்டாந்தரையிலும் கூட ஒருவரால் நன்றாக அயர்ந்து தூங்கி விட முடியும். அதனால்

நீ ஒன்றும் பெரியவளல்ல" என்று கூறினாள். அந்தக் கிழவி முகத்தைத் திருப்பிக் கொண்டு போய்விட்டாள்.

இப்போது நான்காவது பாட்டி வந்தாள். "நான்தான் நம்பிக்கை எனும் தாய். நான். தான்..." என்று இழுத்தாள்.

கிழவி சொல்லி முடிக்கும் முன்னரே மணப்பெண் குனிந்து அவள் காலைத் தொட்டு வணங்கினாள். பின்பு, "நீயே நால்வரில் தலை சிறந்தவள். நம்பிக்கையிருந்தால் தான் வாழ்க்கை சிறக்கும். வாழ்க்கை இருக்குமிடத்தில் நம்பிக்கையும் இருக்கிறது" என்று கூறி அந்த நால்வரின் போட்டியை முடித்து வைத்தாள்.

(தமிழில் : எஸ்.ஏ. பெருமாள், உலக நாடோடிக் கதைகள், பக்.24-25)

நம்பிக்கை குடிகொண்டிருக்கும் இடத்தில் வாழ்க்கை களிநடம் புரிந்து நிற்கும் என்பது மட்டும் அன்று; ஒருவரது உள்ளத்தில் நம்பிக்கை கொலுவீற்றிருந்தால் தான் அவரது வாழ்க்கை சிறக்கும். இன்னும் சொல்ல வேண்டும் என்றால் மனித வாழ்வில் பசி, தாகம், தூக்கம் என்னும் மூன்றையும் விட ஆற்றல் வாய்ந்தது நம்பிக்கை; மனித குலத்தை முன்னேற்றுவதில் முழுப் பங்கும் பெரும்பொறுப்பும் பெற்றிருப்பது நம்பிக்கையே. ஓர் இந்தியப் பழமொழி கூறுவது போல், 'நம்பிக்கையே உலகை இயக்கி வருகின்றது.'

மூத்தாய்ப்பாக, ஓஸோவின் பொன்மொழி ஒன்று:

"சகோதரர்களே! நீங்கள் வறுமையானவர்கள் இல்லை. ஒரு மாபெரும் புதையல் உங்களுக்குள்ளேயே இருக்கிறது. நீங்கள் பிச்சைக்காரனாகப் பிறக்கவில்லை. நீங்கள் ஓர் பேரரசனாகவே பிறந்திருக்கிறீர்கள். ஆனால், அதை உங்களுக்குள் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்."

(ஓஸோவின் பொன்மொழிகள்,ப73)

2

‘இனி ஒரு புதுவிதி செய்வோம்!’

"சோகம் என்ற பறவைகள் உன் தலைக்கு மேலே பறப்பதை நீ தடுக்க முடியாது. ஆனால் அவைகள் உன் தலையிலே கூடுகட்டி வசிப்பதை நீ தடுக்கலாம்."

*– சீனப் பழமொழி**

தமிழ்ச் சிந்தனை மரபில் ஊழின் வலிமையை அழுத்தமாகச் சுட்டும் இடங்கள் நிரம்ப உண்டு; ஊழுக்கு எதிராக மனித முயற்சியின் மாண்பினைப் போற்றும் புகழாரங்களும் அதற்கு இணையாக உண்டு. தொல்காப்பியர், ‘ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின், ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப’ (தொல்காப்பியம், பொருளதிகாரம், களவியல், நூற்பா 2) எனக் காதலரின் சந்திப்புக்குக் காரணமாக ஊழைக் குறிப்பிடுவார்; அவர் ‘பால்’ என்ற சொல்லால் ஊழைச் சுட்டுவார். ‘ஒன்றி உயர்ந்த பால்’ என்னும் தொடருக்கு ‘ஒன்றுபடுத்த வல்ல, உயர்ந்த ஊழ்’ என்பது பொருள்.

சங்க இலக்கியம் ‘ஆருயிர் முறைவழிப் படூஉம் என்பது, திறவோர் காட்சியில் தெளிந்தனம்’ (புறநானூறு, 192) என ஒப்புதல் வாக்குமூலம் வழங்கும். ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ எனத் தொடங்கும் புகழ் பெற்ற புறநானூற்றுப் பாடலில் **கணியன் பூங்குன்றனார்** வாழ்வியல் நோக்கில் ஊழின் ஆற்றலைப் பதிவு செய்வார். ‘நல்லை மன்ற அம்ம பாலே’ எனக் குறுந்தொகைப் பாடல் ஒன்றும் (229), இளமையில் காரணம் இல்லாமல் அடிக்கடி சிறுசிறு சண்டைகள் போட்டுக் கொண்டிருக்கும் இளையோர் இருவர், பின்னாளில் கருத்தொருமித்த காதலர்கள் ஆகி உடன்போக்கு மேற்கொள்ளுவதற்குக் காரணமாக ஊழினைச் சுட்டும்.

திருக்குறள் அறத்துப் பாலின் கடைசி அதிகாரம் ‘ஊழ்’ (38). “அஃதாவது, இருவினைப் பயன் செய்தவனையே சென்று

* ப.ராமஸ்வாமி, உலகப் பழமொழிகள், ப.257

அடைதற்கு ஏதுவாகிய நியதி. ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம், நியதி, விதி என்பன ஒருபொருட் கிளவி" என்பது 'ஊழ்' அதிகாரத்தின் தொடக்கத்தில் பரிமேலழகர் வரையும் உரை விளக்கம். திருவள்ளுவரின் நோக்கில் 'ஆகூழ்' (ஆதற்குக் காரண மாகிய ஊழ்), 'போகூழ்' (போதற்குக் காரணமான ஊழ்) என ஊழ் இரு வகைப்படும்; 'ஆகலூழ்', 'இழவூழ்' என்ற பெயர்களாலும் முறையே அவற்றைச் சுட்டுவார் அவர். 'ஊழிற் பெருவலி யாவுள?' (380) என அறத்துப் பாலில் 'ஊழ்' என்னும் அதிகாரத்தின் இறுதிக் குறட்பாவில் வினவிய வள்ளுவரே, 'ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித், தாழாது உஞற்று பவர்' (620) எனப் பொருட்பாலில் 'ஆள்வினை உடைமை' (62) என்னும் அதிகாரத்தின் இறுதிக் குறட் பாவில் மனித முயற்சிக்கு மகுடம் சூட்டுவது ஆழ்ந்து சிந்திக்கத் தக்கதாகும். 'சோர்வு இல்லாமல் முயற்சியில் குறைவு இல்லாமல் முயல்கின்றவர் (செயலுக்கு இடையூறாக வரும்) ஊழையும் ஒரு காலத்தில் தோல்வியுறச் செய்வர்' என்பது இக் குறட்பாவுக்குப் பேராசிரியர் மு.வ. வரையும் தெளிவுரை ஆகும்.

நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தின் பாவிகங்களுள் ஒன்று 'ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்' என்பது. காப்பிய நிகழ்வுகளின் போக்கில் சிலப்பதிகாரம் ஊழின் வலிமையைச் சிறப்பித்துப் பேசும் இடங்கள் பற்பலவாகும். என்றாலும், இளங்கோவடிகள் தம் தனிவாழ்வில் 'அரசாளும் திரு உண்டு' என்ற நிமித்திகனின் கூற்றையே தகர்த்து எறிந்து, பொய்யாக்கி, ஊழையும் உப்பக்கம் கண்டு, துறவு வாழ்க்கையை மேற்கொண்டவர் என்பது இங்கே நினைவில் கொள்ள வேண்டிய ஓர் அடிப்படையான உண்மை ஆகும்.

கவிச் சக்கரவர்த்தி கம்பரும் தம் பங்கிற்கு 'இழைக்கின்ற விதி முன்செல்ல, தருமம் பின் இரங்கி ஏக' (கம்ப ராமாயணம், அயோத்தியா காண்டம், நகர் நீங்கு படலம், பா1) எனப் பொருத்தமான சொல்லாட்சியால் - 'இழைக்கின்ற' என்பதால் - ஊழின் வலிமையைப் புலப்படுத்துவார். 'விதியின் பிழை; நீ இதற்கு என்னை வெகுண்டது?' (நகர் நீங்கு படலம், பா. 129) என வினவிய இராமனுக்கு விடையாக, 'விதிக்கும் விதி ஆகும் என் வில்தொழில் காண்டி' (பா. 130) என இலக்குவனை விதிக்கு எதிராக வெடிப்புறப் பேச வைத்தவர் கம்பர். இங்கே 'விதி' என்ற சொல்லை 'ஊழ்' (Destiny). 'கொள்கை' (Principle) என்னும் இருபொருள் தரும்படி ஆற்றலோடு கையாண்டிருக்கும் அவரது சதுரப்பாடு வியந்து போற்றத்தக்கதாகும்.

இருபதாம் நூற்றாண்டுக் கவிதையின் தலைமகனான பாரதி 'பாஞ்சாலி சபத'த்தில் 'விதி! விதி! விதி! மகனே - இனி, வேறெது சொல்லுவன் அட மகனே!' (பாஞ்சாலி சபதம், பா. 108), 'வைய மீதுள வாகும் அவற்றுள், விதியினும் பெரிதோர் பொருள் உண்டோ?' (பா. 182) என்றாற் போல் விதியின் வலிமையைப் பல்வேறு இடங்களில் பதிவு செய்துள்ளார். முத்தாய்ப்பாக, 'இனி ஒரு விதி செய்வோம் - அதை எந்த நாளும் காப்போம்!' என விதியை எண்ணி விழுந்து கிடக்காமல், புதிய விதியை வகுத்து நாளும் செயல்படுமாறு நம்மைத் தூண்டியவரும் பாரதியாரே ஆவார்.

அண்மையில் **'தினமணி'** நாளிதழின் 'சிறுவர் மணி'யில் 'புதிய விதி செய்வோம்!' என்ற தலைப்பில் வெளிவந்த 'முத்துக் கதை'.

"ஒரு ஏழை மனிதன் இருந்தான். ஏன் அவன் வறுமையில் உழன்றான் என்றால், அவனுக்கு உழைப்பின் மீது நம்பிக்கை இல்லை. ஏன் அப்படி? அவன் எந்தக் காரியத்தைச் செய்தாலும் தோல்விதான் கிடைக்கும் என்று அவன் ஜாதகத்தில் எழுதியிருந்தது. இதை அவன் மிகவும் உறுதியாக நம்பிக் கொண்டிருந்தான். அவன் நாட்களெல்லாம் துயரத்திலேயே கழிந்தன. ஒரு நாள் அவனுக்குச் சாப்பாட்டுக்கே வழியில்லாது போய்விட்டது. அவனுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. யாரிடமாவது தன் கஷ்டங்களைச் சொல்லி உதவி கேட்கலாம் என்று நினைத்து ஒரு ஞானியைச் சந்தித்தான்.

'ஐயா, நான் எடுத்த காரியம் எதுவும் பயனளிக்காது என்று என் ஜாதகத்தில் எழுதியிருக்கிறது. நான் என்ன செய்வேன்? விதியை மாற்ற யாரால் முடியும்? என் கஷ்டங்களிலிருந்து எப்படி மீள்வேன்?' எனக் கேட்டான்.

ஞானி வாசலுக்குச் சென்றார். ஒரு சிறிய கல்லை எடுத்து மேல் நோக்கி எறிந்து விட்டுச் சொன்னார்: 'நண்பனே, அதோ மேல் நோக்கிச் சென்ற அந்தக் கல்லின் விதி என்ன? கீழே விழ வேண்டும் என்பதுதானே? இந்த இடத்தில் கீழே விழுவதுதான் அதன் விதி. ஆனால் அந்தக் கல் கீழே விழுவதற்கு முன்பு என்னால் கையால் பிடிக்க முடியும். பாதியிலேயே அதை அடித்து வேறு இடத்தில் விழச் செய்ய முடியும். அந்தக் கல் தரையைத் தொடும் முன்பே அதை பலமாகத் தட்டிவிட்டுத் தொலைவில் விழச் செய்ய முடியும். இதைப் போன்றது தான் விதியும். இது போல, உன் விதியை மாற்ற, வேறொரு புதிய விதியை உன்னால் செய்ய முடியும். புதிய விதி என்பது ஆழ்ந்த தன்னம்பிக்கைதான். விடாமுயற்சியும் கடும் உழைப்பும் தான்... நண்பனே, உன் செயல்கள் தான் உன் வாழ்வைத் தீர்மானிக்கும்.'

'விதி என்று ஓய்ந்திருக்கலாகாது' என்று அந்த ஏழை மனிதன் புரிந்துகொண்டான். புதிய மனோபாவத்துடனும் உற்சாகத்துடனும் வாழ்வை எதிர்கொண்டான்."

(தினமணி: சிறுவர் மணி, 02.10.2010, பக்.16-17)

விதி வலிமையானது தான், ஒப்புக்கொள்வோம்; ஆனால், அதற்காக விதியே கதி என்று இருக்காமல், மூலையில் முடங்கிக் கிடக்காமல், புதியதொரு விதியை வகுத்து, அதனை எந்த நாளும் காத்து, வாழ்வில் முன்னேறுவோம்; முத்திரை பதிப்போம். வீரத்துறவி **விவேகானந்தரின்** மந்திர மொழியினை வாழ்வின் தாரக மந்திரமாகக் கொண்டு **'நமது விதியை நாமே வகுத்துக் கொள்வோம்'** (விவேகானந்தரின் அறிவுரைகள், ப.19).

3

'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்!'

"நண்பர்களே! வாழ்க்கையில் அடிபட ஆசைப் படுங்கள்! வாழ்க்கையில் அவமானப்பட ஆசைப் படுங்கள்! வாழ்க்கையில் துன்பப்பட ஆசைப்படுங்கள்! அவைகள்தான் உரம்!"

– எம்.கற்பக விநாயகம்*

அணுகுமுறையில் இரண்டு வகைகள் உண்டு. ஒன்று, எதையும் நம்பிக்கையோடு பார்ப்பது, உடன்பாட்டு நோக்கில் அணுகுவது. இதனை ஆங்கிலத்தில் 'Optimism' என்றும் 'Positive Thinking' என்றும் குறிப்பிடுவார்கள். இன்னொன்று, எல்லாவற்றையும் நம்பிக்கை இல்லாமல் பார்ப்பது, எதிர்மறையான நோக்கில் காண்பது. இதனை ஆங்கிலத்தில் 'Pessimism' என்றும் 'Negative approach' என்றும் சுட்டுவார்கள்.

நம் வாழ்க்கை முன்னேற்றத்திற்கும் ஆளுமை வளர்ச்சிக்கும் முக்கியமாகத் தேவைப்படுவது நம்பிக்கைப் பார்வையே; உடன்பாட்டு நோக்கே. தமிழ் இலக்கியத்தை மனம் கலந்து கற்றால் போதும்; நம் மனதில் இருந்து அவநம்பிக்கை அறவே அகன்றுவிடும்; விரக்தி விட்டு விலகிப் போகும்; எதிர்மறைச் சிந்தனை சொல்லாமல் விடை பெற்றுச் செல்லும். ஒரு பறவைப் பார்வையில் தமிழ் இலக்கியத்தை அலசி ஆராய்ந்து பார்ப்போமா?

முதலில் சங்க இலக்கியத்தை எடுத்துக்கொள்ளுங்கள். "இன்னாது அம்ம இவ்வுலகம்" என்ற புறநானூற்றுப் புலவர் அத்தோடு நிறுத்திக் கொண்டிருந்தால், அது எதிர்மறையான சிந்தனையாக - விரக்தியின் வெளிப்பாடாக - இருந்திருக்கும். ஆனால், அவரே **"இனிய காண்க இதன் இயல்புணர்ந்தோரே"** என்று அடுத்துப் பாடியிருப்பதால், 'இந்த உலகம் பொல்லாததுதான்; கொடியதுதான். ஆனால் இதன் இயல்பை உணர்ந்து கொண்டு, நாம் தான் அதிலே இனிமையையும் காணக் கற்றுக் கொள்ள வேண்டும்' என்ற தெளிவையும் பெற முடிகின்றது.

---

* *வாழ்க்கை ஒரு சவால் – சந்தியுங்கள், ப.37*

அடுத்து, திருக்குறளுக்கு வாருங்கள். **காந்தியடிகள்** தொடங்கி **ஆல்பர்ட் சுவைட்சர், ஜி.யு.போப்** போன்றவர்கள் வரை உலகப் பேரறிஞர்கள் அனைவரும் திருக்குறளை ஒட்டுமொத்தமாகப் போற்றிப் புகழ்கிறார்கள் என்றால் என்ன காரணம்? வள்ளுவர் பெருமான் 'வாழ்வாவது மாயம், மண்ணாவது திண்ணம்' என்றோ, 'காயமே இது பொய்யடா' என்றோ, 'பெண் எனும் மாயப் பிசாசு' என்றோ 1330 குறட்பாக்களில் எங்கும், யாரையும் பாடவில்லை; பழிக்கவில்லை. அவர் இந்த வையத்துள் வாழ்வாங்கு வாழவே வழிகாட்டுகின்றார். இல்லறமாம் நல்லறத்தின் மாண்பினையே - இல்லாளின் நலத்தினையே - போற்றுகின்றார்; பொதுமை நோக்கில் உலக மக்கள் அனைவருக்கும் பொருந்தும் கருத்துக்களையே எடுத்து மொழிகின்றார்; மொத்தத்தில் படிப்பவர் மனங்களில் நம்பிக்கை விதைகளையே தூவுகின்றார்.

அப்படியே தெய்வத் தமிழுக்கு வந்தால், குழந்தை ஞானியான **திருஞான சம்பந்தர்**, "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம். எண்ணில் நல்ல கதிக்கு யாதும் ஓர் குறைவிலை" என்று நம் மனங்களில் நம்பிக்கை ஒளியைப் பாய்ச்சுகிறார். தாண்டக வேந்தர் **திருநாவுக்கரசரோ** "நாமார்க்கும் குடியல்லோம். நமனை அஞ்சோம்... இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை" என்று எழுச்சிமிக்க குரலில் முழங்குகிறார்.

இருபதாம் நூற்றாண்டின் விடியலிலே இலக்கிய உலகில் அடியெடுத்து வைத்த **பாரதியோ**, சொந்த வாழ்வில் வறுமையின் தாக்குதல் எவ்வளவு இருந்தாலும் சோர்ந்து போய் மூலையில் முடங்கிவிடாமல்,

"எத்தனை கோடி இன்பம் வைத்தாய் எங்கள்
இறைவா இறைவா இறைவா"

என்று மூன்று முறை அடுக்கிக் கூறுகின்றார்

"இளம்பிறையே!
உனது ஏழ்மையை
நினைத்து வருந்தாதே!
ஏனென்றால்
உன்னுள்ளே தான்
பூரண சந்திரன்
புதைந்து கிடக்கிறான்!"

என்று இன்றைய புதிய தமிழ்க் கவிதையும் தன் பங்கிற்குப் படிப்பவர் உள்ளங்களிலே நம்பிக்கையை ஊட்டியுள்ளது.

'The Power of Positive Thinking' என்ற ஆங்கில நூல் இன்று உலக அரங்கில் இலட்சக்கணக்கில் விற்பனை ஆகியுள்ளது; பல பதிப்புக்களைக் கண்டுள்ளது. இதைப் போலப் பத்துப் புத்தகங்களை எழுது வதற்கான உடன்பாட்டு எண்ணங்கள் - நம்பிக்கைச் சிந்தனைகள் - தமிழ் இலக்கியங்களில் நிறையவே உள்ளன. தட்டுங்கள் திறக்கப்படும்; கேளுங்கள் கொடுக்கப்படும்!

4

வெற்றிக்கு வழி - வித்தியாசமான அணுகுமுறை

"ஒருநாள் என்பது நம் வாழ்க்கையின் ஒரு முக்கியமான சிறுபகுதி. அதன் ஒவ்வொரு மணித்துளியையும் ஒவ்வொரு மணிப் பொழுதையும் நாம் எப்படிப் பயன்படுத்துகின்றோமோ அதைப் பொறுத்தது தான் நம் வாழ்க்கை." — அகிலன்*

அன்புக் குழந்தைகளே,

வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டுமானால் - சாதனை படைக்க வேண்டுமென்றால் - நீங்கள் செய்ய வேண்டியது ஒன்று உண்டு.

'பத்தோடு பதினொன்று; அத்தோடு இது ஒன்று' என்பது போல் நீங்கள் ஒரு போதும் இருக்கக் கூடாது. 'பத்துக்குள் ஓரிடம்; அதுவும் முதலிடம்' பெறுவது எப்படி என்ற முறையில் நீங்கள் முயல வேண்டும். அதே முயற்சியோடு வாழ்வில் ஒவ்வோர் அடியையும் நீங்கள் எடுத்து வைக்க வேண்டும். அதுதான் சாதனை படைத்த மனிதர்கள் எல்லோரும் செய்து காட்டி இருப்பது. ஓர் உதாரணம் சொல்லட்டுமா?

இராமலிங்கம் என்ற சிறுவனுக்கு அப்போது ஒன்பது வயது. ஒரு நாள் வகுப்பில் ஆசிரியர் 'உலக நீதி'யில் இருந்து ஒரு பாடலை நடத்திக் கொண்டிருக்கிறார்.

"ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்
ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்
மாதாவை ஒரு நாளும் மறக்க வேண்டாம்
வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம்"

என்ற பாடலைச் சொல்லச் சொல்கிறார் ஆசிரியர். ஆனால் இராமலிங்கம் திரும்பச் சொல்லவில்லை.

---

* வெற்றியின் ரகசியங்கள், ப.165

"ஏன் சொல்ல மறுக்கிறாய்?" என்று ஆசிரியர் சற்றுக் கோபத்தோடு கேட்கிறார்.

"இறைவனிடத்திலே வேண்டாம், வேண்டாம் என்று சொல்லிக் கொண்டிருப்பானேன்? ஏதாவது வேண்டும், வேண்டும் என்று எதை வேண்டலாம் என்று எண்ணிக் கொண்டிருந்தேன்" என்று மறுமொழி கூறுகிறான் இராமலிங்கம்.

இப்படி ஒரு பதிலை எதிர்பாராத ஆசிரியர், "நீ வேண்டுமானால் வேண்டும், வேண்டும் எனப் பாடு" என்று கொஞ்சம் கடுமையான குரலில் கட்டளையிடுகிறார். உடனே இராமலிங்கம் சிறிதும் தயங்காமல் வகுப்பறையிலேயே பாடிய பாடல் தான் இது.

"ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்;
உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்!"

இந்தப் புகழ் பெற்ற பாடலைப் பாடிய ஒன்பது வயதுச் சிறுவன் இராமலிங்கம்தான், பிற்காலத்தில் அருட்பிரகாச வள்ளலாராக உயர்ந்தார்.

குழந்தைகளே, நீங்களும் வள்ளலாரைப் போல் வாழ்க்கையில் உயர வேண்டும் என்றால், இளமைப் பருவத்திலிருந்தே வித்தியாச மாகச் சிந்திக்க வேண்டும்; வித்தியாசமாகச் செயல்படவேண்டும்.

'ஷிவ் கேரா' (Shiv Khera) என்ற மேலை நாட்டு அறிஞரும் 'You Can Win' என்னும் தமது புகழ் பெற்ற நூலில் இக்கருத்தைத் தான் வலியுறுத்துகிறார்:

"வெற்றியாளர்கள் ஒருபோதும் வித்தியாசமான காரியங்களைச் செய்வதில்லை; அவர்கள் எப்போதும் வித்தியாசமான முறையிலேயே காரியங்களைச் செய்வார்கள்" (Winners don't do different things; they do things differently).

இன்னொன்று: வேண்டாம், வேண்டாம் எனக் கூறுவது எதிர்மறையான சிந்தனை(Negative Thinking)யின் வெளிப்பாடு. வேண்டும். வேண்டும் என நினைப்பது உடன்பாடான சிந்தனை (Positive Thinking)யின் வெளிப்பாடு.

எப்போதும் - எதையும் - உடன்பாடான கோணத்தில் பார்ப்பது, சிந்திப்பது, செயலாற்றுவதுதான் வாழ்வில் வெற்றியை நோக்கி நாம் பீடுநடை போட வழிவகுக்கும்.

உங்களுக்கு எளிதில் விளங்குவதற்காக இதோ ஒரு கதை:

மாமன்னர் அக்பர் ஒரு நாள் தம்முடைய பற்களில் ஒன்றைத் தவிர, மற்ற பற்கள் எல்லாம் விழுந்து விட்டது போல் கனவு கண்டார். நாட்டில் உள்ள சோதிடர்களை எல்லாம் அழைத்து, அந்தக் கனவுக்குப் பலன் கேட்டார்.

"அரசே! உங்கள் உறவினர்கள் எல்லோரும் உங்களுக்கு முன்னதாக இறந்து விடுவார்கள். நீங்கள் மட்டும் தனித்து விடப் படுவீர்கள். இதுதான் அக் கனவுக்குப் பொருள்" என்று அனைவரும் ஒருமித்த குரலில் கூறினார்கள்.

அவர்களின் விளக்கம் அக்பருக்கு மனநிறைவைத் தரவில்லை. மாறாக, ஆழ்ந்த மன வருத்தத்தையே தந்தது. பின்னர் பீர்பாலை அழைத்து, தான் கண்ட கனவுக்குப் பொருள் என்ன என்று கேட்டார்.

பீர்பால் சிறிது நேரம் சிந்தித்தார். பிறகு சொன்னார்: "மன்னர் பெருமானே! உங்கள் உறவினர்களைக் காட்டிலும் நீங்கள் மட்டும் எல்லாவிதமான இன்பங்களையும் பேறுகளையும் பெற்று நீண்ட காலம் வாழ்வீர்கள் என்பதைத்தான் உங்கள் கனவு உணர்த்துகிறது."

சாமர்த்தியமான இந்தப் பதிலால் மன்னர் மனம் மகிழ்ந்தார். பீர்பாலைப் பாராட்டிப் பரிசுகள் வழங்கினார்.

நன்றாக நினைத்துப் பாருங்கள், குழந்தைகளே! சோதிடர்களும் பீர்பாலும் சொன்ன செய்தி ஒன்றுதான். ஆனால் சொன்ன முறையில்தான் எவ்வளவு வேறுபாடு!

வழக்கமான முறையில் சிந்திக்காமல் புதிய கோணத்தில் சிந்திப்பது என்பது இதுதான்:

காந்தியடிகளின் மூன்று குரங்கு பொம்மைகளைப் பற்றி ஆசிரியர் விளக்கினார்.

ஒரு மாணவன் கேட்டான்.

"எப்போதுமே கண்களை மூடிக் கொண்டிருந்தால் நல்லவற்றைக்கூடப் பார்க்க முடியாதே?

எப்போதுமே செவிகளை மூடிக்கொண்டிருந்தால் செவிக்கு உணவாக எதையும் படைக்க முடியாதே?

எப்போதுமே வாயைப் பொத்திக் கொண்டிருந்தால் அநீதிகளைத் தட்டிக் கேட்க முடியாதே?"

எனவே நீங்களும் இன்றிலிருந்து - இக்கணத்தில் இருந்து - உடன்பாடான முறையில், புதிய நோக்கில் சிந்தியுங்கள்! அதனை வித்தியாசமான பாங்கில் வெளியிடுங்கள். நீங்கள் வெற்றி பெறுவது நிச்சயம்.

நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்கள்!

அன்புடன்,

இரா.மோகன்

-தினமணி : சிறுவர் மணி, 21.06.2003

5

தங்க நாணயம் போன்ற தமிழ்நாட்டுப் பழமொழி

" 'இன்று புதிதாய்ப் பிறந்தோம்' என்று உற்சாகத்துடன் ஒவ்வொரு விடியலையும் வரவேற்கும் உள்ளம் உடையவனால் மட்டுமே வாழ்க்கைப் பிரவாகத்தில் மூழ்கிவிடாமல் எளிதாக நீந்த முடியும்."

– தமிழருவி மணியன்*

பழமொழிகளின் தோற்றத்திற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளன. அவற்றுள் ஒன்றுதான் கதை. சில கதைகள் மக்களிடம் செல்வாக்குப் பெற்றுவிட, அவற்றில் உள்ள நல்ல வாக்கியங்கள் மக்கள் செவியிலும் நாவிலும் பயின்று நாளடைவில் பழமொழிகளாகி விடுகின்றன. இவற்றைப் 'பழமொழிக் கதைகள்' (Proverbial Folk Tales) என்ற பெயரால் நாம் அழைக்கலாம்.

நமக்குத் தனித்தனியே பழமொழிகளைப் பற்றித் தெரியும்; கதைகளைப் பற்றியும் தெரியும். நாட்டுப்புறவியல் அறிஞர் பேராசிரியர் சு.சண்முகசுந்தரம் இரண்டையும் இணைத்துப் 'பழமொழிக் கதைகள்' என்ற பெயரில் 53 கதைகளைத் தொகுத்துத் தந்துள்ளார். இக் கதைகள் எளிமையாகவும் இனிமையாகவும் அமைந்து, உயர்ந்த அனுபவங்களையும் வாழ்வியல் உண்மைகளையும் சுவையாகவும், சுருக்கமாகவும், நயமாகவும், நுட்பமாகவும் உணர்த்தி நிற்கின்றன.

"சிதைந்து அழிந்து போன பழைய தத்துவ ஞானத்தில் எஞ்சி நிற்பவை பழமொழிகள்; அவை சுருக்கமாகவும் உண்மையாகவும் இருப்பதால் பாதுகாக்கப் பெற்றுள்ளன" என்கிறார் கிரேக்கத் தத்துவ ஞானி அரிஸ்டாட்டில். மேலும், மூதறிஞர் மாக்ஸ் முல்லரின் சொற்களில் குறிப்பிடுவது என்றால், "பழமொழி எந்த மொழியில் எழுதப் பெற்றிருந்தாலும், அதன் ஒவ்வொரு வரியும், ஒவ்வொரு சொல்லும் வரவேற்கத்தக்கவை."

---

* ஊருக்கு நல்லது சொல்வேன், ப.85

பதச்சோறாக, 'எல்லாம் நன்மைக்கே!' என்ற பழமொழிக் கதையினைப் பேராசிரியர் சு.சண்முகசுந்தரத்தின் சொற்களில் இங்கே காணலாம்.

"ஒரு ஊர்ல ஒரு ராஜா. அவருக்கு ஒரு மந்திரி. மந்திரி நல்ல புத்திசாலி. எப்பவும் எதுக்கெடுத்தாலும் 'எல்லாம் நன்மைக்கே' என்று சொல்வது அவரது வழக்கம். அடிக்கடி அவர் சொல்ல ராஜா கேட்டுக் கேட்டு எரிச்சலும் அடைவதுண்டு.

ஒரு நாள் ராஜா வேட்டைக்குக் கிளம்பினார். அப்போது வெற்றிலை போட்டுக் கொள்ள ஆசைப்பட்டார். உடனே பாக்கு வெட்டியைத் தானே எடுத்து பாக்கை வெட்டினார். பண்டையிலும் வெட்டினால் தானே ஒழுங்காக வெட்டத் தெரியும்? பாவம் சுண்டு விரலை ஜோராக வெட்டி விட்டார். வலி பொறுக்க முடியாமல் அவர் குதித்தபோது மந்திரி பார்த்துவிட்டு, 'எல்லாம் நன்மைக்கே' என்றாராம்.

ராஜாவுக்கு எரிச்சல் என்றால் சொல்லி முடியாது. 'எனக்கு வலி, வேதாந்தமா பேசுகிறீர்? நீர் என்னோட வர வேண்டாம், இங்கேயே கிடயும்' என்று கத்திவிட்டு, ராஜா வேட்டைக்கு விரலில் கட்டோடு புறப்பட்டுப் போய்விட்டார். அப்போதும் மந்திரி 'எல்லாம் நன்மைக்கே' என்றாரே பார்க்கலாம்!

அன்றைக்குக் கொஞ்சம் கோபத்தோடு நிதானம் இல்லாமல் தான் ராஜா வேட்டையாடினார். வழி தவறிவிட்டது. அங்குள்ள காட்டுவாசிகளிடம் மாட்டிக் கொண்டார். அவர்கள் அவரைத் தங்கள் குல தெய்வத்துக்குப் பலியிடக் கொண்டு போனார்கள். 'நல்ல பலி' என்று சந்தோசத்தோடு போன போது ஒருவன் அவரது விரல் காயத்தைக் கவனித்து விட்டான். 'குறையுள்ள மனிதனைக் குல தெய்வத்துக்குப் பலியிடக் கூடாது'ன்னு அவரை விட்டுவிட்டார்கள். எப்படியோ வழி கண்டுபிடித்து வர, அவரது ஆட்கள் அதற்குள் அவரைக் கண்டுபிடித்து, அரண்மனைக்குக் கூட்டிட்டுப் போனார்கள்.

மந்திரி அவரிடம், 'நான் சொன்னது சரிதானே?' என்று கேட்டார். ராஜாவும் 'ஆமா' என்று சந்தோசப்பட்டார். அவருக்கு இன்னொரு சந்தேகம் வந்தது.

'சரிதான். விரலை வெட்டினது எனக்கு நன்மை, வேட்டைக்கு நீர் வராதது எப்படி உமக்கு நன்மை?' என்று ராஜா கேட்டார்.

'அரசே, நானும் உம்மோடு வந்தால் உம்மை விட மாட்டேன். பின்னாலேயே வந்திருப்பேன். உம்மோடு காட்டுவாசிகளிடம் அகப்பட்டிருப்பேன். அவர்கள் உம்மை விட்டாலும் என்னை விட மாட்டார்கள். நான் பலியாகி இருப்பேன், இல்லையா?' என்று கேட்டபோது ராஜா ஒத்துக் கொண்டார்.

எல்லாம் நன்மைக்காகத்தான்! - எவ்வளவு நம்பிக்கை நிறைந்த பழமொழி! வாழ்வில் அவ்வப்போது நாம் அடி வாங்கும்போது - சில நேரங்களில் இடியென இன்னல்கள் அணிவகுத்து வந்து நம்மைத் தாக்கும்போது - இந்தப் பழமொழி தானே நம் நினைவுக்கு வந்து நமக்கு அமைதியும் ஆறுதலும் தரும்? நம் வாழ்க்கை அனுபவத்தில் இந்தப் பழமொழி எத்தனை முறை நினைவுக்கு வந்து நமது புண்பட்ட மனத்தை இதமாக வருடிக் கொடுத்திருக்கிறது? "அனுபவங்களின் எதிரொலிகள் பழமொழிகள்" என்னும் ரஷ்ய நாட்டுப் பழமொழி இங்கே நினைவுகூரத்தக்கது. "நினைவில் உள்ள நல்ல பழமொழி பெட்டியில் உள்ள தங்க நாணயத்தைப் போன்றது" என்கிறது ஸ்வீடன் பழமொழி ஒன்று. உண்மையில் 'எல்லாம் நன்மைக்கே' என்பது நம்பிக்கை ததும்பி நிற்கும் - உடன்பாட்டுச் சிந்தனை (Positive thinking) சுடர் விட்டுத் திகழும் - தங்க நாணயம் போன்ற ஒரு பழமொழிதான்! இது உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை.

6

இனிப்புக்குத் தேன், அன்புக்கு மனைவி

"இருபத்தைந்து வயதிலே மனைவியின் உடலினிடம் மனிதனுக்கு அன்பு உண்டாகிறது. நாற்பதாவது வயதில் தன் குழந்தைகளின் தாய் என்ற வகையில் அந்த அன்பு நிலைக்கிறது. ஆனால் முதுமையில் வாழ்க்கைத் துணைவி என்ற முறையில் அது வளருகிறது."

– வி.ஸ.காண்டேகர்*

பாசத்தில் சிறந்து விளங்குவது தாய் என்றால், அன்பில் சிறந்து விளங்குவது மனைவி எனலாம். 'வலிமை சேர்ப்பது தாய்முலைப் பாலடா; மானஞ் சேர்க்கும் மனைவியின் வார்த்தைகள்' எனத் தம் 'பெண்மை' என்னும் பாடலில் தாய்க்கும் மனைவிக்கும் ஒருசேரப் புகழாரம் சூட்டுவார் கவியரசர் பாரதியார். 'தாய்க்குப் பின் தாரம்' என்பது தமிழ்நாட்டில் தொன்றுதொட்டு வழங்கி வரும் ஒரு பொருள் பொதிந்த பழமொழி ஆகும். ஓர் ஆடவனின் வாழ்க்கையில் இளமையில் தாய் பெற்றிருந்த இடத்தை, நடுப் பகுதியில் அவனது தாரம் பெறுகிறாள்; அவனது முதுமைப் பருவத்தில் தாயே தாரமாகப் பரிணாம வளர்ச்சியை அடைகிறாள்; நிறைவாகத் தெய்வ நிலைக்கும் உயருகிறாள். 'என் தேவையை யாரறிவார், உனைப் போல் தெய்வம் ஒன்றே அறியும்' என்னும் கவியரசர் கண்ணதாசனின் மந்திர மொழி இங்கே மனங்கொளத் தக்கதாகும்.

சங்கச் சான்றோர் பிசிராந்தையார் யாண்டு பலவாகியும் தமக்கு நரை தோன்றாமல் இருப்பதற்கான காரணங்களைப் பட்டியல் இடும் பொழுது முதலில் மாண்புடைய மனைவியைச் சுட்டுகின்றார். தெய்வப் புலவர் திருவள்ளுவரும் 'இல்லது என் இல்லவள் மாண்பானால்?' என வினவுவதன் வாயிலாக வாழ்க்கைத் துணைநலத்தை வானளாவப் போற்றுகின்றார். 'பெண்ணின் நல்லாளொடு பெருந்தகை இருப்பதால், மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம், எண்ணில் நல்ல கதிக்கு யாதும் ஓர் குறைவில்லை' என நம்பிக்கையுடன் மொழிகின்றார் 'திராவிட சிசு' திருஞான

* தமிழில்: கா.ஸ்ரீ.ஸ்ரீ., சிந்தனைச் செல்வம், ப.58

சம்பந்தர். கவிச் சக்கரவர்த்தி **கம்பரும்** வசிட்டன் வாயிலாக அறத்தின் நாயகன் இராமனுக்கு மணிமுடி சூட்டுவதற்கான காரணங்களை நிரந்தினிது கூறும்போது, 'பெரும்புகழ்ச் சானகிஆம் நல்லள்' என மனைவி நல்லவளாக விளங்கும் மாண்பினைச் சிறப்பாக எடுத்துரைக்கின்றார். 'மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்' என்னும் கவிஞர் **கண்ணதாசனின்** வைர வரி அனைவரும் அறிந்ததே. இங்ஙனம் சான்றோர் பலரும் வாழையடி வாழையாகக் காலந்தொறும் மனைவியின் மாண்பினைக் குறித்துப் பலபடப் பாராட்டிக் கூறி இருப்பினும். உலகியல் வழக்கில் இன்று ஒரு சிலர், மனைவிக்கு உரிய இடத்தினைத் தரத் தயங்குகின்றனர்; தாயைப் போற்றும் இவர்கள், மனைவியை மட்டம் தட்டுவதும் குறைகூறுவதுமாக இருக்கின்றனர்; இன்னும் ஒரு சிலர் மனைவியைக் கை நீட்டி அடிக்கும் எல்லைக்கும் சென்று விடுகின்றனர். இத்தகையோருக்கு மனைவியின் அருமையை உணர்த்தும் வகையில் உள்ளத்தை உருக்கும் ஓர் அரிய நாட்டுப்புறக் கதையினை இங்கே எடுத்துக்காட்டலாம். அக்கதை வருமாறு:

"ஓர் ஊரில் கணவன் மனைவியாக இருவர் வாழ்ந்து வந்தனர். கணவன் மனைவியை மதிப்பதே இல்லை. ஆனால் மனைவியோ அன்பின் உருவமாகக் காணப்பட்டாள். அவளைக் குறை சொல்வதே அவன் வேலை.

ஒருநாள் கணவனுக்கு உணவு பரிமாறும்போது அவளுடைய வாயில் இருந்து ஒரு துளி எச்சில் தெறித்து இலையில் விழுந்து விட்டது. அதைக் கண்டதும் அவனுக்கு மிகவும் கோபம் வந்து அவளைப் பலவாறாக ஏசிப் பேசினான். இனிமேல் தூய்மை இல்லாத அவளுடன் வாழ்வதில்லை என்று சொல்லி வீட்டை விட்டு வெளியேறினான்.

வெகுதூரம் சென்று விட்டான். அவன் அடிக்கடி 'சிவ சிவா' என்று சொல்வது வழக்கம். ஓர் இடத்தில் 'சிவா' என்ற சொல்லைக் கேட்கவே பிடிக்காத ஒருவன் இருந்தான். அவன் இவனைத் துரத்தித் துரத்தி அடித்தான். அவனுக்குப் பயந்து காட்டுக்கு ஓடினான்.

காட்டில் ஒரு திருடன் இவனிடம் இருந்தவற்றைப் பிடுங்கிக் கொண்டு அடித்து விரட்டினான். உடுத்தி இருந்த துணியும் பறிபோய்விட்டது. உண்ண உணவின்றிப் பசியோடு தவித்தான். எது கிடைத்தாலும் தின்னலாம் என்று துடித்தான். ஆனால் அவனுக்கு எதுவும் கிடைக்கவில்லை.

அப்பொழுது ஒருவன் ஒரு சட்டியில் சோறு கொண்டு வருகிறான். தாங்க முடியாத பசியால் தவிக்கும் இவன், சோற்றைக் கண்டதும் கைநீட்டி இரக்கிறான். அவன் தன் அழுக்கான கையால் சட்டியில் இருந்து ஒரு பிடி சோற்றை எடுத்துக் கொடுக்கிறான்.

அதை வாங்கி ஆவலுடன் வாயில் இட்டு விழுங்குகிறான். சோற்றைக் கொடுத்தவன் 'சுவையாக இருக்கிறதா?' என்று கேட்கிறான். உப்புக் கரிப்பதாக இவன் கூறுகிறான். அதற்கு அவன் 'மூத்திரச் சட்டியில் இருக்கும் சோற்றில் உப்புக் கரிக்காமல் நெய்யா சொரியும்?' என்று சொல்லிச் சிரிக்கிறான்.

இவன் அதைக் கேட்டுத் திகைப்பு அடைகிறான். வந்தவன் சிறையில் இருந்து தப்பி ஓடி வருகிறான். அங்கிருந்த மூத்திரச் சட்டி அவனுக்குப் பிச்சைப் பாத்திரமாக உதவியுள்ளது. அவன் பிச்சை எடுத்த சோற்றை இவன் வாங்கிச் சாப்பிட்டு விட்டான்.

பலவித எண்ணங்கள் இவன் மனதில் தோன்றுகின்றன. மனைவியின் ஒரு துளி எச்சில் இலையில் பட்டதற்காக அவளைத் திட்டியதை நினைத்து வருந்துகிறான். அவளிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று நினைத்துத் தன் வீட்டுக்கு வருகிறான்.

வீடு பூட்டி இருக்கிறது. மனைவி எங்கே போனாள் என்று யாருக்கும் தெரியாது. மீண்டும் அவன் கால் போன போக்கில் எங்கெங்கோ போகிறான். ஆள் உருமாறி அடையாளமே தெரியாத நிலையில் காடுமேடு எங்கும் திரிகிறான்.

அவன் மனதில் இறை நம்பிக்கை மிகுதியாகிறது. மனிதரை மதிக்கும் பண்பு கூடுகிறது. பெண்களை மிக உயர்வாகக் கருதுகிறான். ஓர் இடத்தில் ஒரு பெண் சன்னியாசியைக் காண்கிறான். தன் பாவம் தீரச் சன்னியாசியின் காலில் விழுந்து வணங்குகிறான். அந்தத் தவமாது தூர விலகி நின்று எழுந்திருக்குமாறு வேண்டுகிறாள். இவன் எழுந்திருந்து பெண் சன்னியாசியை மீண்டும் வணங்கி, 'நான் விரும்புவதைக் கட்டாயம் செய்ய வேண்டும்' என்று பணிவாகக் கெஞ்சிக் கேட்கிறான்.

சன்னியாசி மிகவும் தயங்கித் தான் என்ன செய்ய வேண்டும் என்று அன்புடன் கேட்டதும், அவன் தான் செய்த பாவத்தைப் போக்க அந்த அம்மையார் தன் மேல் காறி உமிழ வேண்டும் என்று வேண்டுகிறான். அதைக் கேட்டதும் பெண் சன்னியாசியின் உடம்பு நடுங்குகிறது.

அவனிடம் சன்னியாசி தன் வாழ்க்கைக் கதையை விரிவாகக் கூறுகிறாள். அதைக் கேட்கக் கேட்க இவன் நடுநடுங்கி சன்னியாசியைக் கூர்ந்து பார்க்கிறான். பின் பதறிய குரலில், 'நான் யார் தெரிகிறதா? அன்று இலையில் பட்ட எச்சிலுக்காக மனைவியைப் பிரிந்து, படாத பாடு பட்டு இன்று அந்த பாவத்தைப் போக்க அதே எச்சிலை இரந்து நிற்கும் பாவி!' என்று கூறுகிறான்.

அவன் கூறியதைக் கேட்டதும் பெண் சன்னியாசி அவனுடைய காலில் விழுந்து வணங்கி, 'நான் தேடியது கிடைத்து விட்டது' என்றாள். இருவரும் திரும்பவும் கூடி மனம் பொருந்திய கணவனும் மனைவியுமாக வாழ்ந்து வந்தனர்" (தமிழக நாட்டுப்புறக் கதைகள், பக்.199-201).

மனைவியை எப்போதும் மட்டம் தட்டியும் குறை கூறியும் கைநீட்டி அடித்துத் துன்புறுத்தியும் வாழ்ந்து வருவோர்க்கு இக்கதை நல்ல பாடம்; மனத்தை மாற்ற வல்ல அற்புதமான அனுபவ உண்மையும் கூட!

7

உள்ளத்தை உருக்கும் இலக்கியக் காட்சிகளும் உண்மை நிகழ்வுகளும்!

"பாசத்தால் நெஞ்சம் நெகிழ வைக்கும் நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடந்துள்ளன."

*– க.ப.அறவாணன்**

அன்பு என்பது ஆறறிவு படைத்த மக்களுக்கு மட்டும் உரிய உணர்வன்று; எல்லா உயிர்க்கும் உயிராக விளங்கும் அருங்குண மாகும். 'அன்பின் வழியது உயிர்நிலை' என்னும் வள்ளுவர் வாக்கு இவ்வகையில் மனங்கொளத்தக்கது. பறவை விலங்கு இனங்களின் வாழ்விலும் அன்பின் வெளிப்பாடு உண்டு; மரம் செடி கொடிகளுக்கும் அன்புச் செயல் உண்டு. மூதறிஞர் வ.சுப.மாணிக்கம் குறிப்பிடுவது போல், "மக்களின் அன்பொன்றனையே பாடவில்லை; ஏனையுயிர் களின் அன்புகளையும் பாடிப் பாராட்டுகின்றது. இதுவே சங்க விலக்கியத்தின் தனி மாண்பு" (சங்க நெறி, ப.28).

'கற்றறிந்தார் ஏத்தும் கலி' எனச் சிறப்பிக்கப் பெறும் கலித் தொகையில் இடம்பெற்றுள்ள ஒரு பாடல்: பாலை பாடிய பெருங்கடுங்கோ இயற்றியது; தலைவி கூற்றாக அமைந்தது. பொருள் ஈட்டுவதற்காகப் பிரிந்து சென்றிருக்கிறான் தலைவன். அவன் பிரிவால் தலைவி வருந்துவதைக் குறிப்பால் அறிந்த தோழியும் வருந்துகிறாள். அப்பொழுது தலைவி தோழியை அமைதிப்படுத்தும் விதத்தில் இவ்வாறு பேசுகிறாள்:

"தோழி! செல்வமானது அறம், பொருள், இன்பம் என்ற மூன்று பயனையும் தரும் என்று கூறித் தலைவர் அச்செல்வத்தைச் சேர்ப்பதற்காகப் பிரிந்து சென்றார். அவர் நெடுநாள் பிரிந்திருக்காமல் திரும்பி வருவார் என்று தோன்றுகிறது. அதற்கான காரணத்தை யான் கூறுகிறேன் கேள்!

---

* உயருங்கள், ப.120

தலைவர், 'பாதங்கள் பொறுத்துக் கொள்ள முடியாத வெம்மையை உடையது காடு' என்றார். ஆனால் உடனே, 'அக்காட்டில் உடுக்கையைப் போன்ற அடியை உடைய யானைக் கன்று கலக்கிய சிறிதளவு தண்ணீரை ஆண் யானை முதலில் தனது துணையாகிய பெண் யானையைக் குடிக்கச் செய்து பிறகு தான் உண்ணும்' என்றும் கூறினார்.

'பசுமை நீங்கி மரங்களின் இலைகள் எல்லாம் தீய்ந்து கிடக்கும் காடு நடப்பவருக்கு மிகவும் துன்பம் தரும்' என்று கூறினார். உடனே, 'அக்காட்டில் அன்பு கொண்ட பெண்புறா வெயிலால் வருந்திய களைப்பை ஆண் புறா தன்னுடைய சிறகுகளை அசைத்து வீசுவதால் தீர்க்கும்' என்றும் கூறினார்.

'மலையில் உள்ள மூங்கில் எல்லாம் வாடிப் போகும்படி வெயில் எரிப்பதால் காடானது நெருங்க முடியாத நிலையை உடையது' என்றார். உடனே, 'அக்காட்டில் ஆண்மான், இனிய நிழல் கிடைக்காமல் வருந்திய பெண்மானைத் தனது நிழலில் நிற்கச் செய்து பாதுகாக்கும்' என்றும் கூறினார்.

இத்தகைய நல்ல காட்சிகள் நிகழும் காட்டிடைச் செல்லும் தலைவர் நம்முடைய அழகு கெடும்படி நெடுநாள் பிரிந்திருக்க மாட்டார்; திரும்பி வருவார். அதற்கு நல்ல அறிகுறியாகப் பல்லியும் வாய்ப்பான இடத்தில் நின்று சொல்லுகிறது. என்னுடைய இடக்கண்ணும் துடிக்கிறது.

கடிய கானகத்தில் நிகழ்வனவாகப் பாலைக் கலி தீட்டியுள்ள பறவை விலங்குகளின் அன்புக் காட்சிகள் மூன்று வருமாறு:

"... ... ... அக்காட்டுள்
துடிஅடிக் கயம்தலை கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்உண்ணும் களிறு"

"... ... ... அக்காட்டுள்
அன்புகொள் மடப்பெடை அசைஇய வருத்தத்தை
மென்சிறக ரால் ஆற்றும் புறவு"

"... ... ... அக்காட்டுள்
இன்னிழல் இன்மையான் வருந்திய மடப்பிணைக்குத்
தன்நிழலைக் கொடுத்து அளிக்கும் கலை"

(கலித்தொகை, 11)

பாலை பாடிய பெருங்கடுங்கோ பதிவு செய்துள்ள இக்கானகக் காட்சிகள் உண்மையில் நடக்கக் கூடியவை தாமா என்ற ஐயம் எழலாம். ஆனால் அண்மையில் பத்திரிகைகள் உலக அரங்கில் நடைபெற்றனவாகப் பதிவு செய்துள்ள இரு உண்மை நிகழ்ச்சிகள் அதனை அறவே போக்க வல்லவை ஆகும்; அவை சங்க இலக்கியங்கள் பறவை விலங்குகளின் வாழ்வில் நிகழ்வனவாகச் சித்திரித்துள்ள அன்புக் காட்சிகளின் அழகிய பதிவுகள் போலவே விளங்குகின்றன.

'சிங்கத் தாய்' என்னும் தலைப்பில் 'ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்' இதழில் (நவம்பர், 2011, ப.26) வெளிவந்துள்ள உள்ளத்தை உருக்கும் ஓர் உண்மை நிகழ்ச்சி இது:

"செங்குத்தான மலை. அதிலிருந்து விழுந்து ஒரு சிறிய பிடிமானத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் ஒரு சிங்கக் குட்டி.

தாய்ச் சிங்கம் செய்வதறியாது தவித்துக் கொண்டிருக்கிறது.

சில சிங்கங்களுடன் சேர்ந்து தாய்ச் சிங்கம் தன் குட்டியைக் காப்பாற்ற முயற்சிக்கிறது.

ஆனால் கிடுகிடு பாதாளம்...

தாய் மனம் தளராமல் குட்டியைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டது. மிகுந்த கவனத்துடன் கீழே இறங்குகிறது.

கரணம் தப்பினால் மரணம் என்ற அபாயம். கதறி ஓய்ந்த குட்டியின் பிடியோ தளர்கிறது!

ஆ, ஐயோ, ஆனால் அது கீழே விழுமுன்...

அட, தாய்ச் சிங்கம் குட்டியை எப்படியோ கவ்விக் காப்பாற்றி விட்டதே! தாய்மைக்குத் தான் என்ன ஒரு சக்தி!"

'பல்லி நேயம்!' என்னும் தலைப்பில் 'தினமணி' நாளிதழ் ('கொண்டாட்டம்', 06.11.2011, ப.4) பதிவு செய்துள்ள பிறிதோர் உண்மை நிகழ்ச்சி வருமாறு:

"ஜப்பான் நாட்டில் எப்போது பூகம்பம் வரும் என்று தெரியாது. இதனால் அந்நாட்டில் மரத்தால்தான் வீடுகள் அமைக்கப்படும். இப்படி அமைக்கப்பட்ட ஒரு வீட்டில் நடந்த சம்பவம் தான் இந்தக் கதை.

ஐந்து ஆண்டுகளுக்கு முன் கட்டிய வீட்டில் சில மராமத்துப் பணிகள் செய்வதற்காக மரத்தாலான சுவரைப் பெயர்த்து எடுக்கும்

போது, வீட்டு உரிமையாளருக்கு ஓர் ஆச்சரியம் காத்திருந்தது. மரப் பலகையின் மையத்தில் அப்படி இப்படி அசையாமல் ஒரு பல்லி இருந்தது. அதைக் குச்சியால் நகர்த்தியும் பார்த்தார். அப்படியும் அது அந்த இடத்தை விட்டு நகரவில்லை.

சில விநாடிகள் அந்தப் பல்லியையே உற்றுப் பார்த்தபடி இருந்த வீட்டு உரிமையாளருக்கு அப்போதுதான் அந்தப் பல்லியின் காலினையும் சேர்த்து ஓர் ஆணி தைத்திருந்தது தெரிந்தது.

வீட்டைக் கடந்த ஐந்து ஆண்டுகளாகப் பராமரிப்பு எதுவும் செய்யாத பட்சத்தில், இந்த வீட்டைக் கட்டும்போதே அந்தப் பல்லியின் காலோடு சேர்த்து ஆணி அறையப்பட்டிருக்கும் என்ற முடிவுக்கு வந்தார் வீட்டின் உரிமையாளர்.

இப்போது அவருக்கு, அசையாமல் ஒரே இடத்தில் இருக்கும் பல்லி எப்படி ஐந்து ஆண்டுகளாக உயிரோடு இருக்கிறது? யார் அதற்கு உணவு கொடுப்பார்கள்? என்பது போன்ற கேள்விகள் எல்லாம் வரிசையாகத் தோன்றின.

அவருக்கு வேறு வேலைகள் இருந்தாலும், அந்தப் பல்லியின் வாழ்வாதாரத்தைத் தெரிந்து கொள்ளும் ஆவலில் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார்.

நேரம் கடந்து கொண்டிருந்தது. அந்த மரச் சுவரின் வேறொரு பக்கத்திலிருந்து திடீரென்று அங்கு ஊர்ந்து வந்தது இன்னொரு பல்லி. அதன் வாயில் இரை. ஆனால் அது எடுத்து வந்த இரையை மரத்தில் அசையாமல் இருந்த பல்லியின் வாய்க்கு மாற்றியது!

அடடா! அசையாமல் இருக்கும் பல்லிக்கு இன்னொரு பல்லியின் மூலம் உயிர் மூச்சு தொடர்ந்து கொண்டிருக்கும் விந்தையை எண்ணி எண்ணிப் பெருமைப்பட்டார் அந்த வீட்டின் உரிமையாளர்.

ஒரு பல்லியின் மேல் இன்னொரு பல்லிக்கு ஏற்பட்டிருக்கும் நேயம், ஒரு மனிதரின் மீது சக மனிதருக்கு இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்?!"

இவ்விரு உண்மை நிகழ்ச்சிகளில் வரும் சிங்கத்தின் பாசத்தையும் பல்லியின் நேயத்தையும் இன்றைய மனித குலம் வளர்த்துக் கொண்டால் போதும், உலகம் அமைதிப் பூங்காவாகத் திகழும்; வாழ்க்கை இன்பம் விளையும் தோட்டமாக விளங்கும்.

8

விழி - எழு - உணர் - ஒளிர்!

"நம்பிக்கையோடு முதலில் நீ எழு; பிறகு தான் உன்னால் நடக்க முடியும்."

– ஜேம்ஸ் ஆலன்*

"ஏழை ஒருவன் ஒரு தேவதைக்குத் திருப்தி ஏற்படும் படி நடந்து கொண்டான். அந்தத் தேவதை அவன் முன்னர்த் தோன்றி, மூன்று சொக்கட்டான் காய்களைக் கொடுத்து, அவற்றை உருட்டி மூன்று வரங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கூறியது. மகிழ்ச்சி அடைந்த அந்த மனிதன் வீடு திரும்பி, தன் மனைவியிடம் விவரத்தைச் சொன்னான். பண ஆசை பிடித்த அவளோ பணத்திற்காகக் காயை உருட்டும்படி சொன்னாள். அதற்கு அவன், 'நம் இருவருக்கும் மூக்கு மிகவும் அசிங்கமாக இருக்கிறது. ஊரார் நம்மைப் பார்த்துச் சிரிக்கிறார்கள். முதலில் அழகான மூக்கு வேண்டும் என்று காயை உருட்டுவோம்' என்றான். ஆனால், பணத்தை விரும்பிய மனைவியோ காயை உருட்ட விடாமல் கணவனின் கையைப் பிடித்துக் கொண்டாள். கணவனோ திமிறிக் கையை விடுவித்துக் கொண்டு, 'எங்கள் இருவருக்கும் அழகான மூக்குகள் அமையட்டும்; மூக்குகளைத் தவிர வேறு எதுவும் எங்களுக்கு வேண்டாம்' என்று காயை உருட்டிவிட்டான். உடனே அவர்கள் இருவர் உடம்பிலும், அழகிய, ஆனால் பல மூக்குகள் தோன்றி விட்டன. பல மூக்குகள் இருப்பது அவர்களுக்கு மிகவும் தொந்தரவாக இருந்ததால் மூக்குகளே வேண்டாம் என்று காயை உருட்ட அவர்கள் இருவரும் சம்மதித்தார்கள். அதன்படி உருட்டியபோது மூக்குகளே இல்லாமல் போய்விட்டன. இப்படி இரண்டு வரங்கள் வீணாகி விட்டன. என்ன செய்வது என்று அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. கேட்பதற்கு இனி ஒரே ஒரு வரம் தான் மீதி இருந்தது. மூக்குகள் இல்லாத காரணத்தால் அதிக விகாரமாக இருந்தது. இந்நிலையில் வெளியில் போக அவர்கள் மிகவும் நாணினார்கள். அழகிய மூக்குடன் வெளியே போனால்

* தினமலர்: வார மலர், அக்டோபர் 7, 2012, ப.7

'உங்களுக்கு அழகிய மூக்கு எப்படி வந்தது?' என்று ஊரார் கேட்பார்களே, அதற்கு என்ன பதில் சொல்வது என்று அஞ்சினார்கள். தங்கள் மடமையை நினைத்து வருத்தப்பட்டார்கள். அதனால், 'அழகற்ற பழைய மூக்கு தங்களுக்கு வந்தால் போதும்' என்று காயை உருட்டினார்கள்" (தொகுத்தவர்: சுவாமி அஜராத்மானந்தர், விவேகானந்தரின் விவேகக் கதைகள். பக்.3-4).

இளைஞர்களே, சுவாமி விவேகாநந்தரின் இந்தக் குட்டிக் கதை உணர்த்தும் வாழ்வியல் உண்மை என்ன என்று உங்கள் மனத்திற்குள் சற்று அலசிப் பாருங்கள். ஏழையின் நடத்தையில் நிறைவு கொண்ட தேவதை அவனுக்கு மூன்று வரங்களைத் தந்தது. அந்த மூன்று வரங்களை முறைப்படி பயன்படுத்திக் கொண்டிருந்தால், ஏழை தன் வாழ்க்கையில் எவ்வளவோ முன்னேறி இருக்கலாம். ஆனால் ஏழையின் வாழ்க்கையில் அது நிகழவில்லை. மேலும், பண ஆசை பிடித்த அவனுடைய மனைவி முன்னேற்றத்திற்கு ஒரு குறுக்கீடாக அமைந்தாள். அவளை மீறி அவன் தன் விருப்பம் போல் செயல்பட முடியாமல் போயிற்று. இப்படித்தான் இன்றைய சூழலில் நம் நாட்டில் சில இளைஞர்கள் தங்களுக்குக் கிடைக்கும் நல்ல வாய்ப்புக்களைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளத் தவறிவிடு கிறார்கள்; தங்கள் வாழ்க்கைப் பயணத்தின் இடையே குறுக்கிடும் சில தடைக் கற்களைப் படிக்கற்களாக மாற்றிக் கொள்ள முடியாமல் - முயலாமல் - கிடைத்த நல்ல வாய்ப்புக்களைப் பறிகொடுத்து விடுகிறார்கள். வாய்ப்பு கிடைக்கவில்லையே என்று எண்ணி ஏங்கிக் கொண்டு இருக்காமல், கிடைத்த வாய்ப்பை நன்கு திட்டமிட்டு, சரியாகப் பயன்படுத்திக் கொள்ள முன்வந்தால் வாழ்க்கையில் எவரும் வெற்றி பெறுவர் என்பது உறுதி.

கம்ப ராமாயணத்தில் ஓர் இடம். அரக்கர்கோன் மாளிகை. ஆணவத்தின் வடிவமாய் அரியாசனத்தில் அமர்ந்திருக்கிறான் இராவணன். உள்ளே நுழைந்த அனுமனுக்கு உரிய ஆசனம் வழங்கப்படவில்லை. அவமதிக்க எண்ணிய இராவணனின் எண்ணத்தை முறியடித்துத் தன் வாலாலேயே ஓர் உயரிய ஆசனத்தை அங்கேயே - அப்போதே - உருவாக்கிக் கொள்ளுகிறான் அனுமன். இளைய பாரதமே, நீயும் இப்படி அனுமனைப் போல் தான் வாழ்க்கையில் எப்போதும் நம்பிக்கையோடும் விழிப்போடும் செயல்பட வேண்டும். சமுதாயத்தில் உனக்கு ஒரு வாய்ப்பு வழங்கப்பட வில்லை என்றால், நீயே முயன்று உனக்கு உரிய வாய்ப்பினை உருவாக்கிக் கொள்ள வேண்டும். **'வாய்ப்புக்களை உணர்வதே அறிவுக் கூர்மையாகும்'** என்கிறது ஒரு **சீனப் பழமொழி**.

ஒரு நேர்காணல். இளைஞர்கள் பல பேர் விண்ணப்பம் போட்டிருந்தார்கள். வந்தவர்களை எல்லாம் வடிகட்டிப் பார்த்த போது, இரண்டே இரண்டு இளைஞர்கள் மட்டும் மிஞ்சினார்கள். இருவரும் தகுதிகளைப் பொறுத்த வரையில் சரிநிகர் சமானம் பெற்றவர்களாக விளங்கினார்கள். வல்லுநர் குழு இருவரிடமும் முடிவாக ஒரே ஒரு கேள்வியைக் கேட்டது: "உங்களுக்கு இந்த வேலை கிடைக்கவில்லை என்றால், எப்படி உணருவீர்கள்?" முதல் இளைஞன், "நான் கொடுத்து வைத்தது இவ்வளவு தான் என்று நினைப்பேன்" என்று பதில் சொன்னான். 'நீ போகலாம்' என்று சொன்னது வல்லுநர் குழு. இரண்டாவது இளைஞன், அதே கேள்விக்கு, "நீங்கள் கொடுத்து வைத்தது இவ்வளவுதான் என்று நினைப்பேன்" என்று மறுமொழி கூறினான். 'நீ வேலையில் சேரலாம்' என்று ஒருமித்த குரலில் உடனே வேலை வாய்ப்பை வழங்கியது வல்லுநர் குழு. கூர்மையாகச் சிந்தித்துப் பார்த்தால், இரண்டு இளைஞர்களும் சொன்ன விடைகளில் உள்ள வேறுபாடு உங்களுக்குப் புலனாகும். 'நான் கொடுத்து வைத்தது இவ்வளவு தான்' என்று நம்பிக்கை இல்லாமல் விரக்தியான ஒரு மனநிலையில் மறுமொழி சொன்னான் முதல் இளைஞன். இரண்டாவது இளைஞனோ நம்பிக்கை ததும்பி நிற்கும் எழுச்சி மிக்க மனநிலையோடு, 'நீங்கள் கொடுத்து வைத்தது இவ்வளவு தான்' என்று உரைத்தான்; வேலை வாய்ப்பு என்ற வெற்றிக் கனியைத் தட்டிப் பறித்தான். வாழ்க்கையில் நீங்கள் எப்போதும் வாய் மூடி மௌனியாய் அடங்கி ஒடுங்கியே இருக்க வேண்டும் என்பதில்லை; சில நேரங்களில் உங்கள் சுய ரூபத்தைக் காட்ட வேண்டும்; தேவைப்பட்டால் சில நேரங்களில் விசுவரூபம் எடுக்கவும் வேண்டும். அப்போதுதான் வாழ்க்கையில் நீங்கள் முத்திரை பதிக்க முடியும்.

"ஒவ்வொருவர்க்கும் அவரவர்க்கு உரிய வாய்ப்பு கட்டாயம் வரும். அது வரை பொறுமையாகக் காத்திருக்க வேண்டும். அவசரப்படக் கூடாது" என்று கவியரசு கண்ணதாசனின் ஆசிரியர் வகுப்பில் அடிக்கடி கூறுவாராம். உண்மையில் வாழ்க்கையில் முன்னேறத் துடிக்கும் ஒவ்வொருவரும் பின்பற்ற வேண்டிய வைர வரிகள் இவை. நமக்கு இன்னும் வாய்ப்பு வரவில்லையே என்று மூடிய கதவையே பார்த்து முணுமுணுத்துக் கொண்டிருப்பதில் பயனில்லை. 'ஒரு கதவு மூடியிருந்தால் என்ன, இன்னொரு கதவு திறக்கும்', 'ஒரு முறை திறக்கவில்லை என்றால் என்ன, அடுத்த முறை கட்டாயம் திறக்கும்' என்றாற் போல் நம்பிக்கையோடு தட்டினால் நிச்சயம் கதவு திறக்கும். எனவே இளைஞர்களே, வாய்ப்பு கிடைக்கவில்லை என்ற ஏக்கத்திலேயே வீணாகக் காலத்தைக் கழித்துக் கொண்டு

இருக்காமல், கிடைத்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொண்டு - இன்னும் கூர்மையாகச் சொல்ல வேண்டும் என்றால் உரிய வாய்ப்பை உங்களுக்கு நீங்களே உருவாக்கிக் கொண்டு - காலடி எடுத்து வையுங்கள்; வெற்றியானது முகவரி கேட்டுக் கொண்டு உங்கள் வீடு தேடி வரும்.

மூத்த எழுத்தாளர் **வல்லிக்கண்ணன்** ஒரு நேர்காணலில் வாழ்க்கையில் தமக்கு மிகவும் விருப்பமானதாகச் சொன்ன வாசகம் இது:

"விழி - எழு - உணர் - ஒளிர்!" (தினமணி கதிர் : 05.03.1995)

பாரதி கனவு கண்ட அக்கினிக் குஞ்சே, விழித்தெழு! உந்தன் வாழ்க்கைதனை உணர்! ஒளிர்! விவேகாநந்தர் அறைகூவல் விடுத்த இளைய பாரதமே, நீ **ஆண்டாள்** திருப்பாவைப் பாடல் ஒன்றில் குறிப்பிடுவது போல், 'மாரி மலை முழைஞ்சில் மன்னிக் கிடந்து உறங்கும் சீரிய சிங்கம், அறிவுற்றுத் தீ விழித்து, வேரி மயிர் பொங்க எப்பாடும் பேர்ந்து உதறி, மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப் போதருமா போலே' வாழ்க்கையில் நடை பயின்று சாதனை படைக்க வாழ்த்துகிறேன் - வயதும் தமிழும் இருப்பதால்!

9

கதை ஒன்று: பார்வைகள் மூன்று

"தோல்வியை மனதில் சுமக்காதே, வெற்றியைத் தலையில் சுமக்காதே."

– செ.சைலேந்திரபாபு*

ஆமையும் முயலும் ஓட்டப் பந்தயத்தில் ஈடுபட்ட கதையைத் தெரியாதவர்கள் இருக்க மாட்டார்கள். முயல் மிகவும் வேகமாகப் பாதித் தொலைவிற்கு ஓடிற்று. ஆமை அதற்குள்ளாகப் பத்தடி கூட நகரவில்லை. அதை அறிந்து இறுமாந்த முயல் சிறிது நேரம் இளைப்பாறிவிட்டுப் போகலாமே என்று செடி மறைவில் படுத்து நன்றாக உறங்கிவிட்டது. மனம் தளராமல் விடாமுயற்சியுடன் ஊர்ந்து சென்ற ஆமை முடிவில் போட்டியிலே வெற்றி பெற்றது. இது கதை. இந்தக் கதை **கலைவாணருக்கும், இறையன்பு, பெ.தூரன்** ஆகிய படைப்பாளிகளுக்கும் வெவ்வேறு வகையான சிந்தனைகளைத் தோற்றுவித்துள்ளது; மாறுபட்ட கோணங்களில் அவர்களைச் சிந்திக்கத் தூண்டியுள்ளது.

'நாகரிகக் கோமாளி' என்று நாட்டு மக்களுக்குத் தம்மை அறிமுகம் செய்து கொண்ட கலைவாணர் **என்.எஸ்.கிருஷ்ணன்** ஒருமுறை பள்ளி மாணவர்கள் இடையே பேசச் சென்றார். முயல்-ஆமை கதையைப் பற்றிச் சொல்லி விட்டு, "முயல் ஆமையிடம் தோற்றது ஏன்?" என்று மாணவர்களைப் பார்த்துக் கேட்டார். மாணவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையான விடையைச் சொன்னார்கள். முத்தாய்ப்பாகக் கலைவாணர் தமக்கே உரிய பாணியில், "முயல் ஆமையிடம் தோற்றதற்குக் காரணம்..." என்று சொல்லி, ஒரு நொடி நிறுத்தி விட்டு, "முயல் ஆமையிடம் தோற்றதற்குக் காரணம் முயலாமை" என்றார். மாணவர்கள் அனைவரும் பலத்த கர ஒலி எழுப்பிக் கலைவாணரின் கருத்தை ஏற்றுக் கொண்டனர்.

இந்திய ஆட்சிப் பணியில் (I.A.S.) இருந்து கொண்டு இலக்கியத்திற்குத் தம் எழுத்தாலும் பேச்சாலும் ஒல்லும்

** சாதிக்க ஆசைப்படு, ப.52*

வகையெல்லாம் சீரிய பணிகளை ஆற்றி வருபவர் வெ.இறையன்பு. அவர் முயல் - ஆமை கதையை ஒரு வித்தியாசமான கோணத்தில் அணுகியுள்ளார். 'நம்மால் சாத்தியம் இல்லாதது எதுவுமே இல்லை- முயற்சியும், பயிற்சியும், தெளிவும், உற்சாகமும், தைரியமும் தான் தேவை' என்பது அவரது அழுத்தம் திருத்தமான கருத்து. இனி, இறையன்புவின் பார்வையில் முயல் - ஆமை கதை இதோ:

"ஒரு ஆமையும் முயலும் சந்தித்துக் கொண்டன. ஆமையைப் பார்த்து முயல் ஏளனமாகக் கேட்டது: 'இருவரும் ஓடலாம் - ஓட்டப் பந்தயத்திற்குத் தயாரா?'

ஆமை சொன்னது: 'நீ முயல்; நான் ஆமை. இயற்கை உன்னை வேறு விதமாகவும், என்னை ஒரு விதமாகவும் படைத்திருக்கிறது. என்னைப் போல் நீ நீரின் அடியில் நீந்த முடியாது - உன்னைப் போல் நான் ஓட முடியாது. உனக்கு வேகமாக ஓட வேண்டுமென்று விருப்பமிருந்தால் - உன் ஓடும் திறனை உலகுக்கு நிரூபிக்க வேண்டுமென்று தோன்றினால் - தயவு செய்து நீ வேறொரு முயலுடன் ஓடிப்பார் - அதுதான் சரி. நான் ஓட வேண்டுமென்று நினைத்தால், நான் இன்னொரு ஆமையுடன் தான் ஓட முடியும்'.

முயல் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டே ஓடி மறைந்தது."

'ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு ஆற்றல் இருக்கிறது. தன்னிடம் இருக்கும் பலங்களைச் சாதகமாக்கி, பலவீனங்களை வென்றெடுப்பவன் உலகத்தால் அங்கீகரிக்கப்படுகிறான்' என்பதே இக்கதையின் வாயிலாக இளைய தலைமுறையினருக்கு இறையன்பு உணர்த்த விரும்புகின்ற செய்தி ஆகும்.

நூற்றாண்டு விழா கண்ட தமிழ்ப் பேரறிஞர் - தமிழில் கலைக் களஞ்சிய வரிசையைத் தோற்றுவித்த பெருமைக்கு உரியவர் - பாரதி ஆய்வுக்கும் பதிப்புக்கும் முன்னோடியாக விளங்கியவர் - தரமான உளவியல் நூல்கள் பலவற்றின் ஆசிரியர் - சிறுவர் இலக்கியத் துறையிலும் முத்திரை பதித்தவர் - 'பத்ம பூஷன்', 'கலைமாமணி', 'இசைப் பேரறிஞர்' முதலான பல்வேறு விருதுகளுக்குச் சொந்தக்காரர் **ம.ப.பெரியசாமித்தூரன்** (1908-1987). அவர் 'ஆமையும் முயலும்' என்னும் தலைப்பில் ஐந்து பக்கக் கட்டுரை ஒன்றினைப் படைத்துள்ளார்; 'தேன்சிட்டு' என்னும் தொகுப்பில் அக்கட்டுரை இடம்பெற்றுள்ளது. 'முயல் - ஆமை' கதையைப் பெ.தூரன் தத்துவ நோக்கில் தமக்கே உரிய பாணியில் அணுகியுள்ளார். "எண்ணிப்

பார்த்தால் ஒவ்வொரு மனிதனும் ஒருவகையில் முயலாக இருப்பான்; வேறொரு வகையில் ஆமையாகி விடுவான்... வேகமாகச் செயலிலே ஈடுபடுகின்றவர்களும் உள்ளத்திலே பதட்டமில்லாது அமைதியாக இருக்க வேண்டும் என்று நமது நூல்கள் கூறுகின்றன. கண் தெறிக்கும் வேகத்திலேயும் ஆழ்ந்த அமைதியைக் காண வேண்டும். முயலுக்குள்ளே ஆமையையும், ஆமைக்குள்ளே முயலையும் கண்டவன் வாழ்க்கையின் இரகசியத்தைக் கண்டவனாகிறான்..." என்பது அறிஞர் தூரனின் தனிப்பட்ட கருத்து. இன்னும் ஒரு படி மேலே சென்று, இக்கதையின் வாயிலாக அவர், போட்டி இல்லாத - ஒருவர் மீது ஒருவர் பரிவு கொண்ட - ஒரு **குறிக்கோள் சமுதாயம்** உருவாவதற்கான வழிவகையினை நம்பிக்கையோடு முன்மொழிகின்றார்:

"வேகம் மிகுந்த முயலை ஊர்ந்து அசையும் ஆமை வெல்ல வேண்டும் என்று உலகம் ஆசைப்படுகிறது. இல்லாவிட்டால் இந்த ஆமை - முயல் போட்டிக் கதையிலே மக்களுக்கு நிரந்தரமாக இத்தனை இன்பம் பிறக்காது. ஊர்ந்து செல்லும் பிராணி ஓட்டம் மிகுந்த பிராணியை வெல்ல வேண்டும் என்று மக்களின் உள்ளத்தில் பரிவு சுரக்கின்றது. இந்தப் பரிவு நிலைத்திருக்கும் வரையில் மனித இனத்திற்கு உய்வுண்டு என்பது எனது திடமான நம்பிக்கை.

ஆமை முயலை வெல்லக்கூட வேண்டாம்; முயலோடு கூடவே செல்லவாவது உதவலாம் என்ற பரிவு எல்லோருடைய உள்ளத்திலும் தழைக்க வேண்டும். அப்பரிவு தழைத்திடும் போது போட்டி தானாகவே மறைந்துவிடும். முயல் தன் முதுகிலேயே ஆமையைச் சுமந்து செல்லவும் பரிவோடு முன்வரும்போது போட்டி ஏது? போட்டியில்லாது, அனைவரையும் உடன்கூட்டிச் செல்ல வேண்டுமென்ற பரிவுடைய மனப்பான்மை ஓங்க வேண்டும். ஆமை- முயல் கதையை நினைக்கும் பொழுதெல்லாம் எனக்கு இந்த ஆசை உண்டாகிறது. ஆமையிடம் மக்கள் காட்டும் பரிவையுணர்ந்து நம்பிக்கையும் கூடவே பிறக்கின்றது."

இங்ஙனம் ஆமையும் முயலும் ஓட்டப் பந்தயத்தில் ஈடுபட்ட பழைய கதை, 'நவில்தொறும் நூல் நயம் போலும்' என்னும் வள்ளுவர் வாய்மொழிக்கு ஏற்ப, ஒவ்வொரு முறை பயிலுந்தோறும் புதிய, வித்தியாசமான சிந்தனைகளைத் தோற்றுவித்த வண்ணம் உள்ளது.

10

'சாதிக்கப் பிறந்தவர்கள் நாம்!'

"இந்தியாவில் விசேஷக் கஷ்டங்கள் இரண்டு. பணமில்லாதது ஒன்று. ஜாதிக் குழப்பம் இரண்டாவது."

– பாரதியார்*

'சாதி இரண்டொழிய வேறில்லை' என்பது தமிழ் மகள் ஔவையின் அழுத்தம் திருத்தமான கருத்து. அவரது அகராதியில் 'இட்டார் பெரியார், இடாதார் இழிகுலத்தார்.' அவ்வளவே.

'சாதி ஆவது ஏதடா?' என்பது சித்தர் சிவ வாக்கியரின் கூரிய கேள்விக் கணை. 'சாதி பேதம் என்பதொன்று சற்றும் இல்லை இல்லையே' என்பது அவரது ஆணித்தரமான கருத்து.

'சாதிகள் இல்லையடி பாப்பா - குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்' என்பது பாட்டுக்கொரு புலவன் பாரதி, பாப்பாவுக்குக் கூறும் வாழ்க்கை நெறி. அவரைப் பொறுத்த வரையில் குலத்தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் 'பாவம்!'

'சாதி இருக்கின்றது என்பானும் இருக்கின்றானே' என்பது பாவேந்தர் பாரதிதாசனின் ஆதங்கம். 'சாதி ஒழித்திடல் ஒன்று - நல்ல தமிழ் வளர்த்தல் மற்றொன்று; பாதியை நாடு மறந்தால் - மற்றப் பாதி துலங்குவதில்லை' என்பது அவரது கொள்கை முழக்கம்.

'வேக்காடு சாதிக்கு வைக்கும் நாளே, வியனுலகப் புகழ் நமக்குக் கிட்டும் நாளாம்' என்பது கவிக்கோ முடியரசனின் முடிந்த முடிவு.

'சாதி இரண்டொழிய வேறில்லை' - அன்றைய ஔவை வாக்கு; 'சாதியொழிய வேறில்லை' - இன்றைய உலக நடப்பு. புதுக்கவிஞர் பார்வையில் 'சாதி இரண்டே; ஒன்று, நம் சாதி; இன்னொன்று, நம் சாதி அல்லாத பிற சாதி.'

'சாதிக்கோர் சுடுகாடு
தொலைவதெப்போது?
சாதிக்குச் சுடுகாடு' **(தீயின் தாகம், ப.25)**

என்பது இன்றைய ஹைகூ கவிஞர் தமிழ்நெஞ்சனின் சாட்டையடி!

---

* பாரதியார் கட்டுரைகள், ப.336

இங்ஙனம் அன்றைய ஔவையார் முதல் இன்றைய ஹைகூ கவிஞர் வரை அனைவரும் ஒருமித்த குரலில் சாதிக் கொடுமைக்கு எதிரான சாடல்களைத் தங்கள் கவிதைகளிலே அழுத்தமாகப் பதிவு செய்துள்ளனர்.

பள்ளி மாணவன் **ஆர்.ஹரிஹரன்**, முன்னைக் குடியரசுத் தலைவர் டாக்டர் **ஆ.பெ.ஜெ அப்துல் கலாம்** அவர்களிடம் ஒரு பூதத்தின் கதையைச் சொல்லி அவரது பாராட்டைப் பெற்றான். அம் மாணவன் சொன்ன குட்டிக் கதை:

"ஒரு முறை பூமியைக் காணக் கடவுள் நேரில் வந்தார். அப்போது அங்கே வந்த ஒரு பூதம், இந்தியாவை ஆட்சி செய்ய விரும்புவதாகக் கடவுளிடம் கூறியது. அதற்கு மூன்று நிபந்தனைகளைக் கடவுள் விதித்தார். அதைப் பூதமும் ஏற்றுக்கொண்டது.

வானத்தில் உள்ள நட்சத்திரங்களின் எண்ணிக்கையைச் சொல்ல வேண்டும் என்பது முதலாவது நிபந்தனை. நட்சத்திரங்களை எண்ணிப் பார்த்து ஒரு வாரத்தில் பதில் சொன்னது பூதம்.

பூமியில் உள்ள மணல் துகள்களின் எண்ணிக்கையைச் சொல்ல வேண்டும் என்பது இரண்டாவது நிபந்தனை. அதையும் எண்ணிப் பார்த்து ஒரு மாதத்தில் பதில்அளித்தது பூதம்.

இந்தியாவில் எத்தனை சாதிகள் மற்றும் சாதிக் கட்சிகள் உள்ளன என்று சரியாகச் சொல்ல வேண்டும் என்பது கடைசி நிபந்தனை. அவற்றை எண்ணிப் பார்க்கப் புறப்பட்ட பூதம் இன்னும் திரும்பவே இல்லை."

(தினமணி: 20.06.2003, ப.1)

இந்தியாவில் சாதி வேற்றுமைகள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகப் பல்கிப் பெருகி வருவதைக் குறிப்பாகவும் நயமாகவும் உணர்த்தும் குட்டிக் கதை இது!

அருளாளர்களும் சாதிக் கொடுமைக்கு எதிராக அவ்வப்போது அழுத்தமாகவும் ஆழமாகவும் குரல் கொடுத்து வந்துள்ளனர். கிராமத்தின் ஒதுக்குப் புறத்தில் இருந்த ஒரு கிணற்றில் தாழ்த்தப்பட்ட குலத்தைச் சார்ந்த சிறுமி ஒருத்தி தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்தாள். அந்த வழியே நடந்து வந்தார் **புத்தர் பெருமான்**.

கடுமையான தண்ணீர்த் தாகம் அவருக்கு. எனவே கிணற்றடியில் இருந்த சிறுமியிடம் கைகுவித்துத் 'தண்ணீர் ஊற்று அம்மா!' என்று வேண்டினார்.

பயந்து போன சிறுமி சொன்னாள்: 'ஐயா, நான் தாழ்ந்த குலம்!'

புத்தர் முறுவலித்தவாறு சொன்னார்:

'அம்மா நான் கேட்டது தண்ணீர் தானே, சாதியைக் கேட்கவில்லையே!'

(புத்தர் என்றொரு புரட்சிக்காரர், ப.17)

ஹரித்துவாருக்கு ஒருமுறை குருநானக் சென்றிருந்த போது, அங்கிருந்த பண்டிதர்கள் எல்லாரும் அவரைச் சூழ்ந்து கொண்டனர். "நீர் எந்த ஊரில் இருந்து வருகிறீர்? உமது ஜாதி என்ன?" என்று அவரிடம் கேட்டார்கள்.

குருநானக் சொன்னார்: "காற்றுக்கும் நீருக்கும் எந்த ஜாதியோ, அதுவே எனது ஜாதி. இரவும் பகலும் எந்த ஊரில் இருந்து வருகின்றனவோ, அதே ஊரில் இருந்துதான் நானும் வருகிறேன்."

அந்தப் பண்டிதர்களுக்கு குருநானக் சொன்ன இந்தப் பதில் புரிந்ததோ, புரியவில்லையோ தெரியாது.

(சீக்கிய குருமார் வாழ்க்கைக் கதைகள், ப.13)

இங்ஙனம் அறிஞர்கள் முதல் அருளாளர்கள் வரை - சித்தர்கள் முதல் சிந்தனையாளர்கள் வரை - கவிஞர்கள் முதல் கல்வியாளர்கள் வரை - யாவரும் ஒன்றுபட்ட குரலில் உணர்ச்சியோடும் உருக்கமாகவும் சாதிக் கொடுமைக்கு எதிராகக் குரல் கொடுத்துள்ளனர். அவர்களின் விழுமிய சிந்தனைகளுக்கு நாம் என்று செவி சாய்க்கப் போகிறோம்? செயல் வடிவம் தரப்போகிறோம்? நம் மீது ஆதிக்கம் செலுத்தி வந்த ஆங்கிலேயர்களை நாட்டை விட்டு விரட்டியது போல, சாதிப் பேயை நம் உள்ளத்தை விட்டு என்று ஒரேயடியாக ஓட ஓட விரட்டப் போகிறோம்? சாதி வேற்றுமைகளுக்கு எதிராக எப்போது சாவுமணி அடிக்கப் போகிறோம்? எட்டயபுரத்துக் கவிமுரசு பாரதி முழங்கியது போல் இந்தியர்கள் அனைவரும் ஒன்றுபட்ட குரலில் இன்று எடுக்க வேண்டிய உறுதிமொழி இதுதான்:

"சாதிக்குப் பிறந்தவர்கள் அல்ல
சாதிக்கப் பிறந்தவர்கள் நாம்,
சாதிப்போம் - புதியதொரு
சரித்திரம் படைப்போம்!"

11

'பெண்ணுக்குள்ளே ஞானத்தை வைத்தான் ஈசன்!'

"பூவையர், மகளிர், மங்கையர், வனிதையர் எல்லாம் கவித்துவமான சொற்களே ஆயினும் பெண்கள் என்பதில் உள்ள மாட்சிமை இல்லை."

*– நாஞ்சில் நாடன்**

"மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல
மாதவம் செய்திடல் வேண்டும் அம்மா"

எனப் பெண் பிறவியின் மேன்மையைப் போற்றி உரைப்பார் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.

"பெண்ணுக் குள்ளே ஞானத்தை வைத்தான் – புவி
பேணி வளர்த்திடும் ஈசன்"

என்பது மகாகவி பாரதியாரின் மணிமொழி. இங்கே பெண்ணுக்குள்ளே 'அறிவை வைத்தான்' என்று கூறாமல், **'ஞானத்தை வைத்தான்'** எனக் கவியரசர் குறிப்பிட்டிருப்பது கூர்ந்து நோக்கத்தக்கதாகும். 'அறிவு' என்பது 'Knowledge'; 'ஞானம்' என்பது 'Wisdom'. ஆணுக்குள்ளே இருப்பது 'அறிவு' என்றால், பெண்ணுக்குள்ளே இருப்பது 'ஞானமாம்!' 'நிமிர்ந்த நன்னடை, நேர் கொண்ட பார்வை, நிலத்தில் யாருக்கும் அஞ்சாத திமிர்ந்த ஞானச் செருக்கு' கொண்டவள் **'புதுமைப் பெண்'** என்பது பாரதியின் கணிப்பு. இவர்களுக்கெல்லாம் முன்னோடியாக வான்புகழ் படைத்த **வள்ளுவர்** பெருமானும், 'பெண்ணில் பெருந்தக்க யாவுள?' என ஒரு குறட்பாவில் வினவி, அவரே பிறிதொரு குறட்பாவில், **'பெண்ணில் பெருந்தக்கது இல்'** என முடிந்த முடிபாக உரைப்பார்.

பெண்கள் இயல்பிலேயே நுண்ணறிவு படைத்தவர்கள் - ஞானம் உடையவர்கள் - என்பதற்குக் கட்டியம் கூறும் பீகார் மாநில நாட்டுப்புறக் கதை ஒன்று இங்கே நினைவுகூரத்தக்கது. மூத்த எழுத்தாளர் ராஜம் கிருஷ்ணனின் சொற்களில் 'புத்திசாலிப் பெண்' என்னும் தலைப்பில் அமைந்த அக்கதையை இங்கே காணலாம்:

---

* *தீதும் நன்றும்!, ப.32*

"ஒரு கிராமத்தானுக்கு ஏழு பிள்ளைகள் இருந்தார்கள். அவரவர் வயதுக்கு ஏற்ப அடுத்தடுத்து எல்லோருக்கும் திருமணமாகி இருந்தது. கடைசி மகனின் மனைவி, மிக இளையவளாக இருந்த போதிலும், நல்ல அறிவாளியாக இருந்தாள். குடும்பத்தின் தேவைகள் அதிகரித்துக் கொண்டே போவதைக் கண்ட அவள், தன் கணவனிடம், 'மைத்துனன்மார், மாமனார் எல்லோருடனும் இந்தக் கிராமத்தில் நம்மால் நன்றாக வாழ முடியவில்லை. நாம் வேறு எங்கேனும் சென்றால் நன்றாக, சந்தோஷமாக வாழலாம்' என்றாள். குடும்பம் அவள் யோசனைக்கு இசைந்தது. அவர்கள் தங்களிடம் இருந்த சொந்தமான வீட்டுச் சாமான்களை எடுத்துக் கொண்டு தொலைவில் உள்ள ஒரு கிராமத்துக்குச் சென்றனர்.

அவர்கள் சென்றபோது அந்தக் கிராமத்தில் அரசி தன் கண்டசரத்தைத் தொலைத்து விட்டதால், ஊரே அல்லோல கல்லோலமாக இருந்தது. அவள் குளிக்கச் சென்றபோது கழுத்தணியைக் கழற்றிக் கிணற்றுக் கரையில் வைத்திருந்தாள். ஒரு பருந்து வந்து, அதை ஜிவ்வென்று தூக்கிக் கொண்டு பறந்து சென்றது. இராணியும் சேடியும் கூச்சலிட்டார்கள். ஆனால் அந்தப் பறவை அவர்கள் நினைத்தாற் போன்று பொருளைக் கீழே போடவில்லை; கண்டசரத்துடன் பறந்து சென்று, ஏழு பிள்ளைகளும் தந்தையும் இளைப்பாறிக் கொண்டிருந்த இடத்தில் அந்த மாலையைப் போட்டது. இளையவன் மனைவி அதைக் கண்டெடுத்து வைத்தாள்.

அரசி இந்த இழப்பினால் மிகவும் வருந்தினாள். அரசன், அந்தக் கழுத்தணியை யார் கண்டு எடுத்துக் கொண்டு வந்தாலும், அவர்களுக்கு ஐந்து கிராமங்களைப் பரிசாகக் கொடுப்பதாகத் தமுக்கடிக்கச் சொன்னான். இளைய மைந்தனின் மனைவி இந்த அறிவிப்பைக் கேட்டுக் கண்டசரத்தைத் தான் கொண்டு வருவதாகச் சொன்னாள். கிராமத்தார் ஆச்சரியம் கொண்டு, அவளை அரசியிடம் கூட்டிச் சென்றனர். அரசன், 'பெண்ணே! உன்னிடம் கண்டசரம் இருக்கிறதா? இருந்தால் கொடுத்து விடு. உனக்கு ஐந்து கிராமங்கள் கிடைக்கும்' என்றான்.

பெண், 'ஓ அரசே! எனக்கு ஐந்து கிராமங்கள் வேண்டாம். ஒரே ஒரு உதவி தான் வேண்டும்' என்றாள். அரசன், 'உனது விருப்பத்தை முடியுமானால் பூர்த்தி செய்வோம்' என்றான். பெண் உடனே, 'மாட்டுப் பொங்கலன்று யாரும் எங்களைத் தவிர வீடுகளில் விளக்கேற்றக் கூடாது. இதுதான் நான் கேட்கும் உதவி' என்றாள். அரசன், 'இது மிகவும் எளிதான வேண்டுகோள்,

நிறைவேற்றுவேன்' என்றான். இளம்பெண் கழுத்தணியைக் கொடுத்து விட்டு வீடு திரும்பினாள். அவளுடைய கணவனும், மைத்துனர்களும், மாமனாரும் ஐந்து கிராமங்களைப் பெறாமல் வந்தது மிகவும் முட்டாள்தனமான செயல் என்று கருதினார்கள். ஆனால், அந்தப் பெண்ணோ மாட்டுப் பொங்கல் ஒரு வாரத்தில் வரப் போகிறது என்றும், அதுவரை பொறுத்துப் பார்த்தால் எல்லாம் நன்றாகவே முடியும் என்றும் உறுதியாக மொழிந்தாள்.

பண்டிகை நாளன்று இவர்கள் வீட்டைத் தவிர, வேறு ஒரு வீட்டிலும் விளக்கேற்றவில்லை. எருதுகள், கன்றுகள், எருமைகள், வெள்ளாடுகள், செம்மறி எல்லாம் இருளில் வழி மறந்தன. இந்தப் பெண்ணின் வீட்டில் தெரியும் ஒரே விளக்கைக் குறிபார்த்துக் கொண்டு கிராமத்துக் கன்று காலிகளெல்லாம் இவர்கள் வீட்டுக்கே வந்தன. தொன்றுதொட்டு வரும் வழக்கப்படி தாமாக வரும் கன்று காலிகள் எந்த வீட்டுக்குள் நுழைந்தாலும் அவை அந்த வீட்டில் இருப்பவர்களுக்கே சொந்தமாகும். இவ்வாறு, அந்தக் குடும்பம் மிகவும் செழிப்புற்று, அவர்கள் செல்வந்தர்களாகி இனிது வாழ்ந்தனர்.

அந்தப் பெண் பின்னர் தன் குடும்பத்தாரிடம், கிராமங்களை எவ்வாறு நிர்வகிப்பது என்ற நுட்பங்கள் தெரியாமல் கிராமங்களைப் பெற்றிருந்தால் அவர்கள் துன்புற்றிருப்பார்கள் என்று விளக்கினாள். ஆனால் அவர்களுக்குக் கன்று காலிகளைப் பேணி வளமை காண முடியும். எனவே அவள், ஆடுமாடுகளைப் பெறும் வழியைக் கோரினாள்.

அவர்கள் அனைவரும், அந்தப் பெண்ணின் மதிநுட்பத்தைப் புகழ்ந்தனர்; பின்னர் அவர்களுடைய ஆனந்தத்துக்கு எல்லையே இல்லை",

(பீகார் மாநில நாட்டுக் கதைகள், பக். 86-88)

இந்தக் கதையைப் படித்த பிறகு எவரும், 'ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே' என்ற பழ(மி)மொழியைக் கூற மாட்டார்கள். அதனைச் சற்றே மாற்றி, '**நன்மை** ஆவதும் பெண்ணாலே, **தீமை** அழிவதும் பெண்ணாலே' என்றே பெண்ணின் பெருமையைப் பேசும் நல்லதொரு பொன்மொழியாக்கி உரைப்பர்! புதுமொழி படைப்பர்!

12

'மனிதர் யாவரும் பணியாளர்களே!'

'என்கடன் பணிசெய்து கிடப்பதே!'

– திருநாவுக்கரசர்*

ஆப்பிரிக்க நாட்டுக் கதை ஒன்று. காமெரா என்னும் நாட்டினை ஆண்ட மன்னன் மிக்க ஆணவம் கொண்டவன்; காட்சிக்கு அருமையும் கடுஞ்சொல்லும் உடையவன்; தற்பெருமை பேசுபவன்; பிடிவாதம் நிறைந்தவன். நாட்டு மக்கள் அஞ்சி நடுங்கும் வண்ணம் அவனது ஆட்சி அமைந்திருந்தது.

ஒருநாள் அம் மன்னன் தன் அரண்மனையில் வீற்றிருந்தான். அமைச்சர்களும் அதிகாரிகளும் கூடி இருந்தனர். நாட்டு மக்களும் மன்னனைப் பார்ப்பதற்காக அரண்மனையில் திரண்டிருந்தனர். அப்போது மன்னன் அங்கே கூடி இருந்த அனைவரையும் பார்த்து உரத்த குரலில் தானே உலகின் தன்னிகரற்ற தலைவன் என்றும், எல்லோரும் தனக்குக் கீழே பணியாற்ற வேண்டிய வேலைக் காரர்களே என்றும் அறிவித்தான்.

"நீங்கள் கூறுவது தவறு. நாம் எல்லோரும் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்து வாழவேண்டிய பணியாளர்களே" என்று அப்போது அங்கே எழுந்த மெல்லிய குரல் ஒன்று மன்னனின் கூற்றை மறுத்து உரைத்தது. இப்படி எதிர்பாராமல் ஒரு குரல் எழுந்ததும் அங்கே ஒரு மயான அமைதி நிலவியது. இரத்தமே உறைந்து போகும் அளவிற்குக் கூடியிருந்த மக்கள் அனைவரும் என்ன நடக்குமோ என்று அஞ்சி நடுங்கினர்.

அரியணையில் இருந்து எழுந்த மன்னனோ கோபத்தின் உச்சத்திற்குச் சென்று, "யார் இப்படிக் கூறுவது? ஒரு பணியாளன் என்று என்னைக் கூறுவதற்கு இங்கே யாருக்குத் துணிச்சல் உள்ளது?" என்று வெடிப்புறப் பேசினான்.

* ஐந்தாம் திருமுறை, 19. திருக்கடம்பூர், ப.192

கூட்டத்தில் இருந்து ஒரு முதிய குரல் "அது நான்தான்" என்று கூறியது. அந்த முதியவரின் தலை முழுவதும் தும்பைப் பூப்போல நரைத்திருந்தது; ஒரு நீண்ட கைத்தடி ஊன்றித் தள்ளாடிய நிலையில் இருந்தார் முதியவர்.

"யார் நீ?" என்று அந்த முதியவரைப் பார்த்துக் கோபத்தோடு கேட்டான் மன்னன்.

"என் பெயர் பௌபக்கர். எங்கள் கிராமத்தில் மக்கள் குடிப்பதற்குத் தண்ணீர் இல்லை. எனவே எங்கள் ஊருக்கு ஒரு கிணறு தோண்டித் தர வேண்டும் என்று உங்களிடம் உதவி கேட்பதற்காக வந்திருக்கிறேன்" என்றார் முதியவர்.

"அப்படியானால் நீ ஒரு பிச்சைக்காரன் தானே?" என்று உரத்த குரலில் கேட்ட மன்னன், அரியணையில் இருந்து கீழே இறங்கி முதியவரை நோக்கி வந்தான். "ஒரு பிச்சைக்காரனாக இருந்து கொண்டு என்னை ஒரு பணியாளன் என்று கூறுவதற்கு என்ன துணிச்சல் உனக்கு?" என்று முதியவரிடம் வினவினான்.

முதியவரோ சிறிதும் அஞ்சாமல், "மன்னா! நாம் எல்லோருமே ஒருவருக்கு ஒருவர் பணி செய்து வாழவேண்டிய நிலையில் இருப்பவர்கள் தான். இன்று இரவுக்குள் இதை நான் உங்களுக்கு உறுதிப்படுத்துவேன்" என்றார்.

"அதைச் செய் முதலில். நீ சொன்னவாறே செய்தால் உன் கிராமத்திற்கு ஒன்றல்ல, மூன்று கிணறுகளை வெட்டித் தருவேன்; இல்லை என்றால் உன் தலையைக் கொய்து விடுவேன்" என்றான் மன்னன்.

உடனே அந்த முதியவர் மன்னனைப் பார்த்து, "எங்கள் கிராமத்தில் ஒரு வழக்கம் உண்டு. நாங்கள் ஏதாவது ஒரு சவாலை ஏற்றுக்கொண்டால், எங்களிடம் சவால் விடுத்தவரின் கால்களைத் தொட்டு வணங்குவோம். அந்த வழக்கத்தின்படி நானும் இப்போது உங்கள் கால்களைத் தொட்டு வணங்க விரும்புகிறேன். அதுவரை கொஞ்சம் என் கைத்தடியை வைத்திருங்கள்" என்று கூறித் தம் கைத்தடியை மன்னனிடம் தந்தார். மன்னனும் ஒன்றும் பேசாமல் முதியவரின் கைத்தடியை வாங்கி வைத்துக் கொண்டான். முதியவர் உடனே தாழ்ந்து பணிந்து மன்னனின் கால்களைத் தொட்டு வணங்கினார்.

"இப்போது நீங்கள் என் கைத்தடியைத் திரும்பத் தரலாம்" என்று கூறியதும் மன்னன் முதியவரின் கைத்தடியைத் திரும்பத்

தந்தான். முதியவர் புன்னகை புரிந்தவாறே மன்னனைப் பார்த்து, "இதை விட இன்னும் வேறு சான்று உங்களுக்கு வேண்டுமா?" என்று கேட்டார்.

"சான்றா, என்ன சொல்கிறாய் நீ?" என்று ஒன்றும் புரியாமல் திகைத்தான் மன்னன்.

"நான் கீழே குனிந்து உங்களை வணங்க முற்படும்போது என் கைத்தடியைக் கொஞ்சம் வைத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னேன், நீங்கள் ஒன்றும் சொல்லாமல் என் கைத்தடியை வாங்கி வைத்துக் கொண்டீர்கள்; வணங்கி முடித்ததும் என் கைத்தடியைத் திரும்பித் தருமாறு கேட்டேன், மறுப்பேதும் சொல்லாமல் திரும்பத் தந்தீர்கள். நான் முன்பு சொன்னது போல், இந்த உலகில் வாழும் நல்ல மனிதர்கள் அனைவரும் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்து வாழ வேண்டிய பணியாளர்களே ஆவர்" என்று அமைதியாக விளக்கினார் முதியவர்.

மன்னன், முதியவர் கூறிய அந்த அறிவார்ந்த விளக்கத்தினைக் கேட்டு மிகவும் மகிழ்ந்தான். முதியவரின் கிராமத்திற்குக் கிணறுகள் வெட்டுவதற்கு உதவி செய்ததோடு நில்லாமல், அந்த முதியவரைத் தன் மதியுரைஞராக (Advisor) அருகிலேயே வைத்துக் கொண்டான்.

இக் கதை உணர்த்தும் வாழ்க்கைப் பாடம் இன்றியமையாதது. வாழ்வில் முன்னேறவும் முத்திரை பதிக்கவும் விரும்புகின்றவர்களுக்கு இக்கதையில் வரும் மன்னனுக்கு இருந்ததைப் போன்ற தன்முனைப்பு (Ego) ஒருபோதும் இருக்கக் கூடாது. உயர்வு மனப்பான்மையும் (Superiority Complex) இருக்கக் கூடாது. அதே நேரத்தில் ஒருவரது மனத்தில் தாழ்வு மனப்பான்மையும் (Inferiority complex) குடி கொண்டிருக்கக் கூடாது. அதுவும் வாழ்வில் ஒருவரை முன்னேற விடாமல் தடைக்கல்லாய் அமைந்து பின்னடைவையே தரும்.

ஓர் ஆசிரியர் தம் மாணவனின் தாழ்வு மனப்பான்மையை ஒரு நல்ல குட்டிக் கதை வாயிலாக நீக்கினார். அந்தக் கதை:

ஒருநாள் கணக்கு ஆசிரியர் ஒருவர் வகுப்பறையில் எல்லா எண்களையும் கலந்துரையாடலுக்கு அழைத்தார்.

நிகழ்ச்சி தொடங்கப் போகும் நேரத்தில் பூஜ்யம் மட்டும் அங்கே இல்லை என்பது தெரியவந்தது. மற்ற எண்கள் அதைப் பிடித்து ஆசிரியரின் முன்னே கொண்டு வந்து நிறுத்தின.

ஆசிரியர், "ஏன் இப்படி ஒளிந்து கொண்டாய்?" என்று பூஜ்யத்திடம் கேட்டார்.

"நான் வெறும் பூஜ்யம் தானே? என்னைப் பற்றி யார் கவலைப்படுகிறார்கள்? எனக்கு உலகில் மதிப்பே இல்லையே?" என்று தாழ்வு மனப்பான்மையோடு வருந்திக் கூறியது பூஜ்யம்.

புன்னகைத்த ஆசிரியர், 'ஒன்று' என்ற எண்ணை முன்னே வரச் சொன்னார். கூடியிருந்த குழுவினரைப் பார்த்து, "இப்போது இதன் மதிப்பு என்ன?" என்று கேட்டார்.

"ஒன்று" என்றன மற்ற எண்கள். அடுத்து பூஜ்யத்தை அதன் அருகில் நிற்கச் சொன்னார். "இப்போது?" என்று ஆசிரியர் மீண்டும் கேட்க, "பத்து" என்று மற்ற எண்கள் உரத்த குரலில் கத்தின.

அடுத்து பூஜ்யத்தைப் பார்த்து, "இப்போது தெரிந்து கொண்டாயா உன் மதிப்பை? 'ஒன்று' என்ற சாதாரண எண் உன் சேர்க்கையால் பன்மடங்கு மிகுந்த மதிப்பு அடைந்ததைக் கண்கூடாகப் பார்த்தாயா?" என்று கேட்டார் ஆசிரியர்.

எல்லா எண்களும் மகிழ்ச்சியுடன் கை தட்டி ஆரவாரம் செய்தன.

"ஆமாம், நான் சரியான இடத்தில் இருந்தால் நானும் பயனுடையவன்தான். நான் மற்றவருடன் சேர்ந்தால் நாங்கள் அனைவருமே மிகுந்த மதிப்பு வாய்ந்தவர் ஆகிறோம்" என்று கூறி மகிழ்ந்தது பூஜ்யம்.

எனவே நண்பர்களே, உயர்வு மனப்பான்மை, தாழ்வு மனப்பான்மை என்னும் இரு மனப்பான்மைகளையும் நம் உள்ளத்தில் இருந்து அறவே அகற்றுவோம்; 'நாம் யாவரும் பணியாளர்களே' என்னும் அடிப்படையான வாழ்வியல் உண்மையை உணர்ந்து ஒருவருக்கு ஒருவர் உதவியாக வாழ்ந்து காட்டுவோம். உலகெங்கும் தோன்றிய அருளாளர்கள் நமக்குக் காட்டி இருக்கும் இன்றியமையாத ஆன்மிக நெறி - வாழ்க்கைப் பாடம் - இதுவே ஆகும்.

13

விதியையே மாற்றி அமைக்கும் வைராக்கியம் பெறுவோம்!

"திருப்பதி லட்டை வெங்கடேசப் பெருமாள் கொடுத்தால் கூட வாங்கக் கூடாது. இனிப்பு கொடுக்கப்பட்டால், வாங்கி அடுத்தவரிடம் கொடுக்க வேண்டும். கையைச் சுத்தமாகத் துடைத்துவிட்டு, நகர்ந்து விட வேண்டும். இதற்குப் பெயர் தான் வைராக்கியம்."

– பாலகுமாரன்*

'விதியை மனிதன் வெல்ல முடியுமா?' என்பது காலங் காலமாகக் கேட்கப்பட்டு வரும் ஒரு மில்லியன் டாலர் கேள்வி. இதற்குப் பாரசிகப் பெருங்கவிஞர் உமார் கய்யாம் தரும் பதில் இது:

"எழுதிச் செல்லும் விதியின்கை
எழுதி எழுதி மேற்செல்லும்:
தொழுது கெஞ்சி நின்றாலும்,
சூழ்ச்சி பலவும் செய்தாலும்,
வழுவிப் பின்னாய் நீங்கிஒரு
வார்த்தை யேனும் மாற்றிடுமோ?
அழுத கண்ணீர் ஆறெல்லாம்
அதில்ஓர் எழுத்தை அழித்திடுமோ?"

(கவிமணி சி.தேசிகவிநாயகம் பிள்ளை,
உமார் கய்யாம், பா.53)

'தொழுது நின்றாலும் - கெஞ்சினாலும் - சூழ்ச்சி பல செய்தாலும் - அழுதாலும் - விதி எழுதிய எழுத்தில் இருந்து ஒரு வார்த்தையைக் கூட நம்மால் மாற்ற முடியாது; ஏன், அதில் ஓர் எழுத்தைக் கூட நம்மால் அழிக்க முடியாது' என்பது உமார்

---

* வெற்றி வேண்டுமெனில், ப.75

கய்யாமின் முடிந்த முடிபு. 'தலையிலே எழுதினது தள்ளி எழுதப் போறானா? பிரமன் எழுத்திலே பிசகு இருக்குமா?' என்னும் ஒப்பாரிப் பாடல் வரிகள் இங்கே ஒப்புநோக்கத்தக்கனவாகும்.

திருக்குறள்தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட வள்ளுவரோ இதற்கு முற்றிலும் எதிரான மாற்றுச் சிந்தனை மரபினைக் கொண்டவராக விளங்குகின்றார். 'ஊழ்' அதிகாரத்தில் 'ஊழிற் பெருவலி யாவுள?' (ஊழைக் காட்டிலும் வலியது உண்டோ?, 380) என்று அவர் கேட்டாலும், 'ஆள்வினை உடைமை' அதிகாரத்தில் 'ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித், தாழாது உஞற்று பவர்' (சோர்வின்றிக் காலம் தாழ்த்தாது உழைப்பவர் மாறான விதியும் ஓடக் காண்பர், 620) என உழைப்புக்கே உயர்வு தருகின்றார்; அதே அதிகாரத்தில் இடம்பெற்றுள்ள பிறிதொரு குறட்பாவிலும், 'தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சி தன், மெய்வருத்தக் கூலி தரும்' (தெய்வத்தால் ஒரு செயல் முடியாது போகினும், முயன்றால் அதற்கு உரிய கூலி உண்டு, 619) என மனித முயற்சிக்கே மகுடம் சூட்டுகின்றார். 'குடிசெயல் வகை' அதிகாரத்தின் குறட்பா ஒன்றிலும், 'குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம், மடிதற்றுத் தான்முந் துறும்' (குடும்பத்தை உயர்த்துவேன் என்பானுக்குத் தெய்வம் வரிந்து கட்டிக்கொண்டு முன்வரும், 1023) என அழுத்தம் திருத்தமாக மொழிகின்றார் வள்ளுவர். எனவே, 'ஒரு மனிதன் சோர்வில்லாமல் - காலந்தாழ்த்தாமல் - திட்டமிட்டுக் கடுமையாக உழைத்தால், வலிமை வாய்ந்த விதியையும் வெற்றி கொள்ளலாம், புறமுதுகு காட்டி ஓடச் செய்யலாம்' என்பதே வள்ளுவரின் ஆணித்தரமான கருத்தாகும்.

'கடவுளை வென்ற விவசாயி' என்ற தலைப்பில் அமைந்த ஒரு நேபாள நாடோடிக் கதை:

சிவனும் பார்வதியும் ஒருநாள் உலகைச் சுற்றி வந்தனர். வறண்ட பாழ்நிலங்களின் வழியே அவர்கள் வரும்போது தன்னந்தனியாய் ஒரு விவசாயி விதை விதைத்துக் கொண்டிருந்ததைக் கண்டனர்.

சிவன் வானிலிருந்து கீழே இறங்கி விவசாயியைப் பார்த்து, 'மழையே இல்லாத வறண்ட நிலத்தில் விதைக்கிறாயே? எப்படி முளைக்கும்?' என்று கேட்டார்.

'இரவில் மழை பெய்யும்' என்று விவசாயி பதிலளித்தான்.

வானத்தை அண்ணாந்து பார்த்துவிட்டுச் சிவன், 'மழை வருவது சாத்தியம் இல்லை' என்றார்.

'இல்லை, மழை உறுதியாகப் பெய்யும்' என்றான் விவசாயி.

'வரவே வராது' என்றார் கடவுள்.

'யார் சொல்வது நடக்கிறது என்பதை இரவில் பார்த்து விடுவோம்' என்று கூறிவிட்டு விவசாயி விதைத்து முடித்தான்.

இதைக் கேட்டதும் சிவன் எரிச்சல் அடைந்தார். தாம் சொன்னதையே ஏற்காத விவசாயிக்குப் பாடம் புகட்ட நினைத்தார். உடனே மழைக் கடவுளான இந்திரனிடம், 'இன்று இரவு பூமிக்கு மழையை அனுப்பாதே' என்று கேட்டுக் கொண்டார்.

அதற்கு இந்திரன், 'முடியாது. தவளைகள் கத்தத் தொடங்கினால் என்னால் ஒன்றும் செய்ய முடியாது. நான் மழையை அனுப்பியே ஆகவேண்டும்' என்றான்.

சிவன் உடனே தவளைகளிடம் சென்று, 'இன்று இரவு மட்டும் கத்த வேண்டாம்' என்று கூறினார். ஆனால், தவளைகள் மறுத்து விட்டன. 'மின்மினிகள் மின்னி ஒளி வீசத் துவங்கினால் எங்களால் கத்தாமல் இருக்க முடியாது' என்றன.

மறுகணமே சிவன் மின்மினிப் பூச்சிகளைப் பார்த்து, 'இன்று மட்டும் மின்னாமல் இருக்க வேண்டும்' என்றார். மின்மினிகள் கடவுளின் கட்டளையைப் பணிந்து ஏற்றுக்கொண்டன.

ஆனால் இரவான பின் மழை பெய்யத் தொடங்கியது. சிவனுக்குக் கடுங்கோபம் வந்துவிட்டது. தமது கட்டளையை மீறி எப்படி மழை பெய்தது என்ற ஆராய்ச்சியில் இறங்கினார். முதலில் இந்திரனிடம், 'என் கட்டளையை மீறி நீ எப்படி பூமிக்கு மழையை அனுப்பினாய்?' என்று கேட்டார்.

'தவளைகள் கத்தியதால் நான் மழையை அனுப்பினேன்' என்று பணிவாகச் சொன்னான் இந்திரன்.

'மின்மினிகள் பறந்து ஒளி வீசியதால் நாங்கள் கத்தினோம்' என்றன தவளைகள்.

ஆனால் மின்மினிகள் தவளைகளின் கூற்றை மறுத்தன. உடனே தவளைகள் கடவுளிடம், 'இல்லை, மின்மினிகள் ஒளி

வீசியது உண்மை. அவைகளில் ஒரு மின்மினி இன்னும் அந்த மரத்தின் கீழே மறைந்திருக்கிறது பாருங்கள்' என்று அலறின.

சிவன் மரத்தின் கீழே போய்ப் பார்த்தார். அங்கே விவசாயி ஒரு கொள்ளிக்கட்டையை வைத்து அதை வீசி ஆட்டிக் கொண்டிருந்தான். கொள்ளிக்கட்டையின் நுனியில் இருந்து ஜுவாலை வீசியது.

இப்போது கடவுளுக்குப் புரிந்தது. இரவில் விவசாயி மேலும் கொஞ்சம் விதை போடுவதற்காக வந்திருக்கிறான். வரும்போது வெளிச்சத்திற்காக ஒரு தீவட்டியைக் கொண்டு வந்திருக்கிறான். தீவட்டி எரிந்து முடிந்து கொள்ளிக் கட்டையானதும் அதை இங்குமங்கும் அசைத்து இருளில் நிலம் பார்த்திருக்கிறான். நெருப்புத் துகள்கள் பறந்திருக்கின்றன. அதைப் பார்த்து மின்மினிகள் பிரகாசிப்பதாய் தவளைகள் நினைத்து விட்டன.

சிவன் விவசாயிக்கு முன்னால் போய் நின்று தலை கவிழ்ந்து தமது தோல்வியை ஒப்புக்கொண்டார். பின்பு சிவன் கைலாயத்திற்குப் புறப்பட்டார். ஒரு சாதாரண விவசாயியிடம் தோற்றுப் போனதைப் பார்வதி தேவியிடம் கூறினார்.

'கஷ்டப்பட்டுப் பாடுபட்டு உலகுக்கு உணவு படைக்கும் விவசாயியைக் கடவுளாலும் வெல்ல முடியாது' என்கிறது இந்தக் கதை."

(தமிழில்: எஸ்.ஏ.பெருமாள், உலக நாடோடிக் கதைகள், பக்.44-46)

இந்த நேபாள நாடோடிக் கதையில் வரும் விவசாயியைப் போல உலகின் ஒவ்வொரு குடிமகனும் உயருவானானால் உலகம் அன்றே - அக்கணமே - இன்பம் விளையும் பூந்தோட்டமாக உருவாகும் என்பது உறுதி.

14

உலகின் உயரிய கடித இலக்கியம்

"நான் உயிரோடு இருப்பதற்கு என் தந்தைக்குக் கடன் பட்டிருக்கிறேன். ஆனால் சிறப்பாக வாழ்வதற்கு என் ஆசிரியருக்குக் கடன்பட்டிருக்கிறேன்."

*– அலெக்சாண்டர்**

'நலம்; நலமறிய ஆவல்' எனச் சாதாரணமாக எழுதினால் அது வெறும் கடிதம் மட்டுமே; அதையே சற்றுக் கலை நயத்துடன், 'நீ இங்கு நலம்; நான் அங்கு நலமா?' என்று கேட்டால், அது கடித இலக்கியம். இலக்கிய வகைகளுள் கடித வடிவம் செல்வாக்கு மிகுந்தது; படிப்பவர் உள்ளத்தை ஈர்க்கும் வல்லமை படைத்தது. முழுக்க முழுக்கக் கடித வடிவில் அமைந்த சிறுகதைகள் உண்டு; புதினங்கள் உண்டு. கற்பனைக் கடிதங்களின் தொகுப்பாக அமைந்த கடித இலக்கியங்களும் உண்டு. பேராசிரியர் மு.வரதராசனாரின் 'அன்னைக்கு', 'தம்பிக்கு', 'தங்கைக்கு', 'நண்பர்க்கு' ஆகிய நூல்கள் இவ்வகையில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை.

புகழ்பெற்ற இலக்கிய ஆளுமைகள் தமது குடும்பத்தினர்க்கு, உற்றார் உறவினர்க்கு, நெருங்கிய நண்பர்களுக்குத் தனிப்பட்ட முறையில் எழுதிய கடிதங்களும் வரலாற்றில் இன்றியமையாத இடத்தைப் பெற்றுள்ளன. இவ்வகையில் நேரு பெருமகனார் தமது அருமைப் புதல்வி இந்திரா காந்திக்கு எழுதிய கடிதங்கள் வரலாற்றுச் சிறப்பு மிக்கவை; கடித இலக்கிய வரலாற்றில் முத்திரை பதித்தவை.

அமெரிக்காவின் பதினாறாவது குடியரசுத் தலைவராக வீற்றிருந்தவர் ஆபிரகாம் லிங்கன். அவரது வாழ்க்கையை ஒருமுறை படித்தால் நாம் படும் துயரமெல்லாம் ஒன்றும் இல்லை என்பது தெரியவரும். அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஆவதற்கு

---

* I am indebted to my father for living, but to my teacher for living well.

- Alexander the Great

– பிரதாப், மேலோரின் மேற்கோள்கள், ப.189

முன்பு அவர் எவ்வளவு தோல்விகளையும், இழப்புக்களையும் சந்தித்தார் என்பதை அறிந்தால் வாழ்வின் திட்பமும் நுட்பமும் நன்கு விளங்கும். அமெரிக்க வரலாற்றில் தடம் பதித்த ஆபிரகாம் லிங்கன் தமது மகனின் ஆசிரியருக்கு எழுதிய கடிதம் புகழ் பெற்றது; வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது. முதலில் அக் கடிதத்தை முழுமையாகக் காண்போம்.

"அவன் கற்றுக்கொள்ள வேண்டும்.
அனைத்து மனிதர்களும்
நேர்மையானவர்கள் அல்ல,
அனைத்து மனிதர்களும்
உண்மையானவர்கள் அல்ல
என்பதை அவன் தெரிந்துகொள்ள வேண்டும்.
ஆனாலும்,
மனிதர்களில் அயோக்கியர்களுக்கு இடையில்
உண்மையான கதாநாயகர்களும் இருக்கிறார்கள்
என்பதையும்,
பகைவர்களுக்கு இடையில்
நண்பர்களும் இருக்கிறார்கள் என்பதையும்
அவனுக்குக் கற்றுக்கொடுங்கள்.

அவனுக்குப் பொறாமைக் குணம் வந்துவிடாமல்
கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள்.
மௌனமாக ரசித்துச் சிரிப்பதன் ரகசியத்தை
அவனுக்குக் கற்றுக்கொடுங்கள்.
எதற்கெடுத்தாலும் பயந்து சுருங்கிக் கொள்வது
கோழைத்தனம் என்பதைப் புரிய வையுங்கள்.

புத்தகங்கள் என்ற அற்புத உலகத்தின் வாசல்களை
அவனுக்குத் திறந்து காட்டுங்கள்.
அதே வேளையில், இயற்கையின் அதிசயத்தை
ரசிக்கவும்
அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்.

வானில் பறக்கும் பறவைகளின்
புதிர் மிகுந்த
அழகையும்,
சூரிய ஒளியில் மின்னும்
தேனீக்களின் வேகத்தையும்,
பசுமையான மலை அடிவார
மலர்களின் வனப்பையும்
ரசிப்பதற்கும் அவனுக்குக்
கற்றுக்கொடுங்கள்.

ஏமாற்றுவதை விடவும்
தோல்வியடைவது எவ்வளவோ
மேலானது
என்பதைப் பள்ளியில்
அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்.

மற்றவர்கள் தவறு என்று விமர்சித்தாலும்,
தனது சுயசிந்தனை மீது அசைக்க முடியாத
நம்பிக்கை வைக்க
அவனுக்குக் கற்றுக்கொடுங்கள்.
மென்மையான மனிதர்களிடம் மென்மையாகவும்,
முரட்டுக் குணம் கொண்டவர்களிடம் கடினமாகவும்
அணுகுவதற்கு அவனுக்குப் பயிற்சி கொடுங்கள்.
கும்பலோடு கும்பலாய்க் கரைந்து போய்விடாமல்
எந்தச் சூழ்நிலையிலும்
தனது சொந்த நம்பிக்கையின்படி
சுயமாகச் செயல்படும்
தைரியத்தை அவனுக்குக் கற்றுக்கொடுங்கள்.

அனைத்து மனிதர்களின் குரலுக்கும்
அவன் செவிசாய்க்க வேண்டும்.

எனினும் உண்மை என்னும் திரையில் வடிகட்டி
நல்லவற்றை மட்டும் பிரித்து எடுக்க
அவனுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும்.
துயரமான வேளைகளில் சிரிப்பது எப்படி என்று
அவனுக்குக் கற்றுக்கொடுங்கள்.
கண்ணீர் விடுவதில் தவறில்லை என்றும்
அவனுக்குக் கற்றுக்கொடுங்கள்.

போலியான நடிப்பைக் கண்டால்
எள்ளி நகையாடவும்,
வெற்றுப் புகழுரைகளைக் கண்டால்
எச்சரிக்கையாக இருக்கவும்
அவனுக்குப் பயிற்சி கொடுங்கள்.

தனது செயல்திறனுக்கும், அறிவாற்றலுக்கும்
மிக அதிக ஊதியம் கோரும் சாமர்த்தியம்
அவனுக்கு வேண்டும்.
ஆனால்,
தனது இதயத்திற்கும், தனது ஆன்மாவிற்கும்
விலை பேசுபவர்களை அவன் ஒருபோதும்
அனுமதிக்கக் கூடாது.

பெருங்கும்பல் திரண்டு வந்து கூச்சலிட்டாலும்,
நியாயம் என்று தான் நினைப்பதை நிலைநாட்ட -
விடாமல் போராடுவதற்கு அவனுக்கு நம்பிக்கை
கொடுங்கள்.

அவனை அன்பாக நடத்துங்கள்.
ஆனால் அதிக செல்லம் காட்டி சார்ந்திருக்க வைக்க
வேண்டாம்.

ஏனென்றால் கடுமையான தீயில் காட்டப்படும்
இரும்பு மட்டும் தான்
பயன் மிக்கதாக மாறுகிறது.
தவறு கண்டால் கொதித்து எழும் துணிச்சலை
அவனுக்குக் கற்றுக்கொடுங்கள்.
அதே வேளையில்
தனது வலிமையை மௌனமாக வெளிப்படுத்தும்
பொறுமையை
அவனுக்குக் கற்றுக்கொடுங்கள்.

அவன் தன்மீதே மகத்தான நம்பிக்கை வைக்க
வேண்டும்.
அப்போதுதான் மனித குலத்தின் மீது
அவன் மகத்தான நம்பிக்கை கொள்வான்.

இது ஒரு மிகப் பெரிய பட்டியல் தான்!
இதில் உங்களுக்குச் சாத்தியமானதை யெல்லாம்
கற்றுக்கொடுங்கள்.
அவன் மிக நல்லவன், எனது அன்பு மகன்."

(தினமணி: சிறுவர் மணி, 20.11.2010, பக்.24-25)

இனி, இளைய தலைமுறையினருக்கான ஆளுமை வளர்ச்சி (Personality Development) *என்ற நோக்கில் இக் கடிதத்தை விரிவாக அலசிப் பார்ப்போம்:*

1. *முதலில், வளரும் ஒரு மாணவனுக்குத் தேவைப்படுவது கற்றுக்கொள்ளும் மனப்பான்மை: மனிதர்களிடம் இருந்தும், அன்றாட வாழ்வில் இருந்தும் அவன் அவ்வப்போது பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும்.*

2. *அடுத்தது, மனிதர்களுள் நேர்மையானவர்களும் உண்டு, அயோக்கியர்களும் உண்டு; உண்மையானவர்களும் உண்டு, உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்று பேசித் திரியும் நடிப்புச்*

செல்வர்களும் உண்டு; கதாநாயகர்களும் உண்டு வில்லன்களும் உண்டு என்ற அடிப்படையான உலகியல் பாடத்தை - 'பகைவர்களுக்கு இடையில் நண்பர்களும் இருக்கிறார்கள்' என்ற அனுபவ உண்மையை - ஆசிரியர் மாணவனுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும். 'இன்னாது அம்ம இவ்வுலகம், இனிய காண்க இதன் இயல்பு உணர்ந்தோரே' (194) என்ற புறநானூற்றுச் சிந்தனை இங்கே ஒப்புநோக்கத்தக்கது.

3. மாணவனின் ஆளுமையைச் செதுக்குவதில் ஆசிரியருக்கு முக்கியமான பங்கு உண்டு. நல்ல புத்தகங்களை வாசித்தல், இயற்கையை ரசித்தல், மௌனத்தின் வலிமையை உணர்தல், எந்தச் சூழ்நிலையிலும் சுயமாகச் சிந்தித்துச் செயல்படுதல், அவரவர் பண்பறிந்து மக்களிடம் பழகுதல், அஞ்சாமை, மனத்து அழுக்கு என்னும் பொறாமை இன்மை முதலான ஆளுமைப் பண்புகள் கொண்டவனாக மாணவனை உருவாக்குவது ஆசிரியரின் தலையாய கடமை.

4. நன்மை, தீமை இரண்டும் கலந்தது தான் வாழ்க்கை. நிறை, குறை இரண்டும் கொண்டவர்கள்தான் மனிதர்கள். நூற்றுக்கு நூறு நல்லவரும் இல்லை; முழுக்க முழுக்கக் கெட்டவரும் இல்லை. நல்லது, கெட்டது என்னும் இரண்டில் நல்லதை மட்டும் வடிகட்டிப் பிரித்து எடுக்கும் கலையில் ஆசிரியர் மாணவனுக்குப் போதிய பயிற்சி தரவேண்டும். 'குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள், மிகைநாடி மிக்க கொளல்' (504) என்னும் வள்ளுவ அளவுகோல் இங்கே நினைவுகூரத்தக்கது.

5. மகிழ்ச்சியில் சிரிப்பது என்பது இயல்பு; வாழ்வில் துயரமான வேளைகளில் சிரிப்பது எப்படி என்று ஆசிரியர் மாணவனுக்குக் கற்றுத் தரல் வேண்டும்; சில நேரங்களில் கண்ணீர் விட்டு அழுவதிலும் தவறு இல்லை என்பதை அவனுக்கு உணர்த்த வேண்டும். 'இடுக்கண் வருங்கால் நகுக' (621) என்று வள்ளுவர் கூறுவது இந்தப் பொருளில்தான்.

6. வாழ்க்கையில் வெற்றி பெற மாணவனுக்குத் தேவைப்படுவது எச்சரிக்கை உணர்வு; எது போலி, எது உண்மை எனப் பிரித்தறியும் தெளிவு - இதற்கு முறையான பயிற்சி தேவை. 'வழிபடுவோரை வல்லறிதீயே; பிறர் பழி கூறுவோர் மொழி தேறலையே' (10) என்பது புறநானூறு.

7. ஒரு மாணவனுக்குப் போர்க்குணம் வேண்டும்; தன் மனத்திற்கு நியாயம் என்று பட்டதை நிலைநாட்ட, இடைவிடாமல் போராட அவனுக்கு உறுதி வேண்டும்; நம்பிக்கை வேண்டும். இவ்வகையில் வழிகாட்டும் பொறுப்பு ஆசிரியருக்கு உண்டு.

8. ஓர் ஆசிரியர் தமது மாணவர்களிடம் அதிகமான கண்டிப்பும் காட்டக் கூடாது. அதிகமான செல்லமும் காட்டக் கூடாது; அன்பாக நடத்தினால் போதுமானது.

9. தவறு கண்டால் ஒதுங்கிச் செல்லாமல், கொதித்து எழுந்து தட்டிக் கேட்கும் துணிச்சல்; அதே வேளையில் தனது வலிமையை மௌனமாகவும் பொறுமையாகவும் வெளிப்படுத்தும் திறம்; இந்த இரண்டு பண்புகளும் மாணவனின் ஆளுமை உருவாக்கத்தில் இன்றியமையாதவை.

10. ஒரு மாணவனுக்கு முதலில் தேவைப்படுவது தன்னம்பிக்கை; அடுத்தது, மனித குலத்தின் மீது மகத்தான நம்பிக்கை. இந்த இரு நம்பிக்கைகளும் இணைந்தால் எதிர்காலத்தில் மாணவன் ஓர் ஆளுமையாளனாக (Personality) மலர்ச்சி அடைவான்.

ஆபிரகாம் லிங்கன் தமது மகனின் ஆசிரியருக்கு எழுதிய வரலாற்றுச் சிறப்பு மிக்க இக்கடிதம் இன்றைய இளைய தலைமுறை யினருக்கு மட்டுமன்றி, ஆசிரிய சமுதாயத்திற்கும் கல்வியாளர்க்கும் ஒருங்கே வழிகாட்டும் வல்லமை படைத்தது. உலகின் ஒப்பற்ற கடித இலக்கிய வரிசையில் இடம்பெறத் தக்க தரமும் திறமும் இக்கடிதத்திற்கு உண்டு; உறுதியாக உண்டு.

15

பூவிலே சிறந்த பூ என்ன பூ?

"ஒரு கோடிச் செல்வனால் கூட ஆற்ற இயலாத செயலை, அன்பு நிரம்பிய ஒரு நல்ல மனமானது ஆற்றிவிடும்." – அப்துற் றஹீம்*

ஒருநாள் அக்பர் தன் அரசவையில் கூடி இருந்தவர்களிடம் ஒரு கேள்வி கேட்டார்:

"பூக்களிலே சிறந்த பூ என்ன பூ?"

யாராலும் பதில் கூற முடியவில்லை.

கடைசியாகப் பீர்பால் பதில் சொல்ல அழைக்கப்பட்டார்.

பீர்பால் சொன்னார்: "உலகம் முழுவதற்கும் மானம் காக்கும் ஆடையை எந்தப் பூ தருகிறதோ அந்தப் பருத்திப் பூவே பூக்களிலே சிறந்த பூ!"

அக்பர் பெருமகிழ்வோடு இந்தப் பதிலை ஏற்றுக்கொண்டார்.

பேராசிரியர் மு.வரதராசனாரின் குழந்தைப் பாடல் ஒன்று வருமாறு:

"ரோஜாப்பூ வாடிவிடும்
செண்பகப்பூ வாடிவிடும்
மல்லிகைப்பூ வாடிவிடும்
முல்லைப்பூ வாடிவிடும்
வாடாத பூ எதுவோ?
வளருகின்ற இடம் எதுவோ,
வாடாத பூ அறிந்தேன்,
வளருகின்ற இடம் அறிந்தேன்;
வாடாத பூ படிப்பூ (படிப்பு);
வளரும் இடம் பள்ளிக்கூடம்!"

---

* வாழ்வது ஒரு கலை, ப.154

கவிஞர் கண்ணதாசன் 'குலவிளக்கு' என்ற திரைப்படத்திற்காக எழுதிய பாடல் ஒன்றில் இடம்பெறும் கேள்வியும் பதிலும் இவை:

"கேள்வி: பூப்பூவா பூத்திருக்கு பூமியிலே ஆயிரம்பூ

பூவிலே சிறந்த பூ என்ன பூ?

பதில்: ரோஜாப்பூ...! தாமரைப் பூ...!

பதில்: ஊஹுூம்! அன்பு!"

கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் ஒருமுறை பெண்கள் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு பேசும்போது அவர்களைப் பார்த்துப் பின்வரும் கேள்வியைக் கேட்டார்:

"சகோதரிகளே, தாய்மார்களே! நீங்கள் எல்லோருமே பூ வச்சிருக்கீங்க. சிலர் ரோஜாப்பூ வச்சிருக்கீங்க. சிலர் மல்லிகைப்பூ வச்சிருக்கீங்க. இன்னும் சிலர் முல்லைப்பூ, கனகாம்பரப்பூ போன்று பல வகையான பூக்களை வச்சிக்கிட்டிருக்கீங்க. அதனாலேயே பெண்களுக்குப் பூவையர்னு பேரு. இந்த பூக்கள் எல்லாம் இன்னக்கி வச்சா நாளைக்குத் தூக்கி எறிய வேண்டிய பூக்கள். இதெல்லாம் மலரும் பூக்கள். மலர்ந்து மறுநாளே வாடும் பூக்கள். வாடாமல் வளரும் பூவே சிறந்த பூ. அந்தச் சிறந்த பூ என்ன பூன்னு சொல்லுங்க பார்க்கலாம்."

பலரும் விழித்தனர். ஒரு பெண்ணுக்குத் திடீர் என்று நினைவு வந்தது. கேட்பவர் நகைச்சுவை அரசர். ஆகையால் தைரியமாகச் "சிரிப்பூ" என்றார்.

கலைவாணர் கொஞ்சம் சிரித்தார். தான் சரியான விடை கூறிவிட்டதாகக் கருதி அந்தப் பெண்ணும் கூடச் சிரித்தார். கூட்டத்தில் இருந்தவர்களும் சிரித்தார்கள்.

"பார்த்தீர்களா, இதுவும் ஓரளவுக்கு வளரும் பூதான். ஆனா தொடர்ந்து வளராது. இதோ இப்பப் பேச ஆரம்பிச்சதும் நின்னிருச்சு. நிற்காம, தடைப்படாம, வளர்ந்துகிட்டே இருக்கிற பூ சேமிப்பூ தான். ஓரளவு நீங்க சேமிப்புச் செய்துவிட்டு அப்படியே விட்டுட்டாக்கூட வட்டியின் மூலம் அது வளர்ந்துக்கிட்டே இருக்கும். நீங்க தூங்கினாலும் அது தூங்காது. ஆகையால் சேமிப்பூ தான் சிறந்த பூ. பெண்களாகிய நீங்கள் சேமிக்கத் தொடங்கணும் கிறதை வற்புறுத்தத்தான் இந்தக் கூட்டம். ஆகவே சேமிப்பே சிறந்த பூ" என்று முத்தாய்ப்பாகக் கூறி முடித்தார் கலைவாணர்.

கொஞ்சம் கிண்டலும் துணிச்சலும் உள்ள ஒரு பெண்மணி கலைவாணருடனேயே மோதிப்பார்க்க நினைத்தார். "சேமிப்பு சிறந்த பூதான். சேமியாப்பூ கூட இருக்கா?" என்று கலைவாணரைப் பார்த்துக் கேட்டார். எல்லோரும் சிரித்தனர்.

கலைவாணரும் சிரித்துக்கொண்டே, "பாயாசம் சம்பந்தப்பட்ட அப்பளத்துக்குப் பூ வந்தாச்சு. சேமியா, அப்பளம் பூத்தது மாதிரி இன்னும் பூக்கலை. அப்பளப்பூவைக் கண்டுபிடிச்ச பூவையர்தான் சேமியாப்பூவையும் கண்டுபிடிக்கணும்" என்றார்.

கூட்டம் பூராவும் ஒரே சிரிப்பூ.

ஒரு கல்லூரியின் இலக்கிய மன்றத்திற்குப் பேசச் சென்றிருந்த போது எனக்கு நேர்ந்த அனுபவம் இது. பேச்சின் இடையே கூடி இருந்த மாணவர்களைப் பார்த்துக் கேட்டேன்.

"பூவிலே சிறந்த பூ எது?"

கூட்டத்தில் இருந்த ஒரு மாணவன் குறும்பாகச் சொன்ன பதில்: "குஷ்பூ"

"பூவிலே சிறந்த பூ படிப்பு அல்லது உழைப்பு என்று யாராவது சொல்லி இருந்தால் நான் மிகவும் மகிழ்ந்திருப்பேன்" என்று மாணவர் கூட்டத்தைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே சொன்னேன்.

மீண்டும் அதே குரல்: "அது உங்களுக்கு... இது எங்களுக்கு!" நடிகை குஷ்பூ உச்சத்தில் இருந்த நேரம் அது! கூட்டமே கலகலத்தது கொஞ்ச நேரத்திற்கு.

ஷேக்ஸ்பியரின் பாணியில் 'ஓ, குறும்பே! உன் பெயர்தான் இளமையோ?' என்று சொல்லத் தோன்றியது எனக்கு.

அண்மையில் ஒரு பள்ளிக்கூடத்தின் இலக்கிய மன்றத் தொடக்க விழாவில் கலந்துகொண்டேன். உரையின் இடையே "பூவிலே சிறந்த பூ எது?" என்று நான் கேட்டபோது கீழே அமர்ந்திருந்த ஒரு 'வாண்டு' சொன்ன பதில்:

"செருப்பு!"

ஒருகணம் அசந்து போனேன் நான்! இதில் என்ன வேடிக்கை அல்லது வேதனை என்றால், அந்தச் சிறுவன் தன் காலில் செருப்பு அணிந்திருக்கவில்லை என்பது தான்!

எண்ணிப் பாருங்கள்: கேள்வி ஒன்றுதான். ஆனால் அந்தக் கேள்விக்குக் கிடைத்திருக்கும் பதில்களோ பலவிதம்: ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதம். அந்தப் பதில்களில் வெளிப்பட்டிருக்கும் அறிவாற்றலும் அனுபவ முத்திரையும் நகைச்சுவை உணர்வும்தான் எத்தனை எத்தனை விதங்கள் பாருங்கள்! இதுபோல் தான் நம் வாழ்க்கையும். வாழ்க்கையும் பலவிதம்: ஒவ்வொன்றும் ஒருவிதம்!

16

திட்டமிட்ட வாழ்வு எது?

"நமக்குக் கிடைக்கும் வாய்ப்புக்களைக் கையாளும் வழிகளில் தான் இருக்கிறது நம் வெற்றி."

– வி.ஆர்.பி.மாணிக்கம்*

நீண்ட நாட்களுக்குப் பிறகு ஒரு நண்பரை வழியில் சந்தித்து நலம் விசாரித்தேன். அவர் வழக்கம் போல் முகாரி ராகத்தில் 'இல்லைப் பாட்டு' பாடினார். "அதை ஏன் கேக்கிறீங்க? முன்னெல்லாம் வீட்டு பட்ஜெட் போட்டால் துண்டுதான் விழும். இப்போது வேட்டியே விழுகிறது...! அதுவும் ஜனவரி மாதம் பிறந்து விட்டால் போதும்: வருமான வரிப் பிடித்தம் வேறு! இப்போதெல்லாம் வரிசையாக மாதங்களின் பெயர்களைச் சொல்லச் சொன்னால். ஜனவரி, பிப்ரவரி, வருமானவரி என்றுதான் வாயில் வருகிறது."

இத்தனைக்கும் அந்த நண்பர் ஒரு கல்லூரிப் பேராசிரியர், அவரது துணைவியாரும் ஒரு கல்லூரிப் பேராசிரியை. ஆஸ்தி, ஆசை இரண்டிற்கும் சேர்த்து அவர்களுக்கு ஒரே ஒரு பெண் குழந்தைதான். இப்படி இருந்தும், முதல் தேதி வந்துவிட்டால் அவர் பாடு 'தாளம் படுமோ தறி படுமோ' என்று பாரதியார் பாடியது போல்தான் இருக்கும். 'மாதக் கடைசி' என்றால் பரிதாபத்தின் எல்லைக்கே சென்றுவிடுவார் நண்பர். மாதந்தோறும் சம்பளப் பட்டியலில் (Pay Bill) அவர் வாங்குகின்ற தொகையோ ரூபாய் இலட்சத்திற்கு மேல்: ஆனால், அவர் வீட்டிற்கு எடுத்துச் செல்லும் தொகையோ (Take-home pay) ரூபாய் இருபதாயிரத்திற்கும் கீழே. என்ன செய்வார் பாவம்? தேவை இருக்கிறதோ இல்லையோ எங்கெல்லாம் கடன் கொடுக்கிறார்களோ அங்கெல்லாம் கடன் வாங்குவார். கட்ட முடிகிறதோ இல்லையோ கேட்டவர்களிடம் எல்லாம் சீட்டுக்கள் போடுவார். ஆரம்பத்திலேயே சீட்டுத் தொகையை எடுத்துவிடுவார். உணவு, உடை, ஒப்பனைப் பொருள் போன்றவற்றில் மனம் விரும்பியபடியெல்லாம் செலவு செய்வார்.

---

* சிந்திப்போம்! செயல்படுவோம்!, ப.51

இன்றைய சூழலில் நடுத்தரக் குடும்பங்களில் நண்பரைப் போல் மிகப் பலபேர் இருக்கிறார்கள். எது ஆடம்பரம், எது கருமித்தனம், எது சிக்கனம் என்று தெரிந்து கொள்ளாமல் அல்லாடிக் கொண்டிருக்கிறார்கள்: எந்தவிதமான ஒழுங்கும் திட்டமும் தொலை நோக்கும் இல்லாமல் தங்கள் வாழ்க்கையைக் கடனிலும் கவலையிலும் கழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம், ஆடம்பரம், சிக்கனம், கருமித்தனம் ஆகியவற்றைத் தமக்கே உரிய பாணியில் அழகாக இப்படி விளக்கிக் கூறுவார்:

1. தேவைக்கு மேல் செலவு செய்வது ஆடம்பரம்.

2. தேவைக்குச் செலவு செய்யாதது கருமித்தனம்.

3. தேவையின் அளவு செலவு செய்வது சிக்கனம்.

ஆடம்பரம், கருமித்தனம், சிக்கனம் ஆகிய மூன்றுக்கும் இடையே உள்ள இந்த வேறுபாடுகளை நன்கு புரிந்துகொண்டு செயல்பட்டால் குடும்பத்தில் மகிழ்ச்சியும் மனநிறைவும் நிலவும்.

பாடுபட்டுத் தேடிய பணத்தைச் சிக்கனமாய், பக்குவமாய்ச் செலவு செய்வது எப்படி என்கிறீர்களா? குடும்ப வரவு செலவுத் திட்டத்தைக் கணக்காக, கச்சிதமாகப் போடுவது எப்படி என்கிறீர்களா? இதோ, ஒரு சின்னஞ்சிறு கதை:

வயலில் ஒரு கிழவர் உழுது கொண்டிருந்தார். மகிழ்ச்சியாகப் பாடிக் கொண்டும் இருந்தார். கிழவரின் மகிழ்ச்சியைப் பார்த்து அந்த வழியே வந்த மன்னனுக்கு வியப்பு ஏற்பட்டது.

கிழவரைப் பார்த்து, "நாள் முழுவதும் உழுதால் உனக்கு எவ்வளவு கூலி கிடைக்கும்?" என்று கேட்டான் மன்னன்.

"எட்டணா தருகின்றார் முதலாளி" என்றார் கிழவர்.

"இவ்வளவு குறைந்த கூலியா? இதை வைத்துக்கொண்டு நீ எப்படிக் காலந்தள்ளுகிறாய்? இவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறாய்?"- வியப்பின் விளிம்பில் நின்று வினவினான் மன்னன்.

"எட்டணாவில் இரண்டணா குடும்பத்திற்குச் செலவழிக்கிறேன். இரண்டணா பழைய கடனுக்குத் தருகிறேன்: இரண்டணா தருமம் செய்கிறேன்: இரண்டணா வட்டிக்குத் தருகிறேன்" என்று விளக்கிக் கூறினார் கிழவர்.

"எப்படியப்பா இதில் மிச்சம் பிடித்துத் தருமத்திற்கும் வட்டிக்கும் தருகிறாய்?" என்று கேட்டான் மன்னன்.

கிழவர் பொறுமையாக விளக்கினார்: "எனக்கும் என் மனைவிக்கும் இரண்டணா செலவழிக்கிறது: இது என் குடும்பச் செலவு! எனக்கு மிகவும் வயதான தாயும் தந்தையும் இருக்கிறார்கள். இளமையில் உணவும், உடையும் கொடுத்து என்னைக் காப்பாற்றிய அவர்களுக்காக இரண்டணா செலவாகிறது. அது **பழைய கடன்.** என் தங்கை ஆதரவு இன்றி என் வீட்டில் வாழ்கிறாள்; அவளுக்கு இரண்டணா செலவாகிறது. அது தருமம். எனக்கு இரண்டு மகன்கள் இருக்கிறார்கள். அவர்கள் பொருட்டு இரண்டணா செலவழிகிறது. அது வட்டிக்குத் தருவது. பிற்காலத்தில் அவர்கள் என்னைக் காப்பாற்றுவார்கள்!"

அரசன் இந்தப் பொருள் பொதிந்த சொற்களைக் கேட்டு விம்மிதம் அடைந்தான்.

இது வெறும் கதையல்ல. வாழ்க்கைப் பாடம்; அனுபவக் கல்வி. இதன்படி நாமும் நடக்க முற்பட்டோம் என்றால், நம் எல்லோருடைய குடும்பங்களிலும் மகிழ்ச்சி பொங்கும்; இல்லை, நிலையாகத் தங்கும்!

17

நமக்குள் நாமே...!

"விழித்து நீ/ எழுந்தால்/ விலங்குகளே நொறுங்கும்!
சின்ன நூல்கண்டா/ உன்னைச்/ சிறைப்படுத்தி வைப்பது?"

– மு.மேத்தா*

'நமக்கு நாமே' என்பது தமிழக அரசு அண்மையில், அறிவித்திருக்கும் அருமையான திட்டம். 'நமக்குள் நாமே' என்பது இன்று நான் உங்களுக்கு அறிமுகப்படுத்தப்போகும் அற்புதமான திட்டம்! என்ன விடுகதை போல இருக்கிறதே என்று பார்க்கிறீர்களா? வேறு ஒன்றும் இல்லை. ஒரு மாறுதலுக்காக இப்படிச் சிந்தித்துப் பார்ப்போமா?

நம் உடம்பில் இருந்து - உடல் உறுப்புக்களிடம் இருந்து - நாம் கற்றுக் கொள்ளவேண்டிய அடிப்படையான உண்மைகள் - வாழ்க்கைப் பாடங்கள் - எத்தனையோ உண்டு! முதலில் மூளை. எழுத்தாளர் சுஜாதாவின் சொற்களிலே சொல்ல வேண்டும் என்றால் 'தலைமைச் செயலகம்'. கணினிக்கு இணையான, ஏன் கண்ண பெருமானுக்குச் சமமான அற்புதமான உறுப்பல்லவா அது? 'ராஜாஜி மூளை'யைப் பற்றிச் சிறப்பாகப் பேசப்படுவதை நீங்கள் கேட்டதில்லையா? எனவே மூளையிடம் இருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டியது ஆளுமைப் பண்பை.

"இதய வீணை தூங்கும்போது பாட முடியுமா? இரண்டு கண்கள் இரண்டு காட்சி காணமுடியுமா?" - 'இருவர் உள்ளம்' திரைப்படத்தில் இடம்பெற்ற பாடல் வரிகள் இவை. இரண்டு கண்கள், ஆனால் அவை பார்ப்பதோ ஒரு பொருளை - காட்சியை. ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் இதைவிடச் சிறந்த ஓர் உதாரணம் வேண்டுமா? மனிதனின் உடல் உறுப்புக்களில் எல்லாம் சிறந்தது கண்கள் என்பார்கள். ஏனெனில் பிற உறுப்புக்களுக்கு ஒரு சிறு துன்பம் ஏற்பட்டாலும் உடனே துடிப்பது, கலங்குவது

---

* வெளிச்சம் வெளியே இல்லை, ப.56

கண்கள்தான். இப்படிக் கண்களைப் போல் ஒவ்வொரு மனிதனும் இரக்க உணர்வோடு செயல்பட்டால் போதும்! சமுதாயத்தில் எந்தப் பிரச்சினையும் தலைதூக்காது. இது சத்தியம்.

நீண்ட நேரம் பார்த்தால், **கண்** வலிக்கும். பேசினால், **வாய்** வலிக்கும். எழுதினால், **கை** வலிக்கும். நடந்தால், **கால்** வலிக்கும். ஆனால் எவ்வளவு நேரம் கேட்டுக்கொண்டே இருந்தாலும் **காதுக்கு** மட்டும் வலிக்கவே செய்யாது. இதுதான் காதுக்கு உள்ள தனிச்சிறப்பு. எனவே எப்போதும் நல்லனவற்றையே காதில் போட்டுக் கொண்டிருப்போம். ஒரு காதில் வாங்கி இன்னொரு காதின் வழியாக விட்டுவிடாமல் கேட்ட நல்லனவற்றைப் பேணிப் பாதுகாத்து வருவோம்.

பற்களை எடுத்துக் கொள்ளுங்கள். அவற்றிற்கு இருக்கும் போர்க்குணம் ஒரு மனிதனுக்கு இருந்தால் போதும். வாழ்க்கையில் அவன் எப்படியும் முன்னுக்கு வந்துவிடலாம். ஒரு பல் கடைசி வரை போராடும். தனக்கு ஒதுக்கப்பட்ட பணியைச் செவ்வனே செய்யும். வேறு வழியே இல்லாமல் போகும்போதுதான் விழும். 'ஆடி அடங்கும்' இல்லை 'விழும்' வாழ்க்கைதான்! என்றாலும் இறுதிவரை என்ன தன்னம்பிக்கை பற்களிடம் பாருங்கள்!

முப்பத்திரண்டு பற்களுக்கு இடையே - அதுவும் வெட்டும் பல், கோரைப் பல், கடைவாய்ப் பல் என்றாற்போல் விதவிதமான பற்களுக்கு இடையே - இயங்கும் **நாக்கைப்** போன்ற கவனம் ஒரு மனிதனுக்குத் தனது வாழ்வில் வேண்டும். 'கரணம் தப்பினால் மரணம்' என்பது போல் சிறிது தவறினால்கூட, கடிபட வேண்டிய நெருக்கடி நிலை நாக்கிற்கு! என்றாலும் நாக்கு அதை எவ்வளவு சாதுரியமாகச் சமாளிக்கிறது பாருங்கள்!

ஒருமுறை தமிழக முன்னை முதல்வர் குறிப்பிட்டது போல் 'நான்' என்று சொல்லும்போது உதடுகள் ஒட்டவே ஒட்டாது. **'நாம்' என்று சொல்லும்போதுதான் உதடுகள் ஒட்டும்**. நாமும் நம் உதடுகளைப் போல் எல்லாவிதமான பேதங்களையும் மறந்து ஒட்டி உறவாடி வாழக் கற்றுக்கொள்வோமா?

கை விரல்கள் பத்து, கால் விரல்கள் பத்து என மனிதனுக்கு மொத்தம் இருபது விரல்கள். "கையும் காலும்தான் உதவி - கொண்ட கடமைதான் நமக்குப் பதவி" என்பது **பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின்** வாக்கு. வெறும் விரல்கள் என்பது மூடத்தனம்; பத்து விரல்கள் என்பது என்றும் நமக்கு மூலதனம்.

கவிக்கோ அப்துல் ரகுமான் பாடியிருப்பது போல் 'நகமகுடம்' பெற்ற கடுமையான உழைப்பாளிகள் அல்லவா நம் கை, கால் விரல்கள்?

உடல் உறுப்புக்களிலேயே தன்னலம் இல்லாமல் எந்த நேரமும் தனது தலைவனுக்காக ஒரு தொண்டனைப் போல் பணியாற்றிக் கொண்டிருப்பது இதயம். அந்த இதயம் இருபத்து நான்கு மணிநேரமும் துடிப்பது தனக்காக அல்ல; மனித இயக்கத்திற்காக. கையளவே உள்ள இதயத்திடம் இருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் கடலளவுக்கும் மேலான இந்தப் பொது நல உணர்வே ஆகும்.

சித்தர்கள், யோகிகள், ஞானிகள், உத்தமர்கள், சிந்தனையாளர்கள் ஆகியோரிடம் இருந்து நாம் இதுவரை கற்றுக்கொண்டதெல்லாம் போதும்! இனிமேல், **'நமக்குள் நாமே' உள்முகமாகப் பார்த்து வாழ்வியல் உண்மைகளைக் கற்றுக்கொள்வோம்!** வாழ்வாங்கு வாழ்ந்து 'மாமனித'னாக உயர்ந்து காட்டுவோம்!

18

வாழ்வில் நிம்மதியும் அமைதியும் கொலுவீற்றிருக்க...

*"எத்தனை மோசமான சூழ்நிலையிலும் மனிதன் நம்பிக்கை இழக்காமல் இருக்க வேண்டும் என்பதை மறுபடி மறுபடி பாரதியார் நமக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறார்." – மாலன்**

அண்மையில் ஒரு கூட்டத்தில் பேசும்போது என் உரையின் இடையே சிரித்துக் கொண்டே இப்படிச் சொன்னேன்:

"நண்பர்களே, இன்றைய மனிதனின் வாழ்க்கையை இரண்டே இரண்டு சொற்களிலே அடக்கி விடலாம். மனித வாழ்வின் முதல் பாதி 'Tension'! அடுத்த பாதி 'Pension!' இந்த 'Pension!' -ஐ வாங்கு வதற்குள்ளாக மனிதன் இன்று படுகிற 'Tension' இருக்கிறதே, அது ஒரு தனிக்கதை!"

அவையினர் அனைவரும் இந்த நகைச்சுவையை நன்கு ரசித்துக் கேட்டனர்; வாய் விட்டுச் சிரித்தனர்.

ஒன்று மட்டும் உண்மை. வெறுமனே சிரிப்பதற்காக மட்டும் நான் இந்தக் கருத்தைச் சொல்லவில்லை. கொஞ்சம் சிந்தித்துப் பார்த்தால் இந்தக் கருத்தின் மறுபக்கம் உங்களுக்குப் புலனாகும்.

இன்று உலகில் எங்கெங்குக் காணினும் ஒரே 'பரபரப்பு'; எல்லோருடைய அகத்திலும் முகத்திலும் ஒரே 'படபடப்பு'. எந்த இடத்திலும் - எந்த நேரத்திலும் - மக்கள் வெள்ளம் அலைபாய்கிற காட்சியைத் தான் இன்று அங்கிங்கு எனாதபடி எங்கும் - எப்போதும் - நீக்கமறக் காணமுடிகிறது. "அப்பொழுது அவன் செத்துக் கொண்டிருந்தான்; சாவகாசமாகச் செத்துக் கொண்டிருந்தான். ஜனங்கள் அவ்வழியாகப் போய்க் கொண்டிருந்தார்கள்; வந்து கொண்டிருந்தார்கள்" (காஞ்சனை, ப.43) என்று புதுமைப்பித்தன் 'மகாமசானம்' என்ற சிறுகதையில் எழுதுவாரே, அப்படிப்பட்ட

* சொல்லாத சொல், ப.72

ஒரு பரபரப்பான காட்சி தான் நாள்தோறும் வீதிகளிலே இன்று அரங்கேறிக் கொண்டிருக்கின்றது.

இன்றைய திரை இசைப் பாடல்களிலும் இக் கருத்தின் எதிரொலியைப் பரவலாகக் கேட்க முடிகின்றது. "ஆயிரம் தான் வாழ்வில் வரும் நிம்மதி வருவதில்லை" என்கிறது 'மக்கள் திலகம்' **எம்.ஜி.ஆரின்** திரைப்படப் பாடல் ஒன்று. 'நடிகர் திலகம்' **சிவாஜியும்** தம் திரைப்படப் பாடல் ஒன்றில் "ஆயிரம் இருந்தும் வசதிகள் இருந்தும் No peace of mind" என 'முகாரி ராகம்' பாடுகின்றார்; "எங்கே நிம்மதி எங்கே நிம்மதி, அங்கே எனக்கோர் இடம் வேண்டும்" என்னும் அவரது புகழ் பெற்ற சோகப் பாடலும் நாம் அறிந்ததே.

சரி, மனிதன் நிம்மதியாக வாழ - அமைதியாகத் தன் வாழ்நாளைக் கழிக்க - என்னதான் வழி என்று கேட்கிறீர்களா? இதோ ஓர் ஆன்மிகக் கதை:

ஒரு பெரிய மகான். அவருக்குப் பல சீடர்கள். நாள்தோறும் அவரிடம் ஆசி பெறுவதற்காகப் பல பக்தர்கள் வருவார்கள். ஒருநாள் அவர்களுள் சிலருக்கு ஒரு சந்தேகம் வந்தது. 'நமது குருவிடம் அப்படி என்ன தனிச் சிறப்பு இருக்கிறது?' சீடர்கள் தங்களுக்குள் பேசிப் பார்த்தார்கள். அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை.

எல்லோரும் ஒரு நாள் குருவிடமே போய்ப் பணிவாகக் கேட்டார்கள். "குருவே! உங்களுடைய தனிச்சிறப்பு என்ன? உங்களுக்கு மட்டும் ஏன் இவ்வளவு மரியாதை?"

குரு அமைதியாகச் சொன்னார்: "நான் உண்ணும் போது உண்கிறேன்! உறங்கும்போது உறங்குகிறேன்!"

சீடர்களுக்கு ஒரே குழப்பம். பலர் சிரிப்பை அடக்க முயன்றார்கள். ஒருவர் குருவிடம் தைரியமாகக் கேட்டார்: "குருவே! நாங்களும் அப்படித் தானே செய்கிறோம்?"

குரு சொன்னார் : "ஆழமாக யோசித்துப் பாருங்கள். உண்ணும் போது உங்களுக்கு எத்தனை எத்தனை கவலைகள்! எத்தனை எத்தனை நினைவுகள்! உங்களில் எத்தனைப் பேர் படுத்த உடன் நிம்மதியாகத் தூங்குகிறீர்கள்! எந்த நேரத்தில் எந்தப் பணியைச் செய்தாலும், அந்தப் பணியிலேயே ஒன்றி, அதையே ரசித்து, அதிலேயே லயித்து, அதுவாகவே வாழ்வது தான் மகத்தான வாழ்க்கை."

சீடர்கள் இப்போது முதன்முறையாகச் சிந்திக்கத் தொடங்கினார்கள்.

ஏன், நாமும் ஒரு கணம் சிந்தித்துப் பார்ப்போமே?

நாம் உண்ணும்போது உண்கிறோமா?

உறங்கும் போது உறங்குகிறோமா?

'Work while you work,

Play while you play'

என்று இளமையில் இசையோடு படித்ததை, வாழ்வில் ஒரு நாளேனும் நாம் முறையாகப் பின்பற்றினோமா? பின்பற்றி இருந்தால் நம் வாழ்வில் ஏன் பரபரப்பும் படபடப்பும் அணிவகுத்து வரப் போகின்றன? அமைதியையும் நிம்மதியையும் தேடித் தேடி ஏன் அலைந்து திரியப் போகின்றோம்?

அண்மையில் படித்த கவிஞர் ரவியின் ஹைகூ ஒன்று:

"பேயாய் அலைகிறது
மனம்
அமைதி தேடி"

(முனை கெட்ட தீ, ப.8)

நண்பர்களே, அமைதியான - நிம்மதியான - வாழ்வின் அடையாளம் இரண்டு. ஒன்று, பசித்தவுடன் உண்பது; மற்றொன்று, படுத்தவுடன் உறங்குவது.

இனி ஒரு விதி செய்வோம்; அதை எந்த நாளும் காப்போம்:

இனியேனும் நாம் -

உண்ணும் போது உண்போம்!

உறங்கும்போது உறங்குவோம்!

படபடப்புக்கும் பரபரப்புக்கும் விடை கொடுப்போம்! அமைதியும் நிம்மதியும் வாழ்வில் கொலு வீற்றிருக்கச் செய்வோம்! மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோம்! வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வ நிலையை எட்டிப் பிடிப்போம்!

19

தற்கொலை, தற்கொலை செய்து கொள்ளட்டும்!

"சுடும் வரைக்கும் நெருப்பு
சுற்றும் வரைக்கும் பூமி
போராடும் வரைக்கும் மனிதன் – நீ மனிதன்!"
– வைரமுத்து*

அண்மையில் வீட்டை ஒழுங்குபடுத்தும் நோக்குடன் பழைய குப்பைகளைக் கிளறினேன். சில ஆண்டுகளுக்கு முன்பு 'தினமணி' பத்திரிகையில் வெளிவந்திருந்த ஒரு செய்தி என்னைத் திடுக்கிட வைத்தது; சில மணித்துளிகளுக்கு நிலைகுலையச் செய்தது. அச்செய்தி வருமாறு:

"கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர் முதுகு வலி காரணமாக இனிமேல் விளையாட முடியாது என்று வெளியான செய்தியையடுத்து மனம் நொந்த 18 வயது கல்லூரி மாணவி தற்கொலை செய்து கொண்டார்.

மைசூரில் செவ்வாய்க்கிழமை (21.09.1999) இந்த சம்பவம் நடந்தது. மைசூரில் தனது உறவினர் வீட்டில் தங்கிப் படித்து வந்தவர் கல்லூரி மாணவி தீபா. கம்ப்யூட்டர் படிப்பு படித்து வந்தார். டெண்டுல்கரின் தீவிர ரசிகை இவர்.

டெண்டுல்கர் முதுகு வலி காரணமாக ஆஸ்திரேலியா சென்று சிகிச்சை பெற்று வந்த பிறகு, அவரால் இனிமேல் கிரிக்கெட் விளையாட முடியாது என்று பத்திரிகைகளில் வெளியான செய்தி அவரைப் பாதித்துள்ளது.

மனம் நொந்த நிலையில் இருந்த தீபா, திங்கள்கிழமை இரவு தனது வீட்டில் மண்ணெண்ணை ஊற்றித் தீ வைத்துக் கொண்டு தற்கொலை செய்து கொண்டார்.

தனது தற்கொலைக் கடிதத்தில், 'ஐ லவ் யூ சச்சின், இனிமேல் நீங்கள் கிரிக்கெட் விளையாட முடியாது என்ற செய்தியைத்

---

* இந்தப் பூக்கள் விற்பனைக்கு அல்ல, ப.95

தாங்கிக் கொள்ள முடியாமல் தற்கொலை செய்து கொள்கிறேன்' என்று எழுதியிருந்தார்."

(தினமணி: 22.09.1999)

துளியும் உண்மை இல்லாத ஒரு வதந்தியை நம்பித் தீபா தன் வாழ்க்கையை முடித்துக் கொண்டுவிட்டாரே? அதுவும் 18 வயதில். ஆறில் சாகலாம். அறியாத வயது; அறுபதில் சாகலாம், அனுபவித்து முடிந்த வயது. மூவாறு வயதில் - 18-இல் சாவது என்றால்? எதையும் அனுபவித்து அறியாத - எவ்வளவோ அனுபவிக்க வேண்டிய - வயது அல்லவா? சரி, தீபா இந்த வதந்தியின் - அல்லது உண்மையின்- இன்னொரு பக்கத்தைப் பற்றி யோசித்துப் பார்த்தாரா? முதுகு வலிக்கு ஆளான சச்சின் - தீபா தீவிரமாக ரசித்துப் போற்றும் சச்சின்- செய்தியாளர்களிடம் என்ன சொல்லியிருந்தார் தெரியுமா? 'இன்னும் 2 வார காலத்தில் கிரிக்கெட் போட்டிக்கான வலைப் பயிற்சியில் ஈடுபடுவேன்!' என்று நம்பிக்கையுடன் அல்லவா பேசியிருந்தார்? அவருக்குச் சிகிச்சை அளித்த ஆஸ்திரேலியா மருத்துவ வல்லுநர் பீட்டர் பார்னெஸ் 'முதுகுவலிப் பிரச்சினையால் சச்சினின் கிரிக்கெட் ஆட்டம் பாதிப்பு அடையாது. அவருக்கு ஏற்பட்டுள்ள கோளாறை முறையான சிகிச்சை மற்றும் பயிற்சியால் சரிசெய்துவிட முடியும்' என்று செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்திருந்தார். இன்னொன்று: பல மாதங்களுக்கு முன்பே இந்த முதுகுவலி சச்சினைத் தாக்கியது. யாரிடமும் சொல்லாமல் வலியைத் தாங்கிக்கொண்டு, போராடி, விளையாடி ரன்களைக் குவித்தார்; இந்தியா அன்றைய ஆட்டத்தில் வெற்றி பெறுவதற்கும் காரணமாக அமைந்தார். இதையெல்லாம் தெரிந்து கொள்ளாமல் தீபா உயிரை விட்டுவிட்டாரே! இத்தனைக்கும் 'கம்ப்யூட்டர்' படிப்பு படிக்கும் மாணவி அவர்! ஒரு தீபா மட்டும் தானா? ஒரு வாரத்துப் பத்திரிகைச் செய்திகளை அலசிப் பாருங்கள்! எத்தனை 'தீபாக்கள்' தங்கள் உயிரை மாய்த்துக் கொண்டிருக்கிறார்கள் - தங்கள் பிரச்சினைக்குத் தீர்வாகத் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள் - என்று தெரிய வரும்.

பள்ளியிலோ கல்லூரியிலோ படிக்கும் மாணவன் அல்லது மாணவி தேர்வில் தோல்வி காரணமாகத் தற்கொலை செய்து கொள்கிறான் / செய்து கொள்கிறாள். காதலர்கள் தங்கள் காதலில் ஏற்பட்ட தோல்வி காரணமாகத் தற்கொலை முடிவைத் தேடிக் கொள்கிறார்கள். குடும்பத்தில் இருப்பவர்கள் குடும்பப் பிரச்சினை காரணமாக - கடன் தொல்லை காரணமாக - வியாபாரத்தில் ஏற்படும் இழப்பு காரணமாக - இன்னும் எத்தனை எத்தனையோ தனிப்பட்ட

காரணங்களுக்காகத் தற்கொலை செய்துகொள்கிறார்கள். அண்மையில் காவல் துறையில் பணிபுரியும் ஓர் இளைஞனின் மனைவி - திருமணமாகி ஓர் ஆண்டே ஆனவர் - 7 மாதக் கர்ப்பிணி- உடலில் மண்ணெண்ணெய் ஊற்றித் தீயிட்டுக்கொண்டு தற்கொலை செய்துகொண்டார். காரணம் என்ன தெரியுமா? கணவர் தொடர்ந்து இரவுப் பணிக்குச் செல்வதால் வருத்தம் அடைந்தாராம். இதனால், மனம் உடைந்தாராம். முடிவு? தற்கொலை! எப்படி இருக்கிறது பார்த்தீர்களா?

இப்படிச் சாதாரணமான - சராசரியான - மனிதர்கள்தான் தற்கொலை செய்து கொள்வார்கள் என்று இல்லை. மிகப்பெரிய எழுத்தாளர்கள் (உதாரணம்: நோபெல் பரிசு பெற்ற **எர்னெஸ்ட் ஹெமிங்வே**), கவிஞர்கள் (உதாரணம்: கவிஞர் **ஆத்மாநாம்**). அரசியல் தலைவர்கள் (உதாரணம்: கொடுங்கோன்மையால் உலகையே உலுக்கிய **ஹிட்லர்**), புகழேணியின் உச்சிக்குச் சென்றவர்கள் (உதாரணம்: ஹாலிவுட் கனவுக் கன்னி **மர்லின் மன்றோ**) போன்றவர்களும் தத்தம் வாழ்க்கையில் தனிப்பட்ட காரணங்களுக்காகத் தற்கொலை முடிவைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

தற்கொலை பற்றி மருத்துவ வல்லுநர்கள் கூறியுள்ள ஒரு கருத்து இங்கே நினைவுகூரத்தக்கது. தற்கொலை செய்து கொண்ட ஒருவரது வாழ்க்கை வரலாற்றை ஆராய்ந்து பார்த்தால் அவரது முன்னோர் இதே போல் தற்கொலை செய்து கொண்டு இறந்திருப்பது தெரியவருமாம். அதாவது மூன்றாவது தலைமுறைக்கு இந்தத் தற்கொலை எண்ணம் எப்படியாவது - என்றாவது - தலை யெடுக்குமாம். சரி, எப்படி ஆனாலும் - உண்மை எதுவாக இருந்தாலும் - தற்கொலை செய்து கொள்வது என்பது பிரச்சினைக்குத் தீர்வு ஆகுமா?

கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்; யாருக்குத் துன்பம் இல்லை? யாருக்குத் தொல்லை இல்லை? யாருக்குத் தோல்வி இல்லை? யாருக்குப் பிரச்சினை இல்லை? யாருக்கு நெருக்கடி இல்லை? துன்பப்படுகிறவர்கள் எல்லாம் - தோல்வி அடைந்தவர்கள் எல்லாம் - பிரச்சினையில் சிக்கிக் கொண்டவர்கள் எல்லாம் - தற்கொலை செய்து கொள்வதுதான் ஒரே தீர்வு என்ற முடிவுக்கு வந்தால், அப்புறம் உலகத்தில் யார்தான் மிச்சம் இருப்பார்கள்?

சங்கச் சான்றோர்கள் பலர் வறுமையில் வாடியவர்கள்தான்; 'பசிப்பிணி மருத்துவன் இல்லம் அணித்தோ, சேய்த்தோ கூறுமின் எமக்கே!' என்று தேடி அலைந்தவர்கள்தான். என்றாலும் அவர்கள்,

'பெரிதே உலகம் பேணுநர் பலரே' என்றும், 'இன்னாது அம்ம இவ்வுலகம், இனிய காண்க இதன் இயல்பு உணர்ந்தோரே' என்றும், 'எத்திசைச் செலினும் அத்தசைச் சோறே!' என்றும் பெருமிதத்தோடு பாடியிருக்கிறார்கள்; வறுமையில் செம்மையாக வாழ்ந்து காட்டியிருக்கிறார்கள். 'வாழ்க்கை துன்ப மயமானது' என்பதை நன்றாக அறிந்தவர்தான் வள்ளுவர்; என்றாலும் 'இடுக்கண் வருங்கால் நகுக!' என்று தான் அவர் அறிவுரை கூறியிருக்கிறார்; 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும், தெய்வத்துள் வைக்கப் படும்' என்று வாழ்வாங்கு வாழுமாறு தான் வழிகாட்டி இருக்கிறார். ஆதிசங்கரராலேயே 'திராவிட சிசு' என்று பாராட்டப் பெற்ற தமிழ் ஞானசம்பந்தர், 'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம், எண்ணில் நல்ல கதிக்கு யாதும் ஓர் குறைவில்லை!' என்று முழு நம்பிக்கையோடு பாடியிருக்கிறார். அதற்கு அவர் காட்டும் காரணம் 'பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருப்பது' - உமையொரு பாகனாக - அர்த்த நாரீசுவரனாக - இறைவன் இருப்பது! இவ்வளவு ஏன்? 'பாட்டுக்கொரு புலவன்' பாரதி தம் வாழ்க்கையில் பார்க்காத துன்பமா? அனுபவிக்காத தொல்லையா? 'எத்தனை கோடி துன்பம் வைத்தாய்' என்று மனம் வெறுத்தா அவர் இறைவனை விளித்துப் பாடினார்? 'எத்தனை கோடி இன்பம் வைத்தாய் - எங்கள் இறைவா! இறைவா! இறைவா!' என்று மூன்று முறை அழுத்தம் திருத்தமாக அல்லவா பாடியிருக்கிறார்? இன்றைய ஹைகூ கவிதைகூடப் படிப்பவர் மனத்தில் நம்பிக்கை விதையை நன்றாகத் தூவி இருக்கின்றதே? பதச்சோறு இதோ:

"பத்தாவது தடவையாக விழுந்தவனுக்கு
முத்தமிட்டுச் சொன்னது பூமி,
ஒன்பது முறை எழுந்தவனல்லவா நீ!"

(சூரியப் பிறைகள், ப.30)

கவிஞர் ஈரோடு தமிழன்பனின் அற்புதமான ஹைகூ இது!

எழுத்தாளர் கல்கி 'தற்கொலை' என்ற தலைப்பிலேயே ஒரு சிறுகதை எழுதி இருக்கிறார். அதில் வரும் ஜகந்நாதன் என்ற இளைஞன் பி.ஏ. வகுப்பில் இரண்டாம் முறையும் தோல்வி அடைந்ததைத் தாங்கிக்கொள்ள முடியாமல் தற்கொலை செய்து கொண்டு உயிரை விடுவது என்ற முடிவுக்கு வருகிறான். அப்போது எதிர்பாராத வகையில் அவன் பி.ஏ. தேர்வில் முதன்மையாகத் தேறியும் அப்பட்டத்தினால் ஒரு பயனும் காணாமல் - மூன்று ஆண்டுகளாக அலைந்து திரிந்தும் ஒரு வேலையும் கிடைக்காததால்-

தற்கொலை செய்து கொண்டு உயிரை விடத் துணிந்து மகாதேவன் என்ற இளைஞனைச் சந்திக்கிறான். இருவரும் சிறிது நேரம் மனம் விட்டுப் பேசிக் கொள்கின்றனர்; தாங்கள் எடுத்த தற்கொலை முடிவை எண்ணி உரக்கச் சிரிக்கின்றனர்; உயிர் விடும் யோசனையைக் கைவிட்டு, "இனி, இருவரும் சேர்ந்து புதிய பலத்துடனும் உற்சாகத்துடனும் வாழ்க்கைப் போராட்டத்தில் இறங்குவோம்" என்ற முடிவுக்கு வருகின்றனர்; இருவரும் ஒன்றுசேர்ந்து, 'மகாநாதன் கம்பெனி' என்ற பெயரில் சுயதொழில் தொடங்கி - புத்தக வியாபாரமும் பிரசுரமும் நடத்தி - வாழ்க்கையில் முன்னேறுகின்றனர். இத்தகைய புதிய பலத்துடனும் உற்சாகத்துடனும் வாழ்க்கைப் போராட்டத்தில் துணிந்து இறங்கினோம் என்றால், வாழ்க்கை நிச்சயம் நம் வசப்படும்.

நம் சித்தர்கள் சொல்லாதது இல்லை. இதோ, கடுவெளிச் சித்தர் நமக்காகவே பாடியிருக்கின்றார், பாருங்கள்.

"நந்த வனத்தில் ஓர் ஆண்டி - அவன்

நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்

கொண்டு வந்தான் ஒரு தோண்டி - மெத்தக்

கூத்தாடிக் கூத்தாடிப் போட்டு உடைத்தாண்டி !"

இதில் நந்தவனம் என்பது இந்த உலகம் அல்லது வாழ்க்கை; ஆண்டி என்பது நாம்; நாலாறு மாதம் என்பது ஓர் உயிர் கருவாகி உருவாவதற்குத் தேவைப்படும் பத்து மாதம்; படைப்புக் கடவுளான பிரம்மாதான் இங்கே குயவன்; தோண்டி என்பது உடம்பு - ஐம்புலன்கள் - மனம் எல்லாம் சேர்ந்த மானிடன்; இதனைக் கூத்தாடிக் கூத்தாடிப் போட்டு உடைப்பது நியாயமா? எண்ணிப் பாருங்கள்! கண் போன போக்கிலே கால் போய் - கால் போன போக்கிலே மனம் போய் - மனம் போன போக்கிலே மனிதன் போய்- மனிதன் போன பாதையை மறந்து போய் - வாழ்வதெல்லாம் ஒரு வாழ்வாகுமா?' 'வந்தான் - வாழ்ந்தான் - போனான்' என்று உலகம் சொல்லும் வகையில் வாழ்வதும் வாழ்வாகுமா? 'சொன்னான்- செய்தான்' என்றே நாளும் ஊரார் போற்ற வாழ்வது தானே உயர்ந்த வாழ்வு?

முத்தாய்ப்பாக, பிரச்சினையை எதிர்கொண்டு வெற்றிபெறும் துணிச்சல் இல்லாமல், பிரச்சினைக்கு ஒரே தீர்வு தற்கொலைதான் என்ற முடிவுக்கு வருபவர்களுக்காக ஒரு ஜென் கதை:

"குரு: 'மனித வாழ்க்கை எவ்வளவு காலம்?'

சீடர்கள்: 'எண்பது வருடம்'.

குரு: 'தப்பு!'

சீடர்கள்: 'எழுபது வருடம்.'

குரு: 'தப்பு, தப்பு!'

சீடர்கள்: 'அறுபது வருடம்.'

குரு: 'அதுவும் தப்பு!'

சீடர்கள்: 'அப்படியானால் எவ்வளவு காலம்?'

குரு: 'மூச்சிருக்கும் வரை!'"

நண்பர்களே, மூச்சிருக்கும் வரை இந்த உலகத்தில் வாழ்வோம்! நம்பிக்கையோடு வாழ்வோம்! நல்ல வண்ணம் வாழ்வோம்! நடக்கப் போவதைப் பற்றியோ, நடந்தவை பற்றியோ கவலைப்படாமல், நிகழ்காலத்தைப் புரிந்து கொண்டு நம்பிக்கையோடு நடை பயிலப் பழகுவோம்!

நிறைவாக, மதுரை மாநகரில் ஓடும் ஓர் ஆட்டோவின் முதுகில் காணப்பெற்ற வைர வரிகள் இதோ:

"நேற்று என்பது உடைந்த பானை,
நாளை என்பது மதில்மேல் பூனை,
இன்று என்பது நம் கையில் வீணை!"

20

'வாழ்வின் ஒவ்வொரு நாளும் இறுதி நாளே!'

"உயர்ந்த லட்சியமில்லாத வாழ்க்கை, அந்த லட்சியத்திற்காகப் பாடுபடாத வாழ்க்கை, வாழ்க்கையல்ல."

– மாஜினி*

'**விஞ்ஞானியல்ல, ஞானி!**' எனத் தலையங்கம் தீட்டியது '**தினமணி**' நாளேடு (08.10.2011); 'ஒரு சகாப்தம் தன் மூச்சை நிறுத்திக் கொண்டது!' என ஆழ்ந்த இரங்கல் செய்தியை வெளியிட்டது '**ஆனந்த விகடன்**' வார இதழ் (19.10.2011); 'உலகை மாற்றிய மூன்றாவது ஆப்பிள்' எனப் புகழாரம் சூட்டியது '**புதிய தலைமுறை**' வார இதழ் (20 அக்டோபர் 2011); 'இந்தக் கால இளைஞர்களுக்கு இவரது வாழ்க்கையே ஒரு பாடம் தான்' என இளைய பாரதத்திற்குச் செய்தி வழங்கியது '**தினமலர்**' நாளேடு (09.10.2011). இத்துணை உருக்கமான இரங்கல் செய்திகளுக்கும் உயரிய பாராட்டு மொழிகளுக்கும் சொந்தக்காரரர் வேறு யாரும் இல்லை; அண்மையில் தமது 56-ஆம் வயதில் காலமான **ஆப்பிள் நிறுவனர் ஸ்டீவ் ஜாப்ஸ்தான்! "மூன்று ஆப்பிள்கள்** முக்கியமானவை. முதல் ஆப்பிள் **ஏவாள்** உண்டது. இரண்டாவது ஆப்பிள் **நியூட்டனின்** சிந்தனையைத் தட்டியது. மூன்றாவது ஆப்பிள் **மனித சமூகம்** அனைத்தையும் வசீகரித்தது" என உலக அரங்கே ஒருமித்த குரலில் அவரது மறைவினை ஒட்டித் தனது மதிப்பீட்டினைப் பதிவு செய்தது.

தகவல் தொழில் நுட்பத் துறையில் சிகரம் தொட்ட ஸ்டீவ் ஜாப்ஸ் சிறுவயதில் சாப்பாட்டுக்கே வழியின்றி வாடியவர்; வறுமை காரணமாகத் தமது கல்லூரியில் படிப்பைப் பாதியில் துறந்தவர். அவரது வாழ்க்கைப் படிகள் சுவையானவை. ஜாப்ஸ் 24.10.1955-இல் அமெரிக்காவில் உள்ள சான் பிரான்சிஸ்கோ நகரில் பிறந்தார். படிப்பைத் தொடர முடியாத நிலையில் அவர் தமது 15-ஆம் வயதில் இந்தியாவிற்கு வந்து புத்த மதத்தில் இணைந்தார். 1974-இல் மீண்டும்

---

* வெ. சாமிநாத சர்மா (தொகுத்தது), மாஜினியின் மணிமொழிகள், ப.21

கலிபோர்னியாவிற்குச் சென்று தம் பள்ளி நண்பர் **ஸ்டீவ் வோஸ்னியாக்குடன்** இணைந்து கணினி நிறுவனத்தைத் தொடங்கினார். அப்போது அவருக்கு வயது 21. 1976-இல் நண்பருடன் இணைந்து **ஆப்பிள் 1** என்ற கணினியை வருவாக்கினார்; அடுத்த ஆண்டில் அதிக எடை கொண்ட **ஆப்பிள் 2** என்ற கணினியை உருவாக்கினார். நண்பருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டின் காரணமாக ஜாப்ஸ், ஆப்பிள் நிறுவனத்தில் இருந்து 1985-இல் வெளியேறினார்; மூலையில் முடங்கிப் போய்விடாமல் அடுத்த ஆண்டே 'நெக்ஸ்ட்' என்ற நிறுவனத்தைத் தொடங்கினார். **'எதையும் எப்போதும் யார் மாதிரியும் செய்யாமல் புது மாதிரியாகச் செய்ய வேண்டும்!'** என்பதே ஜாப்ஸ் தம் வாழ்வில் பின்பற்றிய தாரக மந்திரம். 'ஐ-மேக்', 'ஐ-பேடு', 'ஐ-டியூன்ஸ்', 'ஐ-போன்' முதலான கண்டுபிடிப்புகள் அவரைப் புகழேணியின் உச்சிக்கே கொண்டு சென்றன. இந்நிலையில் 2004-இல் ஜாப்ஸ் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருப்பது தெரியவந்தது. 2009-இல் அவர் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை மேற்கொண்டார். 2011-இல் உடல்நலக் குறைவால் மீண்டும் அவர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார்.

வாழ்க்கையின் ஒவ்வொரு நாளும் இறுதி நாள் என்று செயல்பட்டு வந்த ஸ்டீவ் ஜாப்ஸுக்கு அந்த நாள் 09-09-2011-இல் வந்தது; கடைசியில் புற்றுநோய், ஜாப்ஸின் உயிரைப் பறித்தது. **இலட்சியமும் அதைச் செயல்படுத்துவதற்கான கடின உழைப்பும் இருந்தால் வாழ்வில் எதையும் சாதிக்கலாம்** என்பதற்கு ஸ்டீவ் ஜாப்ஸ் ஓர் உயிருள்ள - உயிர்ப்புள்ள - எடுத்துக்காட்டு.

பட்டதாரியே அல்லாத ஸ்டீவ் ஜாப்ஸ் 2005-ஆம் ஆண்டு ஜூன் 12-ஆம் நாள் கலிபோர்னியா மாநிலத்தில் உள்ள ஸ்டான் போர்டு பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் சொற்பொழிவாற்றினார். அட்சர இலட்சம் பெறத்தக்க அச்சொற்பொழிவு அவையின் அனைவரது நெஞ்சங்களையும் நெகிழ வைத்தது. அற்புதமான அப்பொழிவின் உயிர்ப்பான பகுதி இது:

"17 வயதில் படித்த ஒரு வாசகம் எனக்கு மிகவும் பிடிக்கும். **'உங்களது வாழ்வின் ஒவ்வொரு நாளையும் இறுதி நாளாக நினைத்து வாழ்ந்தால், ஏதாவது ஒரு நாள் அது நிச்சயம் நிறைவேறும்'** என்பதே அந்த வாசகம். இதை நான் எப்போதும் கடைப்பிடிப்பேன். நாள்தோறும் காலையில் எழுந்து கண்ணாடியில் முகம் பார்க்கும் போது 'இன்றைய நாளே நமக்கு இறுதி நாள்' என்று நினைத்துக் கொண்டு எனது வேலைகளைத் தொடங்குவேன். கடந்த ஆண்டு (2004) எனக்குக் கணையத்தில் புற்றுநோய் இருப்பது பரிசோதனையில்

கண்டுபிடிக்கப்பட்டது; அதன்பின் அறுவைச் சிகிச்சை செய்யப் பட்டது. தற்போது நான் நலமாக இருக்கிறேன். ஆனால், நான் சாவை நெருங்கி வருகிறேன் என்பது எனக்குத் தெரியும்.

உங்களது நேரம், குறிப்பிட்ட வரம்புக்கு உட்பட்டது. எனவே, வாழ்க்கையை வீணாக்காதீர்கள். மற்றவர்கள் கூறிய கருத்துக்களை வேத வாக்காகக் கொண்டு, உங்கள் வாழ்க்கையை முடிவு செய்யாதீர்கள். **உங்கள் உள்ளுணர்விற்கு மதிப்பளியுங்கள். பசியோடு இருங்கள். புதிய சிந்தனைகளோடு வாழுங்கள்"** என்ற வாசகத்துடன் தம் உரையினை முடித்தார் ஜாப்ஸ்.

'தினமணி' தலையங்கம் குறிப்பிடுவது போல, "ஸ்டீவ் ஜாப்ஸ மீது நமக்கு ஏற்படும் நெருக்கம் என்பது இந்திய மரபு ஞானத்தால் வந்த பிணைப்பு... அவர் பெற்றிருந்த இந்திய மரபு ஞானம் தான் அவரது மிகப் பெரும் சொத்து, ஆற்றல், அறிவு, எல்லாமும். அவர் சார்ந்திருந்த புத்த மதம்தான் இந்த ஞானத்துக்குக் காரணம். ஸ்டீவ் ஜாப்ஸ் ஒரு விஞ்ஞானியல்ல, ஞானி!"

அறத்துப் பால் 'நிலையாமை' அதிகாரத்தில் இடம்பெற்றுள்ள ஓர் அரிய குறட்பா இங்கே ஒப்புநோக்கத்தக்கது:

'நாள்என ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்
வாள்அது உணர்வார்ப் பெறின்.' (334)

'காலம் உயிரறுக்கும் வாள்; நாளன்று; உணர்வார்க்கு உண்மை விளங்கும்' (ப.68) என்பது மூதறிஞர் வ.சுப.மாணிக்கம் இக்குறட் பாவுக்கு வரையும் இரத்தினச் சுருக்கமான தெளிவுரை. இதன்படி தமது வாழ்வின் ஒவ்வொரு நாளையும் 'உயிர் ஈரும் வாளாக' - உயிரை உடம்பில் இருந்து பிரித்து அறுக்கும் வாளாக - உணர்ந்து, வாழ்ந்து காட்டியவர் ஸ்டீவ் ஜாப்ஸ்.

முத்தாய்ப்பாக, வினோபாவின் கீதைக் கதை ஒன்று:

"ஏகநாத சுவாமிகளிடம் ஒருவன் வந்து வணங்கி நின்றான். அவன் அவரிடம், 'சுவாமி, தங்கள் வாழ்க்கை சிறிதும் சிக்கலற்றதாய், பாவமற்றதாய் இருக்கிறதே! இதன் இரகசியம் என்ன?' என்று கேட்டான்.

அதற்கு ஏகநாதர், 'இப்போதைக்கு என் விஷயம் இருக்கட்டும். உன்னைப் பற்றி ஒரு விஷயத்தை உன்னிடம் நான் சொல்ல வேண்டியிருக்கிறதே!' என்றார்.

அது என்ன விஷயம் என்று கேட்டுத் தெரிந்து கொள்ள அவன் ஆவலோடு இருந்தான்.

'இன்றையிலிருந்து ஏழாம் நாள் நீ மரணம் அடைவாய் என்று இருக்கிறதே!' என்றார் அவர்.

ஏகநாதர் வாயில் இருந்த வந்ததை யார்தான் பொய் என்று எண்ணுவார்கள்? ஏழு நாட்களில் சாவு! நூற்று அறுபத்தெட்டு மணிநேரம் தான் எஞ்சியிருக்கிறது! கடவுளே, இதென்ன ஆபத்து!

அந்த மனிதன் அவசர அவசரமாய் வீட்டிற்கு ஓடினான். அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. படுக்கையில் நீட்டிப் படுத்துவிட்டான்.

ஆறு நாட்கள் கழிந்தன. ஏழாம் நாள் ஏகநாதர் அவனிடம் வந்து, 'இந்த ஆறு நாட்களில் எவ்வளவு பாவம் செய்தாய்?' என்று கேட்டார்.

மரணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த அந்த மனிதன், 'சுவாமி, பாவம் செய்வதற்கு எனக்கு நேரம் ஏது? மரணம் தான் சதா என் கண்முன் நின்று கொண்டிருக்கிறதே!' என்றான்.

ஏகநாதர், 'என் வாழ்க்கை பாவமற்றதாய் இருப்பதற்குக் காரணம் என்ன என்பது இப்பொழுது புரிந்து விட்டது அல்லவா?' என்றார்.

வினோபா அடிகள் இந்த ஆன்மிகக் கதை வாயிலாக உணர்த்திய உண்மையை, ஸ்டீவ் ஜாப்ஸ் தம் வாழ்க்கை அனுபவத்தால் உணர்ந்திருந்தார். 'வாழ்க்கையின் சிறந்த கண்டுபிடிப்பு சாவு. வாழ்க்கையை மாற்றும் காரணி அது!' என்ற ஞானமே அவரை வாழ்வின் உச்சத்திற்குக் கொண்டு சென்றது எனலாம்.

21

மரணத்தை மகிழ்வுடன் வரவேற்போம்!

"மரணம் உன் வாழ்வின் கதவைத் தட்டும் அந்த நாளில் நீ அதற்கு என்ன நல்குவாய்?

ஆ! என் விருந்தாளியாக வந்த மரணத்திற்கு முன் என் வாழ்வு என்னும் நிறைகுடத்தையே வைத்திடுவேன்; வந்த விருந்தாளியை வெறுங்கையுடன் திரும்பிப் போக விடமாட்டேன்."

*– தாகூர்**

பண்டைச் சீன மண் தந்த சிறப்பு மிக்க சிந்தனையாளர் கன்பூசியஸ் (Confucious). "அவரைத் தத்துவ ஞானி என்பதை விட, மூதறிஞர் (Sage) என்று கூறுவதே சாலவும் பொருந்தும்" (திருக்குறள் நீதி இலக்கியம், ப. 229) என்பர் பேராசிரியர் க.த. திருநாவுக்கரசு. ஒருமுறை கன்பூசியஸிடம், "இறப்பு என்பது யாது? மரணத்தின் பின் மனிதனுடைய நிலை யாது?" எனச் சிலர் கேள்விகள் கேட்டனர். உடனே, அவர் சற்றும் தயக்கமின்றி, தம்மிடம் கேள்விகள் கேட்டவர்களைப் பார்த்து, "வாழ்க்கையைப் பற்றியே ஒன்றும் தெரிந்துகொள்ள முடியவில்லை! இந்நிலையில் மரணத்தைப் பற்றி நீங்கள் எவ்வாறு அறிந்து கொள்ள முடியும்?" என்று திருப்பிக் கேட்டார். 'உண்மையில், தம் கைப்பிடிப் பொருளாக (Concrete Object) உள்ள வாழ்க்கையின் உண்மையைப் புரிந்துகொள்ளுவதற்கே ஒருவருக்கு வாழ்நாள் போதவில்லை. இந்நிலையில் அவர் தம் கட்டுப்பாட்டில் இல்லாத -சிந்தைக்கு எட்டாத - மரணத்தைப் பற்றி எண்ணி ஏன் வீணாகக் கவலைப்பட வேண்டும்?' என்னும் கன்பூசியஸின் வினா பொருள் பொதிந்தது; ஆழ்ந்து சிந்திக்கத் தூண்டுவது.

திருக்குறள் 'நிலையாமை' அதிகாரத்தில் வரும் ஒரு குறட்பா இங்கே ஒப்புநோக்கத்தக்கது.

---

* *மு.வரதராசன், கவிஞர் தாகூர், ப.73*

"ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப
கோடியும் அல்ல பல" (337)

'மறுகணம் இருப்பதை அறிய மாட்டாதவர் கட்டுகின்ற கோட்டைகள் எவ்வளவோ கோடி' (திருக்குறள் தெளிவுரை, ப. 68) என்பது மூதறிஞர் வ.சுப. மாணிக்கம் இக் குறட்பாவுக்குத் தரும் உரை விளக்கம் ஆகும். ஒரு நொடி கூட வையத்துள் வாழ்வாங்கு வாழ்வது குறித்து - மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வது எப்படி என்று - சிந்தித்துப் பார்க்க மாட்டார்கள்; ஆனால் அவர்கள் தங்கள் கற்பனையில் கட்டுகின்ற கோட்டைகள் - காணுகின்ற கனவுகள் - எண்ணுகின்ற எண்ணங்கள் - கோடிக் கணக்கில் இருக்கும். உலகில் இத்தகைய மனிதர்களே மலிந்து காணப்படுகின்றனர்.

"உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்
எண்பது கோடி நினைந்து எண்ணுவன"

என்பார் ஔவையார்.

'தேடல்' என்னும் தலைப்பில் அமைந்த கலீல் ஜிப்ரானின் குறுங்கதை ஒன்று:

"ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் லெபனான் நாட்டு மலையோரம் இரண்டு தத்துவ ஞானிகள் சந்தித்துக் கொண்டனர்.

நீங்கள் எங்கே போகிறீர்கள்? என்று ஒரு தத்துவ ஞானியை மற்றொரு தத்துவ ஞானி கேட்டார்.

'அதோ அந்த மலைகளுக்கு நடுவில் பொங்கி வழியும் இளமை என்ற நீர் ஊற்றைத் தேடிப் போகிறேன். அந்த நீர் ஊற்றில் பூக்கும் மலர்கள் எல்லாம் சூரியனை நோக்கியே பூக்குமாம்' என்று பதில் கூறிவிட்டு, 'நீங்கள் எங்கே போகிறீர்கள்?' என்று இரண்டாவது தத்துவ ஞானியைக் கேட்டார் முதல் தத்துவ ஞானி.

'நான் மரணத்தின் ரகசியத்தைத் தேடிச் செல்கிறேன்'என்றார் இரண்டாவது தத்துவ ஞானி.

இரண்டு தத்துவ ஞானிகளும் ஒருவர் மீது ஒருவர் குற்றம் சொல்லிக் கொண்டு, அடுத்தவர் ஆன்மிகச் சிந்தனைகளைப் பழித்துக் கொண்டு சண்டை இட்டார்கள்.

அந்த வழியே வந்த எளிமையான கிராமத்து மனிதர் ஒருவர் அவர்களுக்கு அருகில் வந்து, தத்துவ ஞானிகள் பேசியதை ஆர்வமாகக் கவனித்தார்.

சிறிது நேரம் சென்றதும் கிராமத்து மனிதர் இரு தத்துவ ஞானிகளையும் பார்த்து, 'நண்பர்களே! நீங்கள் இருவருமே ஒரே சித்தாந்தத்தைச் சேர்ந்தவர்களாகவே தெரிகிறீர்கள். நீங்கள் இருவரும் ஒன்றைப் பற்றியே விவாதம் செய்கிறீர்கள். ஆனால் வேறு வேறு மொழியில் விவாதிக்கிறீர்கள். உங்களில் ஒருவர், இளமை ஊற்றைத் தேடிச் செல்வதாகச் சொல்கிறீர். அடுத்தவர், மரணத்தின் ரகசியத்தைத் தேடுவதாகக் கூறுகிறீர். உண்மையில் இந்த இரண்டுமே வேறு வேறு அல்ல. இரண்டுமே ஒன்று தான். அந்த இரண்டும் ஒன்றாகவே உங்களுக்குள் வாழ்கின்றன!' என்று கூறிவிட்டு, அவர்களைப் பார்த்துக் கேலியாகப் புன்னகைத்தவாறு அங்கிருந்து சென்றார்.

இரண்டு தத்துவ ஞானிகளும் ஒருவரை ஒருவர் தீர்க்கமாகப் பார்த்தவாறு சிறிது நேரம் அமைதியாக நின்றனர். பிறகு வாய்விட்டுச் சிரித்தனர். அவர்களில் ஒரு தத்துவ ஞானி, " 'நல்லது, நாம் இருவருமே ஒன்றாக இணைந்து ஏன் தேடக்கூடாது?' என்று மற்றவரைப் பார்த்துக் கேட்டார்."

(தமிழில்: துறவி, கலீல் ஜிப்ரானின் குட்டிக் கதைகள், பக்.49-50)

உலகத்துச் சான்றோர்கள் - சிந்தனையாளர்கள் - தத்துவ ஞானிகள் - யாவரும் ஒருமித்துக் காட்டும் வழி இதுதான் : மரணத்தைப் பற்றி எண்ணிக் காலத்தை வீணாகக் கழிக்க வேண்டாம்; அஞ்சவும் வேண்டாம். அது வரும் போது வரட்டும். வாழ்வாங்கு வாழ்வது பற்றிச் சிந்தித்து, மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து காட்டுவோம்! ஒவ்வொரு நொடியையும் பயனுள்ள முறையில் வாழ்ந்து, ஒவ்வோர் அடியையும் தொலைநோக்குடன் எடுத்து வைத்து வாழ்வில் தடம் பதிப்போம்! இறுதி மூச்சு வரை உள்ளத்தில் இளமை உணர்வுடன் வாழ்ந்து மரணத்தை மகிழ்வுடனும் மனத்திண்மையுடனும் வரவேற்கும் பெருவாழ்வு (Mega Life) வாழ்வோம்!

22

ஆன்மிக வாழ்வின் முதல் படி

"நான்மறையைக் கற்றவனா ஞானி?
தன்னுள்
'நான்' மறையக் கற்றவனே ஞானியாவான்!"

*– தாராபாரதி**

ஆன்மிக வாழ்வின் முதல் படி - அடிப்படைத் தேவை - ஒருவன் தன்னைத் தான் அறிவது.

"தன்னை அறிந்து இன்பமுற வெண்ணிலாவே ஒரு
தந்திரம்நீ சொல்ல வேண்டும் வெண்ணிலாவே"

என்பது நம் அருளாளர் வாக்கு.

கிரேக்க நாட்டுத் தத்துவ ஞானி சாக்ரடிசும் 'மனிதனே! உன்னை நீ அறிவாயாக!' (Know thyself) என்று மனிதனைச் சிந்திக்குமாறு வேண்டினார். 'உன்னை நீ அறிவாயானால், உனக்கொரு கேடும் இல்லை' என்றே நம் ஆன்றோரும் மொழிந்தனர்.

ஆன்மிக வாழ்வின் அடுத்த நிலை - இரண்டாவது படி - ஒருவன் தன்னுடைய குறைகளை உணர்ந்து, அவற்றை நீக்கி வாழ முயலுதல்; அதாவது தன்னைத் தானே திருத்திக் கொள்ளுதல். "தன்னைத் தானே திருத்திக் கொள்வதே பிரதானம். தன்னைத் திருத்தி அமரனாகச் செய்து கொள்க. அதுவே ஒருவன் செய்ய வேண்டிய தலைமைத் தொழில்" எனப் பாரதியார் தம் கட்டுரை ஒன்றில் குறிப்பிடுவார். பாரதியாரின் நோக்கில் பூமியில் எவர்க்கும் கடமை எனப்படுவன நான்கு. அவற்றுள் முதலாவது தன்னைக் கட்டுதல். இதனை அவர் 'தன்னை ஆளும் சமர்த்து' எனச் சுட்டுவார்.

"தனைத்தான் ஆளுந் தன்மைநான் பெற்றிடில்
எல்லாப் பயன்களும் தாமே எய்தும்"

என்பது பாரதியாரின் முடிந்த முடிபு.

** கவிஞாயிறு தாராபாரதி கவிதைகள், ப.309*

ஆன்மிக வாழ்வில் தன்னை அறிதலின் - தன்னைத்தான் ஆளும் தன்மையின் - இன்றியமையாமையை ரமண மாமுனிவர் நிதாகன் கதை மூலம் தமக்கே உரிய பாணியில் விளக்கிச் செல்வார். தருக்க நெறியில் சிறந்து விளங்கும் அக்கதை வருமாறு:

"ரிபு என்ற முனிவரிடம் நிதாகன் என்பவன் உபதேசம் பெற்று மாணாக்கனாக இருந்தான். அவன் நன்றாகப் படித்தவன்; அறிவாற்றல் உடையவன். ஆனாலும் இன்னும் அவன் மெய்ஞ்ஞானம் பெறவில்லை. அவனைச் சோதனை செய்வதற்காக ஒருநாள் ரிபு முனிவர் ஒரு பட்டிக்காட்டானைப் போல வேடம் புனைந்து அவனிடம் சென்றார். அந்தச் சமயத்தில் அரசன் வீதியில் பவனி வந்து கொண்டிருந்தான். அந்தப் பவனியை நிதாகன் மிகவும் அக்கறையோடு கவனித்துக் கொண்டிருந்தான். பட்டிக்காட்டானாகச் சென்ற ரிபு முனிவர் நிதாகனைப் பார்த்து, 'இது என்ன இவ்வளவு ஆரவாரம்? இவ்வளவு கூட்டம்?' என்று கேட்டார்.

'ராஜா பவனி போகிறார்' என்று நிதாகன் சொன்னான்.

'ராஜாவா? பவனி போகிறாரா? யார் ராஜா?' என்று ஆச்சரியத்தோடு பட்டிக்காட்டானாக வந்த ரிபு முனிவர் கேட்டார்.

'அதோ யானை மேல் அமர்ந்திருக்கிறாரே, அவரே ராஜா' என்று விடை கூறினான் நிதாகன்.

'ராஜா யானை மேல் இருக்கிறாரா? இரண்டு வஸ்துக்களைக் காண்கிறேன். அந்த இரண்டு பேரில் யார் ராஜா? யார் யானை?'

நிதாகனுக்குச் சிரிப்பு வந்தது.

'என்ன இது? நான்தான் காட்டினேனே! ராஜாவையும் யானையையும் தெரிந்து கொள்ள முடியவில்லையா? அட பைத்தியக்காரா! மேலே இருக்கிறவர் ராஜா; கீழே இருப்பது யானை' என்றான்.

'கோபித்துக் கொள்ள வேண்டாம். எனக்குத் தெரியவில்லை. அதுதானே கேட்கிறேன்?'

'இப்போது தெரிந்து விட்டதா?'

'நான் இன்னும் முட்டாளாகவே இருக்கிறேன். உன்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். ராஜா மேலே, யானை கீழே என்றாயே; மேல், கீழ் என்றால் என்ன? அதுவே எனக்குத் தெரியவில்லையே?'

'அட, அடி முட்டாளே! பிரம்மாண்டமான யானையையும் காட்டினேன்; ஆடையணி அணிந்த அரசனையும் காட்டினேன். மேலே இருக்கிற ராஜாவை உனக்குத் தெரிந்து கொள்ள முடியவில்லை. மேல், கீழ் என்பதே தெரியவில்லை. கண்ணால் கண்டும் உனக்கு விளங்காவிட்டால் ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. எங்கே, குனி' என்றான் நிதாகன். அவனுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

பட்டிக்காட்டான் மறுபேச்சுப் பேசாமல் குனிந்தான். அவன் தோளின் மேல் நிதாகன் ஏறிக் கொண்டான். 'இப்போதாவது புரிகிறதா உனக்கு? நான் தான் ராஜா; நீ தான் யானை. நான் மேலே இருக்கிறேன்; நீ கீழே இருக்கிறாய். விளங்குகிறதா?' என்று படபடப்பாகக் கேட்டான்.

பட்டிக்காட்டான் நிதானத்தை இழக்கவில்லை. 'இல்லையே, இன்னும் தெளிவாகவில்லையே! ராஜா, யானை இரண்டும் முதலில் விளங்கின; இப்போது மேல், கீழ் என்பவையும் ஒருவாறு புரிகின்றன. ஆனால் மற்றொரு சந்தேகம் அல்லவா வந்துவிட்டது? நான் மேல், நீ கீழ் என்றாயே; நான், நீ - இந்த இரண்டும் எனக்குப் புரியவில்லை. இந்த இரண்டும் எவற்றைக் குறிக்கின்றன? அருள்கூர்ந்து இதையும் விளக்க வேண்டும்' என்று கேட்டான்.

அதுவரைக்கும் நிதாகனுக்கு எளிமையாக இருந்தது; பட்டிக்காட்டானைக் கண்டு ஏளனமாக இருந்தது. கோபமும் வந்தது. 'நான், நீ' என்ற வேறுபாட்டை விளக்க வேண்டும் என்று பட்டிக்காட்டான் கேட்டவுடனே அவனுக்கே மலைப்பாகப் போய்விட்டது. 'நான், நீ என்று பேசினேன். அவற்றின் பொருள் என்ன? ராஜா, யானை இரண்டையும் எளிதிலே காட்டிவிட்டேன். நான், நீ - இந்த இரண்டையும் எப்படிக் காட்டுவது? நான் இவற்றை உணர்ந்தேனா? என்னையே நான் உணரவில்லை போலத் தானே இருக்கிறது? ஆம்; நான் என்பதே இன்னும் எனக்குத் தெளிவாக வில்லை!' - நிதாகன் சிந்தனையில் ஆழ்ந்தான். அப்போது தான் அவனுக்கு உண்மை விளங்கிற்று. 'இங்கே நிற்பவன் பட்டிக் காட்டான் அல்ல. எனக்கு உண்மையை உணர்த்த வந்த ஞான குரு. இப்படி என்னைச் சுமந்தாவது உண்மையை உணர்த்தும் கருணை நம்முடைய குருநாதர் ரிபுவுக்குத் தான் உண்டு. இவர் நம் குருநாதரே!' என்று தோன்றியது. உடனே கீழே குதித்தான். முனிவருடைய கால்களைப் பற்றிக் கொண்டான்.

நீ, நான் என்ற பேதம் உடம்புக்கு ஏறியது என்பதை ரிபு முனிவர் இப்படித் தம் சீடனுக்கு உணர்த்தினார்."

(ரமண மாமுனிவர், பக்.101-104)

அருளாளர்கள் காட்டிய வழியில் முதலில் நம்மை நாம் அறிவோம்; நம்மை நாமே திருத்திக் கொள்வோம்; அடுத்து, நம்மைக் கட்டுப்படுத்தி, நம்மை நாம் ஆளும் திறத்தினைப் பெறுவோம். அப்போது தான் பாரதி போற்றும் 'அமர வாழ்வு நமக்கு வசப்படும்'; 'வானுறையும் தெய்வ நிலை' வாய்க்கும்.

23

தாழ்ச்சி சொல்வோரே வாழ்வில் உயர்ச்சி அடைவர்!

"பணியுமாம் என்றும் பெருமை!"

– திருவள்ளுவர்*

பதினேழாம் நூற்றாண்டு கண்ட பெரும்புலவர்கள் இருவர். ஒருவர், பழுத்த தமிழ்ப் புலமை படைத்த குமரகுருபரர்; இன்னொருவர், 'கற்பனைக் களஞ்சியம்' எனத் தமிழ் கூறு நல்லுலகால் பாராட்டப் பெற்ற சிவப்பிரகாசர். மனங்கொள்ள வேண்டிய மற்றொரு சிறப்புக் குறிப்பும் உண்டு : வாழையடி வாழையென வரும் தமிழ்ப் புலவர் வரிசையில் வடக்கே காசி வரை சென்று பெருமை படைத்தவர்கள் இருவர். ஒருவர், குமரகுருபரர்; காசி வரை சென்று, முகலாய மன்னனிடம் அவரது இந்துஸ்தானி மொழியிலேயே பேசி, உதவியைப் பெற்று, அங்கே ஒரு மடத்தை நிறுவிச் சாதனை புரிந்தவர் அவர். மற்றொருவர், கவியரசர் பாரதியார்: 'நான் நானான இடம் காசி' என்னும் அவரது ஒப்புதல் வாக்குமூலம் இவ்வகையில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

மதுரையில் அரசாண்டு வந்த திருமலை நாயக்கரின் வேண்டுகோளின்படி குமரகுருபரர் பாடியது **'நீதிநெறி விளக்கம்'**. அது 101 வெண்பாக்களால் ஆகியது; நெஞ்சை அள்ளும் அழகிய உவமைகள் நிறைந்தது.

'நீதிநெறி விளக்க'த்தில் இடம்பெற்றுள்ள ஓர் அற்புதமான பாடல். அது இன்றைய கணினி யுகத்தினரும் கற்க வேண்டுவது; கற்ற பின் நிற்கத் தகுவது. அப்பாடலில் மக்களாகப் பிறந்த அனைவருக்கும் பயன்படக்கூடிய - வாழ்வில் யாவரும் பின்பற்ற வேண்டிய - ஓர் அறிவுரையினை வழங்கியுள்ளார் குமரகுருபரர். மற்றவர்களால் பெரிதும் மதிக்கப் பெற வேண்டும் என விரும்பு கின்றவர்கள் எவ்விடத்தும் - எக்காலத்தும் - மறவாமல் செய்ய வேண்டிய காரியங்கள் சில உண்டு. அவற்றை **'நோற்றல்'** என்ற ஆழ்ந்த பொருள் தருகின்ற சொல்லால் சுட்டுகின்றார் குமரகுருபரர்.

---

* திருக்குறள், 978

'உளங்கொண்டு அயர்வின்றிச் செய்யத் தகுவததாதலாலும், விளையும் பயன் பெரிதாதலாலும் இச்செயலை நோற்றல் என்றார்' என்பது 'பதிப்பு வேந்தர்' உ.வே. சாமிநாதையர் இச்சொல்லுக்கு வரையும் அரிய உரை விளக்கம். இனி, மற்றவர்களால் எக்காலத்தும் மதிக்கப் பெறவேண்டும் என எண்ணுகின்றவர்கள் என்ன என்ன காரியங்களை ஆற்ற வேண்டும் எனக் குமரகுருபரர் கூறுகிறார் எனக் காண்போம்.

முதலாவது, மற்றவர்களிடம் காணப்படும் நல்லியல்புகளை எல்லாம் பலரும் அறியச் சொல்ல வேண்டும். அடுத்தது, மற்றவர் களிடம் காணப்படும் சிறுமைகளை அறிந்திருந்தாலும் அவற்றை வெளியிடாமல் தம் மனத்திற்குள்ளேயே அடக்கி வைத்துக் கொள்ள வேண்டும். மூன்றாவதாக - முத்தாய்ப்பாக - எல்லோரிடமும், எப்போதும் வணக்கத்தைப் புலப்படுத்தும் பணிவான சொற்களையே பேச வேண்டும். இம்மூன்று காரியங்களையும் ஒரு நோன்பு போலத் தம் வாழ்வில் யார் விடாமல் தொடர்ந்து கடைப்பிடிக்கிறார்களோ, அவர்களே உலகத்தாரால் மிகவும் மதிக்கப் பெறுவர்; அவர்களின் உள்ளங்களிலே என்றென்றும் கொலு வீற்றிருப்பர். சீரிய இக்கருத்துக்களைத் தன்னகத்தே கொண்ட 'நீதிநெறி விளக்கப்' பாடல் இதோ:

"பிறரால் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்பது ஒன்று உண்டு - பிறர்பிறர்
சீரெல்லாம் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்கும் தாழ்ச்சி சொலல்".

(நீதிநெறி விளக்கம், பா. 19)

நடைமுறை வாழ்வில் பார்த்தால் பெரும்பாலும் நாம் மற்றவர்களின் நிறைகளைக் கண்டுகொள்ளவே மாட்டோம்; தப்பித்தவறி ஒருவேளை கண்டுகொண்டாலும், அவற்றை எவரிடமும் மனமாரப் பாராட்டிப் பேச மாட்டோம். மாறாக, மற்றவர்களின் குற்றங்குறைகளைக் கண் காது மூக்கு வைத்து, ஒன்றுக்குப் பத்தாகப் பெரிதுபடுத்திப் பேசுவோம்; அப்படிப் பேசுவதிலே தனி மகிழ்ச்சியையும் காண்போம்; யாருடன் பேசினாலும் எப்போதும் 'யான்' (அகங்காரம்), 'எனது' (மமகாரம்) என்ற முனைப்புடனேயே பேசுவோம். இம்மூன்றும் நம் ஆளுமையில் இருந்து அகழ்ந்து எடுக்கப்பட வேண்டிய தீய பண்புகள் என வலியுறுத்துகின்றார் குமரகுருபரர்.

இராமாநுசரின் வாழ்வில் நடந்த ஓர் உண்மை நிகழ்ச்சி இங்கே நினைவுகூரத்தக்கது;

இராமாநுசர் மனித குல வரலாற்றில் வியப்பூட்டும் ஒரு தத்துவ மேதையாக விளங்கியவர்; ஒரு சமூகப் புரட்சியாளராக வாழ்ந்து காட்டியவர்; விழுமிய மனிதப் பண்புகளுக்கு ஒரு களஞ்சியமாகத் திகழ்ந்தவர். அவர் ஒருமுறை தமது சீடன் அனந்தாழ்வானின் வேண்டுகோளை ஏற்றுத் திருப்பதி ஆலயத்தைத் தரிசனம் செய்யப் புறப்பட்டார்; ஆயினும், ஆழ்வார்கள் கால் பதித்த மலை என்பதால், தம் காலடி பதிக்காமல் தவழ்ந்தே சென்றார் என்று குரு பரம்பரை கூறுகின்றது. இராமாநுசர் திருமலை திருப்பதியின் ஆலயத்தை நெருங்குவதற்கு முன்பே அவரது மாமா திருமலை நம்பி தீர்த்தப் பிரசாதத்துடன் இறங்கி வந்து அவரை வரவேற்றார். பெரியவரின் வரவால் திகைப்புற்ற இராமாநுசர், "இவ்வளவு தூரம் தாங்கள் வரவேண்டுமா? சிறியவர் எவரையேனும் அனுப்பி இருக்கலாகாதா?" என்று கேட்டார். அப்போது திருமலை நம்பி சொன்னது:

"நான்கு திருவீதிகளிலும் ஆராய்ந்து தேடினேன். எங்கும் என்னைக் காட்டிலும் சிறியவர்களைக் காண முடியவில்லை. அதனால் நானே வந்தேன்."

பெரியவரின் இம் மறுமொழியைக் கேட்டு நெஞ்சம் நெகிழ்ந்தார் இராமாநுசர்.

உண்மையில், குமரகுருபரர் கூறும் 'யார்யார்க்கும் தாழ்ச்சி சொலல்' என்பது இதுதான்; **'வணங்கிய வாயினர்'** என வான்புகழ் வள்ளுவர் போற்றுவதும் இப்பண்பினைத் தான். இங்ஙனம் யார்யார்க்கும் - எவ்விடத்தும் - எக்காலத்தும் - தாழ்ச்சி சொல்வோரே - உலக மக்களின் உள்ளங்களிலே உயர்ந்த இடத்தினைப் பிடிக்க முடியும்.

24

வேண்டாமை என்னும் விழுச்செல்வம்

"போதும் என்ற மனத்தை எளிமையில்தான் பெற முடியும். 'போதும் என்ற மனமே பொன்செய்யும் மருந்து' என்ற பழமொழி எவ்வளவு பெரிய உண்மையை விளக்குகிறது!"
– மு.வரதராசன்*

தமிழில் **ஆசை, பற்று** என இரு சொற்கள் உண்டு. ஒரு மனிதன் மண், பொன். பெண் ஆகியவற்றின் மீது கொள்ளுவது ஆசை; மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை என இவை முறையே சுட்டப்பெறும். நாடு, மொழி, இறை ஆகியவற்றின் மீது ஒரு மனிதன் வைப்பது பற்று; நாட்டுப் பற்று, மொழிப் பற்று, இறைப் பற்று என இவை முறையே அழைக்கப்படும். **'விழுமியம்'** என்னும் நோக்கில் மதிப்பிடும்போது, ஆசை என்பது சற்றே தாழ்ந்தது; பற்று என்பது அதனினும் உயர்ந்தது. 'ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள், ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின்கள்! ஆசை படப்பட ஆய்வரும் துன்பங்கள், ஆசை விடவிட ஆனந்தம் ஆகுமே' என்பது திருமந்திரம். ஆசை இருந்தால் துன்பமும், ஆசை அழிந்தால் இன்பமும் ஏற்படும். எந்தப் பொருள் மீதும் ஆசை கொள்வதை விட்டொழித்தல் வேண்டும் என வலியுறுத்தவே 'ஈசனோடு ஆயினும் ஆசை வேண்டா' என அழுத்தமாகக் கூறினார் **திருமூலர்**.

தெய்வப் புலவர் **திருவள்ளுவரும்** அறத்துப்பாலில் 'அவா அறுத்தல்' என ஓர் அதிகாரமே படைத்துள்ளார்.

'வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை;

யாண்டும் அஃதொப்பது இல்'

என்னும் குறட்பா (363) இவ்வகையில் மனங்கொளத் தக்கதாகும். 'ஆசையின்மையே சிறந்த செல்வம்; அது போன்ற செல்வம் எங்கும் இல்லை' என்பது இக்குறட்பாவின் தெளிவுரை.

---

* *நல்வாழ்வு, ப.48*

'ஆசைக்கு ஓர் அளவில்லை'

என்னும் தாயுமானவர் வாக்கும் இங்கே நினைவு கூரத்தக்கதாகும்.

'அதிக ஆசை கொண்டால் உள்ளதும் பறிபோகும்' என்னும் கருத்தினை இனிதே உணர்த்தும் ஈசாப் நீதிக் கதை;

"ஒரு காட்டில் ஒரு விறகு வெட்டி ஒரு மரத்தை வெட்டிக் கொண்டிருந்தான். அந்த மரம் ஒரு ஆற்றங்கரையில் இருந்தது. மரத்தை வெட்டும்போது கையில் இருந்த கோடாலி தவறி ஆற்றுக்குள் விழுந்துவிட்டது. ஆறு ரொம்ப ஆழமாய் இருந்த படியால் தண்ணீருக்குள் இறங்கி அவனால் கோடாலியை எடுக்க முடியவில்லை. அதனால் கரையில் உட்கார்ந்து அழ ஆரம்பித்தான். அவனைப் பார்த்து இரக்கங் கொண்ட வன தேவதை அவன் முன்பு தோன்றி, 'ஏன் அப்பா அழுகிறாய்?' என்று கேட்டது.

கோடாலி தண்ணீருக்குள் விழுந்து விட்டதாகவும் அது கிடைக்காவிட்டால் தனக்குப் பிழைப்புக்கு வழி இல்லை என்றும் விறகு வெட்டி சொன்னான். வன தேவதை தண்ணீருக்குள் மூழ்கி ஒரு தங்கக் கோடாலியோடு வெளியே வந்தது; அதை விறகு வெட்டியிடம் கொடுத்தது. அவன் அதைப் பார்த்ததும் அது தன் கோடாலி அல்ல என்றும், அது தனக்கு வேண்டாம் என்றும் சொல்லிவிட்டான். வன தேவதை மீண்டும் தண்ணீருக்குள் மூழ்கி ஒரு வெள்ளிக் கோடாலியை எடுத்து வந்து கொடுத்தது. இதுவும் தன்னுடையது அல்ல என்று சொல்லி விறகு வெட்டி மறுத்து விட்டான். வன தேவதை மூன்றாவது தடவையாகத் தண்ணீருக்குள் மூழ்கி விறகு வெட்டியின் கோடாலியை எடுத்து வந்து கொடுத்தது. அதைப் பார்த்ததும் விறகுவெட்டி மிகுந்த மகிழ்ச்சி அடைந்து இரண்டு கைகளாலும் அதை வாங்கிக் கொண்டான்.

விறகு வெட்டியின் நேர்மையைப் பார்த்து வனதேவதை மகிழ்ச்சி கொண்டது. "நீ உண்மையாக நடந்து கொண்டபடியால் உன்னுடைய கோடாலியோடு இந்தத் தங்கக் கோடாலியையும் வெள்ளிக் கோடாலியையும் உனக்குப் பரிசாகக் கொடுக்கிறேன், எடுத்துக்கொள்" என்று வனதேவதை சொல்லிற்று.

மூன்று கோடாலிகளோடு விறகு வெட்டி வீடு திரும்பினான். காட்டில் நடந்த அதிசயத்தை அக்கம் பக்கம் உள்ளவர்களிடம் சொன்னான். இதைக் கேட்டவர்களில் ஒருவன் உடனே காட்டுக்கு ஓடினான்; விறகுவெட்டியின் கோடாலி தண்ணீருக்குள் விழுந்த இடத்தில் தனது கோடாலியைப் போட்டான்; கரையில் உட்கார்ந்து அழுதான்.

வன தேவதை வந்தது. காரணத்தைக் கேட்டது. தண்ணீரில் மூழ்கி ஒரு தங்கக் கோடாலியை எடுத்து வந்து காட்டியது. அதைப் பார்த்த பேராசைக்காரன், 'ஆமாம், அது தான்' என்று சொல்லிக் கொண்டே அதைக் கைப்பற்றப் போனான். உடனே தேவதை, 'ஓ பேராசைக்காரனே! உன் உள்ளத்தை அறியக் கூடிய உன் தெய்வத்தையா ஏமாற்றப் பார்க்கிறாய்? உன்னுடைய கோடாலியைக் கூட உனக்குக் கொடுக்க முடியாது ஓடிப்போ' என்று விரட்டியது.

பேராசைக்காரன் வெறுங் கையோடு வீடு திரும்பினான்."

(ஈசாப் குட்டிக் கதைகள், பக்.167-168)

நமக்கு வேண்டியதை நாம் இறைவனிடம் வாய்விட்டுக் கேட்க வேண்டும் என்பதில்லை. நமது உள்ளக் குறிப்பை அறிந்து அவனே கொடுப்பான். எனவே, இறைவனிடம் ஆசை வைக்க வேண்டும் என்ற நியதி இல்லை; அவனிடம் வேண்டுகோள் விடுக்க வேண்டும் என்ற தேவையும் இல்லை. நமக்கு வேண்டத்தக்கது எது என்பதை இறைவனே நன்றாக அறிவான்; வேண்ட முழுதும் தருவான் அவன். 'வேண்டத்தக்கது அறிவோய் நீ, வேண்ட முழுதும் தருவோய் நீ' என்பார் **மாணிக்கவாசகர்**. நாம் செய்ய வேண்டியது எல்லாம், வாழ்வில் எப்போதும் நேர்மையைப் பின்பற்றுவது தான்; என்றும் நம் உள்ளத்தைத் தூய்மையாக வைத்திருப்பது தான்.

கிரேக்க நாட்டுச் சிந்தனைச் சிற்பி **சாக்ரடீஸின்** வாழ்வில் இருந்து ஓர் உண்மை நிகழ்ச்சி: சாக்ரடீஸ் மிகவும் எளிமையானவர். ஆனால் நாள்தோறும் கடைக்குச் செல்வார்; எதுவுமே வாங்கி வர மாட்டார்; கடையில் உள்ள பொருட்களை மட்டும் ஒருமுறை பார்த்துவிட்டுத் திரும்புவார். ஒருநாள் அவருடைய சீடர்கள் அவரிடம் கேட்டார்கள்: "எந்தப் பொருளையும் நீங்கள் வாங்குவதில்லை. ஆனால் நாள்தோறும் கடைக்குச் சென்று வருகிறீர்களே, என்ன காரணம்?"

அதற்கு சாக்ரடீஸ் சொன்ன பதில்: "எத்தனைப் பொருட்கள் இல்லாமல் என்னால் மகிழ்ச்சியாக இருக்க முடியும் என்பதைத் தெரிந்து கொள்வதற்காகத் தான் நான் நாள்தோறும் கடைக்குச் சென்று வருகிறேன்."

25

சொர்க்கமும் நரகமும் எவை?

"ஆன்மிக உலகில் நிறையப் பேர் இன்னும் குழந்தைகளாகத் தான் இருக்கிறார்கள். அவர்களுக்குப் புண்ணியம் பாவம் சொர்க்கம் நரகம் போன்ற பால பாடங்கள் தேவைதான்"

– வரலொட்டி ரங்கசாமி*

சொர்க்கமும் நரகமும் வெளியே இல்லை; வானில் இல்லை; எங்கோ இல்லை. அவை இங்கேயே இருக்கின்றன; நம் அருகிலேயே இருக்கின்றன; நமக்குள்ளேயே இருக்கின்றன. இன்னமும் சரியாகச் சொல்ல வேண்டும் என்றால், சொர்க்கமும் நரகமும் அவரவர் மனங்களிலேயே உள்ளன.

'சொர்க்கத்திற்குப் பாதை இருக்கிறது, ஆனால் அதில் யாரும் செல்வதில்லை. நரகத்திற்கு வாசலே இல்லை, ஆனால் மனிதர்கள் அதில் ஏறிக் குதிக்கிறார்கள்' என்கிறது சீன நாட்டுப் பழமொழி ஒன்று.

'தங்கக் கட்டி போலே மனைவி உண்டு, சிங்கக் குட்டி போலே மழலை உண்டு; வீட்டுக்கு நடுவே சொர்க்கம் உண்டு' என்பார் கவியரசர் **கண்ணதாசன்**. ஒரு மனிதனுக்கு நல்ல மனைவி, நல்ல பிள்ளை, நல்ல குடும்பம் ஆகிய மூன்றும் வாய்த்தன என்றால், அவன் தன் சின்னஞ்சிறு வீட்டுக்கு நடுவிலேயே சொர்க்கத்தைக் காண்பான் என்பது கண்ணதாசனின் முடிந்த முடிபு.

பத்து மாதம் சுமந்து பெற்று, தாலாட்டிப் பாலூட்டிச் சீராட்டி வளர்க்கும் தாயின் காலடியே ஒருவனுக்குச் சொர்க்கம் போன்றது என்ற கருத்தும் உண்டு. இதே போல், கருத்தொருமித்த நண்பர்கள் இடையே அளவளாவி மகிழ்வதிலே கிடைக்கும் இன்பம், சொர்க்கம் தரும் இன்பத்திலும் மேலானது என்போரும் உள்ளனர்.

திருத்தங்கல் சீ.ரா. அரசு மேனிலைப் பள்ளியில் 11-ஆம் வகுப்பு 'அ' பிரிவில் பயிலும் மாணவன் செல்வன் **பி.மணிகண்டன்**. அவன் எழுதிய 'சொர்க்கமும் நரகமும்' என்னும் அழகிய கதை, 'மாணவர் முத்திரைக் கதை' என்ற தலைப்பில் 27.11.1999 நாளிட்ட 'தினமணி

---

* ஆனந்தம் இன்று ஆரம்பம், ப.373

சிறுவர் மணி' இதழில் வெளிவந்தது. இங்கே மாணவன் மணிகண்டனின் சொற்களில் அக் கதையினைக் காணலாம்.

"ஒரு ஊரில் ஒரு கருமி வாழ்ந்து வந்தான். அவன் மிகப்பெரிய பணக்காரன். ஆனால் யாருக்கும் உதவ மாட்டான். அவனுக்குச் சொர்க்கத்தையும் நரகத்தையும் காண ஆசை வந்தது. ஒருநாள் அவனது கனவில் ஒரு பெரியவர் தோன்றினார். அவனைச் சொர்க்கத்துக்கும் நரகத்துக்கும் கூட்டிச் செல்வதாகக் கூறினார்.

முதலில் அவனை நரகத்துக்குக் கூட்டிச் சென்றார் பெரியவர். அங்கு உணவு நேரத்தில், பெரிய பெரிய அண்டாக்களில் சாதம், குழம்பு மற்றும் சுவை மிக்க பதார்த்தங்களும் வந்தன. அவரவர்க்குத் தட்டுகள் கொடுக்கப்பட்டு, சுவை மிகு உணவு பரிமாறப்பட்டது. எல்லோருக்கும் நாவில் எச்சில் ஊறியது.

ஆனால்... அந்தோ, பரிதாபம்! அனைவராலும் கையை நீட்டி உணவுப் பொருளை எடுக்க முடிந்ததே தவிர, கையை மடக்கி, வாய்க்கு அந்த உணவைக் கொண்டு செல்ல முடியவில்லை. எனவே அறுசுவை உணவு எதிரே இருந்தும் அவர்களால் உண்ண முடியவில்லை. அவர்களுக்குப் பசியோடு ஆத்திரமும் சேர்ந்து கொண்டது.

அனைத்து அண்டாக்களையும் கீழே தள்ளிவிட்டு, அவற்றில் உள்ள உணவை வீணாக்கினர். பின் தாங்க முடியாத பசியினால் உட்கார்ந்து அனைவரும் அழுதனர்.

பின்னர் அந்தப் பெரியவர் அவனைச் சொர்க்கத்துக்கு அழைத்துச் சென்றார். அங்கும் அதே போல அண்டாக்கள் நிறைய அருமையான சாப்பாடு. அங்கு இருந்தவர்களுக்கும் கையை நீட்ட முடிந்தது; மடக்க முடியவில்லை. அப்போது ஒருவன் தனது நீட்டிய கையினால் இனிப்பு வகைகளை எடுத்து எதிரே இருப்பவனுக்கு ஊட்டினான். மடக்கத் தானே முடியாது? நீட்டியபடி எதிரே இருப்பவர் வாயில் ஊட்டலாம் அல்லவா?

இப்படியே அனைவரும் ஒருவருக்கு ஒருவர் ஊட்டி மகிழ்ந்தனர்; அனைவரின் வயிறும் நிரம்பின.

கருமி கனவில் இருந்து மீண்டான். ஒருவருக்கு ஒருவர் உதவி வாழ்வதே சொர்க்கம் என்பதை அவன் இப்போது புரிந்து கொண்டான்; தான் மட்டும் சுகமாய் வாழ நினைப்பது நரகம் என்பதை உணர்ந்தான். அன்றிலிருந்து அவன் அனைவருக்கும் உதவி செய்து வாழ்ந்தான்."

'பரந்த மனத்துடன் ஒருவருக்கு ஒருவர் உதவி வாழ்வதே சொர்க்கம்', 'தன்னலத்தோடு தான் மட்டும் சுகமாய் வாழ நினைப்பதே நரகம்' - சொல்லுங்கள், இதனினும் இரத்தினச் சுருக்கமாகச் சொர்க்கத்திற்கும் நரகத்திற்கும் வேறு யார் இதுவரை விளக்கங்கள் தந்திருக்கிறார்கள்?

26

விடை காண முடியாத வினா

"கடவுள் என்கிற சொல்லைப் போல் சர்ச்சிக்கப்படும் சொல் பிறிதில்லை. அதைப் போன்று சாந்தியும் நிம்மதியும் தருகிற சொல்லுமில்லை."

– திருலோக சீதாராம்*

நல்லவன் வாடுகிறான், கெட்டவன் வாழ்கிறான் -ஏன்?

'திருக்குறள் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட' வள்ளுவர் பெருமானையே விடை சொல்ல முடியாமல் திகைக்க வைத்த வினா இது! காலங்காலமாகச் சமுதாயத்தில் அன்று முதல் இன்று வரை நிலவி வரும் ஒரு கொடுமைதான் இது! இல்லையென்றால் வள்ளுவர் பெருமான் இப்படி ஒரு குறளை இயற்றி இருப்பாரா?

"அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்." (169)

'அழுக்காறாமை' அதிகாரத்தில் இடம்பெறும் ஒன்பதாவது குறட்பா இது. "பொறாமை மனமுள்ளவன் செல்வமுள்ளவனாக இருப்பதும், செம்மையான மனமுள்ளவன் ஏழையாக இருப்பதும் சிந்திக்க வேண்டிய விஷயங்கள் தாம்" என்பது நாமக்கல் கவிஞர் இக் குறட்பாவுக்கு எழுதும் எளிய உரை விளக்கம்.

முன்னைப் பரிமேலழகர் முதலாகப் பின்னைப் பாவாணர் ஈறாக உள்ள உரையாசிரியர்கள் பலரும் இக்குறட்பாவில் இடம் பெற்றுள்ள 'நினைக்கப் படும்' என்னும் தொடருக்குத் தத்தம் மனத்திற்குத் தோன்றிய வண்ணம் பற்பல விளக்கங்களைத் தந்துள்ளனர்.

"இம்மைச் செய்தன யானறி நல்வினை
உம்மைப் பயன்கொல் ஒருதனி உழந்துஇந்
திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்தது
விருத்த கோபால நீ?" (15: 9194)

---

* *இலக்கியப் படகு, ப.45*

எனச் சிலப்பதிகாரத்தில் வரும் மாடலனின் கூற்றை மேற்கோள் காட்டி, 'நினைக்கப்பட்டவாறு அறிக' எனச் சுட்டுவர் பரிமேலழகர்.

பாவாணர் தம் 'திருக்குறள் மரபுரை'யில் 'நினைக்கப் படும்' என்னும் தொடருக்குத் தரும் விளக்கம் வருமாறு: "எக் கரணியம் பற்றி நேர்ந்தனவென்று ஆராயப்படும். இரு நிலைமையும் இயற்கைக்கும் அறநூற் கொள்கைக்கும் மாறாயிருப்பதால், அவற்றிற்குக் கரணியம் பழவினையே என்பது ஆராய்ச்சியால் அறியப்படும்." மேலும் அவர்,

"என்செய லாவதி யாதொன்று மில்லை இனித்தெய்வமே
உன்செய லேயென் றுணரப்பெற் றேன்இந்த ஊனெடுத்த
பின்செய்த தீவினை யாதொன்றும் இல்லைப் பிறப்பதற்கு
முன்செய்த தீவினை யோஇங்ங னேவந்து மூண்டதுவே"

என்னும் பட்டினத்தார் பாடல் 'இவ்வகையாராய்ச்சியைக் குறிக்கும்' எனக் கூறுகின்றார்.

மூதறிஞர் வ.சுப.மாணிக்கம் இக்குறட்பாவுக்கு வரைந்திருக்கும் உரை விளக்கம் இங்கே மனங்கொள்ளத் தக்கதாகும். "பொறாமைப் படுபவன் உண்மையில் வளர்கிறானா? நல்லவன் கெடுகிறானா? எண்ணிப் பார்" என்பது வ.சுப.மா.வின் தெளிவுரை. 'பொறாமைப் படுபவன் வளர்ச்சி உண்மையில் வளர்ச்சி தானா? நல்லவன் கேடு உண்மையில் கேடு தானா?' என்று கேட்டு நம்மைச் சிந்திக்கத் தூண்டுகின்றார் வ.சுப.மா.

கிறித்தவத் திருமறையான பைபிள் கூறும் வாழ்வியல் சிந்தனை ஒன்று இங்கே ஒப்புநோக்கி உணரத்தக்கதாகும். பைபிள் படித்தவர்களுக்குச் சாலமன் என்ற பெயரில் மிகப்பெரிய ஞானி ஒருவர் இருந்தார் என்பது தெரியும். ஒரு நாள் அவருக்கு ஓர் ஐயப்பாடு தோன்றியது.

"நல்லவன் எப்போதும் வறுமைவாய்ப்பட்டுத் துன்பப்படுகிறானே ஏன்? கெட்டவன் எல்லா விதமான வசதிகளும் பெற்று மகிழ்ச்சியாக வாழ்கிறானே எப்படி? செல்வ வளம் படைத்த பலருக்குக் குழந்தைப் பேறு இல்லையே ஏன்? அவர்கள் விரும்பியும், அதற்காகத் தவமாய்த் தவம் இருந்தும் அவர்களுக்குக் குழந்தை பிறக்காதது ஏன்? அன்றாடம் ஒருவேளைச் சோற்றுக்கே அல்லாடும் ஏழைக்கு மிகுதியாகக் குழந்தை பிறப்பது ஏன்? இது கடவுள் செயலா? அல்லது சாத்தான் வேலையா? கடவுள் செயல் என்றால் அது நியாயம்

ஆகுமா? சாத்தானின் வேலை என்றால் கடவுளின் சக்திக்கு மீறியும் இது போன்ற செயல்கள் நடக்க முடியுமா?" - இது தான் ஞானி சாலமனின் ஐயப்பாடு.

பல நாள் இதைப் பற்றிச் சிந்தித்தும் சாலமன் ஞானிக்கு விடை கிடைக்கவில்லை; ஒன்றும் விளங்கவும் இல்லை. கடைசியாக அவர் கடற்கரைக்குச் சென்று காலையில் இருந்து மாலை வரையில் கடல் நீர் தம் காலில் படும்படி நடந்தவாறே சிந்தித்துப் பார்த்தார். ஆனாலும் ஒன்றும் அவருக்குப் பிடிபடவில்லை.

இருப்பினும் சாலமன் ஞானி தம் முயற்சியைக் கைவிடுவதாக இல்லை. நாள்தோறும் காலையில் எழுந்ததும் கடற்கரைக்குச் செல்வதும், இதுபற்றிச் சிந்திப்பதும், மாலையில் வீடு திரும்புவது மாக இருந்தார். இப்படியே நாட்கள் பல கழிந்தன.

ஒரு நாள் இப்படிக் கடற்கரையில் உலவிக் கொண்டிருந்தபோது ஒரு சிறுவன் தன் கையில் சிறிய கொட்டாங்கச்சியை வைத்துக் கொண்டு அதில் கடல் நீரை எடுத்து மணலில் ஊற்றி விளையாடிக் கொண்டிருந்ததைக் கண்டார் சாலமன். எனினும் அவர் அதைப் பொருட்படுத்தாமல் தம் சிந்தனையில் மூழ்கியவாறே நடந்து கொண்டிருந்தார்.

மாலைப் பொழுது மறையவே சாலமன் வீடு திரும்பலானார். சிறுவனோ தொடர்ந்து விளையாடிக் கொண்டிருந்தான். சாலமன் அந்தச் சிறுவனிடம் சென்று, "தம்பி! பொழுது இருட்டுகிறதே, நீ வீடு திரும்பவில்லையா?" என்று கேட்டார். அதற்குச் சிறுவன், "ஐயா! உங்கள் வேலை முடிந்து விட்டது, நீங்கள் போகிறீர்கள். என் வேலை இன்னும் முடியவில்லை, அது முடிந்த பிறகு தான் நான் வீடு திரும்புவேன்" என உறுதியான குரலில் மறுமொழி கூறினான்.

"தம்பி! அது என்ன வேலை?" எனக் கேட்டார் சாலமன். அதற்குச் சிறுவன், "கடல் நீரை முழுவதுமாகக் கொட்டாங்கச்சியால் இறைத்துக் கரையில் ஊற்றுகின்ற வேலை" என்றான். ஞானி வியப்போடு சிரித்தார்.

"தம்பி! நீ எவ்வளவு! கடல் நீர் எவ்வளவு! உன் கையில் உள்ள கொட்டாங்கச்சி எவ்வளவு! இதைக் கொண்டு அதை எப்படி இறைத்து ஊற்ற முடியும்?" என்றார்.

சிறுவன் சொன்னான்: "ஐயா! நீங்கள் எவ்வளவு! ஆண்டவன் எவ்வளவு! உங்கள் மூளை எவ்வளவு! இந்த மூளையைக் கொண்டு

ஆண்டவனின் செயலை அறிய முடியுமானால் இந்தக் கொட்டாங்கச்சியைக் கொண்டு இக்கடல் நீரை இறைத்து விட முடியாதா? நீங்களும் முயற்சி செய்யுங்கள். நானும் முயற்சி செய்கிறேன்." இப்படிச் சொல்லிவிட்டு மறுபடியும் கடல் நீரை எடுத்து வரச் சிறுவன் ஓடினான்.

சாலமன் ஞானிக்கு இப்போது விடை கிடைத்து விட்டது. 'மனிதன் தன் அறிவைக் கொண்டு ஆண்டவனுடைய செயல்களை அளக்க முயற்சி செய்வது, கொட்டாங்கச்சியைக் கொண்டு கடல் நீரை இறைக்க முயற்சி செய்வது போன்றது' என்பதே. ஞானியின் ஐயம் மறைந்தது; சிறுவனும் மறைந்தான்.

இதுபோல் எவராலும் எளிதில் விடை காண முடியாத வினாக்கள் இன்னமும் எத்தனையோ உள்ளன. அதனால்தான் நக்கீரரும் திருமுருகாற்றுப்படையில்,

"நின்னளந்து அறிதல் மன்னுயிர்க்கு அருமையின்
நின்னடி உள்ளி வந்தனென் நின்னொடு
புரையுநர் இல்லாப் புலமையோய்" (279-280)

என முருகப் பெருமானை விளித்துப் போற்றியுள்ளார் போலும்!

27

ஆண்டவன் கட்டளை ஆறு

"உலகத்தை வெறுப்பது ஆன்மிகம் அல்ல; உலகத்தை அறிந்து கொண்டு, அதற்குள் வாழ்ந்து, தங்களையும், உலகத்தையும் ஒருசேர வளர்த்துக் கொள்வதே ஆன்மிகம்." – குன்றக்குடி அடிகளார்*

'தேர்ந்து மனிதன் வாழும் வகைக்குத் தெய்வத்தின் கட்டளை ஆறு' என்கிறார் கவிஞர் **கண்ணதாசன்**. 'ஆண்டவன் கட்டளை' என்ற திரைப்படத்திற்காக எழுதிய தத்துவப் பாடல் ஒன்றில் அவர் அக்கட்டளைகளை அழகுற விளக்கிப் பாடியுள்ளார். இங்கே அக்கட்டளைகளைக் குறித்து முறையே காண்போம்.

1. **'ஒன்றே சொல்வார் ஒன்றே செய்வார்**
   உள்ளத்தில் உள்ளது அமைதி'

என்பது ஆண்டவனின் முதல் கட்டளை. ஒன்றே சொல்லி, சொன்னதையே செய்து யார் வாழ்கிறார்களோ அவர்களது உள்ளத்தில் என்றென்றும் அமைதி குடியிருக்கும். மனிதன் தனது சொல்லுக்கும் செயலுக்கும் இடையே எந்தவிதமான இடைவெளியும் இல்லாமல் - வார்த்தைக்கும் வாழ்க்கைக்கும் இடையே யாதொரு முரண்பாடும் இல்லாமல் - 'சொன்னதைச் செய்வேன்; செய்வதைச் சொல்வேன்' என்ற விழுமிய குறிக்கோளுடன் வாழ்ந்து வர வேண்டும். 'உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்' என்ற **வள்ளலாரின்** வாக்கும் இந்த அடிப்படையில் எழுந்த ஒன்றே ஆகும்.

2. **'இன்பத்தில் துன்பம் துன்பத்தில் இன்பம்**
   இறைவன் வகுத்த நியதி'

மேலோட்டமாகப் பார்த்தால் இன்பமும், துன்பமும் முற்றிலும் வேறுபட்ட இரு உணர்ச்சிகளைப் போல் தோன்றும்; ஆயின், ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் இன்பத்தில் துன்பமும், துன்பத்தில் இன்பமும் ஊடாடி நிற்பது புலனாகும். எண் வகை

* எங்கே போகிறோம்?, பக்.159–160

மெய்ப்பாடுகளை நிரல்படுத்திக் கூறும் **தொல்காப்பியர்** நகையையும் அழுகையையும் அடுத்தடுத்துக் கூறியிருப்பதும் இங்கே நினைவுகூரத் தக்கதாகும். இவ்வளவு ஏன்? நன்றாக, வாய்விட்டு, மனமாரச் சிரித்துக் கொண்டே இருங்கள்; சில நொடிகளில் உங்கள் கண்களில் கண்ணீர்த் துளிகள் தானாக அரும்பி நிற்கும். அதேபோல், நிறுத்தாமல், நன்றாக அழுது பாருங்கள். முடிவில் உங்களிடம் இருந்து ஒருவிதச் சிரிப்பு தோன்றவே செய்யும். இன்பத்தில் துன்பத்தின் தாக்கம் விரவி இருக்கும்; துன்பத்தில் இன்பத்தின் சாயல் படிந்து இருக்கும். இது இறைவன் வகுத்த நியதி ஆகும்.

'சொல்லுக்குச் செய்கை பொன்னாகும் - வரும்
துன்பத்தில் இன்பம் பட்டாகும் - இந்த
இரண்டு கட்டளை அறிந்த மனதில்
எல்லா நன்மையும் உண்டாகும்'

என ஆண்டவனின் முதல் இரு கட்டளைகளையும் விளக்கிப் பாடுகிறார் கண்ணதாசன்.

3. **'உண்மையைச் சொல்லி நன்மையைச் செய்தால்**
உலகம் உன்னிடம் மயங்கும்'

என்பது ஆண்டவனின் மூன்றாவது கட்டளை. எப்போதும் உண்மையே பேசி, இயன்ற வரை பிறருக்கு நன்மையே செய்து வாழ்ந்தால், உலகம் உங்களிடம் மயங்கி நிற்கும்; நீங்கள் சொல்வதைக் கேட்டு நடக்கும்.

4. **'நிலை உயரும் போது பணிவு கொண்டால்**
உயிர்கள் உன்னை வணங்கும்'

என்பது ஆண்டவனின் நான்காவது கட்டளை. வாழ்க்கையில் நமது நிலை உயர உயர, உள்ளத்தில் அகந்தை - ஆணவம் - ஓங்கி வளர்ந்துவிடக் கூடாது; பணிவு நம்மை விட்டு ஒருபோதும் அகன்றுவிடக் கூடாது. நிலை உயர்ந்து விட்ட போதிலும் ஒருவன் பணிவு கொண்டு வாழ்ந்தால், மனிதர்கள் மட்டுமல்ல - இந்த உலகத்து உயிர்கள் அனைத்தும் - அவனை வணங்கி நிற்கும்.

'அகந்தைக் கிழங்கை அகழ்ந்து எடுக்கும் தொழும்பர் உளக்கோயிற்கு ஏற்றும் விளக்கே' என்று **குமரகுருபரர்** மீனாட்சி அம்மையை வழிபட்டு நிற்கும் அடியவரின் மன இயல்பைப் பற்றி எவ்வளவு அழுத்தமாகப் பாடியிருக்கிறார் பாருங்கள்; **'அகந்தைக் கிழங்கு'** - என்ன அற்புதமான உருவகம்! அதனை 'அகழ்ந்து (தோண்டி) எடுக்கும்' அடியவர்கள் - எவ்வளவு ஆழமான சொல்லாட்சி!

'உண்மை என்பது அன்பாகும் - பெரும்
பணிவு என்பது பண்பாகும் :
இந்த நான்கு கட்டளை அறிந்த மனதில்
எல்லா நன்மையும் உண்டாகும்'

என ஆண்டவனின் அடுத்த இரு கட்டளைகளையும் விளக்கிக் கூறுகிறார் கண்ணதாசன்.

5. 'ஆசை, கோபம், களவு கொள்பவன்
பேசத் தெரிந்த மிருகம்'

என்பது ஆண்டவனின் ஐந்தாவது கட்டளை. உள்ளத்தில் ஆசை, கோபம், களவு என்னும் மூன்று குணங்களும் கொண்ட ஒருவன் ஆறறிவு படைத்த மனிதனாக இருக்கலாம்; அவனுக்குப் பேசத் தெரிந்தும் இருக்கலாம். என்றாலும், அவன் பேசத் தெரிந்த ஒரு மிருகம்தான்; ஒருபோதும் அவன் மனிதனாகக் கருதப்பட மாட்டான்.

6. 'அன்பு, நன்றி, கருணை கொண்டவன்
மனித வடிவில் தெய்வம்'

என்பது ஆண்டவனின் ஆறாவது கட்டளை. அன்பு, நன்றி, கருணை என்னும் மூன்று உயர் குணங்களும் கொண்ட ஒருவன் வடிவத்தில் மனிதனாக இருக்கலாம்; ஆனால் பண்பிலே அவன் தெய்வமாக மதிக்கத் தகுந்தவன் ஆவான். எனவே 'மனித வடிவில் தெய்வம்' என அவன் சிறப்பித்துச் சொல்லப்படுகிறான்.

'மிருகம் என்பது கள்ளமனம் - உயர்
தெய்வம் என்பது பிள்ளை மனம் - இந்த
ஆறு கட்டளை அறிந்த மனது
ஆண்டவன் வாழும் வெள்ளை மனம்'
(திரை இசைப் பாடல்கள்: முதல் தொகுதி, பக்.311-312)

என முத்தாய்ப்பாக ஆண்டவனின் ஆறு கட்டளைகளையும் பற்றிப் பாடி முடிக்கிறார் கண்ணதாசன்.

நண்பர்களே, விலங்குப் பண்புகள் கொண்ட கள்ள மனத்தை ஒழித்துக் கட்டுங்கள்! உயர்குணங்கள் கொண்ட பிள்ளை மனமாக- ஆண்டவன் வாழும் வெள்ளை மனமாக - உங்கள் மனத்தை ஆக்கிக் கொள்ளுங்கள்! ஆண்டவனின் இந்த ஆறு கட்டளைகளையும் பொன்னே போல் போற்றி வாழும் உங்கள் வாழ்க்கையில் எல்லா நன்மைகளும் உண்டாகும். இது உறுதி.

28

நில்லா உலகில் நிலைத்த சுகம் பெற...

"மிகவும் சிந்தித்தால் உண்மையான வாழ்க்கை புற வாழ்க்கையன்று; அக மன வாழ்க்கையே. 'மனம் போல் வாழ்வு' என்பது மிக நுட்பமான, ஆழமான பழமொழி."

– தமிழண்ணல் *

வாழ்வில் நிம்மதியும் மகிழ்ச்சியும் நிலவ வேண்டும் என்றால்- அமைதியும் இன்பமும் களிநடம் புரிய வேண்டும் என்றால் - நாம் விட்டொழிக்க வேண்டிய - முற்றும் துறக்க வேண்டிய - சொற்கள் இரண்டே இரண்டு எனத் 'துறவு' அதிகாரத்தில் இரத்தினச் சுருக்கமாய் எடுத்துரைக்கிறார் வள்ளுவர். அவையாவன: 1. **'நான்'**, 2. **'எனது'**, 'யான்', 'எனது' என்ற பற்றுக்களைத் துறந்தவர்கள் - முற்றிலுமாக விட்டொழித்தவர்கள் - தேவர்களுக்கும் எட்டாத உயர்நிலையை அடைவார்கள் என்பது வள்ளுவர் அமுத மொழி.

"யான்எனது என்னும் செருக்கு அறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்" **(346)**

இக் கருத்தினை அழகுற உணர்த்தும் **ஜென் கதை:**

ஷின் வம்சத்தைச் சேர்ந்த மன்னன் ஒருவன் இருந்தான். அவன் ஆட்சி சிறப்பாக இருந்தது. ஆயினும் அவன் மனத்தில் சற்றும் நிம்மதி இல்லை; நாளுக்கு நாள் மனச்சுமை அதிகரித்தது. கடைசியில் ஓர் ஊரில் ஜென் குரு ஒருவர் இருப்பதைக் கேள்விப் பட்டு அமைதியை நாடி அவரைத் தரிசிக்கச் சென்றான் மன்னன்.

"அரச காரியங்கள் செவ்வனே நடக்கின்றனவா?"

"ஆம், சுவாமி. ஒரு குறையும் இல்லை."

"மக்கள் துயரின்றி இருக்கிறார்களா?"

"ஆஹா! எந்தக் குறையுமின்றி வாழ்ந்து வருகிறார்கள்."

---

* மனத்துக்கு மனம், ப.7

"அப்படியானால் உனக்கு என்ன குறை?"

"என் மனத்தில் கொஞ்சம் கூட அமைதி இல்லையே!" என்றான் மன்னன் ஏக்கமாக.

"ஒன்று செய். உனது நாட்டை எனக்குக் கொடுத்து விடு!" என்றார் குரு.

ஆச்சரியப்பட்ட மன்னன், "எடுத்துக் கொள்ளுங்கள், சுவாமி!" என்றான்.

"சரி, நாட்டை எனக்குக் கொடுத்து விட்டாய். நீ என்ன செய்வாய்?" என்று அமைதியாகக் கேட்டார் குரு.

"என் வழிச்செலவுக்குக் கொஞ்சம் பொருள் எடுத்துக் கொண்டு எங்காவது சென்று விடுவேன்!" என்றான் மன்னன் சற்றும் தயக்கம் இல்லாமல்.

"நாட்டையே எனக்குத் தந்த பிறகு கஜானா என்னுடையது தானே? அதில் பொருள் எடுக்க உனக்கு ஏது உரிமை?" என்று அவனை மடக்கினார் குரு.

திகைத்த மன்னன், "தாங்கள் சொல்வது சரிதான். நான் இப்படியே புறப்படுகிறேன்!" என்றான் தீர்மானமாய்.

"எங்குப் போவாய்?" குரு மன்னனை விடுவதாய் இல்லை.

"எங்காவது போய் ஏதாவது வேலை செய்து பிழைத்துக் கொள்வேன்." எதற்கும் தயாராக இருந்தான் மன்னன்.

"அந்த வேலையை என்னிடமே நீ செய்யலாமே?" என்ற குரு, "என் பிரதிநிதியாக இந்த நாட்டை நீயே பராமரித்து வா. உன் செலவுக்கு அரண்மனைப் பொக்கிஷத்தில் இருந்து ஊதியம் பெற்றுக்கொள். எனக்கு எப்போது வசதிப்படுமோ அப்போது நான் வந்து கணக்கு வழக்குகளைச் சரிபார்த்துக் கொள்கிறேன்" என்றார்.

'சரி' என்றபடி நாடு திரும்பினான் மன்னன்.

இரண்டு ஆண்டுகள் உருண்டு ஓடின.

திடீரென ஒரு நாள் குரு அரண்மனைக்கு வந்தார். மன்னர் ஓடோடிச் சென்று குருவைப் பணிந்து வரவேற்றான்.

குரு ஆசனத்தில் அமர்ந்தார்.

"என்ன மன்னா, எப்படி இருக்கிறது நாடு?"

"ஆஹா! கணக்கு வழக்குகள் எல்லாம் சரியாய் இருக்கின்றன. நீங்களே சரிபார்த்துக் கொள்ளுங்கள்." எழுந்திருந்தான் மன்னன்.

கணக்குகளைக் கொண்டு வர எழுந்த மன்னனைக் கையமர்த்தித் தடுத்தார் குரு.

"கணக்குகள் இருக்கட்டும். உன் மனநிலை எப்படி இருக்கிறது?"

"நிம்மதியாய் இருக்கிறது" என்றான் மன்னன்.

"ஏன்?"

புரியவில்லை மன்னனுக்கு.

"இதற்கு முன் நீ செய்த ஆட்சிக்கும், இந்த இரண்டு ஆண்டுக் கால ஆட்சிக்கும் ஏதாவது மாறுதல் உண்டா?" குரு நிதானமாய்க் கேட்டார்.

"இல்லை" என்றான் மன்னன் திகைப்புடன்.

"அதே அரண்மனை, அதே அதிகாரிகள், அதே பரிபாலனம்! ஆனால் இப்போது உனக்கு நிம்மதி இருக்கிறது. அப்போது இல்லையே, அது ஏன்?"

மன்னன் விழித்தான். குரு விளக்கினார்.

"அப்போது 'இது உன்னுடையது' என்று நீ இருந்தாய். இப்போது 'இது வேறொருவருடையது; நாம் வெறும் பிரதிநிதி' என்று இருக்கிறாய். 'இது எனது இல்லை' என்ற எண்ணம் ஏற்பட்டதுமே மனத்தின் துயரங்கள் விலகிவிட்டன. உண்மையில் இந்த உலகம் நமதல்ல; படைத்தவன் யாரோ? இந்த உடல் நமதல்ல; அளித்தவன் யாரோ? ஆகவே 'இது எனதல்ல' என்ற நினைப்புடன் நீயே ஆட்சி புரிந்து வா. அந்தப் பற்றற்ற மனநிலை உனக்கு வந்து விட்டால் அரண்மனையோ, கானகமோ, காவலரோ, கள்வரோ எவர் நடுவில் இருந்தாலும் உன் மனதைத் துயரங்கள் அணுகா!" என்று கூறி விடைபெற்றுக் கொண்டார் குரு.

மன்னன் ஞானம் பெற்றான்; ராஜரிஷியாக அரசு நடத்தினான்.

முத்தாய்ப்பாக, 'நில்லா உலகில் நிலைத்த சுகம்' நீண்டு வளர்ந்திட - நிலைத்திட - பாரசீகப் பெருங்கவிஞர் உமார் கய்யாம் வலியுறுத்தும் வழிமுறை இதுதான்!

"இல்லாப் பொருளுக்கு ஏங்காமல்
இருக்கும் பொருளும் எண்ணாமல்
எல்லாம் வல்ல எம்பெருமான்
இரங்கி அளக்கும் படிவாங்கி,
நல்லார் அறிஞர் நட்பையும் நீ
நாளும் நாளும் நாடுவையேல்,
நில்லா உலகில் நிலைத்தசுகம்
நீண்டு வளரும் நிச்சயமே!"

(கவிமணி சி.தேசிகவிநாயகம் பிள்ளை, உமார் கய்யாம், பாடல் எண் 113)

29

மனத்தில் பதிந்த கவிதைகள்

"தூய உள்ளத்தே பெருகும் கவிதை உருப்பெற்று உருண்டு ஓடிவரும். அவ்வாறு வரும் கவிதைகள் வையகத்தை வாழ வைக்கும் கவிதைகளாக விளங்கும்."

– அ.மு.பரமசிவானந்தம்*

இலக்கிய வடிவங்களில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை இரண்டு. ஒன்று, கவிதை; இன்னொன்று, உரைநடை. கவிதை முழு நிலவு என்றால், உரைநடை எழுகதிரோன். கவிதைக்கு அழகு உணர்ச்சி என்றால், உரைநடைக்கு அழகு எளிமை எனலாம். 'உணர்ச்சியில் விளையாடும் உன்னதக் கவிச்சிங்கம்' என்பது கவிஞனுக்குச் சூட்டப்படும் புகழாரம். 'அருமையில் எளிய அழகே போற்றி' என்பது நல்ல உரைநடைக்குக் கூறப்பெறும் பாராட்டு. 'சுட்டும் விழிச்சுடர்தான் சூரிய சந்திரரோ' என்னும் பாரதியின் வாக்கு இங்கேயும் பொருந்தி வருவதே ஆகும். ஆம், கவிதையும், உரைநடையும் தமிழன்னைக்கு வாய்த்த சூரிய சந்திரர்கள் போல. என்றாலும் மிகை நாடி மிக்க கொள்ளும் போது புலனாகும் இன்றியமையாத உண்மை ஒன்று உண்டு. அது: நூலிழையில் கவிதை உரைநடையை விஞ்சி விடுகிறது. பயில்வோர் மனத்தைச் சென்று சேருவதில் - மனத்தில் பதிவதில் - கவிதை உரைநடையை வெற்றி கொள்ளுகிறது. சுற்றி வளைத்தும் நீட்டி முழக்கியும் உரைநடை உரைப்பதைக் கவிதை நச்சென்றும் நறுக்கென்றும், சுருக்கென்றும் சுரீரென்றும் சொல்லிப் பயில்வோர் நெஞ்சை அள்ளி விடுகின்றது.

அண்மைக் காலங்களில் யான் படித்த நூற்றுக்கணக்கான கவிதைகளுள் என் மனத்தில் பதிந்தவை இரண்டு. ஒன்று, 'தினமணி சிறுவர் மணி' இதழில் பள்ளி மாணவி க.பூவிழி எழுதிய 'நீ சொன்னதைச் செய்ய முடியலியே' என்ற கவிதை. மற்றொன்று, தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் சார்பில் வெளிவந்துள்ள 'மகாகவியரங்கம் 2001' என்னும் தொகுப்பு நூலில் இடம்பெற்றுள்ள பள்ளி ஆசிரியை மா.இரேவதியின் கவிதை. இனி, இவ்விரு

---

* கவிதையும் வாழ்க்கையும், ப.21

கவிதைகளின் தரமும் திறமும் குறித்து முறையே சுருங்கக் காண்போம்.

"ஓடி விளையாடு பாப்பா நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா"

எனப் பாப்பாவுக்குப் பாடினார் கவியரசர் பாரதியார். மேலும் அவர், 'காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு, கனிவு கொடுக்கும் பாட்டு, மாலை முழுவதும் விளையாட்டு என்று வழக்கப்படுத்திக் கொள்ளு'மாறும் பாப்பாவுக்கு அறிவுறுத்தினார். ஆனால் இன்றைய பாப்பாவுக்கோ பாரதியார் சொன்னதைச் செய்ய முடியாத நெருக்கடியான நிலை நிலவுகின்றது. எனவே, 'நீ சொன்னதைச் செய்ய முடியலியே' என்று பாரதியாரிடம் நேரடியாகப் பாப்பாவே கூறுவது போல் க.பூவிழி ஒரு கவிதை பாடியுள்ளார். 07.09.2002 'தினமணி சிறுவர் மணி' இதழில் இக்கவிதை வெளிவந்துள்ளது. கவிதை இதோ:

"ஓடி ஆடி விளையாட - எங்க
பிளாட்டில் போதிய இடமில்லை!
கூடிச் சேர்ந்து விளையாட - எங்க
டாடி மம்மி விடவில்லை!

போடா பாரதி பொய்சொல்லி! - நீ
சொன்னதை எப்படிச் செய்யறது?
மாலை முழுவதும் விளையாண்டா
மாஸ்டர் ட்யூசனில் கோச்சுக்குவார்!

பாட்டுப் பாடச் சொன்னாலே - தம்பி
பாபா பாட்டுப் பாடுகிறான்!
அம்மா கைதட்டி ரசிக்கிறார் - அப்பா
ஐக்யூவை வியக்கிறார்!

அம்மா மனசுல நான் டாக்டர்
அப்பா ஆசை யு.எஸ். இன்ஜினியர்
இதுக்கே நேரம் போதவில்லை
அப்புறம் எப்படி... பாரதி?"

இன்று வீடு இருப்பதோ அடுக்கு மாடி வளாகத்தில்; எனவே ஓடி ஆடி விளையாடுவதற்குப் போதிய இடம் இல்லை. தப்பித்தவறி எப்படியாவது கிடைக்கிற ஓர் இடத்தில் கூடிச்சேர்ந்து விளையாடலாம் என்றாலோ பெற்றோர் விடுவதில்லை; மாலையில் பள்ளி விட்டு வந்ததும் 'ட்யூஷன்' போக வேண்டிய நெருக்கடி. இந்நிலையில் பாரதி சொன்னது போல மாலை முழுவதும் எப்படி விளையாடுவதாம்? எனவே பாரதி மீது பாப்பா கொள்ளும் கோபம் **'போடா பாரதி பொய்சொல்லி'** என்று வசை பாடுவதில் அழகுற வெளிப்படுகின்றது. ஒரு பாட்டுப் பாடச் சொன்னால் தம்பிப் பயல் 'பாபா' படப் பாடலைப் பாடுகிறானாம். இதைக் கேட்டு அம்மா கைதட்டி ரசிக்கிறாராம்; அப்பா தம்பியின் அறிவாற்றலை எண்ணி வியக்கிறாராம். இந்நிலையில் குழந்தைகளைக் குறித்துப் பெற்றோர்கள் தங்கள் மனங்களில் கட்டி இருக்கும் கனவுக் கோட்டைகளுக்குக் கணக்கே இல்லை. அம்மா மனத்தில் பிள்ளை எதிர்காலத்தில் டாக்டர் ஆக வேண்டும்; அப்பாவின் ஆசையோ இன்ஜினியர் ஆகி அமெரிக்காவுக்குப் பறக்க வேண்டும். இதற்கே நேரம் போதவில்லையாம். **'அப்புறம் எப்படி பாரதி?!"** என்று பாரதியைக் கேட்பதோடு முடிவடைகிறது கவிதை.

'பாப்பாப் பாட்டு' பாடிய பாரதியை நோக்கி ஒரு பாப்பாவே தனது நெருக்கடிகளை எடுத்துக் கூறுவதாகப் படைக்கப் பெற்றிருக்கும் இக்கவிதை படிப்பவர் நெஞ்சை அள்ளும் உயிரோட்டமும் உருக்கமும் பொருந்தியதாகும்.

என் மனத்தில் அழுத்தமாய்ப் பதிந்த இரண்டாவது கவிதையை முதலில் முழுமையாகத் தருகிறேன்; தொடர்ந்து கவிதையின் அமைப்பும் அழகும் குறித்துக் கூற முற்படுகிறேன். இதோ கவிதை:

"பள்ளிக்கூடம் போகையிலே பாடத்திலே படிச்சேனுங்க!
பந்துபோல இருக்குமாம் இந்தப் பரந்த பூமி,
ஒருக்காதான் சுத்திவர ஓராண்டு ஆகுமுன்னு
அழகாதான் சொன்னாரு அய்யாசாமி வாத்தியாரு.

இப்போ வந்திருக்காம் எலக்ட்ரானிக் பொட்டியெல்லாம்
இண்டர்நெட்டாம், ஈமெயிலாம், இடைவிடாத சாட்டிங்காம்
சுருங்கித்தான் போயிருச்சாம் சுத்தும் இந்த பூமியுந்தான்!

இருசூரு பொண்ணுக்கு, இங்கிலாந்து மாப்பிள்ளையாம்
இண்டர்நெட்டுக் கல்யாணம்! இலையே போடலீங்க.
கம்ப்யூட்டர் சிப்ஸ்க்காகக் கையேந்தி நின்னாக்க
கடிச்சிக்க பிங்கர் சிப்ஸ் கட்டித்தரான் வெள்ளைக்காரன்
குடிக்க நல்ல தண்ணியில்லை ஊரு முச்சூடும்
கோகோ கோலாவாம் குளோபிலைசேஷனாம்
கண்டிசனாச் சொல்றேங்க ஒண்ணுமே புரியலைங்க!
அரைநொடியில் கிடைக்குதாம் அமெரிக்கா கனெக்ஷன்
ஆருமில்லாத அடுத்த வீட்டு அனாதைத் தாத்தா
ஆவிபோயி ஆறு நாளு ஆனப்புறந்தான்
அல்லாருக்கும் தெரிஞ்சதாம் அழுகிப்போனதால!
அழ யாரும் இல்லையாமா!
தேடித்தான் பார்த்தேனுங்க தெரிஞ்சா நீங்க சொல்லுங்க
இண்டர்நெட்டில் தேடியும் மனுஷன் அட்ரஸ் கிடைக்கலீங்க."

(மகா கவியரங்கம் 2001, ப.150)

இக்கவிதையை எழுதியவர் இன்று புகழேணியின் உச்சியில் வீற்றிருக்கும் கவிஞர் அல்லர்; நிறையக் கவிதைத் தொகுதிகளை வெளியிட்டு வெளிச்சத்திற்கு வந்தவரும் அல்லர். பின் யார்தான் இக்கவிதையை இயற்றியது எனக் கேட்கிறீர்களா? கோவை மகளிர் மேல்நிலைப் பள்ளியில் பூசா.கோ.கெ. கன்யா குருகுலத்தில் இடைநிலை ஆசிரியையாகப் பணியாற்றும் மா. இரேவதி என்னும் பெண்மணியே இக்கவிதையை இயற்றியவர் ஆவார். உயிருள்ள மொழியில் நேரடியாகப் பேசுவது போலவே கவிஞர் இக்கவிதையைப் புனைந்திருப்பது ஒரு சிறப்பு: நயம்.

'இந்தப் பரந்த பூமி பந்து போல இருக்கும்: ஒரு முறை சுற்றி வரவே ஓராண்டு ஆகும்' என்று பள்ளிக்கூடப் பாடத்திலே படித்திருக்கிறோம். தொடக்கப் பள்ளியில் படித்தபோது ஆசிரியர்களும் அழகாகவே சொல்லித் தந்திருக்கிறார்கள். இன்று அறிவியலின் வளர்ச்சியால், கணினியின் வருகையால் பரந்த பூமியே சுருங்கிப் போய்விட்டது. எலக்ட்ரானிக் கருவி, இண்டர்நெட், ஈமெயில், சாட்டிங் என்று என்னென்னவோ வாய்ப்புக்களும் வசதிகளும் பெருகிவிட்டன. முன்பெல்லாம் திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப் பெற்றது, பெரியவர்களால் நடத்தி வைக்கப்பெற்றது. இன்றோ

இலையே போடாமல் இண்டர்நெட்டில் கல்யாணம் முடிவு செய்யப் பெறுகின்றது; இருகூர் பெண்ணுக்கும் இங்கிலாந்து மாப்பிள்ளைக்கும் கல்யாணம் 'ஓஹோ'வென்று நடக்கின்றது. குடிக்க நல்ல தண்ணீர் இல்லை; ஆனால் ஊர் முழுவதும் கோகோ கோலா தாராளமாகக் கிடைக்கின்றது. 'குளோபிலைசேஷன்' என்ற வார்த்தை மட்டும் அடிக்கடி உச்சரிக்கப்படுகின்றது. அரை நொடியில் இன்று கிடைக்கின்றது. அமெரிக்க நாட்டுடன் தகவல் தொடர்பு. ஆனால் உறவு என்று சொல்லிக்கொள்ள யாரும் இல்லாத அடுத்த வீட்டு அனாதைத் தாத்தா இறந்துபோய் ஆறுநாள் ஆன பிறகுதான் எல்லோருக்கும் தெரியவருகின்றது; அதுவும் பிணம் அழுகிப் போய் தீய நாற்றம் வீசியதால் சுற்றுமுற்றும் உள்ளவர்களுக்குத் தெரிய வருகின்றது. சொல்லி அழ அங்கே யாரும் இல்லை. 'கண்டிசனாச் சொல்றேங்க. ஒண்ணுமே புரியலைங்க!' என்று கவிதையின் இடையில் குரல் கொடுத்த கவிஞர், இப்போது முடிந்த முடிவாக இப்படிக் கூறுகிறார்:

"தேடித்தான் பார்த்தேனுங்க தெரிஞ்சா நீங்க சொல்லுங்க
இண்டர்நெட்டில் தேடியும் மனுஷன் அட்ரஸ் கிடைக்கலீங்க."

மனித நேயத்தை முன்னிறுத்தி இக்கவிதையில் கவிஞர் மா. இரேவதி எழுப்பி இருக்கும் குரல் அழுத்தமானது; ஆழமானது. கடந்த பத்து ஆண்டுகளில் வெளிவந்த கவிதைகளிலே சிறப்பாகக் குறிப்பிடத்தகுந்த கவிதை இது!

30

முத்திரைக் கவிதைகள்

"எண்ண அலைகளை – உணர்வு அதிர்வுகளை
எங்கெங்கோ நகர்த்தி – என்னென்னவோ காட்சிகளைப்
படைக்கிறது இச்சிறு கவிதை..." – தமிழன்பன்*

'ஆனந்த விகடன்' இதழ் தனது பவள விழா பரிசுத் திட்டத்தில் வாரந்தோறும் வெளியான 75 முத்திரைக் கவிதைகளைத் தொகுத்து ஒரு சிறு நூலாக வெளியிட்டுள்ளது. 17.11.2002 'விகடன்' இதழுடன் இணைப்பாக இத்தொகுப்பு வழங்கப் பெற்றுள்ளது. சம காலக் கவிதைகளின் நோக்கையும் போக்கையும் உணர்ந்து கொள்ளுவதற்கு உதவும் கையேடாக இத்தொகுப்பு விளங்குகின்றது.

அண்மைக் காலக் கவிதை கற்பனைக்கு அவ்வளவு முதன்மை தருவதில்லை; அணிநலன் பற்றியும் மிகுதியாகக் கவலைப்படுவதில்லை; படிப்பவர்களுக்கு நீதி சொல்ல வேண்டும் என்று பெரிதாக முயல்வதும் இல்லை. சுற்றி வளைத்துச் சொல்லாமல் எதையும் நேரடியாகச் சொல்லுவது - இன்றைய விளம்பர மொழியில் குறிப்பிடுவது என்றால் 'சும்மா நச்சென்று கூறுவது' - அண்மைக் காலக் கவிதையின் முதன்மைப் போக்கு ஆகும். அதே போல், 'காமம் செப்பாது கண்டது மொழிவதே' அண்மைக் காலக் கவிஞர்களின் தலையாய நோக்கு ஆகும். எதைப் பற்றியும், யாரைப் பற்றியும் கவலைப்படாமல் தம் உள்ளம் உணர்ந்ததை உணர்ந்தவாறே உரைப்பதில் அவர்கள் ஒருபோதும் பின்வாங்குவது இல்லை. இக்கருத்திற்கு ஏற்பவே 'ஆனந்த விகடன்' பவள விழா பரிசுத் திட்டத்தில் வெளியான 75 முத்திரைக் கவிதைகளும் அமைந்துள்ளன.

'அகர முதல எழுத்தெல்லாம்' என்பது போல், 'அன்பு முதல மனித வாழ்வெல்லாம்' எனலாம். காலங்கள் மாறலாம்; தலைமுறைகள் மாறலாம்; விழுமியங்கள் (Values) மாறலாம். என்றாலும், 'அன்பு' (Love) என்ற விழுமியம் மட்டும் -குறிப்பாக,

---

* கலையா! கைவினையா!, ப.59

தாய்ப்பாசம் என்ற உணர்வு மட்டும் - வற்றாத ஜீவ நதியாய் விளங்கி, மனித குலத்தை என்றென்றும் வாழ வைத்துக் கொண்டிருக்கும். இக்கருத்தின் அழகிய கலை வடிவமே 'அன்பு' என்னும் தலைப்பில் இத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள முதல் கவிதை. தாஜ் என்னும் கவிஞரின் கைவண்ணத்தில் உருவான அக்கவிதை இதோ:

"அன்பு
என்ற தலைப்பில்
மிகச் சிறிய
கவிதை கேட்டார்கள்...
அம்மா
என்றேன் உடனே!
கேட்டது
அம்மாவாக இருந்தால்
இன்னும் சின்னதாய்
சொல்வேன்
நீ... என்று!" **(1)**

தாயன்பின் பெருமையை ஒரு புதிய கோணத்தில் வெளிப்படுத்தி யுள்ளது இக்கவிதை.

கொஞ்சம் நிதானமாக யோசித்துப் பாருங்கள்: வாழ்க்கையில் ஒரு கண நேரத்தின் தாமதத்தால் எத்தனை வாய்ப்புக்கள் - சந்தர்ப்பங்கள் - நம் கையை விட்டு நழுவிச் சென்றிருக்கின்றன! சில நேரங்களில் சரியான வாய்ப்புக்கள் கிடைக்காமல் நாம் ஏங்குகிறோம்; இன்னும் சில வேளைகளில் நமக்குக் கிடைத்த வாய்ப்புக்களைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளாமல் போகிறோம். இவற்றிற்கு எல்லாம் மேலாக, ஒரு சிறு கால இடைவெளியில் - தாமதத்தில் - தவறிப்போகும் சந்தர்ப்பங்கள் - வாய்ப்புக்கள் - நம் அனைவரது வாழ்விலும் நிறையவே நிகழ்கின்றன. மனுஷ்ய புத்திரனின் 'சந்தர்ப்பங்கள்' என்ற கவிதை இத்தகைய நுண்ணிய நிகழ்வுகள் சிலவற்றைத் தனக்கே உரிய பாங்கில் பதிவு செய்துள்ளது:

"எடுப்பதற்குள்
நின்றுவிடும் தொலைபேசி மணி

சற்று வெளியே சென்றபோது

அப்போதுதான் வந்து விட்டுப்போன யாரோ

அந்த முகம்தானா என்று நினைவூட்டிக் கொள்வதற்குள்
சிக்னலில் விழும் பச்சை

வந்து சேர்வதற்கு
சற்று முன் எரியூட்டப்பட்ட உடல்

எப்போதும்
ஒரு கணம்தான் தாமதமாகிறது" (17)

என்று கவிஞர் கூறுவது சரிதான்; 'எப்போதும் ஒரு கணம்தான் தாமதமாகிறது!' ஒவ்வொருவர் வாழ்விலும் அனுபவமாகும் உண்மைதான் இது!

புதுக்கவிதை உலகில் வரதட்சணைக் கொடுமைக்கு எதிராக இதுவரை எத்தனையோ கவிஞர்கள் அழுத்தமாகவும் ஆவேசமாகவும் குரல் கொடுத்துள்ளனர். 'திருடர்கள் ஜாக்கிரதை' என்னும் தலைப்பில் இத் தொகுப்பில் இடம்பெற்றிருக்கும் கவிஞர் தாமிரபரணியின் குரல் இவ்வகையில் வித்தியாசமான ஒன்றாகும்.

"சொக்கத் தங்கம் நூறு பவுன்,
ரொக்கப் பணம் ஐம்பதாயிரம்,
ஸ்கூட்டர், டி.வி. எனப்
பட்டியலிடும் பொழுதுதான்
கண்டுகொள்ள முடிந்தது என்னால்.

ஆனால்...
கதவு திறக்கும் பொழுதே
கண்டுகொண்டு குரைத்தது
என் வீட்டு நாய்!" (69)

கவிதைத் தலைப்பில் மட்டுமன்றி, கவிதையின் முத்தாய்பபான முடிப்பு வரிகளிலும் வரதட்சணைக் கொடுமையைக் கடுமையாகச் சாடியுள்ளார் கவிஞர். வீட்டிற்குப் புதிதாக வருவோரைப் பார்த்து நாய் குரைப்பது இயற்கை; ஆனால், சொக்கத் தங்கம், ரொக்கப் பணம், ஸ்கூட்டர்,டி.வி. எனப் பட்டியல் இட்டு, பேரம் பேசி, மணமகள் வீட்டாரிடம் இருந்து கவர்ந்து வரும் - கறந்து வரும் - மணமகன் வீட்டாரைத் 'திருடர்'களாகக் கண்டுகொண்டு

வீட்டுநாய் குரைப்பதாகப் பாடுவது கவிஞரின் அருமையான தற்குறிப்பு ஆகும்.

'வணக்கம் வள்ளுவ' தொகுப்பிற்காகச் சாகித்திய அகாதெமி விருது பெற்ற ஈரோடு தமிழன்பனின் கவிதையும் இத்தொகுப்பில் இடம்பெற்றிருப்பது ஒரு கூடுதல் சிறப்பு ஆகும். 'திருத்தப்பட்ட வருத்தம்' என்னும் தலைப்பில் அமைந்த அற்புதமான அக்கவிதை வருமாறு:

"இறந்தவன்
இறுதிப் பயணத்தில்
எத்தனை பேர் வருகிறார்கள்
என்று
ஒருமுறை கண்களைத்
திறந்து பார்த்தான்...
வாழ்ந்ததற்கு
வருத்தப்பட்டு மறுபடியும்
கண்களை மூடிக் கொண்டான்" (71)

ஒரு மனிதன் எப்படி வாழ்ந்தான் என்பதைக் காட்டும் உண்மையான உரைகல் - துல்லியமான அளவுகோல் - அவனது இறுதிப் பயணம்தான். கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் கூறுவது போல், ஒரு மனிதன் சொர்க்கத்திற்குச் செல்கிறானா, இல்லை நரகத்திற்குப் போகிறானா என்பதைக்கூட அவனது இறுதிப் பயணத்தை வைத்துச் சொல்லிவிடலாம். இங்கே தமிழன்பனின் கவிதையில் வரும் இறந்து போன மனிதன் ஒருவன் தனது இறுதிப் பயணத்தில் எத்தனை பேர் வருகிறார்கள் என்று ஒரு முறை கண்களைத் திறந்து பார்க்கிறான். வருவோரைப் பார்த்ததும் அடுத்த கணமே தான் இதுவரை வாழ்ந்ததற்காக வருத்தப்பட்டு மறுபடியும் கண்களை மூடிக்கொள்கிறான்.

பெரும்பாலும் வெளிச்சத்திற்கு வராத கவிஞர்களின் படைப்புக்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் 'ஆனந்த விகட'னின் '75 முத்திரைக் கவிதைகள்' என்னும் தொகுப்பு இலக்கிய ஆர்வலர்களாலும் ஆய்வாளர்களாலும் இளைய தலைமுறையினராலும் கண்டுகொள்ளப்பட வேண்டிய ஒன்று ஆகும்.

31

நறுக்குக் கவிதைகள்

"இதெல்லாவற்றையும் பற்றி நமக்கென்ன? நமக்குத் தான் இருபத்து நான்கு மணி நேரத் தொலைக்காட்சிகள், யார் அசத்துகிறார்கள், யார் கலக்கிறார்கள் என்று பார்த்துக் கொண்டு இருந்தால் போதாதா?!"

– வண்ணதாசன்*

'தேசியக் கவிஞர்' **பாரதியார்** - 'புரட்சிக் கவிஞர்' **பாரதிதாசன்**- 'காந்தியக் கவிஞர்' **வெ.இராமலிங்கம்** - 'குழந்தைக் கவிஞர்' **அழ.வள்ளியப்பா** - 'உவமைக் கவிஞர்' **சுரதா** - இவ் வரிசையில் 'உணர்ச்சிக் கவிஞர்' என அடையாளம் காணப் பெற்றவர் **காசி ஆனந்தன்**. நெஞ்சில் உரம், நேர்மைத் திறம், தாய்மண் பற்று, தனித்தன்மை, போர்க்குணம், மனித நேயம், மொழி ஆளுமை, விடுதலை வேட்கை, கொள்கைப் பிடிப்பு என்னும் பண்புகள் காசி ஆனந்தனின் வாழ்விலும் வாக்கிலும் களிநடம் புரிவதைக் காணலாம். 'காசி ஆனந்தன் கதைகள்', 'காசி ஆனந்தன் கவிதைகள்' ஆகிய நூல்களைத் தொடர்ந்து வெளிவந்திருக்கும் நூல் 'காசி ஆனந்தன் நறுக்குகள்'.

இன்று நாம் 'புதுக்கவிதை' என்று வழங்குகின்ற இலக்கிய வடிவத்தையே காசி ஆனந்தன் 'நறுக்கு' என்ற பெயரால் சுட்டு கின்றார். 'நறுக்குத் தெறித்தாற் போல்' இருப்பதால் 'புதுக்கவிதை'யை 'நறுக்கு' என்றே அழைக்கலாம் என்பது காசி ஆனந்தனின் தனிப்பட்ட கருத்து. சுள்ளென்று வலிக்கும்படியாகக் கன்னத்தைக் கிள்ளுவது போல் - தலையில் குட்டுவது போல் - சுருக்கென்று மனத்தைத் தைக்கும்படியாக - மனத்தில் படும்படியாக, செய்தியைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் சொல்லுவது 'நறுக்கு இலக்கிய'த்தின் தனிப்பெரும் பண்பு.

"அடக்கம் செய்யப்படுகிறோம்...
இரண்டு பெட்டிகளில்
சவப்பெட்டியிலும் தொலைக்காட்சிப் பெட்டியிலும்"

---

* *அகம் புறம், ப.90*

என்னும் 'நறுக்கு' சமகால வாழ்க்கை பற்றிய கூர்மையான விமர்சனம்.

இன்றைய மனிதன் முரண்பாடுகளின் மொத்த உருவமாக விளங்குகிறான்: அவனைப் பொறுத்த வரையில் உபதேசம் ஊருக்கு, தனக்கல்ல; உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவது அவனது வழக்கம்; வாடிக்கை. அவன் எப்படிப்பட்ட 'திமிர்' வாய்ந்தவன் என்பதைத் தோலுரித்துக் காட்டும் ஒரு நறுக்கு இதோ:

"வேலைக்காரன் மேல் பாய்ந்தார்...
'நாயே! பீட்டரைக் கவனித்தாயா?'
இவர் வீட்டில் 'பீட்டர்' என்றால் நாய்,
'நாய்' என்றால் மனிதன்." (ப.36)

மனிதனின் இரட்டை வாழ்க்கையை - அவனது தனிக் குணத்தை - வெளிச்சம் போட்டுக் காட்டும் பிறிதொரு 'நறுக்கு':

"இவன் பசுவின் பாலைக் கறந்தால்
'பசு பால் தரும்' என்கிறான்.
காகம் இவன் வடையை எடுத்தால்
'காகம் வடையைத் திருடிற்று' என்கிறான்,
இப்படியாக மனிதன்..." (ப.18)

காசி ஆனந்தனின் கருத்தில் இலக்கியம் என்பது 'அழகின் சிரிப்பு' அன்று: 'ஆயுத எழுத்து'. அவரது தொழில் தோரணம் கட்டுவது அன்று - வாளில் அழகு தேடுவது அன்று; வாளில் கூர்மை பார்ப்பது கவிஞரின் வழக்கம்; வாடிக்கை. பதச்சோறு இதோ:

"பாட்டன் நாக்கில் வெடித்தது முழக்கம்;
'வெள்ளையனே வெளியேறு!'
பேரன் நாக்கிலேயே இருந்தான் வெள்ளையன்."

கவிஞர் இந்'நறுக்'கிற்குச் சூட்டியிருக்கும் தலைப்பு 'தமிங்கிலம்'.

"என் ஆசான் பாரதிதாசனுக்கும் அவர் ஆசான் பாரதிக்கும் இந்நூல்..." என்பது கவிஞர் தந்திருக்கும் ஒப்புதல் வாக்குமூலம். 'காசி ஆனந்தன் நறுக்குகள்' என்னும் தொகுப்பில் இடம்பெற்றிருக்கும் 75 நறுக்குகளில் பாரதி, பாரதிதாசன் வழியில் பீடுநடை போட்டுள்ளார் கவிஞர். நிறைவாக, பாரதியின் தெளிவும் பாரதிதாசனின் வேகமும் கைகுலுக்கி நிற்கும் - களிநடம் புரியும் - நறுக்கு ஒன்றை இங்கே காண்போமா?

"திரைப்படச் சுவரொட்டியைத்
தின்ற கழுதை / கொழுத்தது
பார்த்த கழுதை / புழுத்தது" (ப.22)

காசி ஆனந்தனின் நறுக்குகளை நெருப்பு ஓவியங்களாக்கி இருக்கும் வீர.சந்தானம் நமது தனிப் பாராட்டுக்கு உரியவர் ஆவார்.

32

உள்ளத்தை உலுக்கும் ஓர் ஒரிய மொழிக் கவிதை!

"அமைதி தான் வாழ்க்கையின் எல்லாக் கதவுகளையும் திறக்கும் திறவுகோல். கூச்சலிடும் மனதில் வேறுபாடுகள் எழும்."

*– சுவாமி சுகபோதானந்தா**

"மொழிபெயர்ப்பும் ஒரு புதுப்படைப்பே. புதுப்படைப்பினும் அரியது மொழிபெயர்ப்பு. ஒரு கவிஞனது உள்ளம் ஒரு மொழியின் உயிரோட்டமாக உருக்கொண்டதனை, மற்றொரு மொழியின் உயிரோட்டமாக வேறொரு கவிஞன் உருக்கொடுப்பதுவே, கவிதையின் உண்மையான மொழிபெயர்ப்பு. இது ஒரு கவிதைப் பெருஞ்சித்து" (அ.சீ.ரா. எழுத்துக்கள்: தொகுதி 6, ப.15) எனப் பேராசிரியர் **அ.சீநிவாசராகவனின்** 'கவியரசர் கண்ட கவிதை' (வங்காளக் கவிஞர் இரவீந்திரநாத் தாகூர் இயற்றிய 120 பாடல்களின் தமிழ் வடிவம்) என்ற நூலுக்கு எழுதிய 'அறிமுக'த்தில் குறிப்பிடுவர் **தெ.பொ.மீனாட்சிசுந்தரனார்**. இந்தச் சித்து நன்கு கைவரப் பெற்றவர் **இந்திரன்**. இவர் தமிழ் கூறு நல்லுலகின் மிக இன்றியமையாத கலை விமர்சகர், கவிஞர், மொழிபெயர்ப்பாளர். 'அறைக்குள் வந்த ஆப்பிரிக்க வானம்' (1982), 'கடவுளுக்கு முன் பிறந்தவர்கள்', 'ஆதிவாசி கவிதைகள்' (1982), 'பறவைகள் ஒருவேளை தூங்கிப் போயிருக்கலாம்' (2008), 'உள்ளங்கையில் கடல்' (2011) என்பன இந்திரனின் மொழி பெயர்ப்புத் திறத்திற்குக் கட்டியம் கூறும் நூல்கள் ஆகும். சிறந்த மொழிபெயர்ப்பாளருக்கான **சாகித்திய அகாதெமி** விருதினை அண்மையில் இந்திரன் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

மனோரமா பிஸ்வால் மஹாபத்ரா (1948) ஒரிசாவில் உள்ள ஜகாய் என்ற கிராமத்தில் பிறந்தவர்; டாக்டர் பட்டம் பெற்றவர்; புவனேஷ்வரில் உள்ள கல்லூரி ஒன்றில் ஒரிய மொழித் துறைத் தலைவராகப்

---

* வார்த்தையில்லாத ஞானம், ப.157

பணியாற்றி வருபவர்; 20 கவிதைத் தொகுதிகள், 6 கட்டுரைத் தொகுதிகள், 6 சிறுவர் இலக்கியத் தொகுதிகள் எனப் படைப்புப் பல படைத்த பெருமைக்கு உரியவர். 'மனோரமா பிஸ்வால் மொஹபத்ராவின் கவிதை ஒரிசாவின் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் பெண்குரல்' (பறவைகள் ஒருவேளை தூங்கிப் போயிருக்கலாம், ப.11) என்பது இந்திரனின் மதிப்பீடு. 'தாயைப் பகிர்ந்து கொண்ட போது' என்னும் தலைப்பில் மனோரமா பிஸ்வால் மஹபத்ரா படைத்துள்ள கவிதை ஒன்று இங்கே நினைவுகூரத்தக்கது. இந்திரனின் மொழி பெயர்ப்பில் அக்கவிதை இதோ,

"அன்று / தாயைப் பகிர்ந்து கொள்வதென்று
முடிவு செய்து விட்டோம்.
வானத்தில் / அன்று
நட்சத்திரங்களோ, நிலவோ இல்லை,
சில நேரங்களில் / கடல் கொந்தளிக்கும்
ஓசை மட்டும் கேட்டது.

அன்று / எல்லோரது முன்னிலையிலும்
நிலம் மற்றும் பிற சொத்துக்களுடன்
தாயையும் / பிரித்துக் கொள்வது என்று
முடிவு செய்யப்பட்டது.

அம்மாவைக் கவனித்துக் கொள்வதில்
பாதிப் பகுதி / தம்பிக்குச் சென்றுவிட்டது.
மீதிப் பகுதி / அண்ணனுக்குச் சென்றுவிட்டது.
சாட்சிகளின் முன்னிலையில் / அம்மாவை
நாங்கள் பிரித்துக் கொண்டோம்.

கடலில் கரைக்கப்படப் போகும் / கடவுள் விக்கிரகம் போல்
மௌனமாய் அசையாமல் / அமர்ந்திருந்தாள்.

எல்லாச் சடங்குகளும், சம்பிரதாயங்களும்
முடிந்து / தூக்கிப் போடப்படுவதற்கு
அவள் / காத்திருந்தாள்"

(பறவைகள் ஒருவேளை தூங்கிப் போயிருக்கலாம், பக்.16-17)

இந்தக் காட்சி இன்று இந்தியக் குடும்பங்களில் அன்றாடம் அரங்கேறி வரும் அவலக் காட்சி ஆகும். விதவைத் தாயைக் கவனித்துக் கொள்ளாத மகன்களும் மகள்களும் எல்லோரது முன்னிலையிலும் சாட்சிகளை வைத்துக் கொண்டு சொத்தைப் பிரித்துக் கொள்வது போலத் தாயைப் பிரித்துக் கொள்கிறார்களாம். அப்போது அம்மா இருந்த நிலையையும் அவளது ஆழ்மன உணர்வையும் பற்றிக் கவிஞர்,

"கடலில் கரைக்கப்படப் போகும்/ கடவுள் விக்கிரகம் போல்

மௌனமாய் அசையாமல் / அமர்ந்திருந்தாள்"

எனக் குறிப்பிடுவது கல் மனத்தையும் அசைக்கும் தன்மையதாகும். "இந்தக் காட்சியைக் காட்டிப் பதைபதைக்கும் கவிஞர் இந்த நிலைக்கு எதிரான எதிர்ப்பு வார்த்தைகள் எதையும் பேசவில்லை. உரத்த வார்த்தைகளைப் பேசாமல் சமூகத்தில் பெண்ணின் துயர நிலையை மட்டும் எடுத்துக்காட்டி மனிதர்களின் மனசாட்சியில் ஒரு பெரிய காயத்தை ஏற்படுத்துகிறார்" ('ஒரிசாவிலிருந்து ஒரு பெண் குரல்', பறவைகள் ஒருவேளை தூங்கிப் போயிருக்கலாம், ப.11) என்னும் இந்திரனின் விமர்சனக் குறிப்பு இங்கே மனங்கொளத் தக்கதாகும். மாணிக்கவாசகரின் மொழியில் கேட்பது என்றால் 'யார் கொலோ சதுரர்'? -

ஒரிய மொழிக் கவிஞர் மனோரமா பிஸ்வால் மஹாபத்ராவா தமிழில் அவரது கவிதையை உருக்கமும் உயிரோட்டமும் ததும்பி நிற்கும் வண்ணம் படைத்துத் தந்துள்ள மொழிபெயர்ப்பாளர் இந்திரனா?

'வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந் தன்றே!' என்ற சங்கச் சான்றோர் வாக்கே இதற்கான விடை ஆகும்!

33

சட்ட சபையா? சண்டை சபையா?

"தமிழ் அம்மை இப்போதெல்லாம் புதுப்புது வடிவுகளில் கவிதையைப் பெற்றெடுத்துக் கொள்கிறாள்."

– கி.ராஜநாராயணன்*

இன்று சட்ட மன்றம் என்றாலே அடிதடியும் ஆரவாரமும் கைகலப்பும் கலாட்டாவும் சண்டை சச்சரவும் வம்பு தும்பும் வல்லடி வழக்கும் நடக்கும் இடம் என்றாகி விட்டது; நாற்காலியைத் தூக்கி எறிதல், 'பேப்பர் வெயிட்'டை வீசி எறிதல், 'மைக்'கைப் பிடுங்கி அடித்தல், வேட்டியை அவிழ்த்துக் காட்டல், செருப்பை வீசி எறிதல் என்றாற் போல் 'ஆய கலைகள் அறுபத்து நான்கும்' அரங்கேறும் களமாகி விட்டது. கவிஞர் இரா.வேலுச்சாமி குறிப்பிடுவது போல்,

"நெருப்பாய்ப் பிரச்சினைகள்
நிறைந்து கிடக்க
செருப்புகள் மட்டுமே
சீறிப் பாயும்
இது சட்டசபையல்ல
மட்டசபை!" **(குருக்ஷேத்திரம், ப.64)**

என்ற எண்ணமே இன்று மக்கள் எல்லோருடைய மனங்களிலும் சட்ட சபையைப் பற்றி இருந்து வருகின்றது.

கவிஞர் வைரமுத்து 'குங்குமம்' (12.02.1988) இதழில் 'தீர்க்க தரிசனம்' என்ற தலைப்பில் எழுதிய கவிதை ஒன்று இங்கே குறிப்பாக நினைவுகூரத்தக்கது. 28.01.1988 அன்று காலையில் தன் கணவர் சட்ட மன்றத்திற்குப் புறப்பட்ட போது ஓர் எம்.எல்.ஏ.யின் மனைவி 'போகாதே போகாதே என் கணவா' என்றாராம்; அல்லற்பட்டு ஆற்றாது அழுதுகொண்டே தான் கண்ட சொப்பனத்தைப் பற்றி இப்படிப் பாடினாராம்:

"போகாதே போகாதே என் கணவா!
பொல்லாத சொப்பனம் நானும் கண்டேன்!

---

* மேற்கோள்: பாலா, புதுக்கவிதை – ஒரு புதுப்பார்வை, ப.10

சட்டசபை என்ற பேரைக் கண்டேன் - அது
சண்டை சபை என்று மாறக் கண்டேன்!
நட்ட கொடிக் கம்பம் ஆடக்கண்டேன் - பல
நாற்காலி முக்காலி ஆகக் கண்டேன்!

காதுவழி ரத்தம் வழியக் கண்டேன் - பல
கட்சிக்கரை வேட்டி கிழியக் கண்டேன்!
சுட்ட பிணம் ஒன்று நடக்கக் கண்டேன் - அது
தூரத்தில் உன் போல இருக்கக் கண்டேன்!

சட்டசபைக் கூரை பிளக்கக் கண்டேன் - பணம்
தாழ்வாரம் எங்கெங்கும் பறக்கக் கண்டேன்!
அவையத்து முந்திவந்து அடிக்கக் கண்டேன் - கண்டு
அண்ணல் சிலை கண்ணீர் வடிக்கக் கண்டேன்!
தாலிக் கயிறு நிறம் மாறக்கண்டேன் - வீட்டுத்
தங்கத்தில் துருவந்து ஏறக் கண்டேன்!
புருசன் நீஇதன் பின்பும் வாழக் கண்டேன் - ஓட்டுப்
போட்டவன் தான் வெட்கத்தால் சாகக் கண்டேன்!"

சட்ட மன்றத்தில் மட்டுமன்று, பாராளுமன்றத்திலும் இன்று இதே அவல நிலைதான்! தமிழகத்தில் - இந்தியாவில் - மட்டுமன்று, இன்று உலகம் எங்கிலும் இதே கதிதான். ஒரு முறை பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அவைத் தலைவரிடம் கேட்ட கேள்வி: "பாராளுமன்றத்தில் உறுப்பினர்கள் தூங்கலாமா?" அதற்கு அவைத் தலைவர் சிரித்துக் கொண்டே சொன்ன பதில்: "தூங்கலாம், ஆனால் அடுத்தவருக்கு இடைஞ்சலாகக் குறட்டை மட்டும் விடக் கூடாது."

சட்டமன்றமோ, பாராளுமன்றமோ, மாநகராட்சி மன்றமோ, எதுவாயினும் உறுப்பினர்களின் மனங்களில் தாங்கள் தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பது தங்கள் தொகுதிக்காக என்ற எண்ணம் மேலோங்கி நின்றால் போதும்; தொகுதியில் இருக்கும் தனிப்பட்ட பிரச்சினை களை அடையாளம் கண்டு, அவற்றிற்காகக் குரல் கொடுத்து, அவை தீருவதற்காகப் பாடுபட்டால் போதும்; அவரவர் தொகுதி மட்டுமன்று, ஒட்டுமொத்த இந்தியத் திருநாடே பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் கனவு கண்டது போல, 'இன்பம் விளையும் தோட்ட'மாக மாறும்!

34

சாத்திய கதவுகளும் பூட்டிய மனமும்

"எழுத்து – ஆன்மாவின் ரத்தம்
கவிதைகள் – காலத்தின் உதடுகள்." – சிற்பி*

புற வளர்ச்சியில் இன்று மனிதன் இமாலய வளர்ச்சியைக் கண்டிருக்கின்றான்; ஐந்து இலக்க வருவாய், நான்கு சக்கர வாகனம், மூன்று படுக்கை அறைகள் கொண்ட பெரிய வீடு, குழல் (ஆண் குழந்தை) போலவும் யாழ் (பெண் குழந்தை) போலவும் இரு அழகான குழந்தைகள், அன்பான ஒரே மனைவி என வாழ்வின் இன்பங்களை எல்லாம் ஒருசேரப் பெற்றிருக்கின்றான். இடை நில்லாக் (நான் - ஸ்டாப்) கொண்டாட்டமான தொலைக்காட்சி, மடிக்கணினி, கைபேசி, எந்த நேரமும் பணம் எடுப்பதற்கான வசதி (ஏ.டி.எம்.), வங்கியில் பாதுகாப்புப் பெட்டகம் (பேங்க் லாக்கர்) என்றாற் போல் அனைத்து வாய்ப்புக்களையும் கொண்டிருக்கின்றான். ஆயின், இன்றைய மனிதனின் அக வளர்ச்சியோ - மன நலமோ - குறிப்பிடத்தக்க அளவு பெருமை படைத்ததாக இல்லை. 'விருந்தினர் எவரேனும் உள்ளீர்களோ?' என்று கேட்டு விட்டுக் கதவினைச் சாத்தும் நிலை சங்க காலத்தில் நிலவியது; இன்றோ மனிதன் கதவுகளை நன்கு சாத்தியபடி தனது வீட்டிற்குள் வாழ்ந்து கொண்டிருக்கின்றான். அண்மையில் 'தீரா நதி' இதழில் (மார்ச் 2012) 'வீடு' என்னும் தலைப்பில் த.வாசுதேவன் எழுதிய கவிதை இங்கே நினைவுகூரத்தக்கது.

"இந்தத் தெருவில்
குரைப்பதற்கு நாய்கூட இல்லை.

வீடுகளின் குழந்தைகள்
ரெசிடென்சியல் பள்ளிகளில் படிக்கிறார்கள்.
பெரியவர்கள்
முதியோர் இல்லத்தில்

---

* நதிக்கரைச் சிற்பங்கள், ப.17

இறப்பதற்காகக் காத்திருக்கிறார்கள்.
எறும்புகளைக் கூட
மருந்து வைத்துக் கொன்றுவிட்டோம்.

குப்பைகளைக் கூட
பக்கத்து வீட்டுப் புறக்கடைகளில் தான் கொட்டுகிறோம்.

கொசுக்களையும்
பூச்சிகளையும்
சுருள்வத்தியால் கொல்கிறோம்.

பல்லிகளைக் கொல்லவும்
வழிவகைகள் காண்போம்.

வாசலுக்கு கான்கிரீட் போட்டுவிட்டால்
தவளைகள் இருக்காது.

காம்பவுண்ட் வால் கட்டிவிட்டால்
பாம்புகள் வராது.

மரங்களை வெட்டி விட்டால்
பறவைகள் இருக்காது.
குயில் சத்தமும் இருக்காது.
எச்சமும் இருக்காது.

தங்கத்தை பேங்க் லாக்கரில்
வைத்திருப்பதால் திருடர்களும் வர மாட்டார்கள்.

மிச்சமிருக்கும் உணவை
வைப்பதற்கு ஃபிரிட்ஜ்
இருப்பதால் பிச்சைக்காரன் கூட
இங்கு வரமாட்டான்.

அருகில் இருப்பவனிடம்
எதற்குப் பேசுவது?

கைபேசி இருக்கிறது
தூரத்தில் உள்ள உறவோடு பேச.
ஏ.டி.எம்.மில் பணம் இருக்கிறது
செலவு செய்ய.
நாங்கள் அநேகமாக அலுவலகத்தில்
தான் இருக்கிறோம்.
வாடிக்கையாளரும், எஜமானும்
வெளிநாட்டில் இருக்கிறார்கள்.

தமிழில் பேசுவது அரிதுதான்
மம்மி மொழி போதும் நமக்கு.

வீடு பெரும்பாலும் பூட்டித்தான் இருக்கிறது.
மனசும் தான்.
இந்த வீட்டில் டி.வி. மட்டுமே
பேசவும், பாடவும் செய்யும்.
இந்த வீட்டில்தான் கதவுகளை நன்கு சாத்தியபடி
நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்."

இந்த நூற்றாண்டு மனிதனின் வாழ்வை உள்ளது உள்ளபடி படம்பிடித்துக் காட்டியுள்ள அற்புதமான கவிதை இது.

'வீடு பெரும்பாலும் பூட்டித்தான் இருக்கிறது, மனசும் தான்', 'இந்த வீட்டில் டி.வி. மட்டுமே / பேசவும், பாடவும் செய்யும்', 'இந்த வீட்டில் தான் கதவுகளை நன்கு சாத்தியபடி / நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்' என்னும் உயிர்ப்பான வரிகளின் மூலம் இன்றைய மனிதனின் அக வாழ்வினைக் கூர்மையாக விமர்சனம் செய்துள்ளார் கவிஞர். 'பெரியவர்கள் / முதியோர் இல்லத்தில் / இறப்பதற்காகக் காத்திருக்கிறார்கள்' என்னும் வரிகளில் வெளிப்படும் அவலச் சுவை அழுத்தமானது; ஆழமானது. 'மம்மி மொழி போதும் நமக்கு': கவிதையில் அங்கதச் சுவை சிறந்து விளங்கும் இடம் இது!

"வீடு என்ற சொல்லுக்கு விடுதலை என்பது பொருள். வெளியில் எத்தனையோ அச்சங்களுக்கு ஹேதுக்கள் உள. அவ்விதமான அச்சங்கள் இல்லாமல் விடுதலைப்பட்டு வாழத்

தகுந்த இடத்துக்கு வீடு என்ற பெயர் கொடுத்தனர் போலும்" (*பாரதியார் கட்டுரைகள், ப- 294*) எனத் தம் கட்டுரை ஒன்றில் குறிப்பிடுவார் பாரதியார். ஆனால் கதவுகளை நன்கு சாத்திய படி வீட்டிற்குள் எல்லோரிடமும் இருந்து விலகி பூட்டிய மனத்துடன் வாழ்ந்து வரும் சமகால மனிதனின் வாழ்வை த.வாசுதேவனின் 'வீடு' என்னும் கவிதை நன்கு படம்பிடித்துக் காட்டியுள்ளது.

35

எது நல்ல நகைச்சுவை?

"புன்னகை:
பற்கள் என்ற முட்களே
பூக்கும் மலர்." – அப்துல் ரகுமான்*

அண்மையில் திருநகர் நகைச்சுவை மன்றத்திற்குப் பேசுவதற்குச் சென்றிருந்தேன். தலைப்பு: 'தேனின் சுவை - நகைச்சுவை'. என் பேச்சுக்கு முன்பாக மாணவ மாணவியரும் இளைய தலைமுறையினரும் பொதுமக்களும் நகைச்சுவைகளைச் சொன்னார்கள். பெரும்பாலும் பத்திரிகைகளில் படித்த அல்லது பொது மேடைகளில் கேட்ட நகைச்சுவைகளாகவே அவை இருந்தன. எனவே என் பேச்சில் நல்ல நகைச்சுவையைப் பற்றிய கருத்தை முதன்மைப்படுத்தினேன்.

"நல்ல நகைச்சுவை என்பது இயல்பாக - அவரவர் வாழ்வோடு ஒட்டியதாக- இருக்க வேண்டும். படித்த அல்லது கேட்ட நகைச்சுவையைத் திரும்பக் கூறுவதோ அடுத்தவர் நகைச்சுவையை நம் நகைச்சுவை போல் கூறுவதோ வேண்டியதில்லை. அடிப்படையில் எல்லோருக்கும் நகைச்சுவை உணர்வு (Sense of Humour) உண்டு. அன்றாட வாழ்வில் எங்கும் - எதிலும் - எப்போதும் - நகைச்சுவைத் தென்றல் வீசிக் கொண்டுதான் இருக்கிறது. நாம்தான் அதனை அனுபவிப்பதில்லை; வளர்த்துக் கொள்வதில்லை. 'ஒரு நாளேனும் கவலை இல்லாமல் சிரிக்க மறந்தாய் மானிடனே' என்று சிரிப்பு நடிகர் சந்திரபாபு ஒரு திரைப்பாடலில் பாடியிருப்பது நூற்றுக்கு நூறு சரிதான்!"

ஒரு கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்ட விழாவில் பட்டிமன்ற நிகழ்ச்சி. தலைப்பு 'கால வெள்ளத்தைக் கடந்து நிற்கும் தகுதி படைத்தவை பழைய பாடல்களா? புதிய பாடல்களா? என்பது. மாணவ மாணவியரும் கிராமத்து ஆண்களும் பெண்களுமாகக் கூட்டம் நிரம்பி வழிந்தது. தீர்ப்பு சொல்ல வேண்டிய நேரம். இப்படிச் சொன்னேன்:

---

* நேயர் விருப்பம், ப.92

"நிறுத்தி நிதானமாகப் புரியும்படி ஒருமுறை மெதுவாகச் சொன்னால் அது பழைய பாடல்; அதையே வேகவேகமாக மூன்று நான்கு முறை சத்தமாகச் சொன்னால் அது புதுப்பாடல். எப்படி என்கிறீர்களா?

'இங்கு நீ ஒரு பாதி நான் ஒரு பாதி, இதில் யார் பிரிந்தாலும் வேதனை பாதி' - இது பழைய பாடல்; கண்ணதாசன் எழுதியது. இதையே ஒரு புதிய பாடல், 'நீ பாதி நான் பாதி கண்ணே, அருகில் நீயின்றித் தூங்காது கண்ணே' என்று மாற்றி வேகமாகச் சொல்கிறது.

அன்று கண்ணதாசன் ஒரு பழைய பாடலில் 'அண்ணன் என்னடா தம்பி என்னடா அவசரமான உலகத்திலே, ஆசை கொள்வதில் அர்த்தம் என்னடா காசில்லாதவன் குடும்பத்திலே' என்று நிறுத்தி நிதானமாகப் பாடினார். இதையே புதிய பாடல் இன்று, 'அண்ணன் என்ன தம்பி என்ன சொந்தம் என்ன பந்தம் என்ன, சொல்லடி எனக்குப் பதிலை' என்று வேக வேகமாகக் கூறுகிறது.

'பார்த்தேன் சிரித்தேன் பக்கம் வரத் துடித்தேன்' என்று ஒரு முறை சொன்னால் அது பழைய பாடல். 'பார்த்தேன் பார்த்தேன் பார்த்தேன், சிரித்தேன், சிரித்தேன், சிரித்தேன்' என்று மூன்று முறை அடுக்கிச் சொன்னால் அது புதிய பாடல்."

இப்படி நான் உதாரணங்களோடு பாடியும், உணர்ச்சியோடு நடித்தும் பேசுகின்ற போது கூட்டத்தினர் ஆரவாரத்தோடு சிரித்து மகிழ்வார்கள்; பலமாகக் கை தட்டுவார்கள்.

முத்தாய்ப்பாக, "புதிய பாடல் என்பது உலக அழகி ஐஸ்வர்யா ராய் போல" என்று உதாரணம் சொல்வேன். இதனை இளைஞர் கூட்டம் நன்றாக வரவேற்கும். சிறிது இடைவெளி விட்டு, உருக்கமான குரலில் "பழைய பாடலோ அன்னை தெரசா போல" என்பேன். ஒட்டுமொத்த அவையே இருமடங்கு ஆரவாரம் செய்து மகிழும்.

எப்போதும் நம் பேச்சிலேயே நகைச்சுவை பிறக்க வேண்டும் என்பது இல்லை; சில நேரங்களில் அவையிலே இருந்து கூட எதிர்பாராத விதமாக நல்ல நகைச்சுவை பிறக்கலாம். கூட்டத்தில் எங்கோ ஒரு மூலையில் இருந்து யாரோ ஒருவர் எழுப்பும் வினாக்கூட அருமையான நகைச்சுவையைத் தோற்றுவிக்கலாம். ஓர் உதாரணம்: பெருங்கூட்டம்; சிறப்புப் பேச்சாளர் உணர்ச்சி பொங்க, "உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம்!" என முழங்குகிறார். அப்போது கூட்டத்தில் இருந்து ஒரு குரல்

கேட்கிறது: "அவசரத்துக்குக் கடன் குடுப்பீங்களா?" ஒட்டுமொத்தக் கூட்டமே கலகலக்கிறது.

புதிதாக ஒன்றைப் படைப்பதும் சில நேரங்களில் நல்ல நகைச்சுவைக்கு வழிவகுக்கும். பழமொழிகளின் அடிப்படையில் உருவாக்கப்படும் **புதுமொழிகள்** இதற்கு நல்ல உதாரணங்கள் ஆகும். "கற்றது கைம்மண் அளவு; கல்லாதது உலகளவு!" என்பது பழமொழி. இதற்கு இணையாகக் கணினித் துறையில் பயிலும் ஓர் இளைஞர் சொன்ன புதுமொழி இது:

"கற்றது 'Calculator' அளவு;

கல்லாதது 'Computer' அளவு!"

"மாமியார் உடைத்தால் மண்குடம்; மருமகள் உடைத்தால் பொன்குடம்" என்பது பழமொழி. இதனை ஒட்டி ஒரு மாணவி படைத்த புதுமொழி இது:

"மாமியார் உடைத்தால் 'Audio';

மருமகள் உடைத்தால் 'Video'!"

"பகலில் பசுமாடு தெரியாது; ராத்திரி எருமை மாடா தெரியப் போகிறது?" என்பது பழமொழி. இதனைத் திரைப்பட மொழியில் புதுமையாக இப்படிக் கூறலாம்:

"மத்தியானம் மந்திரா தெரியாது;

ராத்திரி ரம்பாவா தெரியப்போகிறது?"

"கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்" என்கிறேன் நான்; என் மாணவனோ "இளையராஜா வீட்டு இட்லித் தட்டும் இசை பாடும்!" என்கிறான். **காலத்திற்கு ஏற்ற ரசனை** என்பது இதுதானோ?

நகைச்சுவை வேறு; நையாண்டி வேறு. இரண்டையும் நாம் ஒன்றாக நினைத்துக் குழப்பிக் கொள்ளக்கூடாது. மதுரை தியாகராசர் கல்லூரியின் தமிழ்த்துறையில் சில மாதங்கள் ஆசிரியராகப் பணியாற்றினேன். அப்போது என் வகுப்பில் நிகழ்ந்த ஒரு சுவையான அனுபவம்: முதல் நாள் மாணவர்களுக்கு வகுப்பில் 'இடுக்கண் வருங்கால் நகுக' என்ற திருக்குறளைச் சொல்கிறேன்: மறுநாள் வகுப்பிற்குள் நுழைகிறேன். ஒரு மாணவன் என்னைப் பார்த்துச் சிரித்தான். "ஏனப்பா சிரிக்கிறாய்?" என்று கேட்டபோது அந்த மாணவன் இயல்பான குரலில் இப்படிச் சொன்னான்: "நீங்கதானே ஐயா, நேற்று வகுப்பில் 'இடுக்கண் வருங்கால் நகுக' என்று சொன்னீங்க. நீங்க வர்றீங்க, சிரிக்கிறேன் - நகுகிறேன்." இது

இயல்பான நகைச்சுவை; இளமைக்கே உரிய குறும்பு கொப்பளிக்கும் நகைச்சுவை. **சர்தார் வல்லபாய் படேல்** ஒருமுறை வெளிநாடு சென்றிருந்தார். அவரைப் பார்த்து ஒரு வெளிநாட்டுக்காரர் நையாண்டி செய்யும் நோக்கில், "What is your Culture?" என்று கேட்டார். அவருக்கு ஒரே வார்த்தையில் படேல் இப்படிப் பதில் சொன்னார்: "Agriculture!" அதற்குப் பிறகு அந்த வெளிநாட்டுக்காரர் வாயைத் திறக்கவே இல்லை. மற்றவரை மட்டம் தட்டும் நோக்கில் ஒருவர் பேச முற்படும்போது அப்படிப் பேசுகின்றவரே நகைச்சுவைக்கு ஆளாவது நல்ல நையாண்டி ஆகும்.

அழுதுகொண்டே பிறக்கும் நாம் சிரித்துக் கொண்டே வாழ்வோம். 'வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும்' என்பது பழமொழி. இன்றைய சூழலில் வாய்விட்டுச் சிரித்தால் நோய் நம் வீட்டுப்பக்கம் தலையே காட்டாது; இளமையும் இன்பமும் என்றென்றும் நம் வாழ்வில் கொலுவீற்றிருக்கும்.

36

அன்றாட வாழ்வில் நகைச்சுவை

*"புன்னகை புரியத் தெரியாத ஒரு கடவுளால் இந்த நகைச்சுவை ததும்பும் உலகைப் படைத்திருக்க முடியாது." – அரவிந்தர்**

வள்ளுவர் சொன்னால் தான் வேத வாக்கு!

கம்பர் பாடினால் தான் கவிதை!

இளங்கோ எழுதினால்தான் இலக்கியம்!

- என்று பல பேர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், உண்மையில் -

வள்ளுவர் வாய்மொழிக்கு நிகரான வேத வாக்குகள்

கம்ப சித்திரத்திற்கு இணையான கவிதை வீச்சுகள்

இளங்கோவின் கைவண்ணத்திற்குச் சமமான சொல்வண்ணங்கள்

- எத்தனை எத்தனையோ நித்தம் நித்தம் நாம் கேட்கும் அன்றாடப் பேச்சு வழக்கில் - நடைமுறைத் தமிழில் - ஆங்காங்கே களிநடம் புரியக் காணலாம்; இலக்கியச் சுவையும் நகைச்சுவை நயமும் கை குலுக்கி நிற்கக் காணலாம்.

நீங்கள் மதுரை மாநகரின் தெருக்களில் ஓடும் ஆட்டோக்களின் முதுகுகளைக் கவனித்துப் பார்த்திருக்கிறீர்களா? பார்த்திருந்தால் நீங்கள் என் முடிவுக்கே வருவீர்கள். பதச்சோறாக ஓர் ஆட்டோ வாசகம் இதோ:

"கடவுள் மனிதனாகப் பிறக்க வேண்டும் - அவன்
ஆட்டோ ஓட்டி வேதனையில் வாட வேண்டும்!
பெட்ரோல் விலை ரூபாய்...!"

ஆட்டோ முதுகில் எவ்வளவு அழகான சிந்தனை வீச்சு பாருங்கள்!

சாலையில் செல்லும் போது விபத்து நேராமல் இருக்க வேண்டும் என்றால், நாம் பின்பற்ற வேண்டிய விதி என்ன தெரியுமா?

---

* சிந்தனைப் பொறிகள், ப.150

இதோ இன்னொரு சகோதரர் தம் ஆட்டோவின் முதுகில் எழுதி வைத்திருக்கும் பொன்மொழி:

"சாலையைப் பார்த்தா சமத்து; சேலையைப் பார்த்தா விபத்து!"

இதுபோல் மதுரை மாநகரின் ஆட்டோக்களின் முதுகுகளில் காணப்படும் அனுபவ உண்மைகள் இன்னும் எத்தனை எத்தனையோ உண்டு. அவற்றுள் ஒரு சில இதோ:

"கண்கள் அழுதால் துடைப்பது கர்சீப்;
இதயம் அழுதால் துடைப்பது ஃபிரண்ட்ஷிப்!"

"ஆடிக்குப் பின் ஆவணி,
தாடிக்குப் பின் தாவணி!"

"கருவறை முதல் கல்லறை வரை சில்லறை தேவை!"

"பணம் இல்லையென்றால் பந்தம் இல்லை;
சொத்து இல்லையென்றால் சொந்தம் இல்லை!"

"தாய்க்குப் பின் தாரம் சரி; அதற்காக
தாரம் வந்த பின் தாய் பாரமா?"

ஒரு சில நேரங்களில் தெரு வாசகங்கள் கூட அருமையான 'திருவாசக'ங்களாக அமைந்து நம் நெஞ்சை அள்ளுவது உண்டு. ஒட்டன்சத்திரத்தில் ஒரு எஸ்.டி.டி., ஐ.எஸ்.டி அலுவலகத்தில் எழுதிப் போடப்பட்டிருக்கும் 'புதுமைக் குறள்' இது:

"பொறுமை உடையோர் STD பேசுவர்; அஃதிலார்க்கு
Local-ம் கிடைப்பது அரிது!"

வான்புகழ் வள்ளுவரே இதனைப் பார்க்க நேர்ந்தால் அசந்துபோய் விட மாட்டாரா என்ன?

ஒரு பட்டிமன்ற நிகழ்ச்சிக்காகக் குழுவினருடன் மணப்பாறை சென்றேன். அங்கே பேருந்து நிலையத்தில் ஏழைச்சிறுவன் ஒருவன் முறுக்கு விற்றுக் கொண்டிருந்தான். எப்படித் தெரியுமா?

"மணப்பாறை முறுக்கு! இங்கே இருக்கு! வாங்கி நொறுக்கு!" சபாஷ்! இயக்குநர் டி.ராஜேந்தருக்குச் சரியான போட்டி இவன்தான்!

மதுரை மாநகரில் ஒரு திரை அரங்கின் எதிரே உள்ள சிறிய எண்ணெய்ப் பலகாரக் கடையில் காணப்படும் ஒரு வாசகம் இதோ:

"இராமன் தேடிய சீடை இங்குக் கிடைக்கும்!"

இராமன் தேடிய சீதைதானே நமக்குத் தெரியும்? இதோ, 'இராமன் தேடிய சீடை!' நன்றாகப் பார்த்துக் கொள்ளுங்கள்!

ஒருநாள் காலையில் உலவச் செல்லும்போது ஒரு தட்டியில் ஜனநாயக வாலிபர் சங்கத்தைச் சேர்ந்த நண்பர்கள் எழுதிப் போட்டிருந்த சில வரிகளைப் படித்துப் பார்த்தேன். அங்கேயே சில மணித்துளிகள் சிலையாக நின்றுவிட்டேன். அவ்வரிகள் வருமாறு:

"சகோதரி

நீ அரைத்து வைத்த

இட்லி மாவு கூட

மறுநாள் பொங்குகிறதே!

நீ எப்போது

பொங்கப் போகிறாய்?"

Tube - light மெத்தப் படித்தவர்கள் இதற்கு இணையாகக் கையாண்டிருக்கும் கலைச்சொல்லாக்கம்: 'குழல் விளக்கு!' ஆனால், படிப்பு வாசனையே இல்லாத ஒரு கிராமவாசி போகிற போக்கில் இதற்குப் பயன்படுத்திய கலைச்சொல் 'வாழைத்தண்டு விளக்கு!' என்ன அற்புதமான கற்பனை வளம்! படைப்புத் திறம்!

இன்னமும் வெளிச்சத்திற்கு வராத எத்தனையோ வள்ளுவர்களை - இளங்கோக்களை - கம்பர்களை - பாரதிகளை - தெரு ஓரங்களில் தினம் தினம் சந்திக்கலாம் என்பதை இப்போது ஒப்புக்கொள்கிறீர்களா?

37

அறிவார்ந்த நகைச்சுவையாளர் கி.ஆ.பெ. விசுவநாதம்

"திரண்ட குன்றிற்கு அருவி போலவும் இருண்ட முகில் கூட்டத்துக்கு மின்னற்கொடி போலவும் அமைந்து (கவிதையை) அழகு செய்வது நகைச்சுவை."

– சாலை இளந்திரையன்*

தமிழ் கூறு நல்லுலகிற்குத் திருச்சி நகரம் தந்த பெருங்கொடை **கி.ஆ.பெ. விசுவநாதம்** (1899-1994). 'முத்தமிழ்க் காவலர்' எனத் தமிழக மக்களால் மதிப்போடும் மரியாதையோடும் சுட்டப்பெறும் ஆளுமைக்குச் சொந்தக்காரர் கி.ஆ.பெ. "விசுவநாதம் இந்நாட்டின் தனித்தலைவன். அவனுடைய தலைமையில் பணி செய்ய எதிர்காலத் தமிழகம் கட்டாயம் காத்திருக்கும்" என்பது கி.ஆ.பெ.விசுவநாதம் பற்றிய தமிழ்க்கடல் **மறைமலையடி**களின் கணிப்பு ஆகும். "திரு. கி.ஆ.பெ. விசுவநாதம் செறிவான எழுத்தாளர்; சுவையான பேச்சாளர். ஒழுங்கு, ஒழுக்கம் இரண்டையும் போற்றுபவர். 'செய்வன திருந்தச் செய்' என்ற ஔவையாரின் நெறியை அவர் செய்வன யாவற்றிலும் காணலாம்" என்பது பேராசிரியர் **மு.வரதராசனார்**, கி.ஆ.பெ. விசுவநாதத்திற்குச் சூட்டியுள்ள புகழாரம். 'ஆயிரம் பிறை கண்டவர்' என்றாற் போல் இம்மண்ணுலகில் 96 ஆண்டுக் காலம் நல்ல வண்ணம் வாழ்ந்து காட்டிய கொள்கைச் சான்றோர் கி.ஆ.பெ. இனி, ஒரு நகைச்சுவையாளராக கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களை அடையாளம் காண்போம்.

கி.ஆ. பெரியண்ணாபிள்ளை -சுப்புலட்சுமி இணையருக்குப் பிறந்த 16 குழந்தைகளில் கடைக்குட்டிதான் கி.ஆ.பெ.விசுவநாதம் ஆவார். அவருக்கு முன்னே பிறந்தவர்களில் அண்ணன்மார் எட்டுப் பேர்; அக்காமார் ஏழு பேர். எனவே, அவருக்குத் தம்பியும் இல்லை; தங்கையும் இல்லை. இது ஒரு வகையில் பார்த்தால், அவருக்குக் குறைதான்; தமது குடும்பத்தைப் பற்றிக் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களே ஓர் இடத்தில் நகைச்சுவை உணர்வோடு இப்படிக் குறிப்பிட்டிருக்கிறார்:

---

* புதிய தமிழ்க் கவிதை, ப.88

"எங்கள் அப்பாருக்குப் பதினாறு பிள்ளைகள். நான் தான் பதினாறாவது ஆள். எனக்குப் பதினான்கு குழந்தைகள். எனக்கு அண்ணா எட்டுப் பேர்; அக்காள் ஏழு பேர். ஒவ்வொருவருக்கும் குழந்தைகள் நிறைய இருக்கின்றன. எங்கள் அண்ணன் ஒருவருக்குப் பதின்மூன்று குழந்தைகள். கதை வேண்டாம். எங்கள் நகராட்சியிலே, எங்கள் பிரிவிலே அதிக வாக்குரிமைகள் எங்கள் இல்லிற்குள்ளேயே இருக்கின்றன. இது ஒன்றும் பொய்யல்ல; அவ்வளவு பெரிய குடும்பம்." உண்மையிலேயே ஒரு சிறிய நகராட்சி மாதிரி நடை பெற்றதுதான் கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்களின் பெரிய குடும்பம்!

நகைச்சுவை பற்றிக் கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்களுக்கு ஒரு தனிப்பட்ட கருத்து இருந்தது. அதனை அவர், 'அறிவுக்கு உணவு' என்னும் தம் நூலில் ஓர் இடத்தில் வெளியிட்டுள்ளார். சிரிப்பது உடல் நலத்துக்கு ஏற்றது என்பது மருத்துவ அறிஞர்களின் கருத்து. மக்களைச் சிரிக்க வைக்க நகைச்சுவை ஒரு சிறந்த கருவி என்பதில் கி.ஆ.பெ. அவர்களுக்குக் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால், இக்கருவியை விழிப்பாகக் கையாள வேண்டும். இன்றேல், இது தீமையே தரும் என முடிந்த முடிவாகக் கூறுகின்றார் அவர். மேலும், அவரது பார்வையில் நகைச்சுவை வேறு; நையாண்டி வேறு. நகைச்சுவை செல்லுகின்ற பாதையில் ஒரு நூலிழை தவறினாலும் நையாண்டியாகக் காட்சியளித்து விடும். நகைச்சுவை, அறிஞர்களை மகிழ்விக்கும்; நையாண்டி, மற்றவர்களை மகிழ்விக்கும்.

'ஒருவன் கூறியது நகைச்சுவையா? நையாண்டியா?' என்பதை அறிய விரும்பினால், 'அதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்தவர்கள் அறிஞர்களா, மற்றவர்களா' என்பதைக் கொண்டு அறிந்து கொள்ளலாம்.

'எது நகைச்சுவை?' என்பதற்கு நல்லதோர் உதாரணமாகக் கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்களின் 'நடையும் உடையும்' என்னும் தலைப்பில் அமைந்த குட்டிக் கதையினை இங்கே சுட்டிக் காட்டலாம்.

"தமிழ்நாட்டிலுள்ள ஒரு சிற்றூரிலிருந்து ஒரு குடியானவன் பம்பாய் பார்க்கப் போயிருந்தான். ஊர் முழுவதும் சுற்றிப் பார்த்தான். மாலையில் கடற்கரையைப் பார்க்கப் போனான்.

அங்கே, கடற்கரையில் ஒரு சிறு பையன் அலையை நோக்கி வேகமாக ஓடுவதும், தண்ணீரைக் கண்டதும் பின்வாங்குவதும், பிறகு அலையிலேயே காலை வைத்துக் கொண்டு விளையாடுவதுமாக இருந்தான். அப்போது ஒரு பெரிய அலை வந்தது.

அதைக் கண்ட குடியானவன் பயந்து போய், அப்பையனின் கூட வந்தவரைப் பார்த்து,'சிறுபையன் சுட்டித்தனமாக விளையாடினால் நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறீர்களே, அவனை அழைத்து உங்கள் அருகில் வைத்துக் கொள்ளுங்கள்' என்றான்.

அதுகேட்ட அந்த ஆள் சிரித்து, 'அது பையன் அல்ல, பெண்' என்றார். 'அப்படியா? நீங்கள்தான் அப்பெண்ணின் தந்தையா?' என்று கேட்டான் குடியானவன். அவர், 'இல்லையில்லை. நான் அந்தப் பெண்ணுக்குத் தந்தையல்ல, தாய்' என்று சொன்னவுடன் குடியானவனின் வியப்புக்கு எல்லையே இல்லை.

பெண்ணாக ஆணும், ஆணாகப் பெண்ணும் வேற்றுமை தெரியாத அளவுக்கு நடை, உடை, பழக்கங்களை மாற்றி நடந்துகொள்ளும் வேடிக்கையைப் பம்பாயில் பார்த்து விட்டு வந்த அவன், தன் ஊர் வந்ததும் அனைவரிடமும் அதைச் சொல்லிச் சொல்லிச் சிரித்தான்.

எப்படி நம் நாட்டில் நடையும் உடையும்? இதுபோன்ற 90 சுவையான கதைகளைத் தொகுத்துத் தனி ஒரு நூலாக வெளியிட்டுள்ளார் கி.ஆ.பெ.விசுவநாதம். இக்கதைகளுக்கு அவர் தந்திருக்கும் தலைப்பு **'அறிவுக் கதைகள்'** என்பதாகும். கதையே ஆனாலும், அதைப் படிப்பதன் மூலம் அறிவை வளர்த்துக் கொண்டு நல்வழியில் நடக்கத் துணைபுரிய வேண்டும் என்பது கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களின் கொள்கை ஆகும்.

தமிழ் எழுத்துக்களில் 'ழ' என்னும் எழுத்து தமிழுக்குச் சிறப்புத் தருவது. பிற எந்த மொழியிலும் இதுபோன்ற எழுத்து கிடையாது. அதனால் புலவர் பெருமக்கள் இதனைச் 'சிறப்பு ழகரம்' என்றே கூறுவர். இந்தச் சிறப்பு 'ழ' ஒலி தமிழ் மக்கள் சிலரால் சரியாக உச்சரிக்கப்படுவதில்லை. திருச்சிக்குத் தெற்கே சிலர் 'ழ'வை 'ள' ஆக உச்சரிப்பர் (எ-டு.: வாழைப்பழம் - வாளப்பளம்). திருச்சிக்குக் கிழக்கே, தஞ்சை மாவட்டத்தில் சிலர் 'ழ'வை 'ஷ' ஆக உச்சரிப்பர் (எ-டு.: மார்கழித் திருவிழா - மார்கஷித் திருவிஷா). இனி, தமிழகத்து வடக்கே சென்னை போன்ற இடங்களில் சிலர் 'ழ' வை, 'ஸ' ஆக்கிப் பேசுவர் (எ-டு.: இழுத்துக் கொண்டு, இஸ்த்துக்குனு). திருச்சிக்கு மேற்கே, கோவை போன்ற இடங்களில் சிலர் 'ழ'வை 'ய' ஆக ஒலிப்பர். (வாழைப்பழம், வாயப் பயம்).

தமிழுக்கு உள்ள இந்தச் சிறப்பு 'ழ'கரம் தமிழ் மக்களிடத்துப் படுகிற பாட்டைக் கி.ஆ.பெ.விசுவநாதம் தமக்கே உரிய பாணியில் சுவையாக எடுத்துக்காட்டியுள்ளார்.

"நான் ஒரு தடவை கோவைக்குச் சென்ற போது கடைத் தெருவில் வாழைப் பழத்தை விற்கும் ஒருவன், 'வாயப் பயம்' என்றே கூறி விற்றுக் கொண்டிருந்தான்.

நான் அவனைப் பார்த்ததும் அவன் என்னிடம் வந்து, தட்டை இறக்கி வைத்து, 'வாயப் பயம் வேணுங்களா?' என்றான்.

எனக்கு வியப்பு ஒரு புறம்; கோபம் ஒரு புறம். 'நீ எந்த ஊர் அப்பா?' என்றேன்.

அவன், 'கியக்கங்கே' என்றான்.

நான், '(கிழக்கு) கியக்கேயிருந்து இங்கே எதுக்கு வந்தீங்க?' என்றேன்.

அவன், 'புயக்க வந்தேங்க' (புயக்க- பிழைக்க) என்றான்.

'கியக்கேயிருந்து புயக்க வந்தேன்' என்றதும் எனக்குக் கோபம் அதிகமாகியது.

'ஏம்பா, தமிழை இப்படிக் கொலை பண்ணுகிறீர்கள்?' என்று அதட்டிக் கேட்டேன்.

அவன் இரண்டு கைகளையும் சேர்த்துக் கும்பிட்டுக் கொண்டே, 'அது எங்க வயக்கங்க' என்றான்.

நான் உடனே அவனை விட்டு எழுந்தே போய்விட்டேன்."

இங்ஙனம் மெல்லிய பூங்காற்றாய் நகைச்சுவைத் தென்றல் வீசி நின்ற தருணங்கள் கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்களின் வாழ்வில் நிரம்ப உண்டு.

சான்றோர்கள் வாழ்வில் நடந்த சுவையான நிகழ்ச்சிகளைக் (Anecdotes) கி.ஆ.பெ. விசுவநாதம் தம் நூல்களில் உரிய இடங்களில் பதிவு செய்துள்ளார். நகைச்சுவை, நையாண்டி, கேலி, கிண்டல், எள்ளல், அங்கதம், சொல் விளையாட்டு முதலான நகைச்சுவை உணர்வின் பல்வேறு பரிமாணங்களையும் வெளிப்படுத்தும் விதத்தில் அந்நிகழ்ச்சிகள் அமைந்திருப்பது தனிச்சிறப்பு. இவ்வகையில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க ஒரு சுவையான நிகழ்ச்சிக் குறிப்பு இதோ:

"கவிராஜர் ஜெகவீர பாண்டியனார் ஒரு பெரும் புலவர். கட்டபொம்மன் மரபிலே வந்தவர். மிகவும் சிறந்து விளங்கிய தமிழ்ப் பெருங்கவிஞர்.

ஒருநாள் மதுரையிலே கி.ஆ.பெ.விசுவநாதம் அவருடன் பேசிக் கொண்டிருந்த சமயத்தில், சிற்றூரில் இருந்து கவிராஜரைப் பார்க்க ஒருவர் வந்தாராம். அவரைக் கண்டதும் ஜெகவீர பாண்டியர் கி.ஆ.பெ.விசுவநாதத்துடன் பேசுவதை நிறுத்திவிட்டு, 'வாருங்கள், அமருங்கள், என்ன செய்தி?' என்று கேட்டாராம்.

அதற்கு அவர், 'ஒன்றுமில்லை, தங்களைப் பார்க்க வந்தேன்!' என்றாராம். 'பார்த்தாயிற்றே; பின் என்ன செய்தி?' என்று மறுபடியும் கேட்டாராம் கவிராஜர். வந்தவர் அதற்கும் திரும்பத் திரும்ப, 'ஒன்றுமில்லை, தங்களைப் பார்க்க வந்தேன்' என்றே சொன்னாராம். கவிராஜர் சிறிது யோசித்து - சற்றுப் பேசி அனுப்ப எண்ணி, 'தங்களுக்குக் குழந்தை உண்டா?' என்று கேட்டாராம். 'இருக்கிறான், ஒரே பையன்' என்றாராம் வந்தவர். 'என்ன படித்திருக்கிறான்?' என்று கவிராஜர் கேட்க, வந்தவர், 'எங்கே படித்தான், ஒன்றும் படிக்க வில்லை' என்று சொல்ல, கவிராஜர், 'என்ன செய்கிறான்?' என்று கேட்க, அவர் 'வீட்டிலே இரண்டு எருமைகள் மேய்த்துக் கொண்டிருக்கிறான்' என்று சொன்னாராம்.

உடனே கவிராஜர் எழுந்து, அவரை எழச் செய்து, தட்டிக் கொடுத்து, வெளிவாயிற்படி வரை அழைத்துக் கொண்டு போய் நின்று, "இனி யாராவது 'உங்களுக்கு எத்தனை எருமைகள்?' என்று கேட்டால், 'இரண்டு என்று சொல்ல வேண்டாம். மூன்று எருமைகள் உண்டு என்று சொல்லுங்கள்' என்று சொல்லி அவரை வழியனுப்பி வைத்தாராம்."

இந்நிகழ்ச்சியைச் சுட்டிக்காட்டிவிட்டு, "கல்லாமையின் இழிவைக் கவிஞர் உணர்த்தியது - காலம் பல கடந்தும் என் உள்ளத்தை விட்டு அகலவில்லை" எனக் கி.ஆ.பெ. விசுவநாதம் ஒப்புதல் வாக்குமூலம் தந்திருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

சிலர் நகைச்சுவையுடன் பேசுவர்; ஆனால், பேசிய பின் நினைத்துப் பார்த்தால் ஒன்றும் இராது; தேறாது. ஆனால், பொருட் செறிவுடனும் நகைச்சுவையுடனும் பேசுவது அறிஞர் கி.ஆ.பெ. விசுவநாதத்தின் தனிச்சிறப்பு.

ஒருமுறை கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்களுடன் ஒரு திருமண விருந்தில் கலந்து கொண்டு வெளியே வரும்போது ஒருவர், "ஐயா, வெற்றிலை பாக்கு போட்டுக் கொள்ளுங்கள்" என்றாராம். "எனக்கு வேண்டாம். வயதானவர்கள் யாராவது பின்னால் வருவார்கள்.

அவர்களுக்குக் கொடுங்கள்" என்று அவருக்கு மறுமொழியாகச் சொன்னாராம் 'முத்தமிழ்க் காவலர்' கி.ஆ.பெ.விசுவநாதம். அப்போது அவரது வயது என்ன தெரியுமா? எண்பதைத் தாண்டி இருந்ததாம்!

38

மாணவர் நகைச்சுவைகள்

"வெள்ளைத் தாமரையில் வெகுகாலமாய் வீற்றிருக்கும் கலைமகளே...! உனக்கொரு விண்ணப்பம்... எல்லோருக்கும் இலவசமாய்ப் பேரின்பம் வழங்கும் பிழை ஓர் உன்னதமான கலை... அதை அறுபத்தைந்தாவது கலையாக ஏற்றுக்கொள்..." – மீரா*

இன்றைய மாணவர்கள் நல்ல நகைச்சுவை உணர்வு படைத்தவர்கள்; கற்பனை வளமும் சிந்தனைத் திறமும் படைப்பாற்றலும் ஒருங்கே கொண்டவர்கள். அவர்களின் தமிழ்ப் பற்றுக்கும் தமிழுணர்வுக்கும் ஈடு இணையே இருக்க முடியாது. பாரதியைப் போல் 'இதை நாற்பதாயிரம் கோயிலில் சொல்லலாம்!' எப்படி என்றா கேட்கிறீர்கள்? நீங்களும் ஓர் ஆசிரியராக இருந்து அவ்வப் போது மாணவர்களின் கட்டுரைகளையும், விடைத்தாள்களையும் திருத்த நேர்ந்தால் - வகுப்பறைகளில் மாணவர்களின் கேள்விக் கணைகளை எதிர்கொள்ளும் வாய்ப்புப் பெற்றால் - என் முடிவுக்குத் தான் வருவீர்கள்; 'வெல்லத் தமிழ் இனி வாழும்!' என்றே உணர்ச்சிமிகு குரலில் முழங்குவீர்கள்! வாழையடி வாழையாக எத்தனை எத்தனையோ தலைமுறையைச் சார்ந்த மாணவர்கள் பிறப்பெடுத்து, எவ்வளவோ பிழைகளோடு எழுதியும், தமிழ் இன்னும் சாகாமல் உயிரோடு உலவிக் கொண்டிருக்கிறதே, இதிலிருந்தே தெரியவில்லையா - தமிழுக்குச் சாவு ஒருபோதும் இல்லையென்று?

I. கட்டுரைகளில் காணலாகும் நகைச்சுவைகள்

முதலில் மாணவர்களின் கட்டுரைகளில் பளிச்சிடும் சில சுவையான இடங்களைப் பார்ப்போம், பொதுவாக, மாணவர்களின் உள்ளம் 'கங்கையைப் போல் காவிரியைப் போல் கருத்துக்கள் ஊறும்' உள்ளம்! முண்டாசுக் கவிஞரின் மொழியிலே சொன்னால்

---

* வா இந்தப் பக்கம், பக்.46–47

அவர்களின் கைவண்ணத்தில் பிறக்கும் 'சொல் புதிது! சுவை புதிது! பொருள் புதிது! வளம் புதிது!' எனலாம். 'உழைப்பே உயர்வுக்கு வழி' என்னும் தலைப்பில் பொதுக் கட்டுரை எழுதும் ஒரு மாணவரின் கருத்து இது: "படித்துப் படித்து ஒருவன் இறப்பானே யானால் அவனுக்கு ஒரு சிலை வைப்பேன்!" சிலை வைப்போர் கருத்தில் கொள்ள வேண்டிய சீரிய சிந்தனையல்லவா இது?

பேருந்தைப் பிடிப்பதற்கே நேரம் போதாத இன்றைய அவசர யுகத்தில் - 'நேரம் இல்லை' என்று சொல்வதற்கே 'நேரம் இருக்கிற' இன்றைய காலகட்டத்தில் - பத்தாயிரம் பாடல்களுக்கு மேல் உள்ள கம்ப ராமாயணத்தைப் படிப்பதற்கா ஒருவருக்கு நேரம் கிடைக்கப் போகிறது? கம்பர் கல்வியில் பெரியவர்; தெய்வப் புலவர். அவர் வீட்டுக் கட்டுத் தறியும் கவி பாடும். இதெல்லாம் சரிதான். ஆனால் அவர் தம் காப்பியத்தைச் சுருங்கக் கூறி விளங்க வைக்காமல் விளக்கமாகக் கூறியிருக்கிறாரே? அவர் அதனை எப்படிச் சுருக்கிக் கூறியிருக்கலாம்? இதோ ஒரு மாணவரின் அரிய யோசனை; "டெலிபோன், இராமாயண காலத்தில் இருந்திருந்தால், இராவணனும் இராமனும் போன் மூலமாக மிக விரைவில் பேசி, ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கலாம். அனுமன் தூதே செல்லத் தேவை இல்லை. இராம காதையும் காலத்தில் குறைந்து காணப்படும்." 'அப்பனுக்குப் பாடம் சொன்ன சுப்பையா'வை உங்களுக்குத் தெரியும்; 'கம்பனுக்குப் பாடம் சொன்ன மாணவ'ரை இப்போது தெரிந்து கொண்டீர்களா?

'கண் போன போக்கிலே கால் போகலாமா? கால் போன போக்கிலே மனம் போகலாமா? மனம் போன போக்கிலே மனிதன் போகலாமா?' போகக் கூடாதுதான்; திரை இசைக் கவிஞரின் கருத்து நமக்குப் புரிகிறது. ஆனால், மாணவர்களுக்கு...? அவர்களின் மனம் போன போக்கெல்லாம் கை போகின்றது; கை போன போக்கெல்லாம் கருத்து போகின்றது. அகத்திய முனிவர் கும்பத்தில் பிறந்தவர் என்பது புராண மரபு. ஒரு மாணவரின் எழுதுகோல் அகத்தியரைப் புரட்சி முனிவராக - மக்களின் தொண்டராக - மாற்றுகின்றது. "அகத்திய முனிவர் குப்பத்தில் பிறந்தவர்" என்பது அவரது ஆராய்ச்சி முடிவு. 'குப்பத்து ராஜா'வை உங்களுக்குத் தெரியும் அல்லவா? இதோ இப்போது 'குப்பத்து முனிவ'ரையும் தெரிந்து கொள்ளுங்கள்; தவறு ஒன்றும் இல்லை!

'நான்முகன் கரியமால் உந்தியில் வந்தோன்' என ஔவையார் தம் தனிப்பாடல் ஒன்றில் பாடி இருப்பது நமக்குத் தெரியும். 'நான்முகன் கரிய நிறமுடைய திருமாலின் உந்திக் கமலத்தில் -

அதாவது தொப்புளில் - தோன்றியவன்' என்பது புராண வரலாறு. இப்புராண வரலாற்றை ஒரு மாணவர் "பிரம்மனோ கரிய நிறத்தையுடைய திருமாலின் தொப்பியில் தோன்றிய தாமரை மலரில் இருந்து பிறந்தவன்" என மாற்றி எழுதிப் புதிய வரலாறு படைக்கிறார். 'தொப்புள்' இங்கே 'தொப்பி' ஆகியுள்ளது.

காந்தியடிகளை 'அரை நிர்வாணப் பக்கிரி' என்று அழைப்பதைப் படித்திருப்போம்; கேள்விப்பட்டிருப்போம். ஆனால், ஒரு மாணவரின் கற்பனையாற்றலில் தேசப் பிதா காந்தியடிகள் 'அரை நிர்வாணப் பக்கிரி' ஆகிறார். தமிழ்ப் பற்று மிகுந்த பிறிதொரு மாணவரின் கை வண்ணத்தில் தொழில் மேதை ஜிடி நாயுடு, 'சீட்டி நாயுடு' ஆகிறார். இன்னொரு மாணவரின் கருத்தின் படி வள்ளலார் கண்டது, 'ஆண்மை நேய ஒருமைப்பாடு'. 'ஆன்ம நேய ஒருமைப்பாடு' என்பதே மாணவரின் எழுதுகோலில் 'ஆண்மை நேய ஒருமைப்பாடு' ஆகப் புதுப்பிறவி எடுத்துள்ளது!

II. விடைத்தாள்களில் வலம் வரும் நகைச்சுவைகள்

இனி மாணவர்களின் விடைத்தாள்களில் 'ஓங்கல் இடை வந்து, உயர்ந்தோர் தொழ விளங்கி, ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும் தன்னேரில்லாத தமிழ்' என்ன பாடுபடுகிறது என்று பார்ப்போம்.

'சிந்துக்குத் தந்தை' என்பது புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், கவியரசர் பாரதியாருக்குச் சூட்டியுள்ள புகழாரம். இதன் அடிப்படையில், 'பாரதியார் சிந்துக்குத் தந்தை என்பது எப்படிப் பொருந்தும்?" என ஒரு கேள்வி வினாத்தாளில் கேட்கப்பட்டிருந்தது. கேள்வியைப் படித்து முடித்ததுதான் தாமதம். உடனே கற்பனைத் தேரில் ஏறிப் பறந்து செல்ல முற்படுகிறார்கள் இன்றைய மாணவர்கள். விளைவு? அரிதின் முயன்று காரணத்தைக் கண்டுபிடிக்க முனைகிறார்கள்; யாரும் இதுவரை சிந்தித்துப் பார்க்காத புதிய கோணங்களில் இருந்தெல்லாம் பார்த்து இந்தக் கேள்விக்கு விடை எழுதுகிறார்கள். "பாரதியார் பாடல்கள் அனைத்தும் சிந்து ராகத்திலே தான் பாடப்பெற்றுள்ளன. எனவே, அவர் சிந்துக்குத் தந்தை" என்பது ஒரு மாணவரின் புதிய விளக்கம். "பாரதியார் பாரத நாட்டில் பாயும் மிகப்பெரிய ஆறான சிந்துவைத் தம் பாட்டில் குறித்துள்ளார். சிந்து நதி தேசிய நதி. ஆகவே பாரதியாரைச் சிந்துக்குத் தந்தை என்று கூறியிருப்பார்கள் போலும்!" என்பது பிறிதொரு மாணவரின் அரிய கண்டுபிடிப்பு. "பாரதியார் சிந்து நதியைத் தந்தையைப் போல் பற்றோடும் பாசத்தோடும் நேசித்தார்; எனவே

சிந்துக்குத் தந்தை என அவர் போற்றப்பட்டார்" எனத் தருக்க நெறி நின்று தம் கொள்கையை நிறுவுகிறார் மற்றொரு மாணவர். "சிந்து நதியின் குளிர்ச்சி போன்றது பாரதியாரின் நடை. எனவே சிந்துக்குத் தந்தை என்ற சிறப்புப் பெயர் அவருக்கு முற்றிலும் பொருந்துவதே ஆகும்" என்று முடிந்த முடிவுக்கு வருகிறார் இன்னொரு மாணவர். நல்ல வேளை, "சிந்து பைரவி படத்திற்குத் திரைக்கதை, வசனம், பாடல்கள் எல்லாம் எழுதியதால் சிந்துக்குத் தந்தை எனப் பாரதியார் அழைக்கப்பட்டார்' என்று எந்த மாணவரும் எழுதவில்லை, நாம் பிழைத்தோம்!

இன்றைய மாணவர்கள் அரிச்சந்திரனின் வாரிசுகள், உண்மையைத் தவிர வேறு ஒன்றையும் எழுத மாட்டார்கள். 'நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் பற்றிக் குறிப்பு வரைக' என்று கேட்டால் ஒரு மாணவர், "நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் - இது 4000 பாடல்களைக் கொண்டது. எல்லாமே திவ்யமான பாடல்கள். இந்தப் பாடல்கள் பிரபந்த வகையைச் சார்ந்தவை" என்று 'உண்மையான கருத்துக்களை' மட்டுமே பிட்டுப் பிட்டு வைக்கிறார்; உண்மையைத் தவிர வேறு ஒன்றையும் உரைக்காத பரந்த மனம் அவருக்கு!

ஏ.சி.பிராட்லி, ஐ.ஏ.ரிச்சர்ட்ஸ், ஆபர் கிராம்பி, ஹட்சன், பேராசிரியர் மு.வ., தெ.பொ.மீ., வ.சுப.மா., எஸ்.வையாபுரிப் பிள்ளை, க.கைலாசபதி போன்ற அறிஞர்களின் கருத்துக்களை எல்லாம் மேற்கோளாகக் காட்டும் வழக்கம் இன்று மலையேறி விட்டது. இப்போது மாணவர்களின் நெஞ்சமெல்லாம் நீங்கா இடம் பெற்றிருப்பவர்கள் திரையிசைக் கவிஞர்கள்தாம். பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், கண்ணதாசன், வாலி, வைரமுத்து, மு.மேத்தா, நா.காமராசன், புலமைப்பித்தன் போன்ற திரையிசைக் கவிஞர்களின் பாடல் வரிகள் இன்றைய மாணவர்களின் கட்டுரைகளிலும், விடைத்தாள்களிலும் களிநடம் புரியக் காண்கிறோம்.

'காதல் தூங்குகிறது' என்பது கு.ராஜவேலு எழுதியுள்ள ஒரு நாவல். அதில் தலைமை மாந்தர்களாக வரும் அசோகன், மாதவி ஆகிய இருவரைப் பற்றி எழுதும்போது ஒரு மாணவர், " 'மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்' என்ற பாடலுக்கு இணங்க மாதவி அசோகனுக்குக் கிடைத்திருக்கிறாள். எனவே, அவள் 'நல்ல மனம் வாழ்க, நாடு போற்ற வாழ்க' என்ற பாடலுக்கு இணங்க வாழ்கிறாள்" என்று எழுதிச் செல்கின்றார். பிறிதொரு மாணவர், "'ஓவியம் கலைந்ததென்று ஓவியர் வெறுப்பதில்லை,

உருக்குலைந்த கோட்டையினைச் சரித்திரம் மறப்பதில்லை'. இதுபோல, அசோகன் அம்மையுற்றுக் கண்களை இழந்து முகம் விகாரம் அடைந்தபோதும் மாதவியின் மனம் விகாரம் அடையவில்லை" என மாதவியின் மாண்பினை மனமாரப் போற்றி எழுதுகின்றார்.

"அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவின்
எந்தையும் உடையேம்; எம்குன்றும் பிறர்கொள்ளார்;
இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவின்
வென்றுஎறி முரசின் வேந்தர்எம்
குன்றும்கொண்டார்; யாம் எந்தையும் இலமே!"

(புறநானூறு, பா.112)

என்பது பாரி மகளிரின் புறப்பாடல்; அவலத்தைச் சுமந்து நிற்கும் அழகிய கையறுநிலைப் பாடல். 'இப்பாடலோடு ஒப்பிடத்தக்க பிறிதொரு பாடலை எடுத்துக்காட்டி விளக்குக' என்பது தேர்வில் கேட்கப்பட்டுள்ள கேள்வி. இக்கேள்விக்கான பதிலில் பெரும்பாலான மாணவர்கள் எடுத்துக்காட்டியுள்ள இலக்கிய வரிகள் எவை தெரியுமா?

"அன்றொரு நாள் இதே நிலவில் அவர் இருந்தார் என்னருகே!"
"அன்று வந்ததும் இதே நிலா, இன்று வந்ததும் அதே நிலா!"
"அந்த நாள் ஞாபகம் நெஞ்சிலே வந்ததே நண்பனே, நண்பனே!"
"காகித ஓடம் கடலலை மீது போவது போலே மூவரும் போவோம்,
ஆதரவின்றி ஆழ்ந்திடும் அதுபோல் ஒன்றாய் மூழ்குதல் நன்றாம்!"

- காலத்திற்கு ஏற்ற எவ்வளவு அருமையான ஒப்பீடுகள் பார்த்தீர்களா?

அண்மையில் எனக்கு ஏற்பட்ட ஒரு சுவையான அனுபவம். முதுகலை வகுப்பிற்கு உரிய இலக்கண வினாத்தாள். 'இரட்டைக் கிளவியைச் சான்று காட்டி விளக்குக' என்பது அதில் கேட்கப் பட்டுள்ள ஒரு கேள்வி. இதற்கு விடை எழுதிய பத்து மாணவர்களுள் குறைந்தது எட்டுப் பேர், 'சலசல சலசல இரட்டைக் கிளவி, தகதக தகதக இரட்டைக் கிளவி உண்டல்லோ, தமிழில் உண்டல்லோ? பிரித்து வைத்தல் நியாயம் இல்லை, பிரித்துப் பார்த்தால் பொருளும் இல்லை, இரண்டல்லோ இரண்டும் ஒன்றல்லோ?" என அண்மையில் வெளிவந்துள்ள 'ஜீன்ஸ்' படப் பாடலைத் தவறாமல் மேற்கோள் காட்டி இருந்தனர்.

'விரிப்பின் பெருகும்; தொகுப்பின் எஞ்சும்' என்னும் வாக்கு உண்மையில் நம் மாணவர்களின் நகைச்சுவைகளுக்குத்தான் நூற்றுக்கு நூறு பொருந்தும் எனலாம்.

39

வகுப்பறை நகைச்சுவைகள்

"அன்றாட வாழ்க்கையில் எவ்வளவோ வேடிக்கை நிகழ்வுகள். ஆனால் அவற்றையெல்லாம் ஆழமாகப் பார்க்க நாம் அனுமதிக்கப்படவில்லை. குழந்தைகளுக்கு இந்தத் தடை இல்லை. அதனால்தான் அவர்கள் இயல்பாகச் சிரிக்கிறார்கள்."

– தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

பி.ஏ. பொதுத் தமிழ் வகுப்பு. மாணவர்களுக்குப் 'பிள்ளைத் தமிழ்' பற்றிய பொதுவான செய்திகளைக் கூறிக் கொண்டிருக்கிறேன். "பிள்ளைத் தமிழ் என்பது இரண்டு வகைப்படும். ஒன்று, ஆண்பால் பிள்ளைத்தமிழ். இன்னொன்று, பெண்பால் பிள்ளைத்தமிழ்" என என் அறிமுகம் தொடர்கிறது. அப்போது ஒரு மாணவர் எழுந்து மிகவும் பவ்யமான குரலில், "ஐயா, பலர்பால் பிள்ளைத்தமிழ் என ஒன்று இல்லையா?" என்று கேட்க, வகுப்பில் உடனே சிரிப்பலைகள் எழுகின்றன. "தம்பி, இதுவரை அப்படி ஒரு பிள்ளைத்தமிழ் இல்லை. ஆனால் தமிழன்னை அதை நினைத்து ஏங்கிக் கொண்டிருக்கிறாள். நீங்கள் அந்த முயற்சியில் ஈடுபடலாமே?" என்று நான் சிரித்துக் கொண்டே அந்த மாணவரைப் பார்த்துக் கூறினேன். இப்போது ஒட்டுமொத்த வகுப்பே அந்த மாணவரைப் பார்த்துச் சிரிக்கிறது.

ஒரு நாள் மாணவர்களுக்குத் திருக்குறள் நடத்திக் கொண்டிருக்கிறேன்; திருவள்ளுவரின் தனிவாழ்க்கையைப் பற்றிய செய்திகளைச் சொல்லுகிறேன். "வள்ளுவருடைய மனைவியின் பெயர் வாசுகி. அவர் கற்பில் சிறந்தவர். அவர்கள் வாழ்வில் நிகழ்ந்ததாக ஒரு சுவையான நிகழ்ச்சியைக் கூறுவார்கள். ஒருமுறை வாசுகி அம்மையார் கிணற்றடியில் நீர் இறைத்துக் கொண்டிருந்தார். அப்போது! வள்ளுவர் 'வாசுகி!' என்று கூப்பிட, கிணற்றடியில் நீர் இறைத்துக் கொண்டிருந்த அம்மையார் கயிற்றையும் குடத்தையும் அப்படியே

---

* சிரிப்போம் சிந்திப்போம்!, பக்.4–5

விட்டுவிட்டு வந்தார்; மீண்டும் திரும்பிச் சென்று பார்க்கும் போது அவர் விட்டுவிட்டு வந்த நிலையிலேயே கயிறும் குடமும் இருந்தனவாம். எவ்வளவு சிறப்பான நிகழ்ச்சி இது! இப்போது இப்படி ஒரு நிகழ்ச்சி நடப்பதாகக் கற்பனை செய்து பாருங்கள். முதலில், கிணற்றடியில் நீர் இறைத்துக் கொண்டிருக்கும் மனைவியைப் பெயர் சொல்லிக் கூப்பிடவே ஒரு தைரியம் வேண்டும். கூப்பிட்ட குரலுக்கு மதிப்புக் கொடுத்து அந்த அம்மா உள்ளே வந்தார்கள் என்றால் அது ஒரு சிறப்பு. பிறகு திரும்பிப் போய்ப் பார்க்கும்போது விட்டுவிட்டு வந்த நிலையிலேயே கயிறும் குடமும் இருந்தன என்றால் அது இன்னொரு சிறப்பு" என்று நடைமுறைப் பார்வையோடு நான் உரையாற்றிக் கொண்டிருக்க, ஒரு மாணவர் இடையே குறுக்கிட்டு, "கிணற்றிலே தண்ணீர் இருந்தால் அது மூன்றாவது சிறப்பு ஐயா!" என்று கூற, வகுப்பறையே மாணவர்களின் சிரிப்பொலியால் அதிர்ந்தது. குடிநீர்ப் பஞ்சத்தால் நாடே தவித்துக் கொண்டிருந்த துன்பமான நேரம் அது! எனவே, அந்த நேரத்தில் மாணவரின் குறுக்கீடு இயல்பான நகைச்சுவையாய் மலர்ந்தது.

முதுகலை மாணவர்களுக்கு ஔவையாரின் புறநானூற்றுப் பாடல்களைக் குறித்து நடத்திக் கொண்டிருக்கிறேன். "ஒரு முறை அதியமான் வேட்டைக்குச் சென்றபோது அரிய நெல்லிக்கனி ஒன்று கிடைத்தது. கிடைத்தற்கரிய நெல்லிக்கனியைப் பெற்ற அதியமான் என்னவெல்லாம் செய்திருக்கலாம்? எப்படியெல்லாம் நடந்திருக்கலாம்? கொஞ்சம் நினைத்துப் பாருங்கள். 'ஒன்று, அந்த நெல்லிக்கனியைத் தானே சாப்பிட்டு நீண்ட காலம் வாழ்ந் திருக்கலாம். இல்லாவிட்டால், சிங்கக் குட்டி போல் இருக்கிறானே மகன் பொகுட்டெழினி, அவனுக்குக் கொடுத்திருக்கலாம். அதுவும் இல்லையென்றால், பட்டத்து ராணியான தன் மனைவிக்குத் தந்திருக்கலாம்' என முன்னுரையாக நான் கூறிவரும் போது, ஒரு மாணவர் எழுந்து, 'அதிலே ஒரு சிக்கல் இருக்கிறது, ஐயா!' என்றாரே பார்க்கலாம். நான் 'என்னய்யா சிக்கல்?' என்று 'திருவிளையாடல்' பாணியில் கேட்க, அந்த மாணவர் கொஞ்சமும் சிரிக்காமல், 'மனைவிக்குக் கொடுத்தால் அவள் சாகமாட்டாளே ஐயா?" என்று சொல்ல, சில மணித்துளிகள் சிரிப்பு மழையால் நனைந்தது வகுப்பு.

ஒரு கல்லூரியில் இலக்கிய மன்றத்தின் சார்பில் சிலப்பதிகாரம் பற்றிப் பேசுவதற்காக அழைத்திருந்தார்கள். அறையில் மாணவர் கூட்டம் நிரம்பி வழிந்தது. நானும் உணர்ச்சிகரமாகப் பேசிக் கொண்டிருந்தேன். "கோவலனுக்கும் கண்ணகிக்கும் பெரியவர்களாகப் பார்த்துத்தான் திருமணம் செய்து வைத்தார்கள்;

நல்ல நாளில்தான் திருமணம் செய்து வைத்தார்கள். என்ன ஆச்சு?" என்று நான் கேட்க, அப்போது யாரும் சற்றும் எதிர்பாராத விதத்தில் மாணவர் மத்தியிலிருந்து ஒரு குரல் "குழந்தை அழுகுது" என்றது! அரங்கில் எழுந்த கரவொலியும் சிரிப்பொலியும் அடங்க நீண்ட நேரம் ஆயிற்று. உடனே சமயோசிதமாக நான், "அவர்கள் வாழ்வில் குழந்தை அழவில்லை ஐயா! அதனால்தான் சிக்கலே எழுந்தது!" என்று சொல்ல, அரங்கம் மீண்டும் அதிர்ந்தது.

அகத்திணை பற்றிய வகுப்பு. "ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே எழும் உறவு நிலையினைக் **கைக்கிளை, பெருந்திணை, ஐந்திணை** என மூன்றாகப் பகுத்துக் கூறுவது தமிழ் இலக்கண மரபு. இவற்றை முறையே ஒருதலைக் காமம், பொருந்தாக் காமம், ஒத்த காமம் என்று கூறுவார்கள்" என்று சொல்லிவிட்டு எளிமையாகப் புரிவதற்காக, "கைக்கிளை என்பது ஒரு கை ஓசை, ஒரு தலை ராகம்" என்கிறேன். உடனே ஒரு மாணவர் உற்சாகத்துடன் எழுந்து, "பெருந்திணை என்பது அபூர்வ ராகம், ஐந்திணை என்பது தெய்வீக ராகம் - சரிதானே ஐயா?" என்றாரே பார்க்கலாம்! நானும் விடாமல், "ஆமாம்! இரண்டு பேருக்கும் இடையே ஒத்த அன்பு இருந்தால் அது வசந்த ராகம்; இல்லாவிட்டால் மௌன ராகம்..." என்று தொடர்ந்து கூற, வகுப்பறையில் சிறிது நேரம் ஒரே 'ராக ஆலாபனை' தான் போங்கள்!

நிறைவாக, **புதுமைப்பித்தன்** 'மாய வலை' என்னும் தம் சிறுகதையில் ஒரு கல்லூரி மாணவனைப் பற்றி எழுதியிருக்கும் சுவையான வாசகம் இதோ:

"அவன் (என்.பி.நாயகம்) ஒரு சந்தோஷப் பறவை. கவலை என்பது வகுப்பு எப்பொழுது முடியும் என்பதைத் தவிர வேறு ஒன்றும் கிடையாது" (புதிய ஒளி, ப.112).

இதுபோல் நல்ல நல்ல நகைச்சுவை மலர்கள் நாளும் பூக்கும் வகுப்பறைகள் வாழ்க! 'வகுப்பறை வானம்பாடி'களான மாணவ மணிகள் வாழ்க! வெல்க!

40

நினைவில் நிற்கும் நகைச்சுவைத் துணுக்குகள்

" 'நகைச்சுவை' என்பது மனித வாழ்வை மகிழ்ச்சி யடையச் செய்கிற 'மந்திரம்'. சிரிக்கிற போது நாம் குழந்தைகளாகி விடுகிறோம். நம்மை அந்த நிமிடங்களில் மறந்து விடுகிறோம்." – வெ.இறையன்பு*

பத்திரிகையை வாங்கியவுடன் முதலில் நகைச்சுவைத் துணுக்குகளை ஆர்வத்தோடு படிப்போர் உண்டு. நகைச்சுவைத் துணுக்குகளுக்காகவே குறிப்பிட்ட பத்திரிகையை விரும்பி வாங்குவோரும் உண்டு. ஒரு பத்திரிகையில் எத்தனையோ பகுதிகள் வெளிவந்தாலும், வேறு எதற்கும் இல்லாத ஒரு தனித்தன்மை - அனைவரையும் ஈர்த்து ஆட்கொள்ளும் இயல்பு- நகைச்சுவைத் துணுக்குகளுக்கு உண்டு. படித்தவர் - பாமரர், சிறியவர் - பெரியவர், ஆடவர் - மகளிர், நகரவாசி - கிராமவாசி என ஒட்டுமொத்தமாக எல்லாத் தரப்பு வாசகர்களையும் தன் பிடிக்குள்ளே வைத்துக் கொள்ளும் ஆற்றல் நகைச்சுவைத் துணுக்குகளுக்கு உண்டு. இன்னமும் சொல்ல வேண்டும் என்றால், ஒரு வெற்றிபெற்ற தொடர்கதையில் வரும் நல்ல பாத்திரத்தை வாசகர்கள் என்றென்றும் பசுமையாகத் தங்கள் நினைவில் வைத்திருப்பது போல், எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு தாம் படித்து மகிழ்ந்த நகைச்சுவைத் துணுக்குகளையும் மறக்காமல் தங்கள் நினைவிலே வைத்துக் கொண்டிருப்பார்கள்; அவ்வப்போது அவற்றைத் தமது நெருங்கிய நண்பர்களுடன் மகிழ்ச்சியாகப் பரிமாறிக் கொள்ளவும் செய்வார்கள். சின்னஞ்சிறு வடிவில் கருத்துள்ள படத்துடன் வெளிவந்து சிரிப்புடன் சிந்தனையையும் தூண்டுவதால் நகைச்சுவைத் துணுக்குகள் எப்போதும் வாசகர் களின் வரவேற்பைப் பெற்று நிற்கின்றன.

துறைதோறும் துறைதோறும் நிகழும் கொடுமைகளைத் தோலுரித்துக் காட்டும் துணிவும், அரசியல், சமூக, பொருளாதார நடப்புகளைக் கூர்மையாக விமர்சனம் செய்யும் நெஞ்சுரமும், மனித

* ஏழாவது அறிவு (முதல் பாகம்), ப.147

உறவுகளையும், உணர்வுகளையும் நகைச்சுவையோடும் நையாண்டியோடும் பதிவு செய்யும் பாங்கும், சொற்சிலம்பமும் படைத்த நகைச்சுவைத் துணுக்குகளுக்கு உள்ள ஆற்றலே தனி. இத்தகைய இலக்கியத் தரமும் திறமும் பொருந்திய நகைச்சுவைத் துணுக்குகளே வாசகர்களால் விரும்பிப் படிக்கப்படுகின்றன எனலாம்.

நகைச்சுவைத் துணுக்கில் தனி முத்திரை பதித்த பத்திரிகை **'ஆனந்த விகடன்'**. அது தனது பவழ விழா பரிசுத் திட்டத்தின் கீழ் வெளியான 75 நகைச்சுவைத் துணுக்குகளைத் தொகுத்து 'முத்திரை ஜோக்ஸ்' என்னும் பெயரில் ஒரு சிறு நூலாக வெளியிட்டது. அந்நூலில் இடம்பெற்ற ஒரு நகைச்சுவைத் துணுக்கு வருமாறு:

"அந்தக் கூட்டணியிலிருந்து எதுக்காக வெளியேறினீங்க!"

"'தன்மானம்' தான் காரணம்!"

"அப்புறம் ஏன் இன்னொரு கூட்டணியில் சேர்ந்தீங்க?"

"'சன்மானம்' தான் காரணம்!"

ஸி.எஸ்.லாவண்யா படைத்துள்ள இந் நகைச்சுவைத் துணுக்கு வாழைப் பழத்தில் ஊசியை ஏற்றுவது போல் தேர்தல் நேரத்தில் கட்சிமாறும் அரசியல்வாதிகளின் போக்கினை நயமாகச் சாடுகின்றது. 'தன்மானம்', 'சன்மானம்' என்னும் இரு சொற்களை வைத்துக்கொண்டு இத்துணுக்கு தான் சொல்ல வந்த கருத்தை நச்சென்று உணர்த்தி விடுகின்றது.

'ஆனந்த விகடன்' 17.07.1988 இதழில் வெளிவந்த ஒரு நகைச்சுவைத் துணுக்கு இது:

சமையலறையில் வேலை பார்த்துக் கொண்டிருக்கும் மனைவி கணவரிடம்: "வேலை செய்திட்டிருக்கும்போது இப்படி இடுப்பிலே கிள்ளாதீங்கன்னு எத்தனை தடவை சொல்லியிருக்கேன்? கேட்க மாட்டேங்கறீங்களே!"

கையில் விளக்குமாற்றோடு வீட்டைப் பெருக்கிக் கொண்டிருக்கும் வேலைக்காரி:

"நல்லா சொல்லுங்க... நானும் எத்தனையோ தரம் சொல்லியாச்சு..."

எஸ். ஜெயபால் எழுதி இருக்கும் இத்துணுக்கிற்கு **ஜெயராஜ்** வரைந்திருக்கும் ஓவியம் சிறப்பானது. கணவன், மனைவி, வேலைக்காரி மூவரது முக பாவங்களைப் பார்க்கும் எவருக்கும் சிரிப்பு வராமல் போகாது. என்றாலும், இந்த நகைச்சுவைத் துணுக்கைப்

படிப்பவர் நெஞ்சில் தூய கணவன்-மனைவி உறவு இங்ஙனம் கொச்சைப் படுத்தப்பட்டுள்ளதே என்ற நெருடலும் எழத்தான் செய்யும்.

தொலைபேசி வந்த புதிதில் 'ஆனந்த விகடன்' அட்டையில் **கோபுலுவின்** அற்புதமான வண்ணப் படத்துடன் வெளிவந்த நகைச்சுவைத் துணுக்கு இது:

"மகள்: அப்பா, தொலைபேசி.

தந்தை: நீயே பேசித் தொலை."

இதுபோன்ற சொல் விளையாட்டுக்கள் - சிலேடை நயங்கள்- 'ஆனந்த விகடன்' நகைச்சுவைத் துணுக்குகளில் நிரம்ப உண்டு.

'ஆனந்த விகடன்' 03.03.2002 இதழில் வெளிவந்த பிறிதொரு சுவையான நகைச்சுவைத் துணுக்கு:

"சொந்த ஊரு எதுங்க..?"

"நமக்கு அந்த அளவுக்கு வசதி இல்லீங்க...!"

கே.பழனிச்சாமி எழுதிய இத் துணுக்கில் இயல்பான நகைச்சுவை உணர்வின் வெளிப்பாட்டைக் காணலாம்.

'கல்கி' பத்திரிகை தன் பொன்விழா ஆண்டின்போது 'சிரிக்க வையுங்கள்; சிங்கப்பூர் செல்லுங்கள்!" என்னும் தலைப்பில் வாசகர் களுக்கு ஒரு நகைச்சுவைத் துணுக்குப் போட்டியை நடத்தியது. வாரந்தோறும் வாசகர்களின் கை வண்ணத்தில் அருமையான நகைச்சுவைத் துணுக்குகள் 'கல்கி'யில் வெளிவந்தன. சென்னையைச் சார்ந்த **எஸ்.கமலா சந்தானம்** என்னும் வாசகர் எழுதிய ஒரு நகைச்சுவைத் துணுக்கில் தந்தைக்கும் மகனுக்கும் இடையே நிகழும் உரையாடல் வருமாறு:

"அப்பா, 'Mother tongue' என்ற காலத்துக்கு நேரே என்ன எழுதணும்?"

"'ரொம்ப நீளம்'னு எழுது!"

ஒரு சிறந்த நகைச்சுவைத் துணுக்கு இயல்பாக இயங்கும் பாங்கினைத் தன்னகத்தே கொண்டிருக்கும்; அறிவார்ந்த சாதுரியத்தை வெளிப்படுத்தும். இயல்பாயியங்கும் பண்பு (Spontaneity), அறிவார்ந்த மனப்பாங்கின் வெளிப்பாடு (Presence of Mind) - இரண்டுமே சிறந்த நகைச்சுவைத் துணுக்கின் அடிப்படைப் பண்புகள் ஆகும். இவ்விரு பண்புகளும் பொருந்திய ஒரு நகைச்சுவைத் துணுக்கு இதோ:

"இண்டர்வியு

'மெடுல்லா ஆப்லங்கேட்டா' என்றால் என்ன அர்த்தம்?

ஏற்கனவே லஞ்சம் வாங்கி ஆளை செலக்ட்

பண்ணீட்டாங்கன்னு அர்த்தம்!"

2.7.95 'கல்கி' பத்திரிகையில் வெளிவந்த எஸ்.பிரியாவின் இந் நகைச்சுவைத் துணுக்கு இன்றைய நேர்காணல்களில் (Interview) காணப்படும் கண்துடைப்புக்களை அங்கத நடையில் அழகாக விமர்சனம் செய்துள்ளது.

'பாக்யா' பத்திரிகையில் வெளிவரும் நகைச்சுவைத் துணுக்கு களும் தனித்தன்மை வாய்ந்தவை 'பரிசு ரூ.100 பெறும் நறுக்குத் தெறிக்கும் நகைச்சுவை' என்னும் தலைப்பில் வாரந்தோறும் 'பாக்யா'வில் வெளிவந்த நகைச்சுவைத் துணுக்குகள் சிறப்பு மிக்கவை; படிப்பவர் முகத்தில் குமிண் சிரிப்பைத் தோற்றுவிக்கும் திறம் வாய்ந்தவை. பதச்சோறு ஒன்று இதோ:

"பையன்: அப்பா நான் தொண்ணூறு மார்க் வாங்கினேன்னா என்ன செய்வே?

அப்பா: கண்டிப்பா மயக்கம் போட்டு விழுந்துடுவேண்டா!

பையன்: அதனால தாம்பா முப்பது மார்க் வாங்கியிருக்கேன்"

க.பன்னீர்செல்வம் என்னும் வாசகரின் கை வண்ணத்தில் உருவாகி இருக்கும் இந்த நகைச்சுவைத் துணுக்கு வயது வேறுபாடின்றி படிக்கும் அனைவரது முகத்திலும் புன்முறுவலைத் தோற்றுவிக்கும் திறம் படைத்ததாகும். இத்தகைய நறுக்குத் தெறிக்கும் நகைச்சுவைத் துணுக்குகளின் அணிவகுப்பை 'பாக்யா' இதழில் பரவலாகக் காணலாம்.

"இந்திய மக்கள் குறைவாகச் சிரிக்கின்றார்கள். அதிலும் தமிழ் மக்கள் மிகக் குறைவாகச் சிரிக்கின்றார்கள். நாம் உடல் நலமுடனும் மன வலிமையுடனும் வாழச் சிரிப்பு அவசியம்; அது மகிழ்ச்சியைக் கொடுக்கிறது" என 'ஆனந்த விகடன்' பவழ விழா மலருக்கு எழுதிய வாழ்த்துச் செய்தியில் சிரிப்பின் அவசியத்தைப் பற்றிக் குறிப்பிட்டு உள்ளார் மாண்புமிகு முன்னைக் குடியரசுத் தலைவர் டாக்டர் ஆ.ப.ஜெ. அப்துல் கலாம். அவரது அனுபவ மொழியை வாழ்வில் பொன்னே போல் போற்றுவோம்; உடல் நலத்துடனும் மன வலிமையுடனும் வாழத் துணைபுரியும் நல்ல நல்ல நகைச்சுவைத் துணுக்குகளை நாளும் படித்து மகிழ்வோம்.

பேராசிரியர் இரா.மோகனின் நூல்கள்

I.ஆராய்ச்சி

1. டாக்டர் மு.வ.வின் நாவல்கள்
2. அறிஞர் மு.வ.
3. சிறுகதைச் சிற்பி கு.ப.ரா.
4. ஆய்வியல் வழிகாட்டி (இணையாசிரியர்)
5. புனைகதைத் திறன்
6. பண்டிதமணியின் நடை நயம்
7. உரை மரபுகள் (இணையாசிரியர்)
8. திரு.வி.க. அல்லது வாழ்க்கை விளக்கம்
9. கு.ப.ராஜகோபாலன்
10. காந்தீயக் கவிஞருடன் ஒரு கை குலுக்கல்
11. வ.சுப.மாணிக்கம்
12. கல்கி
13. ஒப்பியல் சிந்தனைகள்
14. இலக்கியச் சால்பு
15. இலக்கியச் செவ்வி
16. இலக்கியச் செல்வம்
17. இலக்கிய வித்தகர்கள்
18. புதுக்கவிதைத் திறன்
19. பன்முகப் பார்வையில் பாரதி
20. கவிதைக் குயில்கள்
21. குமரகுருபரர்
22. முடியரசன்
23. கவிதை அலைவரிசை
24. இலக்கியப் பரல்கள்
25. இலக்கிய ஆளுமைகள்
26. நகைச்சுவை நாயகர்கள்

27. கணினி யுகத்திற்குக் கம்பர்
28. சங்க இலக்கியச் செவ்வி
29. வா.செ.கு. என்ற ஆளுமையாளர்
30. விருந்தும் மருந்தும்
31. செவ்வியல் இலக்கியச் செழுமை
32. மாணிக்கவாசகர்
33. இலக்கிய முற்றம்
34. மு.வ. அல்லது முன்னேற்ற வரலாறு

II.பதிப்பு

35. டாக்டர் மு.வ. கலைக்களஞ்சியம்
36. டாக்டர் மு.வ.வின் கடிதங்கள் (இணைப்பதிப்பாசிரியர்)
37. பரல்கள்: தொகுதி 2 (இ.ப.)
38. பொதிகை: மலர் 1 (இ.ப.)
39. புகழ் பெற்ற சங்க இலக்கியப் பொன்மொழிகள் (இ.ப.)
40. பாரதி இயல் (இ.ப.)
41. புதுக்கவிதை அணிவகுப்பு
42. நாவல் வளர்ச்சி
43. தமிழியல்: தொகுதி 1 (இ.ப.)
44. அண்ணல் தமிழ் (இ.ப.)
45. தமிழ் உலா: 2 தொகுதிகள் (இ.ப.)
46. பெண்ணியம் (இ.ப.)
47. சிற்பியின் கட்டுரைகள்
48. கல்கி நூறு
49. கல்கி கதைகள்: 2 தொகுதிகள்
50. கல்கி கட்டுரைகள்: 3 தொகுதிகள்
51. செந்தமிழ்த் தேனீ சோமலே
52. சிறுவர் இலக்கியம் (இ.ப.)
53. நாள் ஒரு சிந்தனை
54. புதுமைப்பித்தன் முத்திரைக் கதைகள்
55. கு.ப.ரா. முத்திரைக் கதைகள்
56. நகைச்சுவைக் களஞ்சியம்
57. பிற துறைத் தமிழ் ஆய்வு (இ.ப.)
58. திருக்குறள் ஆய்வுக் களஞ்சியம் (இ.ப.)

59. ஆய்வுக் கோவை: 4 தொகுதிகள் (2006)
60. சீக்கியமும் தமிழ்ப் பண்பாடும்
61. ஆய்வுக் கோவை: 5 தொகுதிகள் (2007)
62. ஆய்வுக் கோவை: 4 தொகுதிகள் (2008)
63. ஐங்குறுநூறு ஆய்வுக் கோவை: 3 தொகுதிகள் (2009)
64. ஆய்வுக் கோவை: 4 தொகுதிகள் (2009)
65. ஆய்வுக் கோவை: 4 தொகுதிகள் (2010)
66. தமிழ்க் கட்டுரைக் களஞ்சியம்
67. ஆய்வுக் கோவை: 4 தொகுதிகள் (2011)
68. ஆய்வுக் கோவை: 4 தொகுதிகள் (2012)

III. தொகுப்பு

69. டாக்டர் மு.வ.வின் மணிமொழிகள்
70. ஜெயகாந்தன் சிந்தனைகள்
71. துணுக்கு இலக்கியம்
72. துணுக்குத் திரட்டு
73. சங்க இலக்கியத் தொகை
74. படித்ததும் பிடித்ததும்
75. மகிழ்ந்ததும் நெகிழ்ந்ததும்
76. சிரித்ததும் சிலிர்த்ததும்
77. பண்பார் பேராசிரியர் பரந்தாமனார்
78. இறையன்பு களஞ்சியம்
79. தமிழ் ஹைகூ ஆயிரம்
80. குலோத்துங்கம் பண்ணையில் கொய்த கதிர்கள்
81. மு.வ. கருவூலம்

IV. புதுக்கவிதை

82. சின்னச் சின்ன இழை (இணையாசிரியர்)

V. தன்முன்னேற்றம்

83. இன்பமே எந்நாளும்
84. விரல்கள் பத்தும் மூலதனம்
85. விழிப்புணர்வுச் சிந்தனைகள்

VI. உரை

86. பத்துப்பாட்டு உரை (1-5)

VII. ஆளுமைக் கல்வி

87. கனவை நனவாக்கும் கலாம்

VIII. அணிந்துரைத் தொகுப்பு

88. இலக்கியக் கோலங்கள்

89. முன்னுரை நாற்பது

IX. கடித இலக்கியம்

90. அன்புள்ள நிலாவுக்கு
(பதிப்பாசிரியர்: முனைவர் நிர்மலா மோகன்)

ஆசிரியர் குறிப்பு

'மு.வ.வின் செல்லப்பிள்ளை' எனத் தமிழ் கூறு நல்லுலகத்தில் அழைக்கப் பெறும் இரா.மோகன் மதுரையில் 10.12.1949-ஆம் நாளன்று பிறந்தார். தந்தையின் பெயர் இராமமூர்த்தி. தாய் - இராசலெட்சுமி. காரைக்குடி அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் உயர்நிலைப் பள்ளியில் கல்வி பயின்ற மோகன், கவியரசு முடியரசனின் மாணவர்.



இவர் மதுரை தீந்தமிழ்த் தியாகராசர் கல்லூரியில் பயின்று 1972-இல் முதுகலைப் பட்டம் பெற்றார்; மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் 'கு.ப.ராஜகோபாலன் சிறுகதைகள்' என்னும் பொருளில் ஆராய்ந்து 1976-ஆம் ஆண்டில் முனைவர் பட்டம் பெற்றார்.

மதுரை காமராசர் பல்கலைக்கழக அஞ்சல்வழிக் கல்வித் துறையில் 01.11.1976-இல் விரிவுரையாளராகப் பணியில் சேர்ந்த முனைவர் மோகன், 1987-இல் தமிழியற் புலத்தில் விரிவுரையாளராகச் சேர்ந்தார்; இணைப்பேராசிரியர், பேராசிரியர், ஒப்பிலக்கியத் துறைத் தலைவர், சிறப்பு நிதியுதவித் திட்ட ஒருங்கிணைப்பாளர், புல ஒருங்கிணைப்பாளர், மூத்த பேராசிரியர் எனப் பல்வேறு பொறுப்புக் களில் 34 ஆண்டுக் காலம் தமிழியற் புலத்தில் பணியாற்றினார். மூன்று ஆண்டுக் காலம் பல்கலைக்கழக ஆட்சிக் குழு உறுப்பின ராகவும் (Syndicate Member) இவர் பணியாற்றியுள்ளார்.

'டாக்டர் முவவின் நாவல்கள்' என்பது இரா.மோகனின் முதல் நூல்; 1972-ஆம் ஆண்டில் வெளிவந்தது. ஆய்வும் பதிப்பும் தொகுப்புமாக இதுவரை இவரது 90 நூல்கள் வெளிவந்துள்ளன. இவரது 'இன்பமே எந்நாளும்' என்ற நூல் பாரத மணித்திரு நாட்டின் முன்னைக் குடியரசுத் தலைவர் டாக்டர் ஆ.ப.ஜெ.அப்துல் கலாமின் பராட்டினைப் பெற்றதாகும். இவரது நூல்கள் பல பல்வேறு பல்கலைக்கழகங்களிலும் தன்னாட்சிக் கல்லூரிகளிலும் பாட நூல்களாகப் (Text Books) பரிந்துரைக்கப் பெற்றுள்ளன.

'இலக்கியச் செல்வர்' குமரி அனந்தன் உட்படப் பேராசிரியர் மோகனின் மேற்பார்வையில் இதுவரை 28 பேர் முனைவர் பட்டம்

பெற்றுள்ளனர்; பன்னிரண்டு பேர் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

பேராசிரியர் மோகன் தேமதுரத் தமிழோசையைப் பரப்புவதற்காகச் சிங்கப்பூர் (5 முறை), மலேசியா (3 முறை), அமெரிக்கா (2 முறை), இலங்கை, ஷார்ஜா ஆகிய அயல்நாடுகளுக்குச் சென்று வந்துள்ளார். இவர் பல்வேறு வானொலிகளிலும் தொலைக் காட்சிகளிலும் பொதுமேடைகளிலும் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட உரை நிகழ்ச்சிகளை வழங்கியுள்ளார்.

பேராசிரியர் மோகன் புதுதில்லி சாகித்திய அகாதெமியின் பொதுக்குழு உறுப்பினர் ஆவார். இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத் தலைவராகவும் அவர் இருந்து வருகிறார்.

சாகித்திய அகாதெமியின் 'இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசை'யில் பேராசிரியர் மோகன், கு.ப.ரா., கல்கி, வ.சுப. மாணிக்கம், முடியரசன் ஆகியோர் குறித்து நூல்கள் எழுதியுள்ளார். 'தமிழ்க் கட்டுரைக் களஞ்சியம்', 'தமிழ் ஹைகூ ஆயிரம்', 'நாவல் வளர்ச்சி', 'புதுக்கவிதை அணிவகுப்பு', 'நகைச்சுவைக் களஞ்சியம்' ஆகியன இவர் வெளியிட்டுள்ள சிறந்த தொகை நூல்கள் ஆகும்.

வடஅமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையும், தமிழ்நாடு அறக்கட்டளையும் இணைந்து பேராசிரியர் மோகனுக்குத் 'தமிழ்ச் சுடர்' என்ற விருதினை வழங்கிச் சிறப்பித்துள்ளன. புதுச்சேரிக் கம்பன் கழகம் வழங்கும் சிறந்த ஆய்வு நூலுக்கான பரிசினைப் பேராசிரியரின் 'கணினி யுகத்திற்குக் கம்பர்' என்னும் நூல் பெற்றுள்ளது.

2010-இல் வெளிவந்த 'இலக்கிய இணையர் பேராசிரியர் இரா.மோகன்-முனைவர் நிர்மலா மோகன் மணி விழா மல'ரும் 'பேராசிரியர் இரா.மோகனின் படைப்புலகம்' என்னும் தொகை நூலும் (2011) தமிழியல் வளர்ச்சிக்குப் பேராசிரியர் மோகனின் பங்களிப்பினைப் பறைசாற்றுவனவாகும்.

மோகன் தற்போது பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவின் தகைசால் பேராசிரியராக (UGC - Emeritus Fellow) மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழியற்புலத்தில் பணியாற்றி வருகின்றார்.

அண்மையில் தமிழக அரசின் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் விருது (2011) பெற்றவர் பேராசிரியர் இரா.மோகன் என்பது குறிப்பிடத்தக்கது.

குறிப்புகளுக்காக...

தகைசால் பேராசிரியர் இரா.மோகன்

'மு.வ.வின் செல்லப் பிள்ளை' எனத் தமிழ் கூறு நல்லுலகத்தில் அழைக்கப்பெறும் இரா.மோகன் 22.04.1950-இல் மதுரையில் பிறந்தார். பெற்றோர் இராமமூர்த்தி - இராசலெட்சுமி. பள்ளிக் கல்வியை காரைக்குடி மீனாட்சி சுந்தரேசுவரர் உயர்நிலைப் பள்ளியிலும், கல்லூரிக் கல்வியை மதுரை தியாகராசர் கல்லூரியிலும் பெற்றார். மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் 'கு.ப.ராஜகோபாலன் சிறுகதைகள்' என்னும் தலைப்பில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் (1976) பெற்றார்.

01.11.1976-இல் மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் சேர்ந்த மோகன் விரிவுரையாளர், இணைப் பேராசிரியர், திட்ட ஒருங்கிணைப்பாளர், ஒப்பிலக்கியத் துறைத் தலைவர், புல ஒருங்கிணைப்பாளர், மூத்த பேராசிரியர், ஆட்சிக் குழு உறுப்பினர் எனப் பல்வேறு பொறுப்புகளில் 34 ஆண்டுக் காலம் பணியாற்றியுள்ளார். இவர்தம் நெறிகாட்டுதலில் 24 பேர் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர்.

பேராசிரியர் மோகன் ஆய்வும், பதிப்பும், தொகுப்புமாக இதுவரை 82 நூல்களை வெளியிட்டுள்ளார். இவரது நூல்கள் பல்வேறு பல்கலைக்கழகங்களிலும், தன்னாட்சிக் கல்லூரிகளிலும் பாட நூல்களாகப் பரிந்துரைக்கப் பெற்றுள்ளன.

'சிறந்த பட்டிமன்ற நடுவர் விருது', 'மூவேந்தர் இலக்கிய விருது', 'தமிழ்ப் பணிச் செம்மல் விருது', 'கிருபானந்த வாரியார் விருது', பாரத மாநில வங்கி, புதுச்சேரி கம்பன் கழகம் வழங்கும் சிறந்த நூலுக்கான பரிசு என்றாற் போல் தம் எழுத்து மற்றும் பேச்சுப் பணிகளுக்காகப் பற்பல பரிசுகளும், விருதுகளும் பெற்றுள்ளார். பல்வேறு வானொலி, தொலைக்காட்சிகளில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட பட்டிமன்ற நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார்.

பேராசிரியர் மோகன், இலக்கிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக ஐந்து முறை சிங்கப்பூர் சென்றுள்ளார். இரண்டு முறை மலேசியா சென்றுள்ளார். 2002-இல் இரண்டு மாதங்கள் அமெரிக்கா சென்றுள்ளார். அமெரிக்கத் தமிழ்ச் சங்க பேரவையும், தமிழ்நாடு அறக்கட்டளையும் இணைந்து இவருக்குத் 'தமிழ்ச் சுடர்' என்ற விருதினை வழங்கியுள்ளன.

பேராசிரியர் மோகன் அண்மையில், புதுதில்லி சாகித்திய அகாதெமியின் தமிழ்ப் பொதுக்குழு உறுப்பினராக ஐந்து ஆண்டுகளுக்கு நியமனம் செய்யப் பெற்றுள்ளார். இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத் தலைவராக ஆறு ஆண்டுகளாக இருந்து வருகிறார். தற்போது மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழியற்புலத்தில் தகைசால் பேராசிரியராகப் (**UGC - Emeritus Fellow**) பொறுப்பில் உள்ளார்.

வானதி பதிப்பகம்